

முதலமைச்சரின் உரைகள்

பல்வேறு நிகழ்ச்சிகளில்

முதலமைச்சர்

ஆற்றிய உரை

05.10.2022 முதல் 09.02.2023 வரை

தொகுப்பு - 5

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை
(05.10.2022 முதல் 09.02.2023 வரை)
தொகுப்பு - 5

சிறப்பு வெளியீடு

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2023

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி, சென்னை - 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவில், ஆற்றிய உரை - 05.10.2022	1
2.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் ஆற்றிய உரை - 15.10.2022	9
3.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 01.11.2022	21
4.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை டைடல் பார்க்கில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற "நாளையை நோக்கி இன்றே – தலை நிமிர்ந்த தமிழ்நாடு" எனும் தொழில் வளர்ச்சி – 4.0 மாநாட்டில் ஆற்றிய உரை - 08.11.2022	27

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
5.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல், காந்திகிராம் நிகர்நிலைப் பல்கலைக்கழக 36ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை - 11.11.2022	35
6.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் சுகாதார மாநாடு – 2022-ஐ தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 15.11.2022	41
7.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வன உயிரின வாரிய கூட்டத்தில் ஆற்றிய உரை - 16.11.2022	47
8.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையத்தின் 21-வது ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 16.11.2022	53
9.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற சென்னை, ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமத்தின் முதல் குழுமக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 17.11.2022	57

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
10.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 18.11.2022	59
11.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த 54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட தம்பதிகளுக்கான திருமண விழாவை தலைமையேற்று நடத்திவைத்து, ஆற்றிய உரை - 20.11.2022	65
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இராணி மேரி கல்லூரியின் 104ஆவது பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 22.11.2022	75
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 24.11.2022	89
14.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான சர்வதேச மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாக கலந்துகொண்டு ஆற்றிய உரை- 25.11.2022	95

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
15.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டம், கொல்லாபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திற்கான முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை - 29.11.2022	103
16.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர்.-ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற அன்னை ஜானகி எம்.ஜி.ஆர். நூற்றாண்டுத் துவக்க விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை - 30.11.2022	119
17.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி ஆற்றிய உரை - 03.12.2022	133
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து விழாவில் ஆற்றிய உரை - 04.12.2022	141

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

19. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஜி-20 மாநாடு தொடர்பாக புதுதில்லி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நாட்டிலேயே முன்னோடியாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு தமிழ்நாடு உருவாக்கியுள்ள 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' போன்ற முக்கிய கருத்துக்களை முன்வைத்து ஆற்றிய உரை - 05.12.2022..........149

20. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 08.12.2022.......151

21. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்க தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 09.12.2022..........167

22. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, மியூசிக் அகாடமியின் 96ஆவது ஆண்டு மாநாடு மற்றும் இசை விழா தொடக்க நிகழ்ச்சியில் ஆற்றிய உரை - 15.12.2022..........175

23. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்" திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 19.12.2022..........187

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

24. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில்
நடைபெற்ற தமிழ் இசைச் சங்கத்தின்
80ஆம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு
ஆற்றிய உரை - 21.12.2022 195

25. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்
நடைபெற்ற கலைஞர் மு. கருணாநிதி
வரலாறு மற்றும் திராவிடமும் சமூக மாற்றமும் நூல்
வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை - 24.12.2022 203

26. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
இந்து சமய அறநிலையங்கள் துறை சார்பில்
2,500 திருக்கோயில்களுக்கு ரூ.50 கோடி
நிதி வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 05.01.2023 217

27. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்,
“சென்னை இலக்கியத் திருவிழா 2023”-யை
தொடங்கி வைத்து, ஆற்றிய உரை - 06.01.2023 227

28. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
நடைபெற்ற 46ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி-2023
தொடங்கி வைத்து, ஆற்றிய உரை - 06.01.2023 241

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

29. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற
டாக்டர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை - 08.01.2023 251

30. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ் புத்தொழில்
முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகத் தமிழ்
முதலீட்டாளர்களையும், தமிழ்நாட்டில் உள்ள
புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் வண்ணம்
வடிவமைக்கப்பட்டுள்ள "Global Tamil Angels"
இணையதளத்தை தொடங்கி வைத்து
ஆற்றிய உரை - 09.01.2023 263

31. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
கொளத்தூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 10.01.2023 271

32. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில்,
பள்ளிக்கல்வித் துறையின் கலை திருவிழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 12.01.2023 277

33. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
"அயலகத் தமிழர் தினம் 2023" விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 12.01.2023 285

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற
"சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா"-வை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 13.01.2023 297

35. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
நடைபெற்ற சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி
நிறைவு விழாவில் ஆற்றிய உரை - 18.01.2023 305

36. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னையில் நடைபெற்ற 43ஆவது வழுவூரார்
நாட்டியம் மற்றும் இசை விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 19.01.2023 315

37. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
காது, மூக்கு, தொண்டை, தலை மற்றும் கழுத்து
மருத்துவத் தமிழ் அறிவியல் மாநாட்டில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 29.01.2023 323

38. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற
மழை வெள்ளக் காலங்களில் சிறப்பாக பணியாற்றிய
அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான
பாராட்டு விழாவில் ஆற்றிய உரை - 31.01.2023 335

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர் மாவட்டம், காட்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை - 01.02.2023	347
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை - 04.02.2023	353
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், இந்து கல்லூரியில் நடைபெற்ற புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 08.02.2023	357
42.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரையில் நடைபெற்ற பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் மாமன்றத்தின் 4ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 08.02.2023	371

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
43.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் முத்திரை பதிக்கும் திட்டங்கள் (Iconic Projects) தொடர்பாக தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10ஆவது தள கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமையேற்று ஆற்றிய உரை - 09.02.2023	381

❖ ❖ ❖

சாதி, மத வேறுபாடுகளற்ற சமநிலைச் சமூகம் அமைக்கப் பாடுபடுவதுதான் வள்ளலாருடைய வழியில் நடப்பது

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

திரு. கே.என். நேரு அவர்களே,

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களே,

திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு. த. வேலு அவர்களே,

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே,

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே,

கூடுதல் ஆணையர் திரு. இரா. கண்ணன் இ.ஆ.ப., அவர்களே, அருட்பிரகாச வள்ளலார் முப்பெரும் விழாவின் சிறப்புக் குழுத் தலைவர் டாக்டர் பி. கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களே,

இந்த சிறப்புக்குழுவில் இடம்பெற்றிருக்கக்கூடிய குழுவினுடைய உறுப்பினர் பெருமக்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

இங்கு வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே, அரசு உயர் அலுவலர்களே, ஆன்றோர் பெருமக்களே, சான்றோர் பெருமக்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும் - அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மாடல் அரசு, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற திருவருட்பிரகாச வள்ளலாரின் பிறந்தநாளை, தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்து இருக்கிறது.

வள்ளலாரின் முப்பெரும் விழா நிகழ்ச்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர் பாபு அவர்கள் வெகுசிறப்பாக, அனைவரும் பாராட்டக்கூடிய வகையிலே இதை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள்

அவர் தொடங்கிய தரும சாலைக்கு 156 ஆண்டுகள்

அவர் ஏற்றிய தீபத்திற்கு 152 ஆண்டுகள் - ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக இந்த நிகழ்ச்சியை நாம் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி நடப்பதைப் பார்த்து சிலருக்கு ஆச்சர்யமாக இருக்கலாம். ஏன், அதிர்ச்சியாகக் கூட இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், சிலர் சொல்லி வரும் அவதூறுகளுக்கு பதில் சொல்லக்கூடிய விழா தான் இந்த விழா.

திராவிட மாடல் ஆட்சி என்பது ஆன்மீகத்திற்கு எதிரானது, திராவிட மாடல் ஆட்சியானது மக்களின் நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று மதத்தை வைத்துப் பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள். மீண்டும் இதை நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், முன்னால் சொன்னதை மட்டும் எடுத்துக் கொண்டு, பின்னால் சொன்னதை வெட்டிவிட்டு சில சமூக ஊடகங்கள் வெளியிடும். அதனால் முன்கூட்டியே நான் அதை உங்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட மாடல் ஆட்சியானது ஆன்மீகத்திற்கு எதிரானது, மக்களின் நம்பிக்கைகளுக்கு எதிரானது, இதை மட்டும் போட்டு, முதலமைச்சர் ஸ்டாலின் இப்படி பேசினார் என்று வெட்டி, ஒட்டி, பின்னால் பேசியதை வெட்டிவிடுவார்கள். மதத்தை வைத்து பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள் என்பதை வெட்டிவிட்டு, முன்னால் இருப்பதைப்போட்டு, அதற்கென சில சமூக ஊடகங்கள் இருக்கின்றன. ஆக, நான் தெளிவோடு சொல்ல விரும்புவது, ஆன்மீகத்திற்கு எதிரானது அல்ல, திமுக. ஆன்மீகத்தை அரசியலுக்கும், தங்களது சொந்த சுயநலத்திற்கும் உயர்வு-தாழ்வு கற்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு எதிரானது தான் இந்த திராவிட மாடல் திமுக ஆட்சி.

தமிழ் மண்ணின் சமயப் பண்பாட்டை அறிந்தவர்கள், இதை நன்கு உணர்வார்கள்!

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்று, பிற்போக்குக் கயமைத்தனங்களை எதிர்க்கக்கூடிய வள்ளுவரின் மண்தான், இந்த தமிழ் மண்!

“நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையிலே” என்றும் முழங்கிய சித்தர்கள் உலவிய மண், நம்முடைய தமிழ் மண்!

“இறைவன் ஒருவன்தான், அவன் ஜோதி வடிவானவன்” என்று எடுத்துச் சொல்லிய வள்ளலாரின் மண், இந்த தமிழ் மண்!

“ஒன்றே குலம்; ஒருவனே தேவன்” என்ற திருமூலரின் கருத்தைத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எடுத்துரைத்தவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்!

அந்த அடிப்படையில்தான், வள்ளலாரின் பிறந்தநாளை தனிப்பெரும் கருணை நாளாக நாம் அறிவித்திருக்கிறோம்!

கோட்டைக்கு வருவதைவிட கோவிலுக்கு அதிகம் போகக்கூடியவர் தான் நம்முடைய திரு. சேகர்பாபு அவர்கள். காரணம், அறப்பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை பார்ப்பதைத்தான் அமைச்சர் திரு. சேகர்பாபு அதிகம் செய்து கொண்டு இருக்கிறார்.

ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள், நாள்தோறும் தாங்கள் எந்தக் கோயிலுக்குச் சென்று சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று பட்டியல் போட்டு வைத்திருப்பார்கள். அதைப்போல, தினமும் ஒரு கோயிலுக்கு அல்ல, ஒரு நாளைக்கு மூன்று ஊர்களில் இருக்கக்கூடிய கோயிலைச் சுற்றி வரக்கூடியவர் தான் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள். என்னால் ‘செயல்பாபு’ என்று அழைக்கப்படுகின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் இன்றைக்கு அவர் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய பொறுப்பை நான் பாராட்டுவதைவிட, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், எங்கள் அமைச்சர்கள் பாராட்டுவதைவிட, நீங்கள் பாராட்டுவதுதான் எங்களுக்கு சிறப்பு.

நீங்களெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் என்று சொன்னால் - இவர் ஆன்மீகச் செயற்பாட்டாளர். அதுதான் வித்தியாசம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் புகழுக்கும், சிறப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற திராவிடத்தின் மூலக் கருத்தியலை முதலில் சொன்னவர் அய்யன் வள்ளுவர் பெருமான் அவர்கள்.

சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் அவர்கள்.

“சாதி மதம் சமயமெனும் சங்கடம்விட்டு அறியேன்

சாத்திரச் சோறாடுகின்ற சஞ்சலம்விட்டு அறியேன்” - எனப் பாடியவர் அவர்.

கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போகக் கடைசி வரை பாடியவர் அவர்.

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்

சாத்திரக் குப்பையும் தணந்தேன் - என்று முடிவுக்கு வந்தவர் அவர்.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர்!

அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே - என்று பாடியவர் வள்ளலார் பெருமான் அவர்கள்.

இத்தகைய வள்ளலார் பெருமான் அவர்களைப் போற்றுவது என்பது, திராவிட ஆட்சியின் கடமை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆறாம் திருமுறை பாடல்களைத் தொகுத்து, 'இராமலிங்கர் பாடல் திரட்டு' என்ற நூலை 1940-ஆம் ஆண்டுகளிலேயே வெளியிட்டவர் தந்தை பெரியார் அவர்கள்.

வள்ளலார் நகரை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் வள்ளலார் பிறந்தநாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்து நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419-ஆவது வாக்குறுதியாக 'வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்' அமைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். "சாதி சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில், திருவருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றக்கூடிய வகையில் இது அமையும்" என்று அந்த வாக்குறுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனை எப்படி அமைப்பது என்பது குறித்து ஒரு சிறப்பான வல்லுநர் குழு ஆலோசனை பெறப்பட்டுள்ளது. பலமுறை நம்முடைய அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் இதனை அமைப்பதற்கான பெருந்திட்ட வரைவுத் திட்டம் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். அந்த வரிசையில்தான், நாம் இன்று இந்த முப்பெரும் விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவினருடன் நானும் பல ஆலோசனைகளை செய்திருக்கிறேன். விழா ஏற்பாடுகளெல்லாம் சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது. 52 வாரங்களுக்கு முப்பெரும் விழா பல்வேறு நகரங்களில் நடக்க இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு தெரிவிக்க விரும்புவது, ஓராண்டிற்கு தொடர் அன்னதானம், பேச்சாளர்களுக்கு சன்மானம் உள்ளிட்ட இந்த விழாவிற்கு 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிக்கையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர், வியாக்கியான கர்த்தர், சித்தமருத்துவர், சீர்திருத்தவாதி, கவிஞர், ஞானி - இப்படி எல்லாமுமாக இருந்தவர் வள்ளலார் அவர்கள். தனது கொள்கையைச் சமரச சன்மார்க்கமாக வடிவமைத்தார். அந்த கொள்கையைச் செயல்படுத்த சமரச சன்மார்க்க சங்கம் தொடங்கினார். அந்த சங்கத்துக்காக சன்மார்க்க கொடி உருவாக்கினார். அந்தச் சங்கத்துக்காக 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை' என்ற ஆன்ம நெறியை உருவாக்கினார். அதற்காக சத்திய ஞானசபையை உருவாக்கினார்.

ஒரு கொள்கையை உருவாக்கிச் சொல்லிவிட்டு, அதை விட்டுவிட்டு போகாமல், அதனை எப்படி செயல்படுத்த வேண்டும் என்று எடுத்துக்காட்டாக விளங்கக்கூடியவர் நம்முடைய வள்ளலார் அவர்கள்.

கருணையைக் கடவுள் என்றவர் அவர். அதனால் பசிப்பிணியைப் போக்குவதே இறைப்பணி என நினைத்தார். அணையாத அடுப்பை மூட்டினார்! பசிப்பிணி தடுத்தார்!

அவர் வழியில் நடக்கக்கூடிய இந்த அரசானது, காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. பசியுடன் பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்கு உணவளிக்கும் திட்டமானது மணிமேகலையில் அமுதசுரபியின் தொடர்ச்சியாக, வள்ளலார் மூட்டிய அணையா அடுப்பின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டிருக்கிறது.

பசிப்பிணி போக்குதலும் - அறிவுப்பசிக்குத் தீனி போடுதலும் இந்த அரசினுடைய முதன்மைக் கொள்கைகள்!

பேரறிஞர் அண்ணா சொன்னபடி "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!"

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது!

மனிதர்களிடையே வேறுபாடு இருக்கக்கூடாது! நல்லிணக்கம் வேண்டும்!

அன்பும் கருணையும் ஒவ்வொருவர் வாழ்வையும் வழிநடத்த வேண்டும்!

இரக்க குணமும் உதவும் மனமும் வேண்டும்! என்பதை திரும்பத் திரும்ப சொன்னவர் வள்ளலார் அவர்கள்.

சோறு போடுவது - அன்னதானம் வழங்குவது மட்டுமே அவரது அறநெறி அல்ல. சாதி, மத வேறுபாடுகளற்ற சமநிலைச் சமூகம் அமைக்கப் பாடுபடுவதுதான் வள்ளலாருடைய வழியில் நடப்பது!

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும் - என்பதே அவரது அறநெறி!

அத்தகைய அறநெறி உலகத்தைப் படைக்க உறுதியேற்போம். அதற்காக உழைப்போம்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவில், ஆற்றிய உரை - 05.10.2022

ஒரு இளைஞருக்கு வேலை கிடைப்பதன் மூலம் அவரது தலைமுறையே முன்னேற்றப் பாதைக்குச் செல்கிறது

முன்னாள் குடியரசுத் தலைவர் இளைஞர்களின் கனவு நாயகனாக விளங்கிய, இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய திரு. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளில் அவரை நினைவுகூறத்தக்க வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே, இந்த துறைக்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டு பல்வேறு வகைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்பிற்குரிய சகோதரர் திரு. சி.வி. கணேசன் அவர்களே,

இங்கு சுருக்கமாக உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி திரு. தயாநிதி மாறன் அவர்களே,

இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் தம்பி திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே,

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சியின் மேயர் சகோதரி திருமதி பிரியா அவர்களே,

துணை மேயர் திரு. மகேஷ்குமார் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர் நண்பர் திரு. கிரிராஜன் அவர்களே,

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., அவர்களே,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்களே,

புதுக் கல்லூரியின் தலைவர் ஆற்காடு நவாப் திரு. முகமது அப்துல் அலி அவர்களே,

அவர் இங்கு சுருக்கமாக உரையாற்றினார். பேச வேண்டும் என்று எங்களிடத்தில் முன்கூட்டியே தன்னுடைய ஆவலை தெரிவித்து, அந்த ஆவலை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர் பேசியிருக்கிறார் என்று சொன்னால், நானும், அவரும் சென்னை, சேத்துப்பட்டில் இருக்கக்கூடிய சென்னை கிருத்துவ உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாக படித்தவர்கள். ஆனால் அவரைப் பார்த்தால், என்னைப் பார்த்தால் எவ்வளவு வித்தியாசம் என்று உங்களுக்கு தெரியும். என் வயதுதான். அவர் வயதுதான் எனக்கும். ஆனால், பார்ப்பதற்கு எனக்கு அவர் தந்தை போல, தாத்தா போல, உருவத்தில் மாறியிருக்கிறார். நான் பல இடங்களில் ராஜ்பவன், பல அரசு நிகழ்ச்சியில், பொது நிகழ்ச்சியில் பார்க்கிறபோது, எங்களை

நாங்களே அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது மற்றவர்கள் எல்லாம் ஆச்சரியப்படுவார்கள். இவரா உங்கள் கிளாஸ்மெட் என்று கேட்பார்கள். இருந்தாலும், இன்றைக்கு அவர் ஆர்வத்தோடு இந்த நிகழ்ச்சிக்கு வந்து என்னுடன் பள்ளியில் படித்த மாணவன் முதலமைச்சராக வருகிறார், அந்த நிகழ்ச்சிக்கு நானும் வரவேண்டும் என்று வந்தது மட்டுமல்ல, பேசவேண்டும் என்று முடிவெடுத்து, இங்கே தன்னுடைய வாழ்த்தைச் சொல்லியிருக்கிறார். அதற்காக நான் முதலில் அவருக்கு என்னுடைய நன்றியை, வணக்கத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். பஷீர் அகமது அவர்களே,

வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிறுவனங்களின் உயர் அலுவலர்களே,

நிலைக் குழுவின் தலைவர் திரு. சிற்றரசு அவர்களே,

மண்டலக் குழுவின் தலைவர் திரு. மதன் மோகன் அவர்களே,

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே, நண்பர்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய மாநகராட்சி மன்ற உறுப்பினர்களே,

என் பாசத்திற்கும் பேரன்பிற்கும் உரிய இளைஞர்களே, மாணவர்களே, மாணவியர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கையில் பட்டங்களோடும், மனதில் கனவுகளோடும் இந்த முகாமில் பங்கேற்க வந்திருக்கக்கூடிய அனைவரையும் நான் மிகுந்த அன்போடு, பூரிப்போடு அவர்களை எல்லாம் வருக வருக என வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சி இன்றைக்கு இந்த புதுக் கல்லூரியில், அதுவும் திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் தொகுதியில், நம்முடைய மத்திய சென்னையில் அடங்கியிருக்கக்கூடிய இந்தத் தொகுதியில், நடக்கிறது என்று சொன்னால், ஒரு வகையில் நம்மையெல்லாம் விட அதிகமான மகிழ்ச்சி நம்முடைய தயாநிதிக்கு உண்டு, உதயநிதிக்கும் உண்டு. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதை எண்ணி, நாங்களும் மகிழ்ச்சியோடுதான் கலந்து கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் துவக்கத்தில், எப்போதும் அமைச்சர்கள் தான் வேண்டுகோள் வைப்பார்கள் முதலமைச்சரிடத்தில். நான் இப்போது அமைச்சரிடத்தில் ஒரு வேண்டுகோள் வைக்கப் போகிறேன். என்னைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதி கொளத்தூர் தொகுதி, அந்தத் தொகுதியில் நீங்கள் விரைவாக நடத்தவேண்டும். அந்த வேண்டுகோளை, அந்தத் தொகுதியின் சார்பில், உரிமையோடு நான் இந்த நேரத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். நான் மட்டுமல்ல, சேகர்பாபுவினுடைய துறைமுகத் தொகுதியிலும் நடத்த வேண்டும். ஆகவே, எங்களுடைய இரண்டு தொகுதிகள் மட்டுமல்ல, ஏற்கனவே, வேறு வேறு இடங்களில் நடத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 234 தொகுதியிலும் நீங்கள் நடத்தவேண்டும் என்பது தான் முதலமைச்சர் என்கிற முறையில் நான் வைக்கக்கூடிய வேண்டுகோள். அதை நிச்சயம் அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

உங்களது தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற பணி வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும் அதற்கான என்னுடைய வாழ்த்துகளை இப்போதே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வேலைவாய்ப்பு முகாம் எனக்கு மிகவும் திருப்திகரமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

இந்த வேலை வாய்ப்பு முகாமை தொடங்கி வைக்குமாறு என்னை மட்டுமே அழைக்காமல், ஒரு லட்சமாவது பணி நியமன

ஆணையை கொடுக்க வைக்கக்கூடிய அந்த வாய்ப்பையும் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். அதில் தான் ரொம்ப, ரொம்ப பெருமையாக இருக்கிறது.

இதை விட ஒரு அரசாங்கம் நடத்துகிற முதலமைச்சருக்கு வேறு என்ன மகிழ்ச்சி இருக்கப் போகிறது?

இன்றைக்கு வேலையின்மை (unemployment) மிகப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கக்கூடிய இளைஞருடைய அந்த நிலைமை மிகவும் ஒரு மோசமான நிலை தான். அது வருத்தப்படக்கூடிய ஒரு நிலைதான். அதுவும் கடந்த இரண்டு ஆண்டுகள் கொரோனா என்ற ஒரு கொடிய தொற்று, உலகம் முழுவதும், நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்ல, அது அச்சுறுத்திய காரணத்தினால், அந்த கொடுமை இருந்த காரணத்தினால், எங்கேயும் புதிய வேலை வாய்ப்புகளுக்கு ஒரு சவாலான காலமாக அமைந்திருந்தது. அத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் தான் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைந்தது.

அப்படி அமைந்த நேரத்தில் பார்த்தீர்கள் என்று சொன்னால், நாங்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன உறுதிமொழிகள் எல்லாம் உடனடியாக காப்பாற்றக்கூடிய வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லை. ஒரு அச்சம் ஏற்பட்டது, ஒரு பயம் ஏற்பட்டது, இதையெல்லாம் எப்படி செய்யப்போகிறோம்? இங்கே தயாநிதி மாறன் பேசுகிறபோது சொன்னார், சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதமுடியும். உடல் நன்றாக இருந்தால் தான், நம்முடைய பணிகளை நிறைவேற்ற முடியும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை. எந்த நேரத்தில் என்ன நடக்கும், எங்கு பார்த்தாலும் ஆம்புலன்ஸ் சத்தம், ஆக்சிஜன் இல்லை. மருத்துவமனைகளில் இடம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு கொடுமையான சூழ்நிலை அமைந்தது. அப்போது பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அந்தக் கொரோனாவை தடுக்கின்ற

அந்தக் கொடிய நோயிலிருந்து மக்களை காப்பாற்றுகின்ற அந்தப் பணியில் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டோம்.

அண்மையில்கூட, நியூஸ் 18 தொலைக்காட்சியில் conclave நிகழ்ச்சி ஒன்று ITC-யில் நடந்தது. என்னை சிறப்பு அழைப்பாளராக அழைத்திருந்தார்கள். அதில் சில கேள்விகள் எல்லாம் என்னிடத்தில் கேட்டார்கள், பேசி நான் முடித்ததற்குப் பிறகு. கொரோனா காலத்தில் தான் நீங்கள் பதவி ஏற்று இருந்தீர்கள், கொரோனாவை நீங்கள் எப்படி கட்டுப்படுத்தினீர்கள்? அது எப்படி உங்களால் முடிந்தது என்று. ஒரே வார்த்தை சொன்னேன். அன்றைக்கு அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய நான் உட்பட எல்லோருமே மருத்துவத்துறையைச் சார்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, நாங்கள் எல்லோரும் டாக்டராக மாறினோம். அதனால் தான் மக்களை காப்பாற்றினோம் என்று சொன்னேன். இப்போது எல்லா அமைச்சரையும் கேளுங்கள், கொரோனா என்றால் அத்துப்படி, finger tips-ல் வைத்திருக்கிறோம். ஆகவே, அந்த அளவிற்கு அதில் முழுமையாக ஈடுபட்ட காரணத்தினால் தான் அதை கட்டுப்படுத்த முடிந்தது. அத்தகைய நெருக்கடியான காலக்கட்டத்தில் தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

ஆனால், கொரோனாவையே காரணமாக வைத்து வேலையின்மை பிரச்னையை கண்டும் காணாமல் தி.மு.க. அரசு விட்டுவிடவில்லை. நம்முடைய ஆட்சி அதை கண்டும் காணாமல் இருந்துவிடவில்லை. ஒரு லட்சம் பேருக்கு இந்த ஓராண்டு காலத்தில் வேலை வாய்ப்பை இன்றைக்கு நாங்கள் உருவாக்கித் தந்துள்ளோம். இது ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரைக்கும், இது ஒரு சாதனை விழாவாகத்தான் நான் நம்பி இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன். அந்த வகையில் தான் இந்த விழாவும் நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமான இந்தத் துறையினுடைய அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய அருமை சகோதரர் திரு.

கணேசன் அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

ஒரு இலட்சம் குடும்பங்களில் விளக்கேற்றுவதற்கு நீங்கள் காரணமாக இருந்திருக்கிறீர்கள். தொழிலாளர் துறை அமைச்சராக மட்டுமல்ல தொழிலாளர் தோழனாகவே அமைச்சர் திரு.கணேசன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அதுதான் பாராட்டுக்குரியது. எதற்கு சொல்கிறேன் என்றால், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் ஏராளமான பணிகள் கடந்த பதினைந்து மாத காலத்தில் செய்து தரப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல வாரியங்களில் முந்தைய ஆட்சியாளர்களால் தரப்படாமல் நிலுவையில் இருந்த 1 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத்திட்ட உதவிகள் செய்து தரப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 6 இலட்சத்து 71 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

25-க்கும் மேற்பட்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக 12 ITI தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

6 முதல் 9 ஆம் வகுப்பு வரை படிக்கும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவை போன்ற உதவித் தொகைகள் அனைத்தும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இவை அனைத்துக்கும் மேலாக கடை மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்தித் தர சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. கடைகளில் யாரும் நின்று கொண்டிருக்கக்கூடாது. கடைகளில் பணியாற்றக்கூடிய அந்த

பணியாளர்களெல்லாம், ஏதோ, கல்லாப்பெட்டியில் முதலாளி மட்டும் உட்கார்ந்து இருப்பது மட்டுமல்ல, கடைகளில் பணியாற்றக்கூடிய பணியாளர்களும் அந்தக் கடைகளில் உட்கார்ந்து இருக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த ஆட்சி தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

இப்படி எல்லா தொழிலாளர்களுக்கும் மனதில் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்திய அறிவிப்புகள்.

இந்த வரிசையில் இத்துறை வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

கடந்த 15 மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் பெரிய அளவில் 65 வேலை வாய்ப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறிய அளவில் 817 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் 882 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. அப்படி நடத்தப்பட்டிருக்கக்கூடிய அந்த முகாம்கள் மூலமாக இத்துறையின் ஆர்வத்தை நான் பார்க்கிறபோது, இந்த முகாம்கள் மூலம் இதுவரைக்கும் 15 ஆயிரத்து 691 நிறுவனங்கள் பங்கெடுத்துள்ளன. இதுவரை நடந்த முகாம்களில் 99 ஆயிரத்து 989 பேர் பல்வேறு வேலை வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே எல்லோரும் தெரிவித்தார்கள், அதைதான் நானும் வழிமொழிகிறேன்.

பத்தாம் வகுப்பு படித்தவர்கள் முதல் பொறியியல் பட்டதாரிகள் வரை வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

இப்படி வேலை வாய்ப்பைப் பெற்றவர்களில் மாற்றுத்திறனாளிகளும், திருநங்கைகளும் இருக்கிறார்கள் என்பதுதான் Social justice இது தான் திராவிட மாடல். அதனுடைய

அடையாளம் ஆகும். திராவிட மாடல் என்றால் என்ன, என்ன என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு எத்தனையோ சொல்லலாம், இது ஒரு திராவிட மாடல்.

ஒரு இலட்சமாவது பணி ஆணையை வழங்கியது உள்ளபடியே சொல்கிறேன், என்னுடைய வாழ்நாளில் எத்தனையோ மறக்க முடியாத நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு, அப்படிப்பட்ட வரிசையில், உறுதியாக சொல்கிறேன். இந்த ஒரு இலட்சமாவது பணி ஆணையை வழங்குவதும் ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சர் திரு. கணேசன் அவர்களுக்கு மட்டுமல்ல, இந்தத் துறையின் பொறுப்பை ஏற்று செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகள் அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு இலட்சம் என்பது முடிவல்ல, இது தொடக்கம். அதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேருக்கு என்றால், ஒவ்வொரு ஆண்டுக்கு எவ்வளவு என்று கணக்கைப் போட்டுப் பாருங்கள். எனவே, அந்த வகையில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதை இலக்காக வைத்துக்கொண்டு செயல்படவேண்டும்.

ஒரு இளைஞருக்கு வேலை கிடைப்பதன் மூலமாக ஒரு குடும்பம் முன்னேறுகிறது. அது மட்டுமல்ல, அவரது தலைமுறையே முன்னேற்றப் பாதைக்கு செல்கிறது.

இங்கே வேலை பெற்றுச் செல்பவர்கள் ...

பத்து ஆண்டுகள் கழித்து-

இருபது ஆண்டுகள் கழித்து -

தங்கள் பிள்ளைகளிடம், ஏன் தங்களுடைய பேரன் பேத்திகளிடம், இது மாதிரி இந்தத் தேதியில், புதுக்கல்லூரியில்

வேலைவாய்ப்பு தரக்கூடிய நிகழ்ச்சி நடந்தது. அதில் முதலமைச்சர் கையால் நான் வேலை வாய்ப்பு ஆணையை பெற்றேன் என்று சொல்லும் போது, அவர்கள் எந்த அளவுக்கு மகிழ்ச்சியை அடைகிறார்களோ, இல்லையோ, நான் பல மடங்கு பெருமையை, மகிழ்ச்சியை அடைகிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்களை, மாணவச் செல்வங்களை தகுதி, திறமை, அறிவு, ஆற்றல் படைத்தவர்களாக ஆக்குவது தான் திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை நோக்கம் ஆகும். அதற்காகத் தான் நான் முதல்வன் என்ற ஒரு திட்டத்தை நாங்கள் ஏற்கனவே தொடங்கி இருக்கிறோம். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சியைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறோம்.

வேலை இல்லை என்ற நிலையும் இருக்கக் கூடாது. வேலைக்கு திறமையான இளைஞர்கள் இல்லை என்ற நிலையும் இருக்கக் கூடாது என்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் இந்தத் தருணத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை சொல்கிறபோது கொஞ்சம் வேதனையோடுநான்குறிப்பிடவிரும்புகிறேன்.என்னவென்றால், இரண்டு நாளைக்கு முன்னால், சென்னையில் சத்யா என்ற ஒரு மாணவிக்கு நடந்த துயரத்தை அறிந்து நான் நொறுங்கிப் போயிருக்கிறேன். நான் மட்டுமல்ல, அதைப் படித்த, அறிந்த அத்தனை பேர்களுமே, நீங்கள் எல்லாம் துக்கத்தில் இருந்திருப்பீர்கள், துயரத்தை அடைந்திருப்பீர்கள். இது போன்ற சம்பவங்கள், இனி தமிழகத்தில் நிகழக்கூடாது, இதுவல்ல நாம் காண விரும்பக்கூடிய சமூகம். இனி எந்தப் பெண்ணுக்கும் இதுபோல, நடக்காமல் தடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. தங்கள் பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அறிவாற்றலிலும், தனித்திறமையிலும், சமூக நோக்க மனப்பான்மையும்

கொண்டவர்களாக அவர்களை பெற்றோர்கள் வளர்க்க வேண்டும். பாடப் புத்தகக் கல்வி மட்டுமல்ல, சமூகக்கல்வி அவசியமானது. தன்னைப்போலவே, பிற உயிரையும், மதிக்க, பாதுகாக்க கற்றுத்தர வேண்டும். நல்லொழுக்கமும், பண்பும் கொண்டவர்களாக, அவர்கள் வளர்ந்து, வாழ்ந்து இந்த சமூகத்துக்கான தங்கள் பங்களிப்பை வழங்கவேண்டும். அவர்கள் எந்தவகையிலும் திசை மாறிச் சென்று விடாதபடி வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்குத்தான் இருக்கிறது. இயற்கையில், ஆண் வலிமையுடையவனாக இருக்கலாம். அந்த வலிமை அடுத்தவர்களை கட்டுப்படுத்துவதாக இருக்கக்கூடாது. பெண்களை பாதுக்காக்கக்கூடியதாக அந்த வலிமை இருக்க வேண்டும். சில இளைஞர்கள் என்னமாதிரியாக வளர்கிறார்கள் என்பதை இந்த சம்பவம் உணர்த்துகிறது. பள்ளி, கல்லூரிகளும், பெற்றோர்களும் சேர்ந்து இளைய சக்திகளை பாதுகாக்க அவர்களை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி பாதுகாக்கப்படும் இளைஞர் சக்திக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது வேலைக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவது என்ற சக்கரச் சுழற்சியுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. வேலையின்மையும் இருக்கக் கூடாது. வேலை இழப்பும் இருக்கக் கூடாது என்று நான் உத்தவிட்டிருக்கிறேன்.

தொழில் துறையாக இருந்தாலும் சரி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையாக இருந்தாலும் சரி, ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

கடந்த ஓராண்டு காலத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில் ஒப்பந்தங்களின் காரணமாக சுமார் 2 இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்க இருக்கிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த பலன்களை நமது இளைஞர்கள் நிச்சயமாக அடைவார்கள்.

ஒவ்வொரு தனிமனிதருக்கும், நன்மை அளிக்கும் அரசாக இந்த திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அதில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையும் முக்கியமான பங்களிப்பை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர்களிடம் பல்வேறு திறமைகளை உருவாக்குங்கள். திறமை பெற்ற இளைஞர்கள் அனைவருக்கும் தகுதியான வேலைகளை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப் பெற்ற இளைஞர்கள், தங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொண்டு தங்களுக்கு ஆர்வமான துறைகளில் உயர்வை அடைந்தாக வேண்டும்.

வேலை கிடைத்துவிட்டது என்று தேங்கிவிடாதீர்கள்.

எப்போதுமே தேங்கிய நீரானது, குட்டையாகி விடும்.

ஓடிக்கொண்டிருக்கக்கூடிய ஆறு தான் கடலை சென்றடையும்.

அத்தகைய கடலளவு சாதனைகளை நிகழ்த்தக்கூடியவர்களாக நமது இளைஞர்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்கள் அனைவரையும், நெஞ்சார, மனதார வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் ஆற்றிய உரை - 15.10.2022

இயற்கை பேரிடர் காலத்தை மக்கள் ஆதரவோடு சேர்ந்து நாம் அனைவரும் வெல்வோம்

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் நகர்ப்புற துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலாளர்களே!

மாவட்ட ஆட்சியர்களே!

மாநகராட்சி ஆணையர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

மிகமிக அவசரமான நிலையில் - அவசியமான ஒரு பிரச்சினையை குறித்து ஆலோசனை நடத்துவதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

‘வருமுன் காப்பதே அரசு –

வந்த பின் திட்டமிடுவது இழுக்கு’

- என்கின்ற அந்த அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த ஆலோசனைக் கூட்டத்தை நாம் இங்கே நடத்தி இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், இந்த ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனை எதிர்கொள்வதற்கு அனைத்து மாவட்ட நிருவாகமும் ஆயத்த நிலையில் இருப்பதாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஒரு பிரச்சினையின் தீவிரத்தை நாம் உணர்ந்தால் - அந்த பிரச்சினையைப் பாதி வென்றதாகப் பொருள். ஒரு பிரச்சினையை எதிர்கொள்ள நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டால் - அந்தப் பிரச்சினையை முழுமையாக வென்றுவிட்டதாகவே அது அமைந்துவிடும். அந்த அடிப்படையில், எந்தவித பேரிடரையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதை அறிந்து உங்கள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருவள்ளூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை மாவட்டங்களில் மிக கனமழையும் - சென்னை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக நேற்றைய தினம் வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. இதன் அறிகுறியாக நேற்று முதலே மழை பெய்யத் தொடங்கி விட்டது. மிக கனமழை - கனமழை - சில இடங்களில் சூறாவளிக் காற்று ஆகியவை இருக்கக் கூடும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதனை நாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

கடந்த ஆண்டு நாம் பெருமழையைச் சந்தித்தோம். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நமக்கெல்லாம் மிகப்பெரிய சவாலாக அமைந்திருந்தது. இதேபோல் மற்ற சில மாவட்டங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

மீண்டும் அதேபோன்ற ஒரு நிலை எங்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று முடிவெடுத்து, அதற்கான வழிமுறைகளை அரசுக்கு எடுத்துரைக்க மரியாதைக்குரிய திருப்புகழ் அவர்களின் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அவர்கள் அளித்த ஆலோசனையின்படி பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்கள் அனைத்திலும், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் முடிந்திருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

இம்முறையும் மழைநீர் தேங்காதவாறும், வெள்ளம் ஏற்படாதவாறும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைத்து மாவட்ட நிருவாகத்தினுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து பேரிடர் காலங்களில் மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய முக்கியப் பொறுப்பு மாவட்ட நிருவாகத்திற்குத்தான் இருக்கிறது. இதனை உங்களது சார்நிலை அலுவலர்கள் அனைவருக்கும் நீங்கள் உணர்த்தி செயல்பட வைக்க வேண்டும்.

குறிப்பாக, மக்களுக்கு நேரடி சேவை வழங்கும் துறைகளில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்க பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்க வேண்டும்.

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் கைப்பேசி சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை முன்கூட்டியே மீட்டு, நிவாரண மையங்களில் பாதுகாக்க அதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்க வேண்டும்.

பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றும்போது முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

பழுதடைந்த / பலவீனமான சுற்றுச் சுவர்களை அப்புறப்படுத்த வேண்டும்.

வயல்வெளிகளில் பயிர் சேதம் ஏற்படாத வகையில் மழைநீர் வடிவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு தடையில்லா குடிநீர் வழங்குதல், பால் விநியோகம் மற்றும் மின்சாரம் வழங்கல், சமுதாய உணவுக்கூடம், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஏற்பாடுகள் செய்திட வேண்டும்.

கரையோரப் பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் முன்னதாகவே அளிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

மாநகர மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் மற்றும் அது தொடர்புடைய பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்பதையும் நீங்கள்

கவனிக்க வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த அலுவலர்களும், வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை, தீயணைப்புத் துறை, வேளாண் துறை ஆகிய பல்வேறு துறை அலுவலர்களும் தனித்தனியாக இயங்காமல், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசுத் துறையுடன் சேர்ந்து மக்களும் ஒருங்கிணைந்து செயல்படும் சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாநகராட்சிப் பகுதியிலும் 24 மணிநேரமும் செயல்படும் வகையில் அமைக்கப்படும் அவசர உதவி மையங்கள் முறையாக செயல்படுவதை கண்காணிப்பு அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

நிவாரண மையங்களில் பொதுமக்களைத் தங்க வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களுக்கு தரமான உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு நிவாரண முகாமிற்கும் ஒவ்வொரு பொறுப்பு அலுவலர் நியமிக்கப்படவேண்டும்.

பொது தொலைபேசி எண்களைப் பரப்ப வேண்டும்.

நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டும்.

பேரிடர் மேலாண்மையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மின் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

மொத்தத்தில் மக்களைக் காக்க வேண்டும். அது ஒன்றே நம்முடைய இலக்கு!

நம்முடைய கவனத்திற்கு வரும் பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டும். தொலைபேசி மூலமாகவோ - வாட்ஸ்அப் வழியாகவோ வரக்கூடிய கோரிக்கைகளை உடனடியாக நிவர்த்தி செய்யுங்கள். அதிகாரிக்கு அனுப்பினோம், உடனே சரிசெய்து கொடுத்தார்கள் என்று பொதுமக்கள் சொல்வதுதான், மிகப்பெரிய பாராட்டாக இருக்க முடியும்.

சிறு தவறு என்றாலும் பெரிய கெட்ட பெயரை ஏற்படுத்தும். அதேநேரத்தில் சிறு உதவி என்றாலும், அது பெரிய நல்ல பெயரையும் ஏற்படுத்தும் என்பதையும் யாரும் மறந்துவிட வேண்டாம்.

இயற்கைப் பேரிடர் காலம் என்பது ஒரு அரசுக்கு சவாலான காலம்!

அந்தச் சவாலை மக்கள் ஆதரவோடு சேர்ந்து நாம் அனைவரும் வெல்வோம்.

உங்களது அனைத்து ஆலோசனைகளையும் உடனுக்குடன் அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முகாம் அலுவலகத்தில்,*
வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும்
முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை
மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன்
காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற
ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 01.11.2022

தென்காசியாவிலேயே தொழில் வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்

நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி (Industry 4.0) மாநாட்டில் பங்கேற்றுள்ள மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எழிலன் அவர்களே, திரு. ஹசன் மௌலானா அவர்களே,

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு. கிருஷ்ணமூர்த்தி, அவர்களே,

ஜி.இ. ஏவியேஷன் (GE Aviation) நிறுவனத்தின் தெற்காசியத் தலைவர் திருமதி சர்மிளா பரதன் அவர்களே,

சீமென்ஸ் டிஜிட்டல் இன்டஸ்ட்ரிஸ் சாப்ட்வேர் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு. மேத்யூ தாமஸ் அவர்களே, அயல் நாட்டுத் தூதர்களே, தூதரக அதிகாரிகளே,

தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளே, அரசு உயர் அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த பதினைந்து மாத காலமாகத் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னோக்கிய பாய்ச்சலில் போய்க்கொண்டு இருக்கிறது என்பதை எனக்கு முன்னாலே உரையாற்றிய அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தொழில் துறையானது மிகவேகமான முன்னேற்றங்களை உருவாக்கித் தந்து வருகிறது என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்திய அளவிலான கவனத்தை மட்டுமல்ல - உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்குக் காரணமான தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களையும்,

தொழில் துறைச் செயலாளர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களையும், அவர்களுக்குத் துணைநின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தொழில் துறை அதிகாரிகளையும் இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தொழில் துறை சார்பில், கடந்த பதினைந்து மாதத்தில் எத்தனையோ மாநாடுகளை நாம் நடத்தி இருக்கிறோம்.

முதலீடுகளை ஈர்ப்பதற்காக –

திட்டங்களை வகுப்பதற்காக –

தொழிற் கொள்கைகளை வெளியிட –

ஒப்பந்தங்களைப் போடுவதற்காக

இப்படி ஏராளமான மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மொத்தத்தில் தமிழ்நாட்டுக்கு பலன் தரும் மாநாடாக அமைந்திருக்கிறது. அந்த வரிசையில் இன்று இந்த நிகழ்ச்சியும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில்,

தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை, 2022-ஐ வெளியிடுதல்,

மேம்பட்ட உற்பத்திக்கான இரண்டு திறன்மிகு மையங்களை திறந்து வைத்தல்,

மதுரை மற்றும் சென்னையில் ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கான பயிற்சி நிறுவனங்களை (Remote Pilot Training Organisation) தொடங்கி வைத்தல்,

பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இடுதல் ஆகிய பல நிகழ்வுகள் இந்த நிகழ்ச்சியிலே நடந்தேறி

இருக்கின்றன. தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு நான் வைத்துள்ள இலக்கு மிகப்பெரியது.

2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும். இதை அடைய தமிழகத் தொழில் துறை தொய்வில்லாமல் பணியாற்றி வருகிறது என்பதை நானும் அறிவேன், நீங்களும் நன்கு அறிவீர்கள். அதன் ஒரு பகுதியாகத்தான், இன்றைய நாள் மேம்பட்ட உற்பத்திக்கான இரு திறன்மிகு மையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் நாட்டின் சராசரியைவிட மிக அதிகமாக 51.4 விழுக்காடாக உள்ளது. திறன்மிக்க பணியாளர்களை நமது மாநிலம் பெற்றுள்ளது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. இதனை நாம் தக்கவைத்துக் கொள்வதோடு, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

நாளை வரப்போகும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, நமது இளைஞர்களின் திறன்களை வளர்த்து, முன்னேற்றுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அதன் ஒரு பகுதியாகத்தான், இந்த திறன்மிகு மையங்கள் இங்கே அமைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, உற்பத்தித் துறையைவிட சேவைத் துறையில் கவனம் செலுத்தினால்தான் பெரிய அளவிலான வளர்ச்சி பெற இயலும் என சிலர் கருதுகின்றனர். ஆனால், நம்மைப் பொறுத்தவரை உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறை ஆகிய இரண்டிலுமே முன்னணியில் இருக்க வேண்டும். அப்போதுதான் அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் வளர்ச்சியை நாம் பெற்றிட முடியும்.

எனவேதான், நான்காம் தலைமுறை தொழில்வளர்ச்சி (Industry 4.0) தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு நம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும், இந்த மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையங்கள் வெகுவாக உதவும். குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இந்த திறன்மிகு மையங்களைப் பயன்படுத்திக் கொண்டு, வெகு விரைவில் முன்னேற்றம் காண இயலும்.

சீமென்ஸ் மற்றும் GE ஏவியேஷன் ஆகிய பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து, இவ்வாறான மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையங்களை டிட்கோ நிறுவனம் இங்கு அமைத்துள்ளது.

இந்தத் திறன்மிகு மையங்களில் நவீன மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்குத் தேவையான அம்சங்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. இவற்றை, சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தொழில் துறையினரை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

டிட்கோ மற்றும் சீமென்ஸ் நிறுவனங்கள் இணைந்து, 251 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் டைடல் பார்க்கில் அமைந்துள்ள இந்தத் திறன்மிகு மையம், நாட்டிலேயே இத்தகு முதல் திறன்மிகு மையம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், இந்தத் திறன்மிகு மையங்களில், தொழிலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும், மெய்நிகர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த திறன்மிகு மையம், "நான் முதல்வன்" திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் ஒருங்கிணைந்து செயல்படும்.

டிட்கோ மற்றும் GE ஏவியேஷன் நிறுவனங்கள் இணைந்து, ரூ.141 கோடி முதலீட்டில், 3D அச்சிடுதல் தொழில்நுட்பத்தில், உலகத் தரம் வாய்ந்த சேர்க்கை

உற்பத்திக்கான (Additive Manufacturing Centre) TAMCOE திறன்மிகு மையத்தினை உருவாக்கியுள்ளது.

இந்த மையங்களிலிருந்து மேம்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் மூலமாகவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நிறுவனங்கள் மூலமாகவும், நமது மாநிலத்திற்கு அதிக காப்புரிமைகள் கிடைக்கும். எனவே, அதிநவீன தொழில்நுட்பப் பயன்பாடுகளுடன், தொழில் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்திடும் சக்தியாகவும் இந்த திறன்மிகு மையங்கள் விளங்கிடும்.

தொழில் வளர்ச்சி 4.0 தொடர்பான நவீன தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் இத்திறன்மிகு மையங்கள் செயல்படும் என்பதால், மாநிலத்தின் முதலீடு ஈர்ப்புத் திறன் வெகுவாக மேம்படும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திச் சூழல் அமைப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு எப்போதுமே, முன்னணி மாநிலமாகத்தான் இருந்து வருகிறது. வரலாற்று ஏடுகளை சற்றே புரட்டிப் பார்த்தோமானால், உலகின் மிக வலிமையான கடற்படையாக சோழ மன்னர்களின் கடற்படை இருந்துள்ளது. காலாட்படையை எடுத்துக் கொண்டால், இந்தியாவில் முதல் காலாட்படைப் பிரிவு, மெட்ராஸ் ரெஜிமெண்ட்தான். அதுவரை ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா நாடுகளில் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்த விமானங்கள், முதல் முறையாக, இந்தியாவில் 1910-ஆம் ஆண்டு சென்னையில்தான் தயாரிக்கப்பட்டது.

இன்றும் கூட, HAL நிறுவனத்தின் இலகுரகப் போர் விமானங்களின் பெரும்பான்மையான உதிரிபாகங்கள் தமிழ்நாட்டில்தான் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்துறையில் உற்பத்தித் திறனை வெகுவாக அதிகரிப்பதற்கும், தன்னிறைவு பெறுவதற்குமான வாய்ப்பு தற்போது

ஏற்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக்கும், அதன் கூடவே வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறை வளர்ச்சிக்கும் ஏதுவாக, இத்துறையை வளர்ந்து வரும் துறையாக (Sunrise Sector) அறிவித்து, முன்னேற்ற நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த 12 மாதங்களில், துறைசார்ந்த பல கொள்கைகளை நாங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறோம். அந்த வரிசையில் இன்று தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2022-ஐ வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

10 ஆண்டு காலகட்டத்திற்குள், 75 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் என்ற இலக்கை நாங்கள் இதன் மூலம் நிர்ணயித்திருக்கிறோம்.

அண்மைக் காலங்களில், Drone எனப்படும் ஆளில்லா விமானங்கள் எத்தகைய வளர்ச்சி அடைந்துள்ளது என்பதையும், வாழ்வாதாரத்தை எவ்வாறு மாற்றியமைத்து வருகின்றன என்பதையும் கண்கூடாகக் காண்கின்றோம். வேளாண் துறையானாலும், சட்டம் ஒழுங்கானாலும், பாதுகாப்பு ஆனாலும், எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், ஆளில்லா விமானங்கள் தற்போது பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது மேலும் வளர்ச்சியடைந்திடும் என்பதில் ஐயமேதுமில்லை. இந்த ஆளில்லா விமானங்களை இயக்கிட ஆளில்லா விமானங்களை இயக்குபவர்கள் (Drone Pilots) அல்லது ரிமோட் பைலட்டுகள் தேவை.

ஒன்றிய அரசின், இந்திரா காந்தி ராஷ்ட்ரிய உடான் அகாடமி மற்றும் DE Drone ஆகிய நிறுவனங்களுடன் டிட்கோ நிறுவனம் இணைந்து பணியாற்றி, இந்த ரிமோட்

பைலட் பயிற்சி அமைப்பினை மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் நிறுவியுள்ளது. அவற்றை இன்று காணொலிக் காட்சி வாயிலாக நான் தொடங்கி வைத்துள்ளேன்.

இதன் மூலம் மாதம் 200 மாணவர்கள் என்ற விகிதத்தில் பயிற்சி அளித்திட இயலும். ஓராண்டிற்குள் கிட்டத்தட்ட 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வாய்ப்பு உள்ளது. இதன் மூலம், நமது கிராமப்புற படித்த இளைஞர்கள் ஆளில்லா விமான பைலட்டுகளாக தகுதி பெற்று உலகை வலம் வர முடியும்.

தமிழகத்தின் அனைத்து தொழில் வாய்ப்புகளையும் அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய அளவில் மட்டுமின்றி, தெற்காசியாவிலேயே, தொழில் வளர்ச்சியில் சிறந்த மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற இலட்சிய இலக்கினை அடைவதற்காக நாம் அனைவரும் கைகோர்த்து உழைப்போம்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை டைடல் பார்க்கில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற "நாளையை நோக்கி இன்றே – தலை நிமிர்ந்த தமிழ்நாடு" எனும் தொழில் வளர்ச்சி – 4.0 மாநாட்டில் ஆற்றிய உரை - 08.11.2022

காந்திய நெறிமுறைகளை கடைபிடிப்பவர்களாக இளைய சமுதாய மாணவர்கள் இயங்க வேண்டும்

இந்திய ஒன்றியத்தின் மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே,

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களே,

மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர் திரு. எல்.முருகன் அவர்களே,

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு அலுவலர்களே,

காந்திகிராம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கே.எம். அண்ணாமலை அவர்களே,

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மித் சிங் அவர்களே,

பேராசிரியர் பெருமக்களே,

என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே,

கிராமப்புற கல்வி மேம்பாட்டிற்கான அறிவாலயமாகத் திகழும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

குஜராத்தில் பிறந்து, ஒற்றுமையையும் சமூக நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி இந்திய தேசத்தின் தந்தையாக வலம் வந்த அண்ணல் காந்தியடிகளுக்கும் தமிழ்நாட்டுக்குமான தொடர்பு மிக மிக அதிகம்.

தனது வாழ்நாளில் 26 முறை தமிழ்நாட்டிற்கு வருகை தந்த காந்தியடிகள் அவர்கள் - தமிழை விரும்பிக் கற்றவர். மோ.க. காந்தி என்று தமிழில் கையெழுத்து இட்டவர். திருக்குறளைப் படிப்பதற்காகவே தமிழ் கற்க வேண்டும் என்று சொன்னவர்.

இவை அனைத்துக்கும் மேலாக உயராடை அணிந்து அரசியல் வாழ்க்கைக்குள் நுழைந்த அவரை அரையாடை கட்ட வைத்தது இந்தத் தமிழ் மண்!

வட இந்தியாவினர் அனைவரும் ஒரு தென்னிந்திய மொழியைக் கற்க வேண்டும், அது தமிழாக இருக்க வேண்டும் என்று சொன்னவர் காந்தியடிகள்!

அத்தகைய காந்தியடிகள் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தில் இந்த பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைத்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையில் வருக வருக வருக என வரவேற்கிறேன்.

கல்வியின் வழியாக மனிதரைச் சமூகத்துக்குப் பயனுள்ளவராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது.

"இந்தியா கிராமங்களில் வாழ்கிறது. கிராமங்கள் உயர நாடு உயரும்" என்ற காந்தியக் கொள்கையின் அடிப்படையில், தேசத் தந்தை காந்தியடிகளின் நல்லாசியோடு அவர்களுடைய சீடர்களான டாக்டர் ஜி. ராமச்சந்திரன், அவரது துணைவியார் டாக்டர் எஸ். சௌந்தரம் அவர்களால் தொடங்கப்பட்ட கிராமிய பயிற்சி நிறுவனம் இன்று நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக வளர்ந்து, சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மாணவர்களும், வெளிநாடுகளைச் சார்ந்த மாணவர்களும், இங்கு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளைப் பயின்று வருகின்றனர் என்பதை அறியும்போது பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இதற்கு ஏதுவாக, கல்வி கொடையாக 207 ஏக்கர் நிலத்தினை இப்பல்கலைக்கழத்திற்காக வழங்கிய சின்னாளப்பட்டியைச் சேர்ந்த புரவலர்களை இந்நேரத்தில் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

தமிழ்நாட்டில் இன்று மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் 22 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இவை கலை, அறிவியல், பொறியியல், கல்வியியல், விளையாட்டு, கால்நடை, மருத்துவம், மீன்வளம், தமிழ்வளர்ச்சி, சட்டம், வேளாண்மை மற்றும் இசை ஆகிய துறைகளின்கீழ் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாகத் திகழ்கிறது. இதனை மேலும் வலிமைப்படுத்தும் வகையில் மாநில அரசு பல்வேறு கல்வித் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

பெண்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்க "புதுமைப் பெண்" என்கிற மூவலூர் இராமாமிர்தம்மாள் பெயரில் உயர்கல்வி உறுதித் திட்டம்,

அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வியில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு,

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பயில நிதியுதவித் திட்டம் போன்றவற்றின் மூலமாக அனைவரும் உயர்கல்வி பயில தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது.

நான் முதல்வன்

இல்லம் தேடிக் கல்வி

கல்லூரிக் கனவு

- என்பது போன்ற பல்வேறு கல்வித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம். இவை தமிழக எல்லையைத் தாண்டி அனைத்து மாநில அரசுகளும் உன்னிப்பாக கவனிக்கும் திட்டங்களாக அமைந்துள்ளன.

Education is the only asset, that can never be snatched by anyone under any situation. It is the duty of a state government to impart the wealth of education. Hence, I appeal to the Union Government, to support and encourage such efforts of state government, by bringing back Education, under the State list.

When the constitution was framed, and came into force, education was originally placed, in the State list. It was moved to the concurrent list, only during the period of emergency.

I request, that the Union Government, especially Hon'ble Prime Minister, shall attempt, to move Education, back to the State list.

சமூகத்திற்கு சேவை செய்வதே கல்வியின் ஒட்டுமொத்த இலக்கு என்ற காந்தியடிகளின் கூற்றிற்கு ஏற்ப முற்போக்குச் சிந்தனையுடன் அறிவியல் சார்ந்த சமூகமாக தமிழ்ச் சமூகத்தைக் கட்டமைக்க இளைஞர்களாகிய உங்களை வேண்டுகிறேன்.

உண்மை

ஒழுக்கம்

வாக்கு தவறாமை

அனைவருக்கும் சமமான நீதி

மதநல்லிணக்கம்

வகுப்பு ஒற்றுமை

சிறுபான்மையினர் நலன்

தனிநபருக்கான மதிப்பு

ஏழைகள் நலன்

அகிம்சை

தீண்டாமை விலக்கு

அதிகாரக் குவியலை எதிர்த்தல்

ஏகபோகத்துக்கு எதிர்ப்பு

சுதந்திரமான சிந்தனை

அனைவர் கருத்துக்கும் மதிப்பளித்தல்

கிராம முன்னேற்றம்

- இவைதான் காந்தியத்தின் அடிப்படைகள்!

இவை அனைத்தும்தான் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் விழுமியங்கள்!

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமாக காந்தியின் பெயரைச் சொல்ல நம்மை நாம் தகுதிப்படுத்திக் கொள்வோம்.

இந்த பெருமைமிகு விழாவில் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும். இசைஞானி என்ற பெருமைமிகு பட்டத்தை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இசை உலகத்தின் மாமேதையான இளையராஜா அவர்களையும், மிருதங்க வித்துவான் உமையாள்புரம் சிவராமன் அவர்களையும், பட்டம் பெற்றுள்ள மாணவ, மாணவியர் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

காந்திய நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவர்களாக - பரப்புரை செய்பவர்களாக - நடந்து காட்டுபவர்களாக இளைய சமுதாயம் - மாணவர்கள் இயங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை நீங்கள் சாதித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
திண்டுக்கல், காந்திகிராம் நிகர்நிலைப் பல்கலைக்கழக
36ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை - 11.11.2022

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, சுகாதாரத்தில் தமிழ்நாடு மிக உயர்ந்த குறியீடுகளை அடைவதே என்னுடைய விருப்பம்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெறக்கூடிய சுகாதார மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

எனக்கு முன்னாள் மிகச் சிறப்பான வகையில் இந்தத் துறையினுடைய சிறப்புக்களை, சாதனைகளை உங்களுடைய ஒத்துழைப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அரும்பணிகளைப் பற்றியெல்லாம் விளக்கமாக, விரிவாக எடுத்து வைத்து உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருமை நண்பர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே, துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மருத்துவம் மற்றும் மக்கள்

நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்களே,

உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாக ஆணையர் திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப., அவர்களே,

தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதிஷ், இ.ஆ.ப., அவர்களே,

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ். உமா இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., அவர்களே,

இந்தத் துறையின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பல்வேறு துறைத் தலைவர்களே,

மருத்துவக்கல்லூரியினுடைய முதல்வர்களே,

மருத்துவத் துறையினுடைய உயர் அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைத்துத் துறைகளும் வளர்ச்சியடைகின்ற ஒருங்கிணைந்த வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற வேண்டும் என்று சொன்னால், இங்கு எனக்கு முன்னால் உரையாற்றியிருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய அமைச்சரும், தலைமைச் செயலாளர் அவர்களும், துறையினுடைய செயலாளர் அவர்களும் எடுத்துச்சொன்ன அத்தனை வழிமுறைகளையும் நாம் கடைப்பிடித்தாக வேண்டும். அதற்காக நாம் பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம். அதில் நமது கவனத்தைப் பெற்றிருக்கக்கூடிய முதன்மையான துறை எது என்று சொன்னால், அது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைதான்!

கல்வியும் - மருத்துவமும் இந்த அரசினுடைய இரு கண்கள் என்று நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை, மகத்தான துறையாகச் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. மகத்தான வகையில் செயல்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களையும், துறையினுடைய செயலாளர் திரு. செந்தில்குமார் அவர்களையும், அவர்களுக்கு துணைநின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகளையும், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து மருத்துவப் பணியாளர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதன் தொடர்ச்சியாக உங்களது பணிகளை மேலும் செம்மைப்படுத்தி - மக்களுக்கு உதவத் திட்டமிடும் நோக்கத்தோடு இந்த மாநாட்டை நீங்கள் இங்கே கூட்டியிருக்கிறீர்கள்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்,

நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்,

வட்ட மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள்,

அரசு மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவமனைகள்,

ஆகியவற்றின் செயல்பாடுகளைச் சீரமைப்பதற்கான முதல் மாநாடாக இந்த மாநாட்டைக் கூட்டியிருப்பதை அறிந்து உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரசினுடைய நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்கு இந்த மாநாடு உதவிகரமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஊரகப் பகுதிகளில், குக்கிராமத்தில் வசிக்கக்கூடிய ஏழை, எளிய மக்களின் நோயையும் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, அவர்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை இலவசமாகவும் உடனடியாகவும் கிடைக்க வேண்டும் என்பதே நமது அரசினுடைய குறிக்கோள்!

இதைத்தான் திருவள்ளுவர் அவர்கள், "நோய் நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் வலியுறுத்திய குறிக்கோளுடன் நமது அரசு செயல்பட்டு வருவதை நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் ஏழை, எளிய மக்களுக்காக

கண்ணொளி காப்போம் திட்டம்,

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்,

வருமுன் காப்போம் திட்டம்,

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்,

108 இலவச ஆம்புலன்ஸ் திட்டம்

போன்ற எண்ணற்ற சுகாதாரத் திட்டங்கள் நாட்டில் முன்னோடித் திட்டங்களாகக் கொண்டுவரப்பட்டு, இன்றளவும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் சிறப்பான செயல்பாட்டால் தேசிய அளவிலும், இதர மாநிலங்களிலும் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கலைஞரின் பாதையில்தான் நமது அரசினுடைய நல்வாழ்வுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழை, எளிய மக்களுக்கு அவர்களின் வாழும் இடங்களிலிலேயே மருத்துவ சேவை வழங்கிட வேண்டும் என்பதற்காகத் தான் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தில் பயனடைந்தோர் எண்ணிக்கை விரைவில் ஒரு கோடி நபர்கள் என்ற எண்ணிக்கையை அடைய இருக்கிறது.

சாலை விபத்தினால் ஏற்படக்கூடிய இறப்பைக் குறைப்பதற்கும், பொன்னான நேரம் (Golden Hour) என்று சொல்லப்படும் முதல் 48 மணி நேரத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அவர்களுக்கு உயர்சிகிச்சை அளிக்க ஒரு இலட்சம் ரூபாய் வரை இலவசமாக வழங்கப்படும் 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48' திட்டம் 18.12.2021 முதல் செயல்படுத்தப்படுகிறது.

நோயைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க வகைசெய்யக்கூடிய வகையிலே 'கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்' மீண்டும் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 17 லட்சத்து 16 ஆயிரம் நபர்கள் பரிசோதனை செய்திருக்கிறார்கள்.

இந்த மூன்று திட்டங்களும், நான் பெருமையோடு சொல்கிறேன், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை. இவற்றைச் சிறப்பாக செயல்படுத்தி மக்கள் பயன்பெற நீங்கள் அனைவரும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு, மருத்துவ சாதனங்கள் போன்றவை மாநில நிதியிலிருந்தும், தேசிய நல்வாழ்வு நிதியிலிருந்தும் வழங்கி, வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அடிக்கடி தணிக்கை செய்து, அங்கு வரும் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறதா? மருந்து தட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறதா? மருத்துவமனைகளுக்கு என்ன தேவைகள் என்பதைக் கண்டறிந்து, குறைகளைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு - சுகாதாரம் ஆகியவற்றில் தமிழகம் மிக உயர்ந்த குறியீடுகளை அடைய வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.

தமிழ்நாட்டில், 100 விழுக்காடு பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் நிகழ்கின்றன. எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை தமிழ்நாடு அடைந்திருக்கிறது.

தடுப்பூசியிலும் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது.

இருதய மாற்று அறுவை சிகிச்சை மற்றும் நுரையீரல் மாற்று சிசிச்சையில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது.

உடல் உறுப்புதானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் உலகளவில் முதலிடம் தமிழ்நாடு.

இதேபோல் மருத்துவ வளர்ச்சி அனைத்திலும் மேம்பாடு அடைய வேண்டும். அதற்கான திட்டமிடுதல்கள் வேண்டும்.

சுகாதாரக் குறியீடுகளை வைத்து மருத்துவமனைகளை தரவரிசைப்படுத்துகிறார்கள். இந்த தரவரிசையில் பின்னடைந்துள்ள மருத்துவமனைகளை முன்னே கொண்டு வர வேண்டும். மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பை சீர்செய்தால் மட்டும் போதாது. மருத்துவத் துறை - மருத்துவ முறை நவீனமயமாக வேண்டும். சிகிச்சை முறைகள் நவீனமயமாக வேண்டும்.

நோய்கள் புதுப்புது அவதாரம் எடுத்து வருகிறது. அதனை வெல்லும் முறைகளும் பன்முனை கொண்டதாக மாற வேண்டும்.

பொதுவாகவே நோய் எதிர்ப்பு சக்திக் குறைவை பெரிய குறைபாடாக அனைத்து மருத்துவர்களும் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். அப்படியானால் நோய் எதிர்ப்புத் திறனை உருவாக்குவதற்கு அரசின் சார்பில் என்ன மாதிரியான திட்டமிடுதலைச் செய்யலாம் என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

நோயைக் குணப்படுத்துதல் என்பது மருந்து, மாத்திரைகளோடு முடிந்து விடவில்லை. அதனைத் தாண்டிய பல்வேறு விஷயங்கள் இருக்கிறது. அது குறித்தும் நாம் ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில் இந்த மாநாடு, தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறையின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனையாக அமையும்; அமைய வேண்டும் என்று விரும்பி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் சுகாதார மாநாடு – 2022-ஐ தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 15.11.2022*

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் நமது மாநிலம் எப்போதும் முன்னோடியாகத் திகழும்

மாநில வன உயிரின வாரியக் கூட்டத்திற்கு வருகை தந்து துவக்கத்தில் உரையாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. கம்பம் என். இராமகிருஷ்ணன் அவர்களே,

திரு. த. உதயசூரியன் அவர்களே,

திரு. ஐ, பி. செந்தில் குமார் அவர்களே,

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தென்காசி சு. ஜவஹர், இ.ஆ.ப., அவர்களே,

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்களே,

மாநில வன உயிரின வாரிய உறுப்பினர்களே,

வனத்துறை உயர் அலுவலர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

"காடுகள் இன்றி நீர்வளம் சிறக்காது!

நீர்வளம் இன்றி வேளாண்மை வளப்படாது!

எனவே, வளமான எதிர்காலத்திற்கு காடுகள் அவசியம்.

காடுகள் வளம்பெற வன உயிரினங்கள் அவசியம்"

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின் வன உயிரின வாரியக் கூட்டத்தை முதன்முறையாக நடத்துவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாநில வன உயிரின வாரியம் என்பது வன உயிரினப் பாதுகாப்பில் முக்கியக் கொள்கை முடிவுகளை எடுக்கக் கூடியது.

வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட வாழ்விடங்களைத் தேர்வு செய்தல், வன உயிரினங்களின் மேன்மை, அங்கு வாழக்கூடிய வன உயிரினங்கள் மற்றும் தாவர இனங்களின் பாதுகாப்பு தொடர்பான உரிய கொள்கை முடிவுகளை வகுத்தல், வன உயிரின பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளுதல், வனப்பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, ஒரு இணக்கமான சூழலை ஏற்படுத்தி, வன உயிரினப் பாதுகாப்புக்கு

குந்தகமின்றிச் செயல்படுத்துதல் போன்ற இதர இனங்கள் பற்றி விவாதித்தல், உரிய ஆலோசனைகளைப் பெற்று நடைமுறைக்கு கொண்டு வருதல், வன உயிரினப் பாதுகாப்பு தொடர்பாக மாநில அரசு இந்த வாரியத்தில் முன்வைக்கும் இனங்கள் பற்றி முடிவெடுப்பது போன்றவை இந்த வாரியத்தினுடைய முக்கியப் பணிகள்.

இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வன உயிரினப் பாதுகாப்பில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்குவதற்குப் பல்வேறு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பல்லுயிர் பாரம்பரியம் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. சங்ககாலம் தொடங்கி, நமது பண்டைய இலக்கியங்கள் அனைத்திலும், ஆறுகள், மலைகள், தாவரங்கள், விலங்குகள் குறித்த முக்கியத் தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

இந்திய தேசிய பல்லுயிர் ஆணைய அறிக்கையின்படி தாவரங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள தாவரங்களின் வளமை என்பது இந்தியாவிலேயே முதன்மையாக உள்ளது. இவை மட்டுமின்றி வன உயிரினங்களிலும் 5 புலிகள் காப்பகங்கள், 5 யானைகள் காப்பகங்கள், 3 உயிர்க்கோளகக் காப்பகங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் காப்பகங்கள், 17 காட்டுயிர்க் காப்பகங்கள் என நமது மாநிலம் வன உயிரின வளமைமிக்க ஒரு மாநிலமாகத் திகழ்கிறது. இந்தப் பெருமைமிகு பாரம்பரியத்தை, வளத்தை மேம்படுத்துவதே நமது முக்கியப் பணி. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்த அரசு கீழ்கண்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக தேவாங்கு உயிரினத்திற்கென்று காப்பகம் கடவூர் வனத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக கடல்பசுக்களைப் பாதுகாக்க கடல்பசு பாதுகாப்பகம் மன்னார் வளைகுடாவில் அமைக்கப்பட்டுள்ளது.

கழுவேலி பறவைகள் காப்பகம்,

அகத்தியர் மலை யானைகள் காப்பகம்,

நஞ்சராயன் குளம் பறவைகள் காப்பகம்,

காவேரி தெற்கு காட்டுயிர்க் காப்பகம்,

போன்றவற்றை நமது அரசு குறுகிய காலத்தில் அறிவித்துள்ளது என்பது பெருமைக்குரியது. நமது பெருமைமிகு பல்லுயிர் வளங்களையும் பாரம்பரியங்களையும் பாதுகாப்பதற்கு இந்த முயற்சிகள் பெருமளவு உதவி செய்யும்.

இன்று "தமிழ்நாட்டினுடைய வன உயிரின வளமை" (Tamil Nadu Wild life Wealth) குறித்த புத்தகத்தை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இச்சிறு புத்தகம் இந்த அரசு மேற்கொண்டு வரக்கூடிய வன உயிரினப் பாதுகாப்பு முயற்சிகளை நாம் அறிந்து கொள்ள பெரிதும் உதவும் என நான் நம்புகிறேன். மேலும் யானைகள் உயிரிழப்பு குறித்து அறிவியல் பூர்வமாகத் தகவல்களை தெரிந்துகொள்ளவும், வெளிப்படைத் தன்மையை கொண்டு வரவும், "யானைகள் இறப்பில் பின்பற்ற வேண்டிய தணிக்கை முறைகள்" (Elephant Death Audit Frame Work) குறித்தும் இங்கு இந்த புத்தகம் வாயிலாக வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய புத்தகம் இந்தியாவிலேயே முதன்முறையாக வெளியிடப்படுவதாக அறிகிறேன். அதற்கான என்னுடைய பாராட்டுகள். வனவிலங்குகளின் வேட்டை / கடத்தல் உள்ளிட்ட பிற குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு வன மற்றும் வன உயிரின குற்றத் தடுப்பு பிரிவு நமது அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்கீழ், மாநிலத்தில் 3 மண்டலங்களிலும் குற்றத்தடுப்புப் பிரிவுகள் அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு யானைகளைக் கண்காணிக்கும் வனக்காவலர்களை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கும், வேட்டைத் தடுப்பு முகாம்களை அமைப்பதற்கும், ஆளில்லா வாகனங்கள் / ஆளில்லா விமானங்கள் / இரவு பார்வை கேமராக்களை வாங்குவதற்கும், வேட்டைத் தடுப்புப் படைகளை உருவாக்குவதற்கும், யானைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் என 2 கோடியே 41 இலட்சம் ரூபாயை அனுமதித்துள்ளது. இது போன்ற ஒரு முறையான அறிவியல் அணுகுமுறை மூலம் மனிதர் - யானை மோதல்களை குறைக்க முடியும் என நான் நம்புகிறேன்.

இது மட்டுமின்றி வன உயிரின வாழ்விடங்களை மேம்படுத்தும் பொருட்டு, சுமார் 282 எக்டேர் பரப்பளவுள்ள வனப்பரப்பில் அந்நிய களைத் தாவரங்கள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பணியானது வனப்பகுதிகளில் வரும் ஆண்டுகளில் தொடர்ந்து நடைபெறும் என்பதையும், அதன் மூலம் வன உயிரினங்களின் வாழ்விடங்கள், அதன் ஆரம்ப இயற்கை சூழலுக்கு கொண்டுவரப்பட்டு, வாழ்விடங்களின் தரம் மேம்படுத்தப்படும் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு முதல் நமது அரசு தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமை காலநிலை மாற்ற எதிர்வுணர்வு திட்டத்தை 920 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பில் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில் பல்லுயிர் பாதுகாப்பு இயற்கை வள ஆதாரங்களை அதிகரித்தல், சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் வனநிலம் மற்றும் வன உயிரின வாழ்விடங்களின் தரம் குன்றுதலை தடுத்தல், நிருவாகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதுமட்டுமின்றி, இந்த ஆண்டு முதல் நபார்டு நிதி உதவியுடன் தரம் குன்றிய வன நிலப்பகுதிகளை

மீளுருவாக்கம் செய்தல், மீளுருவாக்கத் திட்டத்திற்கு ரூ.481 கோடியே 14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலே கூறப்பட்ட பல்வேறு வனம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு முன்னோடி முயற்சிகள், நமது மாநிலத்தை உலக அளவில் முக்கிய இடத்திற்கு கொண்டு செல்லும். வன உயிரினங்களை பாதுகாக்க பல முன்னோடி முயற்சிகளை முனைப்புடன் செயல்படுத்த அர்பணிப்புணர்வுடன் பணியாற்றிய சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அதிகாரிகள் மற்றும் களப்பணியாற்றிய அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை இந்தத் தருணத்தில் அன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அர்ப்பணிப்பு மிக்க பணியாளர்கள், பொதுநல அமைப்புகள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பு மூலமாகவே இவையனைத்தும் சாத்தியமாகி வருகிறது. இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக நல்ல பல ஆலோசனைகளை நல்கி வருகின்ற அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வன உயிரினப் பாதுகாப்பிலும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் நமது மாநிலம் எப்போதும் முன்னோடி மாநிலமாகத் திகழும், அதற்கு இதுபோன்ற கூட்டங்கள் உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
தலைமைச் செயலகத்தில் வன உயிரின வாரிய
கூட்டத்தில் ஆற்றிய உரை - 16.11.2022

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா பராமரிப்பிற்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களே,

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

சுற்றுச்சூழல், கால நிலைமாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தின் கீழ் உள்ள 147 பெரிய உயிரியல் பூங்காக்களில் மேலாண்மை, செயல்திறன், மதிப்பீடு ஆகியவற்றின்கீழ் - வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பதை இங்கே குறிப்பிடுவதில்

நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் இந்த சாதனைக்காக நான் அத்துறை அதிகாரிகளை வாழ்த்த விரும்புகிறேன். மேலும் நமது விலங்குகளுக்கும் பார்வையாளர்களுக்கும் சிறந்த வசதிகளை வழங்குவதற்கான உங்கள் முயற்சிகளைத் தொடர்ந்து நல்குமாறு இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்று ஊரடங்கு காலங்களில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மூடப்பட்டதால் பூங்காவிற்கு வருமானம் இல்லாதபோது, உயிரியல் பூங்காவின் பராமரிப்பிற்காக அரசாங்கம் ரூபாய் 6 கோடியை ஒதுக்கியது. உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளைக் கொரோனா தொற்றுநோயிலிருந்து பாதுகாக்க அரசாங்கம் எடுத்த இந்த முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பரவலாகப் பாராட்டப்பட்டன.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, உலகத் தரம் வாய்ந்த சில உயிரியல் பூங்காக்களில் ஒன்று. பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு, முழுமையான இயற்கைச் சூழலில் வாழ்வதற்கு ஏற்றாற்போல் இந்தப் பூங்கா இயற்கையாகவே அமைந்துள்ளது.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு ஆண்டுக்கு சராசரியாக 20 இலட்சம் பார்வையாளர்கள் வந்து செல்கிறார்கள்.

இயற்கை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதில் உயிரியல் பூங்காக்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன.

உயிரியல் பூங்காக்கள், விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு வழங்குவதைத் தவிர, அழிந்து வரும் உயிரினங்களின் எண்ணிக்கையைக்

கட்டுப்படுத்துவதன் மூலம் வனவிலங்குப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உயிரியல் பூங்காக்கள், ஆதரவற்ற விலங்குகளின் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையமாகவும் செயல்படுவதன் மூலம் உயிரியல் பூங்காக்கள் வனவிலங்கு பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. வன உயிரினங்களைப் பாதுகாப்பதிலும், மிகவும் பயனுள்ள அறிவியல் ஆய்வுகளுக்கும், உயிரியல் பூங்காக்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

மேலும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, குறிப்பாக அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நிருவாகம் ஆகியோர் பூங்காவின் மேம்பாட்டிற்காக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை வளங்களின் சிறந்த மற்றும் அதிகபட்ச பயன்பாட்டை ஒருங்கிணைத்து மத்திய உயிரியல் பூங்கா ஆணைய விதிகளின்படி நீண்ட காலத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். உயிரியல் பூங்காக்களில் உள்ள விலங்குகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான, சுகாதாரமான சூழலை உருவாக்குதல் வேண்டும்.

தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து அறிவியல் மேலாண்மை நடைமுறைகள், சிறந்த பராமரிப்பு, சுகாதாரம் மற்றும் உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் பரிமாற்றத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்க விரும்புகிறேன்.

உயிரியல் பூங்காக்களுக்கு வரும் பார்வையாளர்களுக்கு ஆரோக்கியமான சூழலை வழங்குவது மட்டுமன்றி, வன உயிரினங்களைப் பாதுகாப்பதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள இயலும். உயிரியல் பூங்காக்களுக்கு வருகை தரும் வயதானவர்கள், சிறுவர்கள் ஆகியோர்களுக்கு உகந்த வசதிகளை பூங்கா

நிருவாகம் செய்து கொடுக்க வேண்டும் என தனிப்பட்ட முறையில் பூங்கா நிருவாகத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தருணத்தில், உயிரியல் பூங்காவானது மாற்றுத் திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து,

❖ சாய்தளப் பாதைகள்

❖ சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஓய்வு அறைகள்

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான வசதியான வாகனங்கள் மற்றும் பல்வேறு வகை மாற்றுத் திறனாளிகளுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தகவல் சாதனங்கள் ஆகிய வசதிகளை மாற்றுத் திறனாளிகளுக்காக உருவாக்கும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவைத் தவிர, வேலூர் மாவட்டம் அமிர்தியிலும், சேலம் குரும்பப்பட்டியிலும் தமிழ்நாடு அரசு உயிரியல் பூங்காக்களை அமைத்துள்ளது. இந்த உயிரியல் பூங்காக்களில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

வனவிலங்குகள் மற்றும் வன உயிரினப் பூங்காக்களில் உள்ள வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் நாங்கள் ஆழ்ந்த மன உறுதியோடு இருக்கிறோம். இந்த நடவடிக்கைகளில் தொடர்புடைய அனைவரும் முனைப்பான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உயிரியல் பூங்கா
ஆணையத்தின் 21-வது ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில்
ஆற்றிய உரை - 16.11.2022

உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்துத் துறை நமது தலைநகரில் அமைய வேண்டும்

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமத்தினுடைய முதலாவது கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அதன் பணிகளை சிறப்பான முறையிலே துவக்கியுள்ள

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும்,

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும்,

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகர போக்குவரத்து நெரிசல் என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான். பெருகிவரும் மக்கள் தொகைக்கும் நகர விரிவாக்கத்திற்கும் ஏற்ப நாம் போக்குவரத்து வசதிகளை திட்டமிட்டு பெருக்க வேண்டியுள்ளது.

அதற்காக நாம் புதிய தொழில்நுட்பங்களை, அதாவது new technologies எந்த அளவிற்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும்.

உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து முறை நமது தலைநகரில் அமைய வேண்டும்.

பொதுப் போக்குவரத்து எந்த அளவிற்கு சிறப்பாக கட்டமைக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு சாலைகளில் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையும், போக்குவரத்து நெரிசலும் குறையும், சுற்றுச்சூழல் மாசுபடுவதும் அதே அளவுக்குக் குறையும்.

எனவே பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைப்பானது தனது பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இதில் நான் குறிப்பாக உங்களுக்கு தெரிவிக்க விரும்புவது பள்ளி மாணவ, மாணவியர் சிரமமின்றி சென்று வரும் வகையில், முக்கியமாக பள்ளி, கல்லூரிகள் அமைந்துள்ள பகுதிகளில் அவை காலையில் துவங்கி மாலையில் முடியும் நேரத்தைக் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்றும் இந்தத் தருணத்தில் கேட்டுக்கொண்டு, மீண்டுமொரு முறை இந்த அமைப்பின் தலைவர் என்ற முறையிலே உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற சென்னை, ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமத்தின் முதல் குழுமக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 17.11.2022

இந்தியாவில் தலைசிறந்த இடத்தை தமிழ்நாட்டுத் துறை பெறவேண்டும்

தென்னிந்திய வேலையளிப்போர் கூட்ட அமைப்பினுடைய நூற்றாண்டுநிறைவுவிழாவில்பங்கேற்றுசிறப்பித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே,

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அருமைச் சகோதரர் திரு. சி.வி. கணேசன், அவர்களே,

தொழிலாளர் நலத் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நசிமுத்தீன், இ.ஆ.ப., அவர்களே,

தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பின் தலைவர் திரு. ஆர். ஸ்ரீகாந்த் அவர்களே,

துணைத்தலைவர் திரு. சஞ்சீவ் கே. மேனன் அவர்களே,

பொதுச் செயலாளர் திரு. கே. மாணிக்கம் அவர்களே,

சன்மார் குழும துணைத் தலைவர் திரு. என். குமார் அவர்களே,

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் முதுநிலை நிபுணர் திரு. ரவி பைரிஸ் அவர்களே,

கவின்கேர் நிறுவனத் தலைவர் திரு. சி.கே. ரங்கநாதன் அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய இந்த அமைப்பின் நிருவாகிகளே,

அரசு உயர் அலுவலர்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்தக் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவில் பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1920ஆம் ஆண்டு தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

1920 என்பது மிகமிக முக்கியமான ஆண்டு!

திராவிட இயக்கத்தின் தாய் அமைப்பான தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படும் நீதிக்கட்சியானது முதன்முதலாக ஆட்சி அமைத்த ஆண்டு 1920ஆம் ஆண்டு. அப்போதுதான் பல்வேறு தொழில் அமைப்புகள் இங்கு உருவானது.

இத்தகைய நீதிக்கட்சியைத் தொடங்கிய வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள்தான், 1909ஆம் ஆண்டு சென்னையில் வர்த்தகப் பிரமுகர்களை அழைத்துப் பேசி முதன்முதலாக தென்னிந்திய வர்த்தகக் கழகத்தை உருவாக்கியவர் என்பதை உங்கள் அனைவருக்கும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

12 ஆண்டு காலம் அதன் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் மட்டுமல்ல, தொழில் வளர்ச்சிக்காக South Indian Trade Journal என்ற இதழையும் தியாகராயர் அவர்கள் வெளியிட்டு வந்தார். இதனை இங்கே நினைவூட்டக் காரணம் - சமூகநீதி வரலாற்றில் மட்டுமல்ல, சென்னை மாகாணத்தில்

தொழில் வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றியது திராவிட இயக்கம் என்பதால்தான்.

இன்றைக்கு நமது ஆட்சியின் இலக்காக, அனைத்துத் துறையிலும் வளர்ச்சி என்பதை திராவிட மாடல் கோட்பாடாகக் கொண்டுள்ளோம் என்றால், அதற்கு அரசியல் - சமூகவியல் மட்டுமல்ல பொருளாதாரமும் - தொழில் வளர்ச்சியும் உள்ளடங்கி இருக்கிறது. அந்த வகையில் நூற்றாண்டு காணும் இந்த அமைப்பினைப் பாராட்டுவதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

இந்தியாவுக்குப் பல்வேறு வகைகளில் தமிழ்நாடுதான் முன்மாதிரி மாநிலம்!

தொழிற்சங்க இயக்கம் என்பது இங்குதான் முதன்முதலாக உருவானது. பிரிட்டிஷார் அதிகப்படியான தொழிற்சாலைகளை இங்கு உருவாக்கினார்கள். அரசியல் உரிமையை மட்டுமல்ல; தொழிலாளர் உரிமையையும் தமிழ்நாடு கேட்டுப் போராடியது.

தூத்துக்குடியில் இருந்த ஹார்வி ஆலையில் தொழிற்சங்கத்தை 1905ஆம் ஆண்டு கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்கள் உருவாக்கினார். அந்த மாவீரர் சிதம்பரனாருக்கு இன்று, நினைவு நாள். அத்தகைய முக்கியமான நாளில் நீங்கள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதும் மிக, மிக, மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகம்

தூத்துக்குடி ஹார்வி ஆலை

சென்னை பக்கிங்காம் கர்நாடிக் ஆலை-

ஆகிய இடங்களில் தொழிலாளர் போராட்டங்கள் நடந்தது.

இதன் காரணமாக, தொழிலாளர் ஒற்றுமை மட்டுமல்ல - தொழிலாளருக்கான சலுகைகள் - சட்டங்கள் ஆகியவை உருவானது. இன்னொரு பக்கத்தில், தொழில் அதிபர்களும், தொழிலாளர்களுக்கு தேவையானவற்றை வழங்கவும், தங்களது தொழில்களை வளர்க்கவும்

முயற்சிகள் எடுத்தார்கள். அப்படி உருவானதுதான் தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு!

தொழில் முதலீட்டாளர்கள் ஒருங்கிணைந்து, தங்கள் தொழில்கள் சிறந்து விளங்கவும், தொழிலாளர்களுடன் ஒரு சுமூகமான சூழ்நிலையில் கொண்டு செல்லவும் EFSI அமைப்பு உருவாகியது. தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மற்றும் 15 பெரிய தொழில்துறை சங்கங்கள் கொண்ட 730 நிறுவன உறுப்பினர்களைக் கொண்டு இந்தக் கூட்டமைப்பு முதலில் தொடங்கப்பட்டுள்ளது. இன்று சுமார் பத்து லட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு, சிறப்பாகச் செயல்பட்டு, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக, 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற முன்னெடுப்புகளை எடுத்து வருவதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

தமிழகத்தில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த பதினைந்து மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக எல்லையைத் தாண்டி பல்வேறு மாநிலத்தில் இருந்தும் வந்து நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள். பல்வேறு நாடுகளில் இருந்தும் தொழில் தொடங்க வருகிறார்கள். அந்த வகையில்தான் தொழிலதிபர்களை - தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

அதே நேரத்தில், தமிழ்நாட்டில் அமைப்புசாரா்ந்த தொழிலாளர்களின் நலன் கருதி இத்துறையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக பல திட்டங்கள் - கல்வி, திருமணம், இறப்பு இழப்பீட்டுத் தொகை, மூக்குக் கண்ணாடி வழங்குதல், ஓய்வு இல்ல வசதி ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய ஓய்வு இல்லப் புனரமைப்பிற்காக நமது அரசால் தற்போது ஏழரைக் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரக்கூடிய நிலையில், இந்த வாரியத்தின் உறுப்பினராக இணைந்து, EFSI தங்கள் பங்களிப்பை அளிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் அமைதியான, இணக்கமான சூழ்நிலைக்கு இது இன்றியமையாத ஒன்று!

இந்தக் கூட்டமைப்பு அனைத்து முக்கியத் தொழிற் சங்கங்களுடன் சிறந்த உறவைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. மேலும், தொழில்துறை மற்றும் பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள், தொழிலாளர் நலன் குறித்த விவகாரங்களில், தொழிற்சங்கத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருவது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில்துறையினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சமரச முறையின் வாயிலாக சுமூகமான உறவை ஏற்படுத்த தொழிலாளர் துறையானது நடவடிக்கை எடுத்து வருகிறது. உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் கொண்ட ஒரு குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

“தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை” (Ease of Doing Business) என்பதை செயல்படுத்தி வருகிறோம். இது குறித்த தகவல்களைத் தொழிலாளர் துறையின் வலை தளத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது தொகுத்து வழங்கி வருகிறது.

தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத்துறையின் குறிக்கோள்களுக்கு வேலையளிப்போர் கூட்டமைப்பும் இணைந்து பணியாற்றுவது இன்றியமையாதது.

குழந்தைகள் காப்பகம் அமைத்து பராமரிக்க முடியாத தொழிற்சாலைகள் அதிலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் பொது குழந்தைகள் காப்பகம் அமைத்துக்கொள்ள மகப்பேறு நல சட்டத்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, வேலையளிப்போர் பங்களிப்புடன் தொழிலாளர் நலத்துறையினால் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் மன அமைதியுடன் பணியாற்றவும், தங்கள் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் பொருட்டும், தொழிலாளர்களின் குறைதீர்க்கும் இணையதள வசதி தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத்

துறையினால் ஏற்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது, வேலையளிப்போர் தாக்கல் செய்யக்கூடிய ஆண்டறிக்கைகள் மற்றும் ஒருங்கிணைந்த பதிவேடுகள் ஆகியவற்றை எளிய முறையில் சமர்ப்பிக்கும் வகையில், மேற்படி ஒவ்வொரு சட்டங்களின் கீழான நடைமுறையினை எளிமைப்படுத்தியுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போருக்கு தொழிலாளர் துறையானது பல நன்மைகளைப் பயக்கும் வகையில் ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் தலைசிறந்த இடத்தைத் தமிழகத் தொழில்துறை பெற வேண்டும். அதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் அரசானது உங்களுக்கு வழங்கும். தொழிலை மட்டுமல்ல, தொழிலாளர்களையும் வளர்க்கும் கடமையும் பொறுப்பும் உங்களுக்கு உண்டு. அரசு, தொழிலதிபர்கள் - தொழிலாளர் ஆகிய முத்தரப்பும் கைகோர்த்தால் தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது எப்போதும் இல்லாத அளவுக்கு உயரும். இதுவே இந்த அரசினுடைய குறிக்கோள். இவற்றை நோக்கியே நாம் பயணிக்கிறோம்.

நூற்றாண்டு விழா காணும் இந்த அமைப்புக்கும், அமைப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 18.11.2022

ரூ.1,702 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளை இணைந்து நடத்தும் 11ஆம் ஆண்டு 54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட தம்பதிகளுக்கான திருமண விழாவிலே பங்கேற்று மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களை வாழ்த்திய மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பெ. கீதா ஜீவன் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் என்னுடைய அருமைத் தங்கை திருமதி கனிமொழி அவர்களே,

ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய டாக்டர் எழிலன் அவர்களே,

சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் அருமை சகோதரர் திரு. சிற்றரசு அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை தலைவர் முனைவர் பா. சிம்மசந்திரன் அவர்களே,

செயலாளர் பேராசிரியர் த. பொன்னுசாமி அவர்களே,

பொருளாளர் திரு. டி. கருப்பையா அவர்களே,

ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளையின் தலைவர் திரு. ஓம். பிரகாஷ் மோடி அவர்களே,

நிர்வாக அறங்காவலர் திரு. மனு கோயல் அவர்களே,

பொருளாளர் திரு. முராரிலால் சந்தோலியா அவர்களே,

அறங்காவலர் திரு. சிவகுமார் கோயங்கா அவர்களே,

அறக்கட்டளையில் பங்கேற்றிருக்கக்கூடியஅறங்காவலர் களே, நிருவாகிகளே,

அன்பிற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களே,

மணமக்களின் பெற்றோர்களே, உற்றார் உறவினர்களே,

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பேரன்பிற்குரிய, என்னுடைய அன்பிற்குரிய மாற்றுத் திறனாளி சொந்தங்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களுக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த, உளமார்ந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்கள் வாழ்வில் எல்லா நலமும் சூழட்டும். உங்களது கனவுகள் அனைத்தும் நிறைவேற மனதார வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு நான் ஒரு உயர்ந்த பொறுப்பில் இருக்கிறேன். உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த உயர்ந்த பொறுப்பில் உங்களால் உட்கார வைக்கப்பட்டிருக்கிறேன். நான் பிறந்து - வளர்ந்து - படித்து - ஆளாகிய பகுதி இந்த ஆயிரம் விளக்கு பகுதிதான். அதிலும் குறிப்பாக இந்த கோபாலபுரம் பகுதிதான்.

நான் மட்டுமல்ல – நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து நம்மையெல்லாம் ஆளாக்கிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும் வாழ்ந்த பகுதி, அவர் கோலோச்சிய இடம், இந்த கோபாலபுரம்.

கோபாலபுரம் என்பது தமிழ் மொழிக்கும்,

தமிழினத்துக்கும்,

தமிழ்நாட்டுக்கும்,

இன்னும் சொன்னால் இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு தலையாய இடமாக, மறக்க முடியாத இடமாக வரலாற்றில் விளங்கிக் கொண்டிருக்கிறது.

கோபாலபுரத்திற்கு எத்தனையோ பிரதமர்கள் வந்திருக்கிறார்கள். எத்தனையோ குடியரசுத் தலைவர்கள் வந்திருக்கிறார்கள். எத்தனையோ வெளிநாட்டு தலைவர்களெல்லாம் வந்து போயிருக்கிறார்கள். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக்குரிய இந்தப் பகுதியில் உங்களுடைய திருமணம் நடைபெறுகிறது. இதைவிடப் பெருமை உங்களுக்கு வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அப்படிப்பட்ட பெருமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். நம்மை ஆளாக்கிய நம்முடைய தலைவர் கலைஞருடைய இதயத்தில் இருக்கக்கூடிய உங்கள் அனைவருடைய திருமணம் இங்கு நடந்தேறி இருக்கிறது.

உடலால் ஏற்பட்ட குறைபாட்டை தன்னம்பிக்கையால் வெல்லக்கூடிய ஆற்றல் படைத்த உங்களுக்கு மாற்றுத் திறனாளிகள் என்று சுயமரியாதைப் பெயர் சூட்டி வாஞ்சையோடு அழைத்தவர் தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இதன் மூலமாக உங்கள் அனைவருக்கும் பெயர் சூட்டிய தந்தைதான் தலைவர் கலைஞர் அவர்கள்.

எனக்கு மட்டுமல்ல – என் தங்கை கனிமொழிக்கு மட்டுமல்ல – கலைஞர் பெயர் சூட்டியது, உங்களுக்கும் பெயர் சூட்டியது அவர்தான். அந்த வகையில், எங்களது குடும்ப விழா, நம்முடைய குடும்ப விழா என்ற அந்த நிலையில் தான் இந்த நிகழ்ச்சியில் நாமெல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் கூட்டமைப்பின் அறக்கட்டளையானது, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனது கடமையை மிகச் சிறப்பாக ஆற்றி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இந்த அமைப்புக்கு சிறந்த சமூக சேவையாளர் விருதை வழங்கி ஏற்கனவே அவர் பாராட்டி இருக்கிறார். உங்கள் அமைப்பின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் பாராட்டு விழாவையும் மிகப்பெரிய அளவில் நடத்தினீர்கள்.

தமிழக அமைச்சரவையில் பல துறைகள் இருக்கிறது. அதில் ஒவ்வொருவருக்கும் பல துறைகளை கலைஞர் அவர்கள் ஒதுக்கினார்கள். முதலமைச்சரைப் பொறுத்தவரை, ஒரு முக்கியமான நான்கு துறைகளை மட்டும் கையில் வைத்துக்கொண்டு, காவல் துறை, சட்டம் - ஒழுங்கு இதுபோன்று சில முக்கியமான துறைகளை மட்டும் தான் வைத்துக்கொண்டு இருப்பார்கள். ஏனென்றால், எல்லா துறைகளையும் கவனிப்பதால், பல நிகழ்ச்சிகளுக்கு போக வேண்டும், பல வேலைகளுக்கு போக வேண்டும். ஆகவே, எல்லா துறைகளையும் பிரித்து கொடுத்து விடுவார்கள். ஆனால், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பிற்கு வந்தபோது, மாற்றுத்திறனாளிகள் என்ற ஒரு தனித் துறையை உருவாக்கி, அந்தத் துறையை தன்கீழ் வைத்துக் கொண்டவர் தான் அன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு அந்தத் துறையை எப்படியெல்லாம் பயன்படுத்தினார் என்பது உங்களுக்குத் தெரியும். அவரே பலமுறை சொல்லி இருக்கிறார், இது என் நெஞ்சுக்கு நெருக்கமான துறை இந்தத் துறை என்று நெகிழ்ந்து பேசியிருக்கிறார்.

நமது ஆட்சியில்,

- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு 5 வகையிலான கருவிகள் 36 மாதிரிகளில் 7,219 கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

- ❖ நகரப் பேருந்துகளில் (White Board Bus) மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் கட்டணமில்லாமல் பயணம்.

- ❖ UDD Card வழங்குவதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு 9 இலட்சத்து 30 ஆயிரத்து 909 பயனாளிகள் பதிவு செய்யப்பட்டு இதுவரை 5 இலட்சத்து 68 ஆயிரத்து 67 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

- ❖ 1,096 பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ❖ மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென 2021-2022ஆம் நிதியாண்டில் 813 கோடியே 63 இலட்ச ரூபாயும் – 2022-2023 ஆம் நிதியாண்டில் 838 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

- ❖ மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் உலக வங்கி உதவியுடன் 6 ஆண்டு காலத்திற்கு 1,702 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண உதவித் திட்டத்தின் மூலமாக தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவியினையும் பரிசுத் தொகையாக, பாதித்தொகை ரொக்கமாகவும், மீதமுள்ள தொகையினை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கும் முறையினை மாற்றி முழுத்தொகையும்

ரொக்கமாக வழங்கப்படும் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் தடைகளற்ற சூழலை ஏற்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையான வாடகை, முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நான் இப்போது சொன்னது, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நமது அரசு செய்து கொடுத்திருக்கக்கூடிய, எல்லாவற்றையும் சொல்ல நேரமில்லை, ஒரு சிறு துளியைத் தான் சொல்லியிருக்கிறேன், குறிப்பிட்ட ஒன்றிரண்டைத் தான் நான் சொல்லியிருக்கிறேன்.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த மாற்றுத்திறனாளிகள் மாநாட்டில் உங்களுக்காக நமது அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இவை அனைத்தையும் உங்களுக்காக, ஏதோ உங்களுக்கு சலுகை என்று நீங்கள் நினைத்துவிட வேண்டாம்,உங்களுக்குத் தர வேண்டியது எங்களது கடமை, அந்த அடிப்படையில்தான் செய்து கொடுக்கிறோம். மற்ற கோரிக்கைகளையும் படிப்படியாக நிறைவேற்றித் தருவோம்.

இங்கேகூட பேசுகிற நேரத்திலே, இந்த அமைப்பின் சார்பில் முனைவர் சிம்மசந்திரன் அவர்கள் பேசுகிறபோது, எல்லாவற்றையும் நிறைவேற்றி கொடுத்து வீட்டீர்கள், இன்னும் இரண்டு கோரிக்கைகள் இருக்கிறது என்று சொன்னார். ஒன்றிரண்டு கோரிக்கைகள் இருந்தால்தான் நமக்கு தொடர்பு

இருந்துகொண்டே இருக்கும். அதற்காக கோரிக்கைகளை நாங்கள் நிலுவையில் வைப்போம் என்று நினைக்காதீர்கள். இந்தக் கோரிக்கைகளையும் முழுமையாகப் பரிசீலித்து, விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், சம்பந்தப்பட்ட அமைப்பின் சார்பில் உங்களைப் போன்றவர்களையும் அழைத்துப் பேசி, அதை எப்படிச் செய்வது, அதற்கு எப்படி நிதி ஒதுக்குவது என்று ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செய்துவிட்டு போகக்கூடாது. அறிவித்துவிட்டு போய்விடலாம், அதை நிறைவேற்ற வேண்டும். அதுதான், கலைஞருடைய ஆட்சி. அந்த நிலையில் இருந்து, நிச்சயம் அதையும் நிறைவேற்றித் தருவோம் என்ற அந்த உறுதியை, நம்பிக்கையை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அதேபோல் ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளையும், சமூகப் பணிக்காக தன்னை ஒப்படைத்துக் கொண்ட ஒரு அமைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்பின் நிருவாகிகள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்று சொல்வார்கள்.

நாட்டில் எப்படி மழை பெய்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். எப்போது ஆட்சிக்கு வந்தோமோ அப்போதிலிருந்து விடாமல் பெய்து கொண்டிருக்கிறது.

ஆட்சிக்கு வந்தவுடன் கொரோனா, அந்த கொடிய நோயிலிருந்து சிறிது மீண்டு வந்தோம். வந்தவுடன், பார்த்தீர்களென்றால் மழைதான். பத்துநாள் கூட இடைவெளி இல்லை, பெய்து கொண்டேதான் இருந்தது.

வேடிக்கையாக ஒரு செய்தி சொல்கிறேன், உண்மை செய்தி சொல்கிறேன். என்னவென்றால், 1996ஆம் ஆண்டு

ஆட்சிக்கு வந்தபோது, நான் மேயராகப் பொறுப்பிற்கு வந்தேன். முதன்முதலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக நான்தான் பொறுப்பிற்கு வந்தேன். உங்களுக்கெல்லாம் தெரியும், சென்னை மாநகர மேயராக வந்தபோது, வந்தவுடன் அடுத்த நிமிடமே மழை ஆரம்பித்தது, இருபது நாட்கள் தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது, எந்த வேலையும் செய்ய முடியவில்லை. மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையெல்லாம் நாங்கள் பார்த்து சீர்படுத்திக் கொண்டிருந்தோம். அப்போது முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நானும் பார்வையிட வேண்டும், மக்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும், நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும் என்று சொன்னார். உடனே மாநகராட்சி வாகனத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துக்கொண்டு, சென்னை முழுவதும் சுற்றிப் பார்த்தோம். காரில் போய்க் கொண்டிருக்கும்போது வேடிக்கையாக சொன்னார், ஸ்டாலின் சென்னைக்கு மேயராக வந்தால், மழை தயாராக இருக்கிறது என்று சொன்னார்.

அதுபோல, இப்போது குடிநீர் பிரச்சினையே இல்லை. அந்த அளவுக்கு மழையும் பெய்து கொண்டிருக்கிறது. அந்த மழையை எப்படி சமாளித்துக் கொண்டிருக்கிறோம்? ஏற்கனவே கடந்த ஆண்டு மழை பெய்தபோது என்ன நிலை? அதுவும் உங்களுக்குத் தெரியும். இப்போது என்ன நிலை? நாங்கள் முழுமையாக செய்து முடிக்கவில்லை. 80 முதல் 95 சதவீதம் தான் முடித்திருக்கிறோம், அதற்கே மக்களிடமிருந்து பாராட்டு வருகிறது. இன்னும் பணிகள் இருக்கிறது. அதையும் வரக்கூடிய காலகட்டத்தில் செய்து முடிப்போம் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் நான் எடுத்துச்சொல்லி, நாட்டில் இப்போது எப்படிப்பட்ட ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். எந்தப்

பிரச்சினையாக இருந்தாலும், அதை உடனுக்குடன் நிவர்த்தி செய்யக்கூடிய ஆட்சிதான், உங்கள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது.

மக்களுக்கு சேவை செய்வதன் மூலமாக உடல் நலிவு ஏற்பட்டாலும். அதைப்பற்றி கவலைப்படாமல் நான் இன்றைக்கு என்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று அண்ணா சொன்னார்.நான் இப்போது சொல்கிறேன்,ஏழையின் சிரிப்பிலே கலைஞரைக் காண்போம், அண்ணாவையும் காண்போம் என்ற நிலையில் நம்முடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் துணை நிற்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய வீட்டிற்கு விளக்காக, நாட்டிற்கு தொண்டர்களாக இருந்து வாழுங்கள்! வாழுங்கள்! வாழுங்கள்! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த 54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட தம்பதிகளுக்கான திருமண விழாவை தலைமையேற்று நடத்திவைத்து, ஆற்றிய உரை - 20.11.2022*

பெண் கல்வியின் மகத்துவத்தை உலக அரங்கில் முன்னிறுத்தும் இராணி மேரி கல்லூரி

இராணி மேரி கல்லூரியின் 104-ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அருமை நண்பர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களே,

இந்த கல்லூரியினுடைய முன்னாள் பேராசிரியர் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய சகோதரி திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

மயிலாப்பூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மயிலை வேலு அவர்களே,

சென்னை மாநகரத்தினுடைய வணக்கத்திற்குரிய மேயர் சகோதரி திருமதி பிரியா அவர்களே,

துணை மேயர் திரு. மகேஷ்குமார் அவர்களே,

அருமை சகோதரர் திரு. சிற்றரசு அவர்களே,

உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே,

கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர் ம. ஈஸ்வரமூர்த்தி அவர்களே,

கல்லூரிக் கல்வியைச் சார்ந்திருக்கக்கூடிய நிருவாகப் பெருமக்களே,

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் இரா. இராவணன் அவர்களே,

இராணி மேரி கல்லூரியின் முதல்வர் துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய முனைவர் பா. உமா மகேஸ்வரி அவர்களே,

தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் அ. அனந்த லட்சுமி அவர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

பேராசிரியப் பெருமக்களே,

பெற்றோர்களே,

பேரன்புக்குரிய இராணி மேரி கல்லூரியினுடைய புதுமைப் பெண்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே, நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பட்டம் பெறும் நாள் என்பது ஒவ்வொருவரின் வாழ்விலும் மிக முக்கியமான நாள். அதிலும் முதல் பட்டம் சிறப்பானது. முதல் தலைமுறையாகப் பட்டம் பெறுவது அதனைக் காட்டிலும் பரவசமானது. உணர்ச்சிபூர்வமான மனநிலையில்தான் இன்று பட்டம் பெற்ற நீங்கள் ஒவ்வொருவருமே இருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருடைய கண்களிலும் பல எதிர்காலக் கனவுகள் மின்னிக்கொண்டு இருக்கின்றன. உங்களது பட்டங்கள் உங்களை இன்னும் உயரத்திற்கு கொண்டு செல்லும்.

நம்முடைய உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார், வருகிறபோது நீங்களெல்லாம் ஆரவாரத்தோடு உங்களுடைய உணர்ச்சிகளை எழுச்சியோடு வெளிப்படுத்திக் காட்டினீர்கள். ஆனால், அது எனக்கு தந்த வரவேற்பு, எங்களை வரவேற்ற வரவேற்பு என்று நான் இப்போது முடிவு செய்துவிட்டேன். இப்போது இவ்வளவு அமைதியாக இருக்கக்கூடிய இந்தக் காட்சியைப் பார்க்கின்ற போது, இந்தக் கல்லூரியினுடைய கட்டுப்பாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

நீங்கள் பெற்ற அறிவு, உங்களை மேலும் மேலும் உயர்த்தட்டும். நீங்கள் பெற்ற தன்னம்பிக்கை, உங்களை தலைநிமிர வாழ வைக்கட்டும். கல்லூரியில் இருந்து விடை பெறுகிறீர்களே தவிர, கற்பதில் இருந்து நீங்கள் விடைபெறவில்லை. அதைத்தான் பொன்முடி அவர்கள் சொன்னார், படியுங்கள், மேலும், மேலும் படியுங்கள். பாடங்களைப் படிப்பவர்களாக மட்டுமல்ல – பாடங்களை உருவாக்கக்கூடிய அளவிற்கு, உருவாக்கக்கூடியவர்களாக நீங்கள் உயரவேண்டும். நீங்களே மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக ஆகுங்கள் என்று இந்த நேரத்தில் உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இராணி மேரி கல்லூரியினுடைய 104 ஆவது பட்டமளிப்பு விழா இது. இராணி மேரி கல்லூரி என்பது இந்த பெயரைப் போலவே

கம்பீரமான,பாரம்பரியமான கௌரவத்தைக் கொண்டிருக்கக்கூடிய கல்லூரி இந்தக் கல்லூரி.

பேசிய கல்லூரியினுடைய முதல்வரும் குறிப்பிட்டார், நம்முடைய அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொன்னார். 1915ஆம் ஆண்டு “கேப்பர் இல்லம்” என்ற அந்தப் பெயரில் புகழ்பெற்ற அந்தக் கட்டடத்தில் இந்த இராணிமேரி கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் முதன்முதலாகத் தொடங்கப்பட்ட மூன்று மகளிர் கல்லூரிகளில் இதுவும் ஒன்று. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பார்த்தீர்களென்றால், முதல் மகளிர் கல்லூரி எது என்று கேட்டால், உங்கள் இராணி மேரி கல்லூரிதான். இது 104 ஆவது பட்டமளிப்பு விழா. இந்த நூறாண்டு காலத்தில் எத்தனை லட்சம் மகளிர் பட்டம் பெற்றிருப்பார்கள்! எத்தனை தலைமுறையினருக்குக் கல்வியை - அறிவை - ஆற்றலை - வேலைவாய்ப்பை - தன்னம்பிக்கையை - வாழ்க்கையை இந்தக் கல்லூரி உருவாக்கி இருக்கும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது, மலைப்பாக இருக்கிறது, மகிழ்ச்சியாக இருக்கிறது. எனவே தான், இந்த இராணி மேரி கல்லூரியை வெறும் கல்லூரியாக மட்டும் சொல்ல முடியாது, பெருமையாக சொல்ல வேண்டுமென்றால், பெண்குலத்திற்கு ஒளிவிளக்கு என்றுதான் சொல்லவேண்டும்!

இந்தக் கல்லூரிக்கு முன்னால், கடற்கரைப் பகுதியில் கலங்கரை விளக்கு இருக்கிறது. இது பெண்கல்வியின் கலங்கரை விளக்காக இந்த இராணிமேரிகல்லூரி ஒளிவீசிக் கொண்டிருப்பதை நினைவுபடுத்துவது போல் அமைந்திருக்கிறது.

இந்த இராணி மேரி கல்லூரிக்குள் நுழைகிற போது எனக்கு பழைய சில நினைவுகள், எல்லோரும் சொன்னார்கள், அவர்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் என் வாழ்க்கையில், என் வாழ்நாளில் அதை மறக்கவே முடியாது.

பழம்பெரும் பெருமை கொண்டிருக்கக்கூடிய இந்த பெரிய வரலாற்றைப் பெற்றிருக்கக்கூடிய இந்தக் கல்லூரியை

இடிப்பதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டது. முன்னாள் முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். நான் இந்த நேரத்தில் அரசியல் எல்லாம் பேச விரும்பவில்லை, அது தேவையும் இல்லை, நான் எப்பொழுதும் அப்படி பேசுவதும் கிடையாது. ஆனால் அன்றைக்கு இந்தக் கல்லூரியை இடிக்கக் கூடாது என்று பொன்முடி சொன்னது போல, சட்டமன்றத்தில் நாங்கள் வாதிட்டோம், போரிட்டோம். அப்போது இங்கு படித்துக் கொண்டிருந்த மாணவிகள், முன்னாள் மாணவிகள், பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அதனுடைய உச்சகட்டமாக, உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. இந்த வளாகத்திற்குள் உட்கார்ந்து மாணவிகளெல்லாம் ஒரு மிகப்பெரிய உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தை நடத்திய காரணத்தால் அன்றைக்கு இருந்த அரசு, கல்லூரிக்குள் வரக்கூடிய குடிநீர் சப்ளையை நிறுத்தியது, கழிப்பறைகளை பயன்படுத்தக்கூட தடையும் போட்டார்கள். கல்லூரியை மூடிவிட்டு, இங்கு பணியாற்றிய பேராசிரியைகளையெல்லாம் வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்தார்கள்.

அப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. கோபாலபுரத்திலிருந்து தலைவர் கலைஞர் அவர்கள், எங்களது சட்டமன்ற கட்சியின் அலுவலகத்திற்கு தொலைபேசியின் மூலமாக தொடர்பு கொண்டு, ஒரு செய்தியைச் சொன்னார்கள், சட்டமன்றம் முடித்துவிட்டு, வீட்டிற்கு வருகிற வழியிலே, கலைஞர் சொல்கிறார், வீட்டிற்கு வருகிற வழியில், இராணி மேரி கல்லூரியில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாணவிகளையெல்லாம் சென்று சந்தித்து ஆறுதல் சொல்லிவிட்டு வாருங்கள். உங்களுடைய போராட்டத்திற்கு "திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரவு தரும்" என்ற

செய்தியைச் சொல்லிவிட்டு வாருங்கள்” என்று எங்களுக்கு உத்தரவு போட்டார்.

அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு நானும், பொன்முடி அவர்களும், இன்னும் சிலரும் இங்கே வந்தோம். கேட் மூடியிருந்தது. அப்போது, வாசலில் நிற்கின்ற காவலர்கள், எங்களைப் பார்த்தவுடன் வணக்கம் வைத்து மரியாதையோடு கேட்டை திறந்துவிட்டார்கள்.நீங்கள் நன்றாக கவனிக்க வேண்டும், கேட்டை திறந்து விட்டார்கள். அதற்குப் பிறகு நாங்கள் உள்ளே வருகிறோம். உள்ளே வந்தவுடன் அங்கு கீழே அமர்ந்து ஆயிரக்கணக்கான மாணவியர்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்படி கல்லூரிக்குள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவிகளையெல்லாம் நாங்கள் சந்தித்தோம். அதிக நேரம் கூட இல்லை, இரண்டு முதல் நான்கு நிமிடங்கள்தான் இருக்கும். தைரியமாக இருங்கள், நல்ல காரியத்திற்காக நீங்கள் போராடுகிறீர்கள், உங்கள் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும், நாங்கள் உங்களுக்கு எப்போதும் துணை நிற்போம், கலைஞர் அவர்கள் எங்களுக்கு செய்தி சொல்லி அனுப்பினார், தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்களிடம் சொல்லிவிட்டு வரச்சொன்னார். எனவே, நாங்கள் ஆதரவு தருவோம், நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். ஆனால், அமைதியாக போராடுங்கள் என்று சொல்லிவிட்டு நாங்கள் சென்றோம். போகிறபோது கூட கேட் மூடியிருந்தது, அப்போதும் கேட்டை திறந்துவிடுகிறார்கள். வந்தபோதும் கேட்டை திறந்துவிட்டார்கள், போகிறபோதும் காவலர்கள் கேட்டை திறந்து விடுகிறார்கள். வந்து மாணவிகளைச் சந்தித்து ஆறுதல் சொல்லிவிட்டு, ஊக்கப்படுத்திவிட்டு, உற்சாகப்படுத்திவிட்டு வெளியில் திரும்ப செல்லும்போதும், மூடியிருந்த கேட் திறக்கப்படுகிறது, நாங்கள் வெளியில் போகிறோம். இது நடந்தது, பகல் 2.00 மணி அல்லது 2.30 மணி இருக்கும்.

இரவு 12.00 மணிக்கு வேளச்சேரியில் இருக்கிறேன், வேளச்சேரியில் தான் என்னுடைய வீடு. போலீஸ் வந்துவிட்டது. கைது செய்ய வந்திருக்கிறோம் என்றார்கள். எதற்கு என்று கேட்டேன்? இராணி மேரி கல்லூரியில் போராடிக் கொண்டிருக்கின்ற மாணவிகளையெல்லாம் நீங்கள் கேட் ஏறி குதித்து உள்ளே சென்றுவிட்டு வந்திருக்கிறீர்கள். அதற்காகத்தான் கைது. வழக்கு என்னவென்றால், கேட் ஏறி குதித்ததாக வழக்கு. என்னையும், பொன்முடி போன்றவர்களையெல்லாம் கைது செய்து கடலூர் சிறையில் அடைத்தார்கள். ஒருமாத காலம் சிறையில் இருந்தோம். இங்கேகூட கல்லூரி முதல்வர் அவர்கள் சிறையில் துன்பப்பட்டார்கள் என்று சொன்னார்கள், துன்பப்படவில்லை, மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டோம். அதை துன்பமாக நாங்கள் கருதவில்லை. உங்களுக்காக, மாணவிகளுக்காக நாங்கள் அதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டோம். ஒருமாத காலம் இருந்தோம். அதில் எனக்கு என்ன பெருமை என்று கேட்டீர்களென்றால், நான் ஏற்கனவே சொன்னேன், இந்த இடத்திற்கு, இந்தக் கல்லூரி வளாகத்திற்கு "கேப்பர்" என்று பெயர். கடலூரில் கொண்டு போய் எங்களை சிறையில் அடைத்து வைத்தார்களே, அந்தச் சிறைக்கு என்ன பெயர் என்று கேட்டால், கேப்பர் சிறை, எவ்வளவு பொருத்தம் பாருங்கள். எனவே தான் சொன்னேன், என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத எத்தனையோ நிகழ்ச்சிகள் இருந்தாலும், இந்தக் கல்லூரிக்காக, போராடிய மாணவிகளுக்குத் துணைநின்றதற்காக, அதை நினைத்துப் பார்க்கின்றபோது, இது ஒரு மறக்கமுடியாத சம்பவமாக என்னைப் பொறுத்தவரையில் அமைந்திருக்கிறது. சிறையில் இருந்து வாடினேன் என்று சொன்னால், நான் வாடவில்லை, மகிழ்ச்சியோடு தான் இருந்தேன். என் வாழ்வில் அப்படிப்பட்ட ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்த இடம்தான் இந்த இராணி மேரி கல்லூரி என்பதை மீண்டும் மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இத்தகைய புகழ்பெற்ற இந்த இராணிமேரி கல்லூரியில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் மாளிகை கட்டப்பட்டது. கடந்த கால ஆட்சியாளர்கள் கலைஞர் என்கின்ற அந்தப் பெயரை நீக்கி விட்டார்கள். அதனை மீண்டும் இப்போது நாம் சூட்டி இருக்கிறோம். கட்டடங்களில் இருக்கும் பெயரை நீக்குகிற காரணத்தால் கலைஞருடைய பெயரை மக்கள் மனதில் இருந்து யாராலும் நீக்கிவிட முடியாது. அது வேறு. அவர் கோடிக்கணக்கான மக்களுடைய மனதில் இடம் பிடித்தவர். அவரால் பயன்பெற்ற மாணவர்களின் உணர்வில் இன்றைக்கும் அவர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அத்தகைய பெருமைக்குரிய கலைஞர் பெயரால் மாளிகை அமைந்திருக்கும் இடம்தான் இந்த இராணிமேரி கல்லூரி!

பெருமைமிகு இக்கல்லூரியினுடைய 104-ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உங்களுக்கு பட்டங்களை வழங்குவது எனக்கு கிடைத்த பெருமை! 21 துறைகளைச் சேர்ந்த 3,259 மாணவியர்கள் பட்டம் பெறுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் என்பதுதான் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது.

பொன்முடி அவர்கள் சொன்னார், இன்னார்தான் படிக்கலாம் - இன்னார் படிக்கத் தேவையில்லை - உடல் உழைப்பு வேலைகளை மட்டுமே பார்க்கலாம் என்ற நிலைமை 100 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. பெண்களின் நிலைமை இதைவிட மோசமாக இருந்தது. நீதிக்கட்சி ஆட்சி வந்து இந்த நிலை மாறத் தொடங்கியது.

'அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு?' என்று கேட்ட காலத்தில், சமையல் கரண்டி பிடித்திருக்கும் கையில், புத்தகத்தைக் கொடுங்கள் என்று சொன்னவர் ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள். அவரைப் போன்ற சீர்திருத்தவாதிகளால்தான் பெண் சமூகத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் நிகழத் தொடங்கியது.

அந்தக் காலத்தில் எட்டு வயது - பத்து வயது பெண் குழந்தைகளுக்கு எல்லாம் திருமணம் செய்து வைத்து விடுவார்கள். குழந்தைத் திருமணங்களை குற்றச் செயல்கள் என்று சட்டம் போட்டிருக்கிறோம். இந்த நிலையை நாம் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. எத்தனையோ பேர் மதம், கலாச்சாரம் என்ற பெயரில் போட்ட முட்டுக்கட்டைகளைக் கடந்துதான் இதை அடைந்திருக்கிறோம். இந்த அரங்கில் இன்று நாம் காணும் இந்தக் காட்சி நூற்றாண்டு காலப் போராட்டத்தின் விளைவு தான் இங்கே உங்களைக் காணுகின்ற காட்சி. பட்டத்தை வாங்கியிருக்கக்கூடிய உங்களைப் பார்க்கிற காட்சி.

அதனால்தான் முதல் தலைமுறை பட்டதாரிகளாகிய நீங்கள் உங்களுக்கு அடுத்தடுத்து வரும் தலைமுறைகளை படிக்க வைக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். உங்களது பெயருக்குப் பின்னால் பட்டம் இருப்பது கௌவரம் மட்டுமல்ல – அது உங்கள் அடிப்படை உரிமை! இந்தப் பட்டமளிப்பு விழாவுக்கு இன்னொரு சிறப்பு என்ன என்றால், மாற்றுத்திறனாளிகளான ஆறு பெண்கள் இன்று பதக்கம் பெறுகிறார்கள் என்பதுதான் மிக மிகச் சிறப்பு.

கழகம் ஆட்சியில் அமைந்த காலத்தில் எல்லாம் பெண்கள் முன்னேற்றத்துக்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. இப்போது தீட்டியும் வருகிறது.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமைச் சட்டம் கொண்டு வந்தது கலைஞருடைய தி.மு.க. அரசு.

அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு. அதை உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர். அதை இப்போது 40 விழுக்காடு ஆகவும் உயர்த்தியிருக்கிறோம். போறப்போக்கில், ஆண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கின்ற நிலை வந்தாலும் ஆச்சரியம் இல்லை.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு. இப்போது 50 சதவீதம் இடஒதுக்கீடு.

மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்தது கழக அரசு தான்.

மகளிர் தொழில் முனைவோர் உதவித்திட்டம் கொண்டு வந்தோம்.

இப்படி பெரிய பட்டியலை என்னால் அடுக்கிக் கொண்டிருக்க முடியும்.

அந்த வரிசையில்தான் மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து பயணத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். இது ஏதோ வெறும் கட்டணச் சலுகை என்று நீங்கள் நினைத்திட வேண்டாம். பெண்களுக்கான பொருளாதார தன்னிறைவுக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய திட்டம் தான் இந்தத் திட்டம். இதன் மூலமாக ஏராளமான பெண்கள் கல்வி கற்கவும், வேலைகளுக்காகவும், சிறுதொழில் நிறுவனங்களை உருவாக்கவும் வெளியில் வரத் தொடங்கி இருக்கிறார்கள்.

எனது கனவுத் திட்டங்களில் ஒன்றான புதுமைப் பெண் - உயர் கல்வி உறுதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் இந்த ஆண்டு, இராணி மேரி கல்லூரியில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டில் பயிலக்கூடிய 1,039 மாணவியர்கள் இதனால் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டு முதலாமாண்டு சேர்ந்த மாணவியரும் இத்திட்டத்தின் மூலமாகப் பயன்பெற உள்ளனர்.

'புதுமைப் பெண்' திட்டத்தின் காரணமாக, இக்கல்லூரியில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்கிற தகவலும் தொடர்ந்து எனக்கு வந்து கொண்டிருக்கிறது, அது மகிழ்ச்சியைத் தருகிறது. அப்படி தங்களது கல்லூரிக் கனவை நனவாக்கிக் கொள்ள வரக்கூடிய மாணவிகள், இந்தக் கல்லூரியிலேயே தங்கிப் படிப்பதற்கு வசதியாக விடுதி

ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பது இந்தக் கல்லூரி நிருவாகத்தின் கோரிக்கையாக இருப்பதாக நான் அறிந்தேன்.

எனவே, மாணவியர்கள் தங்கிப் பயில ஏதுவாக கல்லூரி வளாகத்திற்குள்ளேயே விடுதி கட்டித்தரப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த மே 25ஆம் நாளன்று இதே இராணி மேரி கல்லூரியில் நடந்த மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழா மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குகிற விழாவில் நான் கலந்து கொண்டேன்.

நான் மட்டும் முதல்வன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது, நீங்கள், ஒவ்வொருவரும் நான் முதல்வன், நான் முதல்வன் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்காகத்தான் அந்தத் திட்டத்தையும் தொடங்கி இருக்கிறோம். வேலைக்கான ஆட்களை உருவாக்கத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். இதனை இன்றைய இளைய தலைமுறை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் இராணி மேரி கல்லூரியில் கடந்த 6 மாதங்களில், BFSI (Banking, Financial Services and Insurance) அந்த பயிற்சியில் 449 மாணவியர்களும், Logistics-ல் 221 பேரும், பயிற்சி எடுத்துப் பயன் பெற்றிருக்கிறார்கள்.

பல கல்விக்குழுக்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் உருவாக்கப்பட்டுள்ளது,

காவல்துறை சீருடைப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுக்கான இலவசப் பயிற்சியும் பேராசிரியர் குழுவால் நடத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, அதன் மூலம் 948 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்வழிக் கல்வி பயின்றோருக்கான ஊக்கத் தொகையை, இராணி மேரி கல்லூரியில் 842 பேர் பெற்று வருகிறார்கள்.

இராணி மேரி கல்லூரி மாணவிகள், விளையாட்டுத் துறையிலும் சளைத்தவர்கள் அல்ல. கல்லூரியின் சார்பாக, கண்பார்வையற்றமாற்றுத்திறனாளிகளுக்கான Para Asian ஜுடோ போட்டிகள், இங்கிலாந்து மற்றும் தென்கொரியாவில் நடைபெற்றபோது, இந்தக் கல்லூரியினுடைய மாணவியர் பங்குபெற்று பதக்கம் வென்றிருக்கிறார்கள்.

இந்திய பார்வையற்ற பெண்கள் கால்பந்து வீராங்கனைகள் சங்கம் சார்பில், சர்வதேச போட்டிகள் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்று, கல்லூரிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

சிலம்பத்திலும் கோ-கோ-விலும் தேசிய அளவில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள்.

மால்கம் போட்டி, கராத்தே, மற்றும் கபடியிலும், தேசிய அளவில் வெள்ளிப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள்.

மாநிலங்களுக்கிடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட்டில் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

மாணவி நித்யா குறளோவியம் நாட்காட்டி ஓவியப் போட்டியில் வென்று தனது ஓவியத்தை அரசு நாட்காட்டியில் ஏற்றியிருக்கிறார். பரதநாட்டிய நடனத்திலும் சாதனை படைத்து வருகிறார்.

இராணி மேரி கல்லூரி தொடர்ச்சியாக, 6 ஆண்டுகள் சென்னையில் குடியரசு நாள் கொண்டாட்ட நிகழ்வில் நடைபெறும் நடனப் போட்டியில், முதல் பரிசு பெற்று பெருமை பெற்றிருக்கிறது.

இராணி மேரி கல்லூரி இசைத் துறை மாணவியர், திரை இசை மற்றும் கர்நாடக இசையில் முன்னணி வகித்து வருகின்றனர்.

மாணவிகள் மட்டுமல்ல, இராணி மேரி கல்லூரியின் பேராசிரியர்களும், மாணவியர்களுக்கு சளைக்காமல், பல சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் திருமதி லோகநாயகி அவர்கள், தமிழ்நாடு அரசு சார்பில் கலைஞர் விருது பெற்றிருக்கிறார்கள்.

2011ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டுகளில், முறையே, இந்திய குடியரசு தலைவரால் வழங்கப்பட்ட விருதுகளை, தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் சிவஞானம் கலைமகள் அவர்களும், பொருளியல் துறை பேராசிரியர் முனைவர் து. விஜயலட்சுமி அவர்களும் பெற்றிருக்கிறார்கள்.

இராணி மேரி கல்லூரியில் சேர்ந்து, பயின்று, மாற்று பாலினத்தவராக மாறியவருக்கு, இறுதியாண்டு தேர்வு எழுதி, அவர் பட்டம் பெற்று செல்லும் வரையான அனைத்து உதவிகளையும் செய்து, அவரை தேர்ச்சி பெற வைத்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இப்படி உங்கள் கல்லூரியானது சாதனைக் கல்லூரியாக இருக்கிறது. பட்டம் வழங்கும் கல்லூரியாக மட்டுமல்ல – திறமையின் கிடங்காகவும் உங்கள் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது.

நூறாண்டுகளுக்கும் மேலாக, கல்விப் பணியாற்றி வரும் இந்த இராணி மேரி கல்லூரி, வருங்காலங்களிலும் பெண் கல்வியின் மகத்துவத்தை உலக அரங்கிலும் முன்னிறுத்தும் என்று நான் நம்புகிறேன்.

33 மாணவிகளுடன் தொடங்கப்பட்டு, இன்று 5 ஆயிரம் மாணவியருடன் மாபெரும் அளவில் உயர்ந்து நிற்கிறது. மிக உயர்ந்த நோக்கம் இருந்தால்தான் இத்தகைய வளர்ச்சி சாத்தியம். இதே போன்ற உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாக மாணவியர் அனைவரும் தங்களது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். யார் எதைச்

சொன்னாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், பகுத்தறிவோடு கேள்வி கேட்கும், விமர்சிக்கும் அறிவியல் மனப்பான்மையை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் பெற்ற பட்டம் முழுமை பெறும்.

நாமும் கல்லூரியில் படித்திருக்கிறோம் - ஒரு பட்டம் வாங்கி இருக்கிறோம் என்று இல்லாமல் வாங்கிய பட்டத்தில் உயர்நிலை எதுவோ அதையும் முயன்று நீங்கள் அடைய வேண்டும். அதன் மூலமாக உச்சமான தகுதியை நீங்கள் பெற வேண்டும். அந்தத் தகுதியின் மூலமாக இன்னும் பலரையும் நீங்கள் வளர்த்தெடுக்க வேண்டும். இன்று பெறும் பட்டம் என்பது முடிவல்ல, தொடக்கம் என்பதை மறக்காதீர்கள்.

கடற்கரைச் சாலையில் இருந்து அறிவுச்சாலைக்குள் பயணிக்கப் போகக்கூடிய உங்களுக்கும், உங்களை இந்தக் கோலத்தில் கண்டு பெருமிதத்தில் திளைத்திருக்கும் உங்கள் பெற்றோர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய வாழ்த்துக்கள்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
இராணி மேரி கல்லூரியின் 104ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 22.11.2022

கருணை உள்ளத்தோடு மாற்றுத்திறனாளிகள் நலம் காக்க பாடுபட நாம் என்றைக்கும் துணை நிற்போம்

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஜி. வெங்கடாசலம் அவர்களே,

துவக்கத்தில் இந்தக் கூட்டத்தினுடைய நோக்கத்தைப்பற்றி எடுத்து வைத்து உரையாற்றியிருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் டாக்டர் ஆர். ஆனந்த குமார் இ.ஆ.ப., அவர்களே,

அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய செயலாளர்களே,

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் இ.ஆ.ப., அவர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

மாநில ஆலோசனை வாரியக் குழுவினுடைய மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுப் பணிகளின் நிபுணர்களே,

மாவட்ட உறுப்பினர்களே,

அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்களே,

அலுவல் சாரா உறுப்பினர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது ஒரு துறை சார்ந்த வளர்ச்சியாக இருக்கக் கூடாது! ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் வளர்ச்சியாகவும் இருக்கக் கூடாது! அனைவருக்குமான வளர்ச்சியாக அமைந்தால்தான் அது திராவிட மாடல் வளர்ச்சியாக அமையும் என்ற வரையறையுடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதை நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள்.

அரசின் பயனானது அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதிலும் குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு உறுதியாகக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அதன்படிதான் திட்டமிடுகிறோம்! செயல்படுத்துகிறோம்! அரசின் கவனம் மிகுதியாகத் தேவைப்படுவோரில் குறிப்பிடத்தக்க பிரிவினர் மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைக் காக்கவும் அவர்கள் சமுதாயத்தில் சமநிலையில், சுயமரியாதையுடன் வாழும் நிலையினை உறுதி செய்யவும் 2011ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் இது தனித்துறையாக உருவாக்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள்

மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் நினைத்தார்கள். அத்தகைய கவனத்தோடு இத்துறையை நானும் எனது தனி கவனிப்பில் வைத்திருக்கிறேன்.

நமது அரசு பொறுப்பேற்றவுடன், மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு உதவித்தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து உயர்த்தப்பட்டு, தற்போது ரூபாய் இரண்டாயிரம் வழங்கப்படுகிறது. இதனால், 2 இலட்சத்து 11 ஆயிரத்து 391 மாற்றுத்திறனாளி பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

மனவளர்ச்சி குன்றிய மற்றும் புற உலகச் சிந்தனையற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்குத் தொழில் தொடங்க உதவி செய்ய, குறைந்தபட்ச கல்வித் தகுதியினை எட்டாம் வகுப்புத் தேர்ச்சியாக குறைத்தும், வயது உச்ச வரம்பை 45-லிருந்து 55ஆக உயர்த்தியும் ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் கட்டணமின்றி நகரப் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக உத்தரவிடப்பட்டுள்ளது.

உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள் வேண்டி காத்திருப்போர் அனைவருக்கும் நிலுவையின்றி சிறப்புநிதி ஒதுக்கீடு செய்தும் நமது அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

வீடு வழங்கும் திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு 5 விழுக்காடு வீடுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இதேபோல் வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புப்பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலைப் பயிற்சி மையங்களில் பணியாற்றும் ஆயிரத்து 294 சிறப்பாசிரியர்கள்

மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கான மதிப்பூதியம் ரூபாய் 14 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் ஒரு அலுவலகம் ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது.

சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதற்காகத் தள்ளுவண்டிக் கடை நடத்துவதற்கான சான்றிதழ்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

திருமண நிதியுதவியானது இனிமேல் முழுமையாக ரொக்கமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையான வாடகை, முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் மற்றும் ஆலோசனை வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் பயனளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் முக்கிய நிகழ்வுகளின் போது செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் வகையில், சைகை மொழிபெயர்ப்பாளர் வசதி மாவட்ட நிருவாகம் மூலம் செய்துதர ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் தன்னிச்சையாகவும் பிறரைச் சார்ந்து இல்லாமலும் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவேதான், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு வேலைவாய்ப்புகளில் 4 விழுக்காடு இட ஒதுக்கீடும், தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்த அவர்களுக்கு

உகந்த பணியிடங்களைக் கண்டறிய வல்லுநர் குழு அமைத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கு சரியான முறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய, உயர்மட்ட கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்குப் பொது இடங்களில் தடையற்ற சூழலை அமைக்கும் நடவடிக்கையாக, சாய்தளப் பாதை, மின்தூக்கி பொருத்துதல், மாற்றுத் திறனாளிகளுக்கான கழிவறை, பார்வையற்றோர் பயன்பாட்டிற்காக தரைத் தளங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

செவித்திறன் குறைபாடு உடையோருக்கு தகவல் பரிமாற்றம் செய்ய தகவல் பலகைகள், சைகை மொழி பெயர்ப்பாளர்கள் நியமனம் போன்ற வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"18 வயதிற்கு உட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கண்டறிவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடைய" (Standard Operating Procedure (SOP) அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் திட்டம் உலக வங்கி நிதியுடன் ஆயிரத்து 763 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்பட உள்ளன. அடுத்த 6 ஆண்டுகளில், அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சியும், அரசின் தற்போதுள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து இதர அரசுத் துறைகளின் மூலம் தொழில்திறன் பயிற்சியும் அளிக்கப்படும்.

“சமூகப் பதிவு அமைப்பு” (Social Registry) மூலம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள், பராமரிப்பாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான பயன்களை அடையாளம் காணுதல், தேர்வு செய்தல் மற்றும் வழங்குதல் ஆகியவை உறுதி செய்யப்படும்.

இப்படி ஏராளமான திட்டங்களை மாற்றுத்திறனாளிகளின் காவலரான தலைவர் கலைஞர் அவர்களின் வழியில், நமது அரசு செயல்படுத்தி வருகிறது. இன்னும் நிறைய திட்டங்களை செயல்படுத்தக் காத்திருக்கிறது. இத்திட்டங்களை எல்லாம் எவ்வாறு மேலும் சிறப்பாகச் செயல்படுத்தலாம் என்ற ஆலோசனையை அனைவரும் வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அவசியத் தேவைகள் குறித்தும் ஆலோசனைகளை இங்கே சொல்லுங்கள்.

செய்ய இயன்ற ஆலோசனைகளைச் சொல்லுங்கள்.

ஒரே ஒரு மாற்றுத்திறனாளியும் மனவருத்தம் அடைந்து விடக்கூடாது.

ஒரே ஒருவருக்கு நன்மை பயக்கும் என்றாலும் அந்தச் செயலை நாம் செய்தாக வேண்டும்.

இத்தகைய கருணை உள்ளத்தோடு இவர்களது நலம் காக்க பாடுபட நாம் என்றைக்கும் துணையாக நிற்போம்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற
மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை
வாரியக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 24.11.2022

மாமல்லபுரத்தில்
ரூ.30 கோடி செலவில்
கைத்தறி அருங்காட்சியகம்

தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான சர்வதேச மாநாட்டில் பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே,

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்களே,

ஒன்றிய கைத்தறி அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு. ராஜீவ் சக்சேனா இ.ஆ.ப., அவர்களே,

துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார், இ.ஆ.ப., அவர்களே,

இந்திய தொழிற் கூட்டமைப்பினுடைய தமிழ்நாடு தலைவர் திரு. சத்யகம் ஆர்யா அவர்களே,

துணைத் தலைவர் திரு. சங்கர் வானவராயர் அவர்களே,

இயக்குநர் திரு. துளசிராஜ் அவர்களே,

இந்திய தொழிற் கூட்டமைப்பின் தமிழ்நாடு ஜவுளி குழுவினுடைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் கே. வேல் கிருஷ்ணா அவர்களே,

இணை ஒருங்கிணைப்பாளர் திரு. ஜி.ஆர். கோபி குமார் அவர்களே,

ரிலையன்ஸ் நிறுவனத்தின் பாலியஸ்டர் பிரிவு தலைவர் திரு.ஆர்.டி. உதேசி அவர்களே,

சிவா டெக்ஸ் யான்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. சுந்தரராமன் அவர்களே,

வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளே,

ஜவுளித்துறை சார்ந்திருக்கக்கூடிய தொழில் அதிபர்களே,

இந்திய தொழிற் கூட்டமைப்பினுடைய நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் நமது அரசு பன்னாட்டு அளவிலான முன்னெடுப்புகளை செய்து வருகிறது. அதில் தொழில்துறை முன்னணியில் இருக்கிறது. உலகத்தரத்திலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகிறோம். விளையாட்டுத்

துறையில் உலகப் புகழை அடைந்து வருகிறோம். பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு நிறுவனங்களைத் தொடங்கும் முயற்சியில் இருக்கிறார்கள். இந்த வரிசையில் துணிநூல் துறையின் சார்பில் முதன்முறையாக ஜவுளித் தொழில் குறித்தான பன்னாட்டுக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நம்முடைய போட்டி என்பது இந்திய மாநிலங்களோடு மட்டுமல்லாமல் – உலக நாடுகளுக்கு இணையானதாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் இது போன்ற கருத்தரங்குகள் நடத்தப்படுகிறது.

தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மகாத்மா காந்தியடிகளின் அடையாளம் கதர் என்பதைப்போல நம்முடைய அமைச்சர் காந்தியின் அடையாளமாகத் துணிநூல் துறையானது அமைந்துவிட்டது.

சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் ரூ.2 கோடியே 50 லட்சம் அரசு மானியத்துடன் உருவாக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் ஜவுளி நகரம் (Textile City) அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் கீழ் இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.2,500 வீதம் ஊதிய உயர்வு வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட உள்ளது.

மூன்று கூட்டுறவு நூற்பாலைகளில் 11 கிலோவாட் உயர் மின்னழுத்த மின்பாதைகள் (Dedicated Electrical Power Feeder Line) நிறுவிடத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை உருவாக்கிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்து நவீனப்படுத்திட ரூ.29 கோடியே 34 இலட்சம் செலவில் செயல்திட்டம் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டம், குமாரலிங்கபுரம் கிராமத்தில் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் மாபெரும் ஜவுளிப்பூங்கா அமைத்திட சிப்காட் நிறுவனம் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படி பல்வேறு சாதனைகளை முன்னின்று செய்துள்ளார் நம்முடைய அமைச்சர் காந்தி. எனவே, அவரையும் இத்துறையின் அதிகாரிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தொழில்நுட்ப ஜவுளிகளின் முக்கியத்துவம் மற்றும் மாநிலத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு அதன் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் ஜவுளித் துறை, ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

‘தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் அமெரிக்க,ஐரோப்பியநாடுகள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி மற்றும் மனிதவளம் ஆகியவற்றில் தமிழ்நாடு, இந்தியாவுக்கு முதன்மையான பங்களிப்பை அளித்து வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தொழில்வளம், அமைதியான சூழல், தொழில் தொடங்குவதற்கான எளிய நடைமுறைகள், முன்னேறிவரும் பொருளாதாரச் சூழ்நிலை, திறன்மிகு மனிதவளம் ஆகியவற்றின் காரணமாக அனைவரையும் ஈர்க்கும் மாநிலமாக நமது தமிழ்நாடு இருக்கிறது.

நமது அரசின் முனைப்பான நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு பன்னாட்டு தொழில் முனைவோர்களும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் தமிழ்நாடு 2ஆவது பெரிய மாநிலமாகத் திகழ்கிறது.

4 பெரிய பன்னாட்டு விமான நிலையங்கள், 2 உள்நாட்டு விமான நிலையங்கள், 3 பெரிய துறைமுகங்கள், 19 சிறிய துறைமுகங்களைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது.

2 இலட்சத்து 53 ஆயிரத்து 510 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைவழி வசதியைக் கொண்டு முதலீட்டாளர்களும், ஏற்றுமதியாளர்களும் மிகவும் விரும்பும் மாநிலமாக விளங்குகிறது.

தமிழ்நாடு 80 விழுக்காடு கல்வி அறிவு பெற்ற மாநிலமாகத் திகழ்கிறது.

திறமை வாய்ந்த சிறந்த தொழில்நுட்பப் பணியாளர்களையும் கொண்டுள்ளது. இத்தகைய தனித்தன்மையின் காரணமாக அனைத்துத் துறைகளிலும் நாம் பெரும் முன்னேற்றம் கண்டு வருகிறோம். இதில் ஜவுளித்துறையும் ஒன்றாக இருக்கிறது.

ஜவுளித் துறையைப் பொறுத்தவரை, நமது மாநிலம் அன்னிய முதலீட்டினை ஈர்ப்பதிலும், ஏற்றுமதியில் 3-ஆவது பெரிய இடத்திலும் இருக்கிறது.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதாக ஜவுளித் தொழில் உள்ளது.

அதனால்தான் நமது அரசு பொறுப்பேற்றவுடன் புதியதாக ஜவுளித் துறை என்ற ஒன்றை உருவாக்கியது. இதன் தொடர்ச்சியாக, தொழில்நுட்ப ஜவுளித் தொழிலின் உலகளாவிய போக்கினை அறிந்து, பன்னாட்டுக் கருத்தரங்கினை இந்த அரசு நடத்துகிறது.

எல்லாத்துறைகளும் வளர வேண்டும் – அதில் புதுமைகளைப் புகுத்த வேண்டும் – உயர் தொழில்நுட்பம் அனைத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லி வருகிறோம். அதற்கு ஏற்ற கொள்கைகளை வகுத்துத் தந்து வருகிறோம்.

தமிழ்நாடு அரசின் தொழில்துறை மூலமாக,

1) முதலீட்டு மானியம்,

2) தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவானது “சன்ரைஸ் செக்டார்”(Sunrise Sector) என அடையாளம் காணப்பட்டு சலுகைகள்,

3) தொழிற்பூங்கா அமைப்பதற்கான உதவிகள்,

4) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான (R&D) நிதி உதவி,

5) ஒற்றைச் சாளர வசதி (Single window clearance),

6) முத்திரைப்பதிவுக் கட்டணச் சலுகைகள் போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகிறது.

வளர்ந்து வரும் துறைகள் இனத்தில் (Thrust Sector) தொழில்நுட்ப ஜவுளி சேர்க்கப்பட்டு ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கு - சிறப்பு முதலீட்டு மானிய உதவியாக ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் வழங்கப்படுகிறது.

ஜவுளித் தொழிலில் தமிழ்நாடு எப்போதுமே முன்னணி வகிக்கக்கூடிய மாநிலம். இந்தியாவினுடைய மொத்த ஜவுளி ஏற்றுமதி வருவாயில் தமிழ்நாடு மட்டுமே 12 விழுக்காடு பங்களிப்பை வழங்குகிறது. ஜவுளித் தொழிலில் புதிய தொழில்நுட்ப உத்திகளை கடைப்பிடித்து, உலக அளவில் தேவைப்படும் பல்வேறு துணிவகைகளையும் தமிழகம் உற்பத்தி செய்கிறது. தமிழ்நாட்டில் 1,861 நூற்பாலைகள் உள்ளன. இது இந்திய நாட்டின் பங்கில் 55 விழுக்காடு! இங்கு 23 மில்லியன் நூற்பு கதிர்கள் செயல்பட்டு வருகின்றன; இது நாட்டின் நூற்பு கதிர்களின் எண்ணிக்கையில் 43 விழுக்காடு!

மேலும், இந்தியாவிலுள்ள விசைத்தறிகளில் 23 விழுக்காடு விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் சுமார் 31 இலட்சம் தொழிலாளர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. எனவேதான், நாம் இந்தத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம்.

தொழில்நுட்ப ஜவுளி எனப்படும் 'Technical Textiles' என்பது வளர்ந்துவரும் மிக முக்கியமான ஒரு பிரிவு. இதற்கு, தமிழ்நாடு அரசு முன்னுரிமை அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது. ஜவுளித்துறையின் எதிர்காலமே தொழில்நுட்ப ஜவுளிகளின் வளர்ச்சியைச் சார்ந்திருப்பதை நாங்கள் நன்கு உணர்ந்துள்ளோம்.

விளையாட்டுத் துறையினருக்கான துணிகள் நாட்டின் பாதுகாப்பு வீரர்களுக்கான பாதுகாப்பு ஆடைகள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கான தொழில்நுட்பம் சார்ந்த துணிகள்,

மருத்துவத்தில் அறுவை சிகிச்சை உள்ளிட்ட பிற மருத்துவ சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்படும் உயிர் காக்கும் துணிகள்,

ஆட்டோமொபைல் துறையில் பயன்படுத்தப்படும் காற்றுப்பைகள், சீட் பெல்ட்கள்,

- போன்றவற்றைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைப்பதற்கு அனைத்து உதவிகளையும் வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உலகத் தரத்தின் மெகா ஜவுளி நகரம் (Textile City) உருவாக்கிட முயற்சிகள் எடுத்து வருகிறோம். மாமல்லபுரத்தில் ரூபாய் 30 கோடி செலவில் கைத்தறி அருங்காட்சியகம் (Handloom Museum) அமைத்திடவும் திட்டமிட்டுள்ளோம். ரூபாய் 10 கோடி செலவில், நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணை உட்கட்டமைப்புடன் கூடிய வடிவமைப்பு நிலையம் (Design and Incubation Centre) நிறுவிடவும் நமது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மாநிலத்தின் ஜவுளி ஏற்றுமதியினை பன்மடங்கு அதிகரிக்க கரூர், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரம் போன்ற நகரங்களில் “ஏற்றுமதி மையங்கள்” (Export Hub) அமைக்கக்கூடிய பணிகளையும் விரைந்து செயல்படுத்தி வருகிறோம்.

இவை அனைத்திற்கும் அடித்தளம் அமைக்கும் கருத்தரங்காக இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் அமைய வேண்டும். தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான விழிப்புணர்வையும், அதிலுள்ள ஒளிமயமான சந்தை வாய்ப்புகளையும் தொழில் முனைவோரிடம் இக்கருத்தரங்கு ஏற்படுத்தும் என நான் நம்புகிறேன். அனைத்து தரப்பு முதலீட்டாளர்களும், வெளிமாநில மற்றும் வெளிநாட்டு தொழில்முனைவோர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து தொழில்நுட்ப ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

“One Trillion Dollar Economy-2030” என்கின்ற தமிழ்நாடு அரசின் இலக்கிற்கு செயல் வடிவம் கொடுக்கும் முயற்சிகளில், தொழில்நுட்ப ஜவுளி சார்ந்த இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையோடு, இந்த கருத்தரங்கினை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான சர்வதேச மாநாட்டில்
காணொலிக் காட்சி வாயிலாகக் கலந்துகொண்டு
ஆற்றிய உரை - 25.11.2022

அரியலூர் மாவட்டத்தில் ரூ.52 கோடி மதிப்பில் 27,070 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட அரசு நலத்திட்டங்களை வழங்கக்கூடிய விழாவிற்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அருமை நண்பர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களே,

இந்த சிறப்பான விழாவினை சிறப்பித்து பெருமை சேர்த்திருக்கக்கூடிய நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சர் பெருமக்கள்

திரு. கே.என். நேரு அவர்களே,

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களே,

திரு. ரகுபதி அவர்களே,

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

திரு. சி.வி. கணேசன் அவர்களே,

உதகை நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தினுடைய முன்னாள் அமைச்சர் என்னுடைய இனிய சகோதரர் திரு. ஆ. ராசா அவர்களே,

இந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலை சிறுத்தைக் கட்சியினுடைய தலைவரும், என்னுடைய பாசமிகு சகோதரர் திரு. தொல். திருமாவளவன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. சின்னப்பா அவர்களே, திரு. க. சொ. க. கண்ணன் அவர்களே, திரு. எம். பிரபாகரன் அவர்களே,

துவக்கத்திலே அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பெ. ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்களே,

நிறைவாக நன்றியுரையாற்ற இருக்கக்கூடிய பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பயனாளிகளே,

அருமை தாய்மார்களே,

அன்பிற்கினிய பெரியோர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

அரியலூர் மாவட்டம் என்பது அரிய மாவட்டம்!

கொள்ளிடத்திற்கு வடக்கே - வெண்ணாற்றுக்கு தெற்கே - ஊடாற்றுக்கு வடக்கே - சிதம்பரத்துக்கு மேற்கே – இந்த அரியலூர் உருவாக்கப்பட்டது.

கங்கையை வென்ற முதலாம் இராசேந்திர சோழன் இங்கே கங்கை கொண்ட சோழபுரத்தை உருவாக்கினான். தனது ஆட்சிக் காலத்தில் தலைநகரைத் தஞ்சையில் இருந்து இந்த சோழபுரத்துக்கு மாற்றினான்.

தமிழ்காக்க - தமிழர்தம் நலம் காக்க, டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றிக் கல்லக்குடி என்று பெயர் சூட்டுவதற்காக தண்டவாளத்தில் தலைவைத்து, கல்லக்குடி கொண்டானாகப் படுத்து – தமிழ்க்குடி தொண்டனாக எழுந்த நமது கலைஞரைத் தலைவராக எழ வைத்த மாவட்டம்தான் இந்த அரியலூர் மாவட்டம்.

கலிங்கச் சிற்பங்கள்,

மாளிகை மேடு,

யானை சுதை சிற்பம்,

இரட்டைக் கோயில்

என்று எங்கு திரும்பினாலும் பொக்கிஷங்கள் - பொக்கிஷங்கள்!

கனிம வளங்கள் நிறைந்த மாவட்டம் இது. சுண்ணாம்புக் கல், மணற்கற்கள், பாஸ்பேட் முண்டுகள் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனிமங்கள் நிறைந்த பகுதிகளாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் சொரிந்த பகுதியாக

விளங்குகிறது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். கனிமங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் கழகத்துக்கு, நமது ஆட்சிக்குக் கிடைத்த வைரக்கல்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள். அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்த பிள்ளையாக எஸ்.எஸ்.சிவசுப்பிரமணியம் அவர்கள் பெயரைக் காப்பாற்றக்கூடிய பிள்ளையாக நம்முடைய சிவசங்கர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

1996ஆம் ஆண்டு பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி மன்ற துணைத்தலைவராகப் பொறுப்பேற்று – இப்போது மூன்றாவது முறையாக சட்டமன்றத்துக்கு வெற்றி பெற்றவர். போக்குவரத்துத் துறையின் அமைச்சர் குன்னம் தொகுதியில் நூலகம் கேட்ட மாணவி செம்பருத்தியின் கோரிக்கையை நிறைவேற்றி வைத்து அவரது கையாலேயே நூலகத்தைத் திறக்க வைத்தவர்.

மாணவி அனிதாவை யாராலும் மறக்க முடியாது. அவர் உச்சநீதிமன்றம் வரை சென்று தனது கல்வியுரிமையை போராட அதற்குத் துணையாக இருந்தவர்.

சட்டமன்றமாக இருந்தாலும் சரி, மக்கள் மன்றமாக இருந்தாலும் சரி, சமூக வலைத்தளங்களாக இருந்தாலும் சரி, கட்சி மீதோ, தலைமை மீதோ ஒரு விமர்சனம் வைக்கப்பட்டால் முன்னின்று வந்து தடுக்கக்கூடிய களப்போராளிதான் நம்முடைய சிவசங்கர் அவர்கள்.

போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த அதிமுக ஆட்சியில் மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்ட போக்குவரத்து ஊழியர்களுக்கான 14-ஆவது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இவரால் முடிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் இயங்கக்கூடிய பேருந்துகள் குறித்து தகவல்அறியசென்னைபஸ்செயலிஅறிமுகம்செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒன்றிய அரசு சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரம் என்ற விருதினை அளித்திருக்கிறது.

சென்னை பேருந்துகளில் பெண்களுடைய பாதுகாப்பை உறுதி செய்ய சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

பயணிகளுடைய வசதிக்காக whatsapp இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசுப் பேருந்துகளில் 3 வயது வரை இலவசமாகப் பயணிக்கலாம் என்று இருந்ததை 5 வயது வரை என்று உயர்த்தி இருக்கிறோம்.

ஓட்டுநர் உரிமத்திற்காக இணையத்தில் பதிவு செய்யக்கூடிய வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி எத்தனையோ சாதனைகளைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்தான் நம்முடைய அமைச்சர் சிவசங்கர் அவர்கள்.

பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து அரியலூர் என்ற புதிய மாவட்டத்தை 2007ஆம் ஆண்டு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெறும் புதைபடிவங்கள் கொண்டு அருங்காட்சியகம் ஒன்று வாரணவாசி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.10 கோடி மதிப்பிலான புதைபடிவப் பூங்கா (Fossil Park) அமைப்பதற்காகவும், வாரணவாசி அருங்காட்சியகத்தின் பாதுகாப்பிற்காகவும் சுற்றுச்சுவர் அமைக்கக்கூடிய பணிகள் நடைபெறுகின்றது.

வாரணவாசி கிராமத்தில் உள்ள 120 ஏக்கர் நிலப்பகுதியினைப் (களர் நிலப்பரப்பு) பாதுகாத்திட, பாதுகாப்புக் கொள்கை (Conservation Policy) வெளியிட தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டினுடைய வரலாற்றுக் கருவூலமான அரியலூரில் ஏராளமான பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு, அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கென ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகள் மற்றும் தரவுகளின் வாயிலாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழினுடைய தொன்மையையும், தமிழ்ச் சமூகத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தொல்லியல் துறையில் ஒரு மறுமலர்ச்சியையே உருவாக்கியிருக்கிறோம்.

நேற்று கங்கைகொண்ட சோழபுரம் மாளிகைமேட்டில் நடைபெற்று வரக்கூடிய அகழாய்வு அந்தப் பணிகளை எல்லாம் நாங்கள் நேரடியாக சென்று பார்வையிட்டோம். கங்கைகொண்ட சோழன், மும்முடிச் சோழன், உத்தமச் சோழன், பண்டிதச் சோழன், வீரசோழன் போன்ற பட்டங்களுக்குச் சொந்தக்காரரான சோழ மாமன்னர் இராஜேந்திர சோழன். தெற்காசிய நாடுகளை வென்று, அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தை தனது தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தவர். தனது ஆட்சிக் காலத்தில் பல நாடுகளைக் கடல் கடந்து சென்று வென்றதோடு, கிழக்கிந்தியத் தீவுகள், சீனா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளையும் கொண்டிருந்தவர்.

இத்தகைய பெருமை வாய்ந்த மாமன்னர் இராஜேந்திர சோழனுக்கு சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில், கடற்பயணம், கடல் வாணிகம் மற்றும் கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியதையும், மேலை நாடுகளுடனும், கீழை நாடுகளுடனும் சிறந்த வணிகத் தொடர்பு கொண்டிருந்ததையும், உலகுக்கு பறைசாற்றும் வகையில், நான் நேற்று பார்த்து, கண்டு வியந்ததை மக்கள் அனைவரும் காணவேண்டும் என்பதற்காக

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஓர் அருங்காட்சியகம் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சி பொங்க நான் அறிவிக்கின்றேன்.

சில மாதங்களுக்கு முன்பே, தஞ்சையில் மாமன்னர் ராஜராஜனுக்கு ஆண்டுதோறும் சதய விழா கொண்டாடப்படுவதைப்போல, மாமன்னர் ராஜேந்திர சோழனுக்கு அரசு விழா கொண்டாடப்பட வேண்டும் என்பது அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடைய நீண்ட கால கோரிக்கையை ஏற்று மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்தநாள் விழாவான ஆடித் திருவாதிரை விழாவினை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட ஆணையிடப்பட்டதையும் நான் இந்த நேரத்தில் நினைவு கூறுகிறேன்.

நேற்று இரவு நான் ஆசிய கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலிருந்து இந்த மாவட்டத்தைச் சார்ந்த திரு. கார்த்திக் இந்திய அணிக்காகத் தேர்வு செய்யப்பட்டு வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்திருந்தார். அவர்களுடைய ஏழ்மை நிலையை தொலைக்காட்சி பேட்டியின் மூலமாக பார்த்த நான் உடனே நம்முடைய அமைச்சர் சிவசங்கரை அங்கே அனுப்பி வைத்தேன். அதனுடன் குடும்பத்தார் வைத்த கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையில் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கக்கூடிய அடுக்கு மாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணையை அவரது குடும்பத்தினரிடம் சென்று நானே நேரடியாக வழங்கினேன்.

இதேபோல ஹாக்கி போட்டியில் இந்திய அணிக்காக விளையாடிய வீரர் ரஜினி அரியலூர் மாவட்டத்தினை சேர்ந்தவர்.

உடையார்பாளையத்தைச் சேர்ந்த மாணவி சர்வானிகா, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற 35ஆவது தேசிய சதுரங்கப் போட்டியில் பங்குபெற்று தமிழகத்தின் சார்பில்

7-வயதிற்குட்பட்டோர் போட்டியில் கலந்துகொண்டு இந்திய அளவில் முதலிடம் படைத்து சாதனை படைத்துள்ளார். இந்த மாவட்டத்தைச் சார்ந்த இத்தகைய பெருமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று இந்த விழாவில், அரியலூர் மாவட்டத்தில் 30 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 51 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்துள்ளேன்.

ஒரு கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்.

இந்த மாவட்ட மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 27 ஆயிரத்து 70 பயனாளிகளுக்கு 52 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரியலூருக்கு இத்தனை சிறப்புகள் என்றால், அரியலூருக்கு அருகில் இருக்கக்கூடிய பெரம்பலூரும் ஏராளமான சிறப்புகளைப் பெற்றுள்ளது.

ஒரு காலத்தில் பெரும்புலியூர் என்று அழைக்கப்பட்ட இடம்தான் பெரம்பலூர். அழகிய மலைகளும், அதில் அரிய வகையான விலங்குகளும் இருந்த பகுதி இது. ஆயிரம் ஆண்டிற்கு முந்தைய கோவில்கள் உள்ள பகுதி இது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் முதல் மூன்றாம் இராசராசன் காலம் வரையிலான கல்வெட்டுகள் பெருநெற்குன்றம் கோவிலில் இருந்திருக்கிறது.

சோழர்கள் காலத்தில் வெண்பாவூர் என்பது வணிக மையமாக விளங்கி வருகிறது. சமணம் மற்றும் பவுத்த சமயம் தழைத்தோங்கிய இடமாகவும் இது இருந்துள்ளது. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க மாவட்டமாக பெரம்பலூர் மாவட்டம் அமைந்துள்ளது.

இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தினுடைய ஒரு அங்கமாக ஏன் பெம்பலூரிலே பிறந்து நீலகிரியினுடைய தத்துப்பிள்ளையாக,

நாடாளுமன்றஉறுப்பினராக,இந்தபெரம்பலூர்மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தரான, ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சர் ஆ.ராசா அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது அரசு விழாவாக இருந்தாலும், தன்னுடைய விழாவைப் போலக் கருதி பணியாற்றி இருக்கிறார் ஆ.ராசா அவர்கள். ஆகவே, அவர் இந்த மாவட்டத்து மக்கள் மீது எந்த அளவிற்கு அன்பு வைத்திருக்கிறார் என்பதற்கு இதுவே ஒரு சாட்சி.

வேறு ஒன்றும் வேண்டாம், தலைவர் கலைஞர் அவர்களால் 'தகத்தகாய சூரியன்' என்று போற்றப்பட்ட சொற்களை மீறி அவரைப் பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. எதுவும் இல்லை.

பெரம்பலூர் மாவட்டத்தில் 221 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன்.

31 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 54 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 9 ஆயிரத்து 621 பயனாளிகளுக்கு 26 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், மிகுந்த சிறப்புக்குரிய அரசு விழாவாக மட்டுமல்ல – இது ஒரு மக்கள் விழாவாக – மக்கள் மகிழ்ச்சி அடையும் விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதை எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் சிவசங்கர் அவர்களுக்கும், அவருக்கு எல்லா வகையிலும் துணை நிற்கக்கூடிய என்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா அவர்களுக்கும், அதைப் போல நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பெ. ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,

அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்த இரு மாவட்ட நிர்வாகங்களைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை, பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் முயற்சியின் காரணமாக, வழங்கப்பட இருக்கக்கூடிய உதவிகள் மூலமாக, இலட்சக்கணக்கான குடும்பங்கள் இன்றைக்கு பயனடைய இருக்கின்றன.

இன்று காலை என்னிடம் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளின் அடிப்படையில் கனரக வாகனங்கள் அதிகம் செல்வதால், மக்கள் பயன்படுத்தக்கூடிய சாலைகள் சேதமாவதைத் தடுக்கும் பொருட்டு, சிமெண்ட் காரிடர் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதையும் நான் இந்த நிகழ்ச்சியில் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மற்றும் அனல்மின் உற்பத்தித் திட்டத்திற்காக 13 வருவாய் கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்ட 11 கிராமங்களில் உள்ளடங்கிய நிலங்களை, சிவசங்கர் குறிப்பிட்டுச் சொன்னாரே, மீண்டும் உரிய உடமையாளர்களிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 306 உடமையாளர்களின் விபரங்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உறுதிமொழி ஆணை இன்று வழங்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள மேலூர் மற்றும் இலையூர் மேற்கு ஆகிய 2 கிராமங்களுக்கும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை உடமையாளர்களிடம் ஒப்படைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரியலூர் - பெரம்பலூர் மாவட்டப் பகுதியில் 10 கோடி ரூபாய் செலவில் புவியியல் புதைபடிவப் பூங்கா அமையப் போகிறது.

அரியலூர் நகரில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் அரசு பொது மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

செந்துறை நகருக்கு புறவழிச்சாலை அரியலூர் - ஆண்டிமடம் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்த 7 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டுமானப் பணிகள்,

அரியலூர் முதல் செந்துறை வரை நான்கு வழிச்சாலையாக 129 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம்,

அரியலூர் - மழவராய நல்லூர் சாலையில் மருதையாற்றின் குறுக்கே புதிய பாலம்,

தேளூர் ஊராட்சியில் நெல் சேமிப்பு மையம் அமைப்பது எனப் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

எல்லாத் துறைகளின் சார்பிலும் இன்றைக்கு நடைமுறையில் இருந்து வரக்கூடிய அல்லது திட்டமிடப்பட்டு வரும் அனைத்துப் பணிகளையும் சொன்னால் பல மணிநேரம் ஆகும்.

மக்கள் தொண்டைத் தவிர மாற்றுச் சிந்தனை இல்லாத மக்கள் நல அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பத்து ஆண்டு காலம் பாழ்படுத்தியதை மீட்டெடுப்பது என்பது சாதாரண காரியம் அல்ல!

அதனை உடனே நடத்தி விட முடியுமா என்ற மலைப்பு கூட எங்களுக்கு முதலில் இருந்தது. ஆனால் அத்தகைய பாதாளத்தில் இருந்து தமிழகத்தை பல்வேறு வகைகளில் மீட்டெடுத்துவிட்டோம் என்பதுதான் உண்மை.

போட்டி போட்டுக்கொண்டு தொழில் நிறுவனங்கள் இன்றைக்கு தமிழகத்திற்கு வருகிறது.

ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக உயர்ந்து நிற்கிறோம்.

அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப் பாதைக்கு நாம் போய்க்கொண்டு இருக்கிறோம்.

வேளாண்மை உற்பத்தி அதிகமாகி இருக்கிறது.

வேளாண் பாசனப் பரப்பு வசதி அதிகமாகி இருக்கிறது.

உயர்கல்வியிலும், பள்ளிக் கல்வியிலும் பல்வேறு விருதுகளைப் பெற்று வருகிறோம்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி ஏற்படுத்தித் தந்ததன் மூலமாக பெண்களுக்கு நிரந்தரமான வருமானத்தை ஈட்டித் தந்திருக்கிறோம்.

சில நாட்களுக்கு முன்னால் மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவராக இருக்கக்கூடிய பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்கள் என்னிடத்தில் ஒரு அறிக்கையைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

கழக ஆட்சி மலர்ந்ததும் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தோம். அந்த திட்டத்தின் மூலமாக மகளிர் சமுதாயம் எத்தகைய பயனை அடைந்து வருகிறது என்பது குறித்த அந்த ஆய்வறிக்கையை கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அதில் குறிப்பிட்டிருந்தார்கள். பேருந்துகளில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்பதால் மாதத்துக்கு சுமார் தொள்ளாயிரம் ரூபாய் சேமிக்க முடிகிறது என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக ஏழை, எளிய பெண்கள் மிகுந்த மகிழ்ச்சியை அடைகிறார்கள். இதனால், மாத வருமானத்தில் பெருமளவு பணத்தை சேமிக்க முடிகிறது என்றும் - இந்த சேமிப்புப் பணத்தை குடும்பத்தின் வளர்ச்சிக்காகச்

செலவு செய்ய முடிகிறது என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

சில்லறை பணவீக்கத்தில் இருந்து பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க இத்திட்டம் உதவுவதாக பிரபலமான 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேடு எழுதி இருக்கிறது. ஒரே ஒரு கையெழுத்தின் மூலமாக கோடிக்கணக்கான மகளிர் சமுதாயத்தின் மனதில் மகிழ்ச்சியை விதைக்க முடிந்திருக்கிறது.

பதினைந்து மாத காலத்தில் ஒன்றரை இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசிடம் இருந்து தமிழ்நாட்டு உரிமைகளைக் காப்பாற்ற அனைத்தையும் செய்திருக்கிறோம்.

கொரோனாவை வென்று காட்டினோம்.

மழை - வெள்ளத்தில் இருந்து மக்களைக் காத்தோம்.

நேற்றுகூட, பெரம்பலூர் மாவட்டத்தில், காலணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, புதிய சிப்காட் தொழிற்சாலையை திறந்து வைத்தேன்.

நம்முடைய அருமை சகோதரர் திருமாவளவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டாரே, அந்தத் தொழிற்சாலை மூலம், 50 ஆயிரம் பேர் அதிலும் பெரும்பாலும் பெண்கள் வேலைவாய்ப்பு பெற இருக்கிறார்கள்.

அண்மையில் ரிசர்வ் வங்கி வெளியிட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாக முதலிடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. நம்மைவிட மக்கள்தொகையிலும், பரப்பளவிலும் பெரிய மாநிலங்கள் கூட தொழில்வளர்ச்சியில் நமக்குக் கீழேதான் இருக்கிறது.

கடந்த ஆட்சியில், பத்தாண்டு காலம் தொழில் வளர்ச்சியில் தேக்க நிலை நிலவினாலும், அதற்கு முன்பு, தலைவர் கலைஞர்

தலைமையிலான கழக அரசு போட்ட அடித்தளத்தாலும், கடந்த 18 மாதங்களாக எட்டு கால் பாய்ச்சலில் நாம் ஈர்த்து வரும் முதலீடுகளாலும் பெற்ற பெருமைதான் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

நான் இப்போது கூறிய இரண்டுமே தனித்தனி நிகழ்வுகள் அல்ல. ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையது.

2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை உயர்த்துவோம் என்ற இலக்கின் வெவ்வேறு பரிமாணங்கள்தான் இவை.

நான் முதல்வன் திட்டமானாலும்; ஐ.டி.ஐ தொழிற்பயிற்சி நிலையங்களை 2 ஆயிரத்து 200 கோடி ரூபாயில் தொழில்நுட்ப மையங்களாக மேம்படுத்துவதானாலும்; பள்ளிக்கல்வியிலும், உயர்கல்வியிலும், நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளானாலும்; புதியதாக வளர்ந்து வரும் உற்பத்தித் துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதானாலும்; நான்காம் தொழிற்புரட்சியை ஒட்டிய முயற்சிகள் ஆனாலும்–அனைத்துமே நம் இலக்கை நோக்கிய ஒருங்கிணைந்த திட்டமிடலின் அங்கங்கள்தான். இத்தகைய தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டால்தான், இலக்கை அடையமுடியும்.

இதில் அரியலூர், பெரம்பலூர் என அனைத்து மாவட்டங்களின் பங்களிப்பும் இருக்கவேண்டும். அனைத்துத் தரப்பினரும் பயன்பெற வேண்டும். அடுத்த சில ஆண்டுகளில் பின்தங்கிய பகுதி, மாவட்டம் என்று எதுவும் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது. அதை நோக்கித்தான் உழைத்து வருகிறோம்.

இவை அனைத்தும், ஒரு ஆட்சி எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நடத்திக் காட்டும் செயல்கள்!

ஒரு ஆட்சி எப்படி நடக்கக் கூடாது – ஒரு முதலமைச்சர் எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் கடந்த கால ஆட்சி!

தனது கையில் அதிகாரம் இருந்தபோது - கைகட்டி வேடிக்கை பார்த்து - தனது கையாலாகாத தனத்தை வெளிப்படுத்தி – பத்தாண்டு காலத்தை நாசமாக்கியவர்கள். இன்று இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து புகார்கள் கொடுக்கிறார்கள் போய், யாரிடம், உங்களுக்கு தெரியும், பேட்டிகள் அளிக்கிறார்கள். அதையெல்லாம் மக்கள் பார்த்து சிரிக்கிறார்கள்.

'உங்கள் யோக்கியதைதான் எங்களுக்குத் தெரியுமே' என்று ஏளனமாகச் சிரிக்கிறார்கள்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு கெடவில்லை. ஆனால், கெடுக்கலாமா என்று சிலர் சதி செய்கிறார்கள்.

ஐயகோ கெடவில்லையே என்று சிலர் வருத்தப்படுகிறார்கள்.

ஐயோ, தமிழ்நாடு அமைதியாக இருக்கிறதே என்று வயிறு எரிகிறது இவர்களுக்கெல்லாம்.

"புலிக்கு பயந்தவன், என் மேல வந்து படுத்துக்கோ" என்று சொல்வார்களே, அதுபோல சிலர் "ஆபத்து – ஆபத்து" என்று அலறிக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்படிச் சொல்லும் சிலருக்கு, 'இருக்கும் பதவி நிலைக்குமா' என்று பயமாக இருக்கிறது. அதனால்தான் மக்களைப் பார்த்து ஆபத்து ஆபத்து என அலறுகிறார்கள்.

மக்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. மக்களுக்கு ஆபத்பாந்தவனான ஆட்சிதான் இந்த ஆட்சி. உங்கள் ஆட்சி நடக்கிறது, கவலைப்படாதீர்கள்.

விமர்சனங்களுக்கு எதிரானவர்கள் அல்ல நாங்கள். விமர்சனங்களை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஆனால்

விஷமத்தனம் கூடாது. விமர்சனம் செய்பவர்களுக்கு அதற்கான அருகதை அவர்களுக்கு இருக்க வேண்டும்.

தங்கள் கையில் ஆட்சி இருந்தபோது எதையும் செய்யாமல் இருந்துவிட்டு, இன்று மகா யோக்கியரைப் போல, உலக மகா உத்தமனைப் போல பேசுபவர்களுக்கு விமர்சனம் செய்வதற்கான யோக்கியதை இல்லை.

தமிழகம் இழந்த பெருமைகளை மீட்பது மட்டுமல்ல, இதுவரை அடையாத பெருமைகளையும் உயரத்தையும் அடைவதுத்தான் நமது ஆட்சியின் குறிக்கோள். அந்தக் குறிக்கோளோடு நான் பணியாற்றுகிறேன். அந்தக் குறிக்கோளை அடைய என்னை ஒப்படைத்துக் கொண்டு நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைப் பார்க்கிறீர்கள், மக்கள் பிரதிநிதிகளைப் பார்க்கிறீர்கள், இவர்கள் எல்லோருடைய ஒத்துழைப்போடு, இவர்களுடைய உழைப்பால், தமிழகம் அத்தகைய உயரத்தை விரைவில் அடையும் என்பதை உறுதியோடு சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
அரியலூர் மாவட்டம், கொல்லாபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திற்கான முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை - 29.11.2022

டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உருவாக அடித்தளமிட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள்

அன்னை ஜானகி எம்.ஜி.ஆர். நூற்றாண்டுத் துவக்க விழா, அன்னை ஜானகி எம்.ஜி.ஆர். நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீடு, அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மற்றும் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியம் அவர்களே,

அமைச்சர் பெருமக்கள்

திரு. முத்துசாமி அவர்களே,

திரு. ராமச்சந்திரன் அவர்களே,

திரு. சக்கரபாணி அவர்களே,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

மைலாப்பூர் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. த. வேலு அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர் திரு. மகேஷ்குமார் அவர்களே,

டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் முனைவர் குமார் ராஜேந்திரன் அவர்களே,

கல்லூரித் தாளாளர் முனைவர் லதா ராஜேந்திரன் அவர்களே,

கல்லூரியின் முதல்வர் திருமதி மணிமேகலை அவர்களே,

சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருக்கக்கூடிய மதிப்பிற்குரிய திரு. வி.ஜி. சந்தோஷம் அவர்களே,

அருமை சகோதரர் திரு. ஐசரி கணேஷ் அவர்களே,

பேராசிரியர் பெருமக்களே,

கல்லூரி மாணவியர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் நான் பங்கேற்க முக்கியக் காரணமே இந்தக் கல்லூரியின் மாணவிகளாக இருக்கக்கூடிய நீங்கள்தான். ஆர்வத்தோடு, மகிழ்ச்சியோடு நான் ஒப்புக் கொண்டதற்குக்

காரணம், இதோ பக்கத்தில் இருக்கக்கூடிய தியோசபிக்கல் சொசைட்டியில் நான் ஒவ்வொரு நாளும் மாலையில் நேரம் கிடைக்கிறபோதெல்லாம் நடைப்பயிற்சி வருவது உண்டு. அங்கே வீட்டிலிருந்து கிளம்பி வருகிறபோது அருகாமையில் பேருந்து நிலையம் இருக்கிறது. அப்போது கல்லூரி விட்டு வரக்கூடிய மாணவிகளெல்லாம் பேருந்திற்காக இரண்டு பக்கமும் காத்திருப்பார்கள். என் காரைப் பார்த்தவுடன், அவர்களை கிராஸ் செய்கிறபோது, அப்படியே ஒரு உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு, எழுச்சியோடு ஒரு கூக்கூரல், ஒரு சத்தம், அந்த சத்தத்தைப் பொறுத்தவரைக்கும் ஏதோ சத்தம் நினைத்துவிடக் கூடாது, அது உங்களுடைய பாஸிட்டிவ் வைப் (Positive Vibe) அப்போது எனக்கு ரொம்ப எனர்ஜெட்டிக்காக இருக்கும்.

Physical Fitness எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு Mental Fitness-ம் மிக மிக முக்கியம். அதற்குத் தேவையான பாஸிட்டிவ் வைப் உங்களிடம் இருக்கிறது. அதனால்தான் கல்லூரி நிகழ்ச்சிகள் என்றால் உற்சாகமாக கிளம்பி விடுகிறேன்.

தமிழ்நாட்டினுடைய முதல் பெண் முதலமைச்சர் என்ற சிறப்புக்குரியவர் யார் என்று கேட்டீர்களானால், அம்மையார் ஜானகி எம்.ஜி.ஆர். அவர்கள்தான். அவருடைய நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். இது சிலருக்கு வியப்பாக இருக்கும், அதிர்ச்சியாக இருக்கும், ஆச்சரியமாக இருக்கும். ஆனால், வரலாற்று உண்மையை மனச்சாட்சிப்படி சிந்திக்கும் யாருக்கும் இது அதிர்ச்சியாக இருக்காது.

நம்முடைய மதிப்பிற்குரிய 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர். அவர்கள் இருபதாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சமத்துவ-பொதுவுடைமை கருத்துகளை மக்களிடம் எடுத்துப்போகிற

அளவிற்கு சினிமாவில் ஒரு பெரிய ஹீரோவாக நடித்து, ஒரு பெரிய உந்துசக்தியாக இருந்தார். அதற்குப் பின்னால், காலத்தின் சூழ்நிலை கருதி, காலத்தினுடைய சூறாவளி, ஒரு தனி இயக்கம் அவர் கண்டார். அந்த இயக்கத்தைப் பொறுத்தவரைக்கும் அவருடைய பங்களிப்பு என்பது பதினைந்து ஆண்டுகள்தான்.

அந்த வகையில் பார்த்தால் 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர். அவர்கள் அதிக ஆண்டுகள், அதாவது 1952-ஆம் ஆண்டு முதல் 1972 வரை தி.மு.க.வில்தான் இயங்கிக் கொண்டிருந்தார். இதை அவரே சுட்டிக்காட்டி எழுதி இருக்கிறார். பல கட்டுரைகளில் அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். எம்.ஜி.ஆர். சொல்கிறார், "நான் கோவையில் இருந்தபோது எனது இல்லத்தில் கலைஞர் அவர்களும் சிறிது காலம் என்னோடு இருந்தார், அப்போது தேசிய இயக்கத்தைச் சார்ந்தவராக நான் இருந்தேன். ஆனால் கலைஞர் அவர்கள் ஒரு சுயமரியாதை கொள்கை பேசுபவராக இருந்தார். அவரை எப்படியாவது எனது கொள்கைக்கு இழுக்க நான் முயற்சித்தேன். ஆனால், இறுதியில் கலைஞர் அவர்கள்தான் வென்றார். நான் தி.மு.க.வில் இணைந்தேன். இதுதான் வரலாறு. ஆக, இன்றைக்கு தி.மு.க.வின் தலைவராக கலைஞரும், பொருளாளராக நானும் இருக்கிறேன்"- என்று எம்.ஜி.ஆர். எழுதி இருக்கிறார். இதெல்லாம் தெரிந்தவர்களுக்கு நான் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுப்பது யாருக்கும் வியப்பாக இருக்காது.

இன்றைக்கு இந்த இடத்தில் இவ்வளவு பெரிய கல்லூரி உருவாகியிருக்கிறது என்றால், பல்லாயிரக்கணக்கான மாணவிகள் இங்கே கல்வி பெறவும் அரசின் அனுமதியை வழங்கியவர் யார் தெரியுமா? முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1996ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தார். அப்போதுதான் அம்மையார் ஜானகி அவர்கள், முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு போன்

செய்து வாழ்த்து சொன்னார்கள். வாழ்த்து சொல்லிவிட்டு ஒரு கோரிக்கை வைத்தார்கள். "சத்யா ஸ்டுடியோ இருக்கும் இடத்தில் ஒரு காலேஜ் தொடங்கலாம் என்று இருக்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்"-என்று ஜானகி அம்மையார் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். உடனே தலைவர் கலைஞர் அவர்கள், "நிச்சயம் அனுமதி தருகிறேன்... என்று சொல்லிவிட்டு உங்கள் உடல் நலம் எப்படியிருக்கிறது, உங்களை சந்திக்க நானே விரைவில் வந்து பார்க்கிறேன்"-என்று அவர் சொல்லியிருக்கிறார், சொல்லி இரண்டு நாட்களில் அம்மையாரின் உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு அவர் மறைந்து விட்டார். மறைந்த செய்தி கேட்டு உடனடியாக ராமாவரம் தோட்டத்திற்கு தலைவர் கலைஞர் அவர்கள் சென்றார்கள், அஞ்சலி செலுத்திவிட்டு, பக்கத்தில் இருந்தவர்களிடத்தில் சொல்லியிருக்கிறார், "அம்மையார் ஜானகி அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள், அந்தக் கோரிக்கையை நான் நிறைவேற்றி கொடுத்திருக்கிறேன்." 'யார் அந்தக் கல்வி நிறுவனத்தை நடத்தப் போகிறீர்கள்?' என்று ஒரு கேள்வியையும் தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது கேட்டிருக்கிறார்கள். அப்படி அக்கறையோடு கேட்டு உருவான கல்லூரிதான் இந்தக் கல்லூரி என்பதை நினைக்கும்போது, நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இவ்வளவு பிரம்மாண்டமாக உருவாகுவதற்கு எல்லோரும் காரணமாக இருந்திருக்கிறீர்கள், மறுக்கவில்லை. ஆனால் அதற்கு அடித்தளம் அமைத்த நேரத்தில் துணை நின்றவர் தலைவர் கலைஞர் என்று நினைக்கிறபோது, அதுவும் நான் வருவதற்கு முக்கியக் காரணம்.

'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர். அவர்களை படத்தில் மட்டும் பார்த்தவன் அல்ல நான், தூரத்திலிருந்து பார்த்தவன் அல்ல நான், அவரோடு நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு பல

நேரங்களில் கிடைத்திருக்கிறது. இதே சத்யா ஸ்டுடியோவுக்கு நான் பல முறை வந்திருக்கிறேன். சென்னை, சேத்துப்பட்டு கிருத்துவ உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது அங்கு அடிக்கடி ஸ்கூல் டே நடத்துவோம், அப்போது பல இடங்களுக்குச் சென்று donation வாங்குவோம். அப்போது நான் முதலமைச்சரின் மகனாகவே இருந்தேன். அதனால் இவனிடத்தில் நன்கொடை சீட்டு கொடுத்தால் அதிகமாக விற்றுக் கொடுப்பான் என்று பள்ளியில் எனக்கு விடுப்பும் கொடுத்துவிடுவார்கள். உடனே நான் புறப்பட்டு எங்கு வருவேன் என்றால், முதலில் அந்த நன்கொடை சீட்டை எடுத்துக் கொண்டு இந்த சத்யா ஸ்டுடியோவுக்குத் தான் வருவேன். ஷூட்டிங்கில் இருப்பார் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், பத்மநாபன் தான் அப்போது மேனேஜர், நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்-ஐ பார்ப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து ஷூட்டிங் நடந்துகொண்டிருக்கும்போது இடையில் அழைத்துக்கொண்டு போவார். 250 ரூபாய் டிக்கெட் வாங்கிவிடுவார், அதுதான் அப்போது இருப்பவைகளிலெல்லாம் costly. ஆக, அப்போது அளவுகடந்த பாசத்தையும், அன்பையும் கொண்டவர் நம்முடைய எம்.ஜி.ஆர் அவர்கள்.

என்னுடைய பாட்டி, தலைவர் கலைஞர் அவர்களுடைய அன்னை அஞ்சுகம் அவர்களிடம் ரொம்ப பாசமாக இருப்பார், 'அம்மா' 'அம்மா' என்றுதான் அழைப்பார். அடிக்கடி கோபாலபுரத்திற்கு வருகிறபோதெல்லாம் அன்போடு பேசி எல்லோரிடத்திலும் பாசத்தோடு பழகுவார்.

ஒருநாள் அவர் வந்தபோது, அவரை 'சார்' என்று ஒருமுறை சொல்லிவிட்டேன். உடனே தலைவரிடத்தில் ஒரு புகார் செய்தார், உங்கள் பிள்ளை என்னைப் பார்த்து 'சார்' என்று சொல்கிறான் என்று சொல்லிவிட்டார். அதெல்லாம் எனக்கு இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவருடைய படம் ரிலீஸ் ஆகிறது என்றால், தியேட்டரில் வரிசையில் நின்று, முதல் ஆள், முதல் டிக்கெட் நான்தான் சென்று வாங்குவேன். அதனால் அவர் படம் ரிலீஸ் ஆனவுடன் முதலில் கோபாலபுரம் இல்லத்திற்கு தொலைபேசி செய்து என்னை அழைத்து, படம் எப்படி இருந்தது என்று என்னிடம் கேட்பார். நான் வெளிப்படையாக இது இப்படி இருந்தது, இது அப்படி இருந்தது என்று நான் சொல்வேன். நீங்கள் இந்த சீனில் சூப்பராக நடித்தீர்கள் என்றெல்லாம் சொல்வேன். அதை அப்படியே ஏற்றுக் கொள்வார்.

கோபாலபுரத்தில் நான் சிறுவனாக இருந்தபோது இளைஞர் தி.மு.க. என்ற ஒரு அமைப்பு உருவாக்கியபோது, பல கூட்ட நிகழ்ச்சி நடத்தியிருக்கிறேன். அந்த கூட்ட நிகழ்ச்சிகளுக்கு அழைக்கிறபோது எல்லாம் ஷூட்டிங்கிலிருந்து மேக்-அப்புடன் எம்.ஜி.ஆர் வந்திருக்கிறார்.

அதற்குப் பிறகு 1971ஆம் ஆண்டு 'முரசே முழங்கு' என்று ஒரு நாடகம், இங்கே பிரசாத் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், நாடகத்தில் ஓமப்பொடி பிரசாத் என்றுதான் அவரை அழைப்போம், அதில் ஓமப்பொடி என்று அவருக்குப் பெயர். அவர் என்னோடு சேர்ந்து நடித்த 40 நாடகங்கள் தமிழ்நாடு முழுவதும் 1971ஆம் ஆண்டு தேர்தலின்போது நடத்தப்பட்டது. அதன் முதல் அரங்கேற்றம் சைதாப்பேட்டை தேரடி திடல். யார் தலைமை, மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமை. நாடகம் தெருவில் தான் போடுவோம், கொட்டாய் எல்லாம் கிடையாது. தெருவில் போட்டிருக்கிறோம், மக்கள் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள். முன்வரிசையில் எம்.ஜி.ஆர் அவர்களை உட்கார வைப்பதற்காக சோபா செட் போட்டு வைத்திருக்கிறோம். அவர் வந்தார், முதலில் அதை எடு என்றார். எடுத்துவிட்டோம். அப்புறம் தரையில் உட்கார்ந்து நாடகத்தை முழுவதுமாகப் பார்த்து என்னை பாராட்டிச் சென்றவர் தான் நம்முடைய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள். எதற்காக

என்றால், மற்றவர்களுக்கு மறைக்கக்கூடாது என்ற அந்த நினைப்புடன் கீழே உட்கார்ந்து பார்த்தார். நான் அதை நினைத்துப் பார்க்கிறேன்.

அதே நாடகத்தின் நிறைவு விழா திருவல்லிக்கேணியில் இருந்த எம்.கே.டி.கலா மண்டபத்தில் கலைஞர் அவர்களுடைய தலைமையில் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முன்னிலையில் நடைபெற்றது. அந்த நாடகத்திற்கு கலைஞர் தான் எங்களுக்கு எல்லாம் மோதிரம் போட்டார். எம்.ஜி.ஆர் அவர்கள் எங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், கேடயம் கொடுத்தார். அப்போது கலைஞர் அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களிடம் சொல்லி, நான் சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறான், ஊர் ஊராக சுற்றிக் கொண்டிருக்கிறான், படிக்கவே மாட்டேன் என்கிறான், அவனுக்கு புத்திமதி சொல்லிவிட்டு செல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதை எம்.ஜி.ஆர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார். "நீ நடிப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் உன் அப்பாவுக்கு ஒரு கவலை, உன் அப்பாவுக்கு இல்லாத அந்தக் கல்வி உனக்கு வந்தாக வேண்டும், அதனால் நீ நன்றாகப் படி, பெரியப்பா என்கிற முறையில் சொல்கிறேன், நீ படிக்க வேண்டும்" என்று எனக்கு புத்திமதி சொல்லிவிட்டுச் சென்றார்.

'உனது பெயரே ஸ்டாலின். பெயரிலேயே புரட்சி தோன்றி விடுகிறது' என்று என்னை உற்சாகப்படுத்தினார். 'கலைஞரின் மகன் கலைஞனாகத்தான் இருப்பான்' என்று என்னை உச்சிமுகர்ந்து பாராட்டினார், அதையெல்லாம் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

இந்தக் கல்லூரியில் நடக்கக்கூடிய இந்த விழாவில் கலந்து கொண்டு நான் இதைப் பெருமையோடு சொல்வதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல, நீங்கள் என்னுடைய வாழ்க்கை வரலாறை 'உங்களில் ஒருவன்' என்ற புத்தகத்தை படித்தீர்களென்றால் அதில் முதல் பாகத்தில் இதைப்

பற்றியெல்லாம் நான் விரிவாக எழுதியிருக்கிறேன். ஏதோ இந்த நிகழ்ச்சியில் வந்து சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய வாழ்க்கை வரலாற்றில் இதையெல்லாம் நான் பதிவு செய்திருக்கிறேன். பல நிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறேன்.

ஆகவே, இந்த விழாவில் கலந்து கொள்வதில் என்னுடைய கடமையாக மட்டுமல்ல, உரிமையாகவே நினைத்து இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

இப்போது நூற்றாண்டு விழா காணும் ஜானகி எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்த் திரையுலகில் ஒரு முன்னணி நட்சத்திரமாக விளங்கியவர். எத்தனையோ தனித்திறமைகளைப் பெற்றிருந்தவர் அம்மையார் ஜானகி அவர்கள். இதை அவருடைய பெயரில் இருக்கக்கூடிய இந்தக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் மாணவிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

- பரதநாட்டியம்
- மோகினியாட்டம்
- குச்சுப்புடி
- மணிப்பூரி
- கதக் ஆகிய கலைகளை மட்டுமல்ல,

❖ சிலம்பம் சுற்றுவதிலும், கத்திச் சண்டை போடுவதையும் கூட அந்தக் காலத்தில் முறையாக பயின்றிருக்கக்கூடியவர் அம்மையார் ஜானகி அவர்கள். தமிழ்நாடு முழுவதும் நாட்டிய நாடகங்களை நடத்தி பெருமைப்படுத்தியிருக்கிறார்.

- தமிழ்
- தெலுங்கு
- மலையாளம்

- கன்னடம்
- மராத்தி
- ஆங்கிலம்

- என ஆறுமொழிகளையும் அறிந்தவர்தான் அம்மையார் ஜானகி அவர்கள். மிகச்சிறந்த பாடகியாகவும் இருந்திருக்கிறார், இரண்டு பாடல்களைப் படத்தில் அவர் பாடி இருக்கிறார். மக்கள் திலகத்தைப் போல, கொடைத்தன்மையிலும் அதை அப்படியே பின்பற்றியவர் அவர். இத்தகைய பல்துறை ஆற்றல் பெற்றிருக்கக்கூடியவருக்கு தான் இன்றைக்கு விழா நடந்து கொண்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர் பிக்சர்ஸின் நிருவாகிகளில் ஒருவராக விளங்கியிருக்கிறார். அப்போதெல்லாம் பெண் மேக்-அப் மேன் கிடையாது, ஆண் மேக்-அப் மேன்தான். அதனால், அவரே மேக்-அப் போட்டுக் கொள்வார். ஆக, தனக்காக மேக்-அப் போட்டுக்கொண்டு நடித்தவர் அவர். 31 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, தமிழ்நாட்டின் முதல் பெண் முதலமைச்சராக அவர் விளங்கியிருக்கிறார் என்பதற்கு அவர் ஆற்றியிருக்கக்கூடிய அந்தப் பணிகளெல்லாம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எம்.ஜி.ஆர். அவர்கள் கதாநாயகனாக – அம்மையார் ஜானகி அவர்கள் கதாநாயகியாக நடித்த முதல் படம் 'மருதநாட்டு இளவரசி'. அதற்கு கதை-வசனம் எழுதியவர் தலைவர் கலைஞர் அவர்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், மூன்று முதலமைச்சர்கள் பங்கெடுத்த படம் எது என்று கேட்டால் 'மருதநாட்டு இளவரசி' தான். எம்.ஜி.ஆர்., அம்மையார் ஜானகி, தலைவர் கலைஞர், மூன்று பேரும் பங்கெடுத்த வரலாறு. அந்தப் படப்பிடிப்பின்போது தான் இருவருக்கும் காதல் ஏற்பட்டது என்று கலைஞர் அவர்கள் எழுதியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். அவர்களும் ஜானகி அவர்களும் இணைந்து நடித்த முதல் படத்தைச் சொன்னேன். கடைசிப் படம் என்ன தெரியுமா? 'நாம்'. இதற்கு கதை-வசனம் யார் என்று கேட்டால், அதுவும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அதனால்தான், 'நாம்' பிரிக்க முடியாதவர்களாக இன்றைக்கு இங்கே இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறோம் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். அதை உணர்த்தக்கூடிய வகையில்தான் லதா ராஜேந்திரன் அவர்களும் - குமார் ராஜேந்திரன் அவர்களும் என்னை இந்த விழாவிற்கு அழைத்துள்ளனர்.

"என்னுடைய ஒரே வாரிசு ஜானகி மட்டும்தான்" என்று உயில் எழுதி வைத்திருந்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். மனைவி என்ற அடிப்படையில் மட்டுமல்ல – திரையுலகத்திலும், அரசியல் உலகத்திலும் பக்கபலமாக அவருக்கு இருந்தவர் ஜானகி அம்மையார் அவர்கள். மக்கள் திலகம் அவர்களால் உருவாக்கப்பட்ட காது கேளாதோர் மற்றும் வாய் பேசமுடியாதோர் குழந்தைகள் இல்லத்தை சிறப்பாக நடத்தியவர் மட்டுமல்ல - இந்த கல்லூரியையும் தொடங்கியவர் அம்மையார் அவர்கள்.

1991 முதல் 1995 வரை, இதற்கான அனுமதியை அவரால் பெற முடியாமல் இருந்தது, அது என்ன சூழ்நிலை, எப்படி என்பதையெல்லாம் நான் விளக்க விரும்பவில்லை. ஆனால் கல்விக்காக, கருணை வடிவான ஜானகி அம்மையார் கேட்டார் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக அனுமதி வழங்கினார்கள். அந்த நன்றியின் அடையாளமாகத்தான் நீங்களும் என்னை அழைத்திருக்கிறீர்கள் என்று நான் உளமாற நம்புகிறேன்.

நான் இங்கு வருவது முதல் முறையல்ல. வரவேற்புரை ஆற்றுகிறபோது சொன்னார், ஏற்கனவே நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது, இங்கே ஆண்டுவிழா

நடைபெற்றபோது அந்த நிகழ்ச்சிக்கும் வந்திருக்கிறேன். இப்போது முதலமைச்சராக வருகை தந்திருக்கிறேன். முதலமைச்சர் வருகிறார் என்றால், கோரிக்கை இல்லாமல் எந்த நிகழ்ச்சியும் நடக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையில், எனக்கு ஒரு கடிதம் லதா ராஜேந்திரன் அவர்களால் தரப்பட்டிருக்கிறது. அரசின் எண்ணம் எதுவோ, அதே நோக்கம் கொண்டதாக இந்தக் கோரிக்கைகள் அமைந்திருப்பது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

சைகை மொழியை - பள்ளி மற்றும் கல்லூரிகளில் மொழிப்பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாற்றுத்திறனாளிகள் துறையை முதலமைச்சர் என்கிற முறையில் நான் தான் கையில் வைத்திருக்கிறேன். அந்த வகையில் லதா ராஜேந்திரன் அவர்களுடைய கோரிக்கைகளை செயல் திட்டம் ஆக்குவோம் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியோடு தெரிவித்துக் கொண்டு,

❖ டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

❖ கலைவாணர், ராஜா சாண்டோ என்கிற பெயரில் விருதுகளை வழங்கியவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

❖ அதேபோல், எம்.ஜி.ஆர் பெயரில் விருதுகளை வழங்கி அறிவித்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

❖ பராமரிப்பு இல்லாமல் இருந்த எம்.ஜி.ஆர். நினைவிடத்தை நவீனமாகக் கட்டியவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அந்தநட்பின் தொடர்ச்சியாகத்தான் இந்த விழா நடைபெற்று வருகிறது.

ஜானகி அம்மையாரின் ஆட்சி கலைக்கப்பட்டபோது - “கிரீடத்தை தலையில் சூட்டிவிட்டு, தலையை வெட்டியது போல இருக்கிறது என்று எம்.ஜி.ஆருக்கு பாரத ரத்னா பட்டம் கொடுத்துவிட்டு, ஜானகி அம்மையாரின் ஆட்சியைக் கலைத்தார்கள்” என்று அன்றைக்கு கண்டித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதையும் மறந்துவிடக்கூடாது.

எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்தபோது, அண்ணா சாலையில் இருந்த தலைவர் கலைஞர் சிலை உடைக்கப்பட்டது. உடனடியாக அம்மையார் ஜானகி அவர்கள் கலைஞருக்கு ஃபோன் செய்து வருத்தம் தெரிவித்தார். வருத்தம் தெரிவித்தது மட்டுமல்ல, “அதை நானே பொறுப்பேற்று கட்டித் தருகிறேன்” என்று சொன்னார். அந்த நல்ல உள்ளத்தை நான் இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறேன்.

திராவிட இயக்கக் கொள்கைகள் மீதும் – தலைவர் கலைஞர் மீதும் மாறாத பற்று கொண்ட அம்மையார் அவர்கள், திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளின் காரணமாக வளர்த்தெடுக்கப்பட்டதே இந்த நவீன தமிழ்நாடு!

இந்த அரங்கில், இத்தனை பெண்கள் குழுமி இருக்கிறீர்கள் – படிக்க வந்திருக்கிறீர்கள், இந்தக் காட்சியை, அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் – 100 ஆண்டுகளுக்கு முன்னால் பார்க்க முடிந்ததா என்றால் பார்க்க முடியவில்லை. இப்போது பார்க்க முடிகிறது என்றால், அதற்குக் காரணம் திராவிட இயக்கம் தான். அப்படிப்பட்ட திராவிட மாடல் ஆட்சியைத்தான் கல்வியில், வேலைவாய்ப்பில் அனைவருக்கும் பங்கு வேண்டும் என்பதற்காக உழைத்த இயக்கம் திராவிட இயக்கம்.

இதனுடைய அடிப்படை இலட்சியங்களின் மீது எம்.ஜி.ஆர் அவர்களும், ஜானகி அவர்களும் பற்று கொண்டு

செயல்பட்டு வந்தார்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் தனி இயக்கம் கண்டாலும், தனது கொள்கையில், அண்ணாயிசத்தை அவர்கள் கட்டிக்காத்தார்கள்.

அண்ணாயிசம் என்று சொன்னால், 'சாதியற்ற, சமதர்ம, பகுத்தறிவு சமுதாயத்தை ஜனநாயக வழியில் நிறைவேற்ற உழைப்பதுதான் அண்ணாயிசம்' என்று அவரே வரையறுத்து சொல்லியிருக்கிறார். இத்தகைய அண்ணாயிசத்தில் உண்மையான பற்று கொண்டவர்கள் அனைவருக்கும் திராவிடக் கொள்கைகளைக் காக்கும் கடமை இருக்கிறது. அதனை நினைவூட்டக்கூடிய வகையில்தான் இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கக் கொள்கைகளைக் காப்பதும், அதன் மூலமாகத் தமிழ்நாட்டை மேன்மையடையச் செய்வதும்தான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், ஜானகி அம்மையார் அவர்களுக்கும் நாம் செய்யக்கூடிய மரியாதையாக இருக்கும், அதுதான் நம்முடைய நன்றிக்கடனாக இருக்கும்.

நாளை நமதே! நாளை நமதே! என்ற உணர்வோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர்.-ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற அன்னை ஜானகி எம்.ஜி.ஆர். நூற்றாண்டுத் துவக்க விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை - 30.11.2022

4,39,315 நபர்கள் பயன்பெறும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் உயர்வு

உலக மாற்றுத்திறனாளிகள் தினவிழா நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தின் அமைச்சர் பெருமக்கள்

திரு. க.பொன்முடி அவர்களே,

திருமதி பி. கீதா ஜீவன் அவர்களே,

திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

திரு. சி.வி. கணேசன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு. எழிலன் அவர்களே,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் டாக்டர் ஆர். ஆனந்த குமார் இ.ஆ.ப., அவர்களே,

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் இ.ஆ.ப., அவர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

விருது பெறும் விருதாளர்களே,

மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கங்களின் நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

திரளாக குழுமியிருக்கக்கூடிய என்னுடைய அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்று உலக மாற்றுத்திறனாளிகள் தினமாக கொண்டாடுகிற நாளாக நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். நம்மைப் பொறுத்தவரையில் அனைத்து நாட்களிலுமே அவர்களுக்கு நன்மை செய்து வருகிறோம். அனைவரையும் திறனாளிகளாக மாற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதிலும் குறிப்பாக மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஒரு சிரமம் கூட ஏற்பட்டு விடக்கூடாது என்று நினைக்கக்கூடிய அரசாக நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த வாரத்தில் கோட்டையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் வாரியத்தினுடைய ஆலோசனைக் கூட்டத்தில் நான் பேசியதை நீங்களெல்லாம் அறிந்திருப்பீர்கள், மறந்திருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

“ஒரே ஒரு மாற்றுத்திறனாளியும் மனவருத்தம் அடையக் கூடாது.

ஒரே ஒருவருக்கு என்றாலும் நன்மை பயக்கும் என்று சொன்னால், அந்தச் செயலை நாம் உடனடியாகச் செய்தாக வேண்டும்.

இத்தகைய கருணை உள்ளத்தோடு இவர்களது நலம் காக்கப்பட வேண்டும், அதற்கு நாம் துணையாக நிற்போம்" - என்று நான் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையில்தான் தொடர்ந்து நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

"ஊனமுற்றோர் என்று சொல்லக் கூடாது; அவர்கள் மாற்றுத்திறனாளிகள்!" என்ற புதிய பெயரைக் கொடுத்து புதிய நம்பிக்கையை உருவாக்கியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். மாற்றுத்திறனாளிகளுக்கென தனித்துறையை உருவாக்கினார். உருவாக்கியது மட்டுமல்ல, அந்தத் துறையை தன் பொறுப்பிலே வைத்துக் கொண்டார்.

அவர் வழியிலே இன்று நானும் அந்தத் துறையை என் பொறுப்பிலே வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதன் மூலமாக இம்மக்கள் மீது நாங்கள் வைத்திருக்கக்கூடிய உண்மையான அக்கறையை அனைவரும் அறிந்துகொள்ள முடியும்.

பிறவியில் ஏற்பட்ட குறைபாடாக இருந்தாலும் - பின்னர் ஏற்பட்ட குறைபாடாக இருந்தாலும் - விபத்தின் காரணமாக ஏற்பட்ட நிலையில் இருந்தாலும் - பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களை சிறப்புக் கவனம் செலுத்தி கவனிக்க வேண்டும். அவர்களது உடல் குறைபாடானது, ஆனால் உள்ளக் குறைபாடு அல்ல, அறிவுக்குறைபாடு அல்ல, திறன் குறைபாடு அல்ல என்பதை அனைவரும் உணர்ந்து அவர்களை நாம் மதித்தாக வேண்டும்.

வினைத்திட்பம் என்பது ஒருவரது மனத்திட்பமே என்கிறார் அய்யன் வள்ளுவர். அத்தகைய மனத்திட்பம் கொண்டவர்களாக

மாற்றுத்திறனாளிகள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கே வருகிற பாதையில் இந்த அரங்கத்திற்கு வருவதற்கு முன்பு ‘ஊதா அங்காடி’ கண்காட்சி வைக்கப்பட்டிருக்கிறது. அதை நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள், நானும் பார்த்துவிட்டுத் தான் வருகிறேன். மாற்றுத்திறனாளிகளின் திறமையால் உருவாகியிருக்கக்கூடிய பொருள்களை அங்கு விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள்.

அவர்களை அவர்களது பெற்றோரும், உற்றாரும், உறவினரும், நண்பர்களும், இந்த சமூகமும், அரசும் உரிய மரியாதையுடன் நடத்திட வேண்டும். அதற்கான உறுதியை நாம் அனைவரும் எடுத்துக்கொண்டாக வேண்டும். சமூகத்தின் மற்ற தரப்பினர் அடையக்கூடிய அனைத்து வசதி, வாய்ப்புகளையும் மாற்றுத்திறனாளிகளும் பெற்றிட வேண்டும்.

சென்னை மெரீனா கடற்கரையில் கால்நனைக்க மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழக அரசு செய்து கொடுத்த ஏற்பாட்டை அனைவரும் அறிவீர்கள். நமது ஈரமான மனதின் காரணமாக மட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகளின் உரிமை எனக் கருதி நாம் உருவாக்கிய பாதை தான் அந்த அன்புப் பாதை. அதில் சென்று கடலில் கால் வைத்தபோது, மாற்றுத்திறனாளிகளின் மனம் மகிழ்ச்சியால் திளைத்ததைப் பார்த்து நானும் திளைத்தேன்.

அது மிகப்பெரிய செலவு பிடிக்கக்கூடிய திட்டம் அல்ல. ஆனால் அதனால் விளையும் பயன் என்பது எத்தனை கோடிகள் செலவு செய்தாலும் கிடைக்க முடியாத மகிழ்ச்சி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

பிறந்ததில் இருந்து இதுவரை கடலில் கால் நனைத்திடாத ரஞ்சித்குமார், அலைகடலில் கால் நனைத்து மகிழ்ந்த காட்சியை நான் தொலைக்காட்சியில் பார்த்தேன்.

ஒவ்வொரு தனிமனிதருக்கும் நன்மை அளிக்கும் அரசாகச் செயல்படுவோம் என்று ஆட்சி அமைந்த நேரத்தில் நான்

எடுத்துச் சொன்னேன். அதற்கு இவைகளெல்லாம் சாட்சிகளாக அமைந்திருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தன்னிச்சையான செயல்பாட்டிற்காக உடல் குறைகள் நீங்கி, ஊக்கத்துடன் செயல்பட ஏதுவாக புதுமையான உதவி உபகரணங்கள் மற்றும் கருவிகளையும் நமது மாநிலம் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடுகளிலிருந்தும் கொண்டுவந்து காட்சிக்கு இங்கே கண்காட்சியிலே வைக்கப்பட்டிருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்திற்கு உதவக்கூடிய பொருட்களை உற்பத்திசெய்து அவையும் கண்காட்சியில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது, அதையும் பார்வையிட்டேன்.

தடையற்ற சூழல் அமைப்பது, பொது இடங்கள் மற்றும் கட்டடங்கள் மட்டுமல்ல, முதலில் அமைக்கவேண்டியது நமது இல்லத்திலேயே என்பதை உணர்த்தக்கூடிய வகையிலே, மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க இல்லத்தின் (Accessible Home) நீங்கள் மாதிரிகளையும், காட்சிகளையும் வைத்திருக்கிறீர்கள்.

மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டிருக்கிறது, நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் அவர்களின் ஆற்றல் வெளிக் கொணரப்பட்டு, சமுதாயத்தில் தடையற்ற சூழலும் அமைக்கப் பெற்றால், அவர்கள் அனைத்து உயரங்களையும் அடைவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

தடைகளை வென்று சாதனை படைத்தவர்கள் பலர் இன்றைய நாளில் நம் தமிழ்நாட்டிலேயே இருக்கிறார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால்,

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர் திரு. மாரியப்பன் தனது குறைகளை இளம்வயதிலிருந்தே

எதிர்கொண்டு தடைகளை வெற்றித்தடங்களாக மாற்றி, இப்போது நம் நாட்டிற்கே ஒரு பெருமையை தேடித் தந்து கொண்டிருக்கிறார்.

அண்மையில் அர்ஜுனா விருது பெற்ற மதுரையைச் சேர்ந்த மாணவி ஜெர்லின் அனிகா, பேட்மிண்டன் போட்டியில் பல உலக சாதனைகளைப் படைத்து வருகிறார்.

நாட்டின் உயரிய தேசிய விருதுகளைப்பெற்ற அமர்சேவா சங்கத்தின் நிறுவனர் திரு. ராமகிருஷ்ணன் மற்றும் திரு. சங்கரராமன் போன்றோர் மிகவும் கடுமையான உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தாலும், மனம் தளராமல் தங்களையும் பராமரித்துக்கொண்டு சமுதாயத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் தொடர்ந்து அவர்கள் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழக அரசினுடைய நிருவாகத்தின் அலுவலர்களாக எத்தனையோ பேர் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். தமிழின் முன்னணி எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், சிந்தனையாளர்களாகச் செயல்படுகிறார்கள்.

முன்பெல்லாம் மாற்றுத்திறனாளிகள் வீட்டுக்குள் முடங்கிவிடக்கூடிய காலம் இருந்தது. ஆனால் இப்போது அதைத் தாண்டி, பொதுவெளியில் போராடி முன்னுக்கு வரத் தொடங்கி விட்டார்கள்.

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி அந்த நாட்டினுடைய மனித வளத்தைப் பொறுத்தே அமையும். சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கையும் இவ்வளர்ச்சியில் பெரிதும் பங்கு வகிக்கிறது. எனவேதான், மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து வேலைவாய்ப்புகளை வழங்க, வல்லுநர் குழு (Expert Committee) மற்றும் உயர்மட்டக் குழுக்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் சிறப்பாகவும் புதிய

தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றுத்திறனாளிகள் பணிக்கூடங்களில் பிறரை சாராமல் வேலை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்திற்குச் சென்று பணி செய்ய வேண்டிய தேவை இல்லை; இல்லத்திலிருந்தே பணி செய்யலாம் என்ற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கப் போகிறோம். அதற்குச் சான்றாகத்தான் "நான் முதல்வன்" திட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம், மாற்றுத்திறனாளிகளுக்கு மடிக்கணினி, மென்பொருளுடன் கூடிய திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய புதிய முயற்சியும் இங்கே அரங்கேற்றப்பட்டு உள்ளது.

இந்த நாளில், மாற்றுத்திறனாளிகளின் சேவையை ஊக்கப்படுத்தும் நல்ல உள்ளங்களை ஊக்கப்படுத்தும் வகையில் விருதுகளை வழங்கி அவர்களையும் பாராட்டுகிறோம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதுதான் தமிழர் போற்றிய பண்பாடு! அந்த அடிப்படையில் நாட்டு எல்லைகளைத் தாண்டிய நாளாக உலக மாற்றுத்திறனாளிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அனைத்துயிரும் ஒன்றென எண்ணி நாம் வாழ்வோம். உலக மாற்றுத்திறனாளிகள் நாளான இன்று, ஒரு நல்ல அறிவிப்பை வெளியிடுவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். என்ன என்று ஓரளவுக்கு நீங்களும் புரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்றுவரும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 4 இலட்சத்து 39 ஆயிரத்து 315 நபர்களுக்கு, அவர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக வரும் ஜனவரி 1ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம், அரசுக்கு

ஆண்டுக்கு 263 கோடியே 58 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுகளை மேய்ப்பவர், ஒரே ஒரு ஆட்டை தனது தோளில் தூக்கி சுமந்து வருகிறார் என்றால், அந்த ஆடு நடக்க முடியாத நிலையில் இருக்கும். இதுதான் சமூகநீதி என்று எளிமையான விளக்கத்தை சொன்னவர் யார் தெரியுமா? நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அத்தகைய சமூகநீதிச் சிந்தனையின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் இந்த அரசானது, எப்போதும் எந்தச் சூழலிலும் அனைத்து மக்களின் அரசாக இருக்கும்! அதிலும் குறிப்பாக, விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களின் அரசாக இருக்கும்! அவர்களுக்காகவே திட்டமிடும் அரசாக இருக்கும்! அவர்களில் ஒருவராக இருந்து அவர்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு அரசாகவே இருக்கும்! என்று கூறி, உலக மாற்றுத்திறனாளிகள் நாளில், உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி ஆற்றிய உரை - 03.12.2022

இல்லற வாழ்வில்
சமத்துவம் மற்றும் சமூகநீதியை
கடைப்பிடிக்க வேண்டும்

இந்து சமய அறநிலையத்துறையின் சென்னை மாவட்ட திருக்கோயில் சார்பில் 31 இணைகளுக்கு திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. திருமண நிகழ்ச்சி நடந்தேறியிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு எல்லா வகையிலும் காரணமாக அமைந்திருக்கக்கூடிய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் நம்முடைய செயல்வீரர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

திரு. அன்பரசன் அவர்களே,

திரு. செஞ்சி மஸ்தான் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற குழுவின் தலைவர் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் என்னுடைய அன்பிற்கினிய சகோதரர் திரு. டி. ஆர். பாலு அவர்களே,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே. எம். எச். அசன் மௌலானா அவர்களே,

சென்னை மாவட்ட அறங்காவலர் குழுவினுடைய தலைவர் வழக்கறிஞர் கே. எஸ். ரவிச்சந்திரன் அவர்களே,

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே,

இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே,

கூடுதல் ஆணையர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

அரசு உயர் அலுவலர்களே,

மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களே,

மணமக்களுடைய பெற்றோர்களே, உற்றார் உறவினர்களே,

அருமைப் பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே,

என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 31 இணையர்களுக்கு திருமணத்தை செய்து வைக்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியில் நான் பங்கேற்பது உள்ளபடியே பெருமையாக இருக்கிறது,

மகிழ்ச்சியாக இருக்கிறது, எனக்கு மனநிறைவையும் தந்து கொண்டிருக்கிறது.

நேற்று முழுவதும் கோவை மாவட்டத்தில், திருப்பூர் மாவட்டத்தில் சூறாவளி சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு இரவோடு இரவாக வந்து ஏதோ தூங்குவது போல ஒரு தூக்கத்தை தூங்கிவிட்டு, காலையிலே உடனடியாக புறப்பட்டு இங்கே வந்திருக்கிறேன் என்று சொன்னால் நேற்றைக்கு ஏற்பட்ட களைப்புகளெல்லாம் இந்த நிகழ்ச்சியில் என்னை விட்டு நீங்கிப் போயிருக்கிறது என்கிற அந்த நிலையிலே தான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்தத் துறையின் அமைச்சர் சேகர்பாபு அவர்களைப் பற்றி நான் பலமுறை பல இடங்களில், பல நிகழ்ச்சிகளில், பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன். அவர் ஒரு “செயல் பாபு” என்று ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அவரும் அதை தொடர்ந்து நிரூபித்துக் கொண்டிருக்கிறார். நான் உங்களிடையே வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். கோபித்துக்கொள்ளக் கூடாது. ஒரு முதலமைச்சர் தான் அமைச்சர்களை வேலை வாங்குவார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள் முதலமைச்சரை வேலை வாங்கக்கூடியவராக விளங்கிக் கொண்டிருக்கிறார். ஏதோ வேலை வாங்குகிறார் என்றால் தேவையில்லாத வேலையில்லை. நாட்டுக்கு பயன்படக்கூடிய வேலை, மக்களுக்கு பயன்படக்கூடிய வேலை. ஆக அப்படிப்பட்ட ஒரு சிறப்புக்குரிய துறையை பொறுப்பேற்றுக்கொண்டு அவர் பல்வேறு பணிகளை, பல்வேறு திட்டங்களை, பல்வேறு சாதனைகளை, இதுவரையில் தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில் இந்து சமய அறநிலையத் துறைக்கு இப்படிப்பட்ட சாதனை எங்கேயாவது நடந்திருக்கிறதா? என்று கேட்டால், தைரியமாக, தெம்பாகச் சொல்லலாம், இல்லை தமிழ்நாட்டில் மட்டும்தான் நம்முடைய சேகர்பாபு வைத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் துறைதான்

ஆற்றிக் கொண்டிருக்கிறது என்று கம்பீரமாக நம்மால் சொல்லமுடியும்.

இங்கே எனக்கு முன் வரவேற்புரை ஆற்றிய துறையினுடைய செயலர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார். இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் பல்வேறு கல்லூரிகளை நம்முடைய அரசு தொடங்கியிருக்கிறது. கொரோனோ நோய்த்தொற்று உச்சத்தில் இருந்த நேரத்தில் நோயாளிகளின் உறவினர்களுக்கு உணவு இலவசமாக வழங்கக்கூடிய பணியையும் இந்தத் துறை செய்தது உங்களுக்கெல்லாம் நினைவில் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அறநிலையத்துறையால் நிர்வகிக்கப்படும் 47 கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை உரிமையை நாம் மீட்டுத் தந்திருக்கிறோம். மேலும் பல கோயில்களிலும் இதை விரிவுபடுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். பெண் ஒருவரை அர்ச்சகராக நியமித்திருக்கிறோம். கோயில் பொது சொத்து விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திருக்கிறோம். 3,700 கோடி ரூபாய் மதிப்பிலான திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுத்திருக்கிறோம். இது மிகப் பெரிய வரலாறு. எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கக் கூடிய வகையிலே அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமனங்களைச் செய்து முடித்திருக்கிறோம். சமத்துவத்தை விரும்பாத சில சக்திகளின் மூலமாக, எத்தனை தடைகள் வந்தாலும், தொடர்ந்து அதற்கான சட்டப் போராட்டத்தையும் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இத்தனையும், இதற்கு மேலாக இன்னும் பல, இந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்த ஒரு துறையில் மட்டும் செய்யப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள். அதனால்தான் இன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கக்கூடிய சேகர்பாபு அவர்களை இந்த

நிகழ்ச்சியில் மட்டுமல்ல, எல்லா நிகழ்ச்சிகளிலும், செயல்பாபு, செயல்பாபு என்று நாம் அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதையெல்லாம் குறிப்பிட்ட சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் சேற்றை வாரி இறைக்கிறார்கள். பொய் பித்தலாட்டத்தை அவர்கள் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் செய்வதற்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மதத்தை வைத்து நம் மீது இன்றைக்கு பல பழிகளை, குற்றங்களை, குறைகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறதா? என்று கேட்டால், எந்த ஆதாரமும் கிடையாது. நம்மைப் பொறுத்தவரைக்கும் நாம் அண்ணா வழியில், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணக்கூடியவர்கள். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற அந்த நிலையில் நாம் நம்முடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதனுடைய அடையாளம்தான் இன்று ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடிய 31 இணையர்களுக்கு, மணவிழா நிகழ்ச்சியைநாம்நடத்திமுடித்திருக்கிறோம்.அறநிலையத்துறையின் சார்பில் இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்போடு, கட்டுப்பாட்டோடு, எழுச்சியோடு இங்கே நடந்திருக்கிறது. இந்த 31 பேர் மட்டுமல்ல, இன்றைக்கு 217 இணையர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் அறநிலையத்துறையின் சார்பில் மணவிழா நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் மறந்துவிடக்கூடாது மன்னராட்சிக் காலமாக இருந்தாலும் சரி,மக்களாட்சிக் காலமாக இருந்தாலும் சரி, கோயில்கள் என்பது மக்களுக்காகத்தான். அது எந்த ஆட்சியாக இருந்தாலும் கோயில்கள் என்பது மக்களுக்காகத்தான். கோயில்கள் ஒரு சிலருடைய தனிப்பட்ட சொத்து அல்ல. அந்த நிலையை மாற்றத்தான் நீதிக்கட்சி காலத்தில் இந்தத் துறை உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அதிக திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டது. அந்த குடமுழுக்கு யாருடைய ஆட்சிக் காலத்தில்

அதிகமாக செய்யப்பட்டது என்றால் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் அதிகம் குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கிறது.

ஓடாத திருவாரூர் தேரை ஓட்டிய பெருமை நம்முடைய முதல்வராக இருந்த கலைஞருக்குத்தான் உண்டு.

பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கப்பட்டது கழக ஆட்சிக் காலத்தில்தான். அந்த வழியில்தான் இப்போது நம்முடைய அரசு சேகர்பாபு பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்தத் துறையின் சார்பில் நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு தன்னுடைய சாதனையை செய்து கொண்டிருக்கிறது.

கோயில் சீரமைப்புப் பணிகளை இதுவரை இல்லாத அளவில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அமைச்சர் ஒவ்வொரு கோயிலுக்கும் நேரடியாக போய்க்கொண்டிருக்கிறார். எப்படி போகிறார்? விமானத்தில் போனால்கூட இவ்வளவு வேகமாகப் போக முடியாது. அவர் இதற்காக ஸ்பெஷலாக விமானம் வைத்திருக்கிறாரா? என்று சந்தேகபடக்கூடிய அளவிற்கு, ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு, அதிசயப்படக்கூடிய அளவிற்கு மூன்று மணிக்கு விடியற்காலையில் எங்கேயாவது இருக்கிறார். இங்கே ஆறு மணிக்கு சென்னையில் இருக்கிறார். ஆக அலுப்பில்லாமல், சலிப்பில்லாமல், அவர் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய பொறுப்பை நம்முடைய அரசுக்கு பெருமை தேடித் தரக்கூடிய வகையில் அவர் ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதற்காக நான் அரசின் சார்பில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வாழ்த்தை, பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இது ஏதோ எங்களுக்கு புதுசல்ல, இப்போது மட்டுமல்ல, எப்போதும் ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மக்களுக்காக பணியாற்றக் கூடியவர்கள். இன்றைக்கு ஆட்சி என்கின்ற அந்த அதிகாரம், மக்கள் நம்மிடத்தில் நம்பி ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, மக்களுடைய எதிர்ப்பார்பிற்கு ஏற்ற வகையில், அனைவருக்குமான அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை நன்கு உணர்ந்த

காரணத்தால்தான் தமிழ்நாட்டு மக்கள் ஐந்து முறை கலைஞர் கையில் ஆட்சியை ஒப்படைத்தார்கள். இந்த ஆட்சியை, ஆறாவது முறையாக அவருடைய மகன் இந்த ஸ்டாலின் இடத்தில், யாரிடத்தில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் நாம் நம்முடைய கடமையை ஆற்றி வருகிறோம்.

நாம் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், வெற்றி என்ற அந்த செய்தி வந்தவுடனே, நாம் ஆட்சியில் அமரப் போவதற்கு முன்னாலேயே, தேர்தல் செய்திகள், வெற்றி நிலவரங்கள் எல்லாம் வந்துகொண்டிருந்தபோதுநான் தலைவருடையநினைவிடத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் என்னை சூழ்ந்துகொண்டு, என்னிடத்தில் கேள்வி கேட்ட நேரத்தில், ஒரே வரியில் சொன்னேன். இந்த ஆட்சி வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்து, வாக்களித்தவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும், வாக்களிக்காதவர்கள் இப்படிப்பட்ட ஆட்சிக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோம் என்று வருத்தப்படக்கூடிய அளவிற்கு நம்முடைய ஆட்சி செயல்படும் என்று நான் அப்போதே நம்பிக்கையை தெரிவித்தேன். அவர்கள் நம்பிக்கையை காப்பாற்றக்கூடிய வகையில் நாம் நம்முடைய கடமையை ஆற்றி வருகிறோம்.

இங்கே மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும், மணமக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள், நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய உங்கள் குழந்தைகள் ஒன்றோ, இரண்டோ நிறுத்திக்கொள்ள வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுக்காக மத்திய அரசு, மாநில அரசு எவ்வளவோ செலவு செய்து நிதியை ஒதுக்கி பிரச்சாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம், நாம் இருவர், நமக்கு மூவர் என்று சொன்னோம். அது படிப்படியாகக் குறைந்து நாம் இருவர், நமக்கு இருவர். இப்பொழுது நாம் இருவர்,

நமக்கு ஒருவர், நாளைக்கு இதுவும் மாறலாம், நாம் இருவர், நமக்கேன் இன்னொருவர். நான் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை. இப்படி எல்லாம் பிரச்சாரம் இருக்கிறது. இதையெல்லாம், சீர்தூக்கிப் பார்த்து, நாட்டினுடைய நன்மை கருதி, குடும்ப சூழ்நிலையை கருதி, நீங்கள் உங்கள் செல்வங்களைப் பெற்று அதற்கு அழகான தமிழ் பெயர்களை சூட்டுங்கள் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இல்லற வாழ்வில் நீங்கள் சமத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், சமத்துவத்தை, சமூகநீதியை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏதோ முதலமைச்சராக அல்ல, உங்களுடைய தந்தை என்கின்ற அந்த இடத்தில் இருந்து உங்களை அன்போடு கேட்டு, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்கு தொண்டர்களாய், வாழ்க, வாழ்க, வாழ்க, வாழ்க, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னை, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில்
இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 31 இணைகளுக்கு
திருமணத்தை நடத்தி வைத்து விழாவில்
ஆற்றிய உரை - 04.12.2022

இந்தியாவின் பெருமையை உலகிற்கு பறைசாற்ற அனைத்து வகையிலும் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்களே!

பல்வேறு மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்களே!

அரசியல் கட்சித் தலைவர்களே!

ஒன்றிய அமைச்சர் பெருமக்களே!

அனைவருக்கும் வணக்கம்.

2023ஆம் ஆண்டுக்கான ஜி-20 தலைமையை இந்தியா ஏற்றிருக்கும் வேளையில் நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு முதற்கண் எனது பாராட்டுகள். இது நம் நாட்டுக்கு மிகவும் பெருமை தரக்கூடிய ஒன்றாகும். உலக அளவில் பல்வேறு நாடுகளிடையே புரிதலை மேம்படுத்துவதில் நாம் மிக முக்கியப் பங்கை ஆற்ற வேண்டியுள்ளது. ஜி-20

நாடுகள் மட்டுமல்லாமல் அனைத்து உலக நாடுகளாலும் இந்தியா கூர்ந்து கவனிக்கப்படுகிறது.

'அமைதி, அகிம்சை, நல்லிணக்கம், சமத்துவம், சமநீதி' ஆகிய உயர் விழுமியங்களை உலக அளவில் கொண்டு செல்ல நமது மாண்புமிகு பிரதமர் அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தியா ஜி-20 தலைமையை ஏற்றதைத் தொடர்ந்து நடத்தப்படவுள்ள கருத்தரங்குகளுக்குத் தமிழ்நாடு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என நான் உறுதியளிக்கிறேன்.

காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்காக இந்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டுவதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இயற்கைப் பாதுகாப்பு இயக்கங்களை நிர்வகிக்கவும், காலநிலை மாற்றத்தைக் கையாளவும் 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' என்ற பெயரில் சிறப்பு நோக்க நிறுவனத்தை (SPV) உருவாக்கியுள்ளோம்.

உலக அளவில் இந்தியா அளித்துள்ள உத்தரவாதங்களைக் காப்பாற்றுவதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். இந்தியாவின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றுவோம்!

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசும் வாய்ப்புக்காக நமது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜி-20 மாநாடு தொடர்பாக
புதுதில்லி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற
அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நாட்டிலேயே
முன்னோடியாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு
தமிழ்நாடு உருவாக்கியுள்ள 'தமிழ்நாடு பசுமை காலநிலை
நிறுவனம்' போன்ற முக்கிய கருத்துக்களை முன்வைத்து
ஆற்றிய உரை - 05.12.2022

தென்காசி மாவட்டத்தில்
1,03,508 நபர்கள் பயனடையும் வகையில்
ரூ.182.56 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

இந்த சிறப்புமிக்க அரசு விழாவிற்கு தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்

அன்பிற்கினிய திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே,

இவ்விழாவில் பங்கேற்று சிறப்பித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே,

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களே,

மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் என்னுடைய பாசமிகு சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே,

முன்னாள் பேரவைத்தலைவர் திரு. ஆவுடையப்பன் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். தனுஷ்குமார் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. எஸ். பழனிநாடார் அவர்களே,

திரு. ஈ. ராஜா அவர்களே,

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ப. ஆகாஷ், இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புக்களை சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

அருமைப் பெரியோர்களே,

அரசு அலுவலர்களே, அதிகாரிகளே,

வருகை தந்திருக்கக்கூடிய பயனாளி பெருமக்களே,

அன்பிற்கினிய தாய்மார்களே, பெரியோர்களே,

என்னுடைய பாசமிகு சகோதரிகள் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்!

மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்!

கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்!

கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்!

தேன் அருவித் திரை எழும்பி வான்வழி ஒழுகும்!

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்!

கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்!

குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே!

- என்று போற்றிப் பாடப்பட்ட திருக்குற்றால வனப்பரப்புக்கு நான் வந்திருக்கிறேன்!

தென்காசி மாவட்டத்துக்கு வந்ததுமே, இந்த மண்ணைப் போலவே மனதும் குளிர்ச்சி அடைந்து விடுகிறது. எப்போதும் லேசான தூறல் – சாரலாகப் பெய்து வருவதைப் பார்க்கும்போது - சென்னை போன்ற வெப்பமான நகரத்தில் இருந்து வரும் எனக்கு இது மிகவும் இதமாக இருக்கிறது. ஆண்டுதோறும் சாரல் விழாவை அரசு கொண்டாடி வருகிறது.

❖ மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருக்கும் மாவட்டம்!

❖ குறிஞ்சி, மருதம், முல்லை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய குற்றாலம் இருக்கக்கூடிய மாவட்டம்!

❖ அதிகமான அருவிகள் உள்ள மாவட்டம்!

❖ அணைகள் அதிகம் உள்ள மாவட்டம்!

மொத்தத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம் இந்த தென்காசி மாவட்டம்.

அது மட்டுமல்ல, வீரத்தின் விளைநிலமாக இருக்கும் பூலித்தேவன் மண் இது! இந்திய விடுதலைக்காகக் குரல் கொடுத்து, 1755ஆம் ஆண்டே ஆங்கிலேயருக்கு வரி கட்ட மறுத்த பூலித்தேவன் மண் இந்த மண்.

1998ஆம் ஆண்டு நெற்கட்டான்செவலில் மாவீரன் பூலித்தேவனுக்கு மணிமண்டபமும் சிலையும் அமைத்துக் கொடுத்தவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

மாவீரன் பூலித்தேவனின் படைத்தளபதியாக இருந்த மாவீரன் ஒண்டி வீரனின் மண் இந்த மண். அந்த ஒண்டி வீரனுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்! அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது.

வடக்கே காசி இருப்பதைப் போல தெற்கேயும் ஒரு காசியை உருவாக்க வேண்டும் என்று மன்னன் பராக்கிரம பாண்டியன் நினைத்து உருவாக்கியதுதான் தென்காசி கோபுரம்! அரிகேசரி பராக்கிரம பாண்டியன், இங்கிருந்துதான் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றான்.

500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட தென்காசி கோயில் ராஜகோபுரத்தை மீண்டும் புதுப்பிக்க 1960-ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது திருப்பணிக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டவர்தான் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்த பி.டி.ராஜன் அவர்கள்.

பின்னர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சிக் காலத்தில் 'தினத்தந்தி' அதிபர் பெருமதிப்பிற்குரிய பா. சிவந்தி ஆதித்தன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. 25.06.1990 அன்று கழக ஆட்சிக் காலத்தில் - அன்றைய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய 'தினகரன்' கே.பி. கந்தசாமி அவர்கள் தலைமையில் ராஜகோபுர குடமுழுக்கு விழா நடைபெற்றது.

இப்படி, இயற்கைக்கும், வீரத்துக்கும், ஆன்மீகத்துக்கும் வேளாண்மைக்கும், விளைச்சலுக்கும் புகழ்பெற்ற தென்காசிக்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே

மகிழ்ச்சியடைகிறேன்,பெருமைப்படுகிறேன்,பூரிப்படைகிறேன். இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

விருதுநகரைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவரது உழைப்பின் விருதாக தென்காசி மாவட்டமும் இணைத்து பொறுப்பில் தரப்பட்டுள்ளது. இதையும் தனது சொந்த மாவட்டமாக நினைத்து, இரட்டைக் குதிரையில் திறம்பட சவாரி செய்து, வெற்றிக் கொடி நாட்டக்கூடியவராக அவர் செயல்பட்டு வருகிறார்.

பிரம்மாண்டமாக, நேர்த்தியாக உழைப்பவர் மட்டுமல்ல – இட்ட பணியை ஈடு இணையில்லாமல் செய்து காட்டக் கூடியவர். சில வாரங்களுக்கு முன்னாலும் – சில நாட்களுக்கு முன்னாலும் அவர் உடல் நலிவுற்றார். ஆனால், உடல் நலிவுற்றிருந்தாலும், தென்காசி விழாவை மிகச்சிறப்பாக நடத்திக் காட்டவேண்டும் என்று முடிவு செய்து இங்கேயே வந்து தங்கி தனது உடல்நிலையைப் பற்றி கூட பொருட்படுத்தாமல் இந்த மாவட்ட மக்களுடைய நன்மையை மட்டுமே மனதில் வைத்து நம்முடைய அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் இந்த கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார். எனவே, அவருக்கு என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துகளை அரசின் சார்பில், இந்த மாவட்டத்தினுடைய மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அவருக்கு துணைநின்று பணியாற்றியிருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர், தென்காசி மாவட்டத்தினுடைய அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் நான் என்னுடைய பாராட்டுக்களை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது என்ன அரசு விழாவா? அல்லது எங்கள் கட்சியினுடைய மாநில மாநாடா? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு பெரிய எழுச்சி. மிகப்பெரிய அளவில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால், அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், இங்கே வழங்கப்பட இருக்கக்கூடிய தொகையும் மிகப் பெரியதாக அமைந்திருக்கிறது.

- 22 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 57 முடிவுற்ற திட்டப்பணிகளை மக்களுடைய பயன்பாட்டிற்காக நான் துவக்கி வைத்திருக்கிறேன்.
- 34 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 23 புதிய பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.
- 1 இலட்சத்து 3 ஆயிரத்து 508 பேர் பயனடையும் வகையில் -182 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இங்கு வழங்கப்படவிருக்கிறது.

ஒரே ஒரு விழாவில் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைய இருக்கின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன். கழக ஆட்சி மலர்ந்து பத்தொன்பது மாதங்கள் ஆகி இருக்கிறது. இந்த 19 மாத காலங்ளில் பல நூறு சாதனைகளை தமிழ்நாட்டு மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சாதாரணமாக இல்லை, நெஞ்சை நிமிர்த்தி நான் உங்கள் முன்னால் தெரிவிக்கிறேன்.

இவை வெறும் வாய் வார்த்தைகளால் அல்ல. பயனடைந்த மக்கள் – இந்த அரசைப் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். தென்காசி மாவட்டத்தில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கையை மட்டும் நான் சொல்கிறேன்.

❖ உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 11 ஆயிரத்து 494 மனுக்கள் பெறப்பட்டு 11 ஆயிரத்து 490 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

❖ மகளிர் சுய உதவிக் குழுக்களின் 27 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

❖ 486 நபருக்கு 24 இலட்சத்து 23 ஆயிரத்து 530 ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்கீழ் 41 ஆயிரத்து 980 மாணவ மாணவியர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

❖ மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டத்தின்கீழ் 80 இலட்சம் முறை கட்டணமில்லாமல் பேருந்துப் பயணம் மேற்கொண்டு மகளிர் பயனடைந்திருக்கிறார்கள்.

❖ 2 ஆயிரத்து 935 திருநங்கைகள் பயனடைந்துள்ளார்கள்.

❖ 50 ஆயிரத்து 361 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

❖ 73 ஆயிரத்து 491 பயனாளிகளுக்கு 436 கோடி ரூபாய் அளவிற்கு பயிர் கடன் மற்றும் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

உழவர்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ்

❖ 13 கோடி ரூபாய் செலவில் 1,823 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தில் 19 ஆயிரத்து 599 பேர் பயனடைந்துள்ளனர்.

❖ கொரோனா சிறப்பு நிவாரண நிதியாக 4 ஆயிரம் ரூபாயை 4 இலட்சத்து 41 ஆயிரத்து 989 பேர் பெற்றுள்ளார்கள்.

❖ 50 ஆயிரம் பனைவிதைகள் மற்றும் பனங்கன்றுகள் 1 இலட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பீட்டில் நடப்பட்டுள்ளது.

❖ வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் புதியதாக ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ 1,701 குடும்பங்களுக்கு வேளாண் கருவித் தொகுப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது.

❖ 150 திருக்கோயில்களில் பணிபுரியும் 84 அர்ச்சகர்கள், 6 பட்டாச்சாரியார்கள்,

❖ 60 பூசாரிகளுக்கு 1,000 ரூபாய் மாத ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ சங்கரன் கோயிலில் புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னதாக, தென்காசி மாவட்ட மக்களின் கோரிக்கைகள் சில என்னிடம் தெரிவிக்கப்பட்டன. உடனடியாக அதிகாரிகளை அழைத்து நான் பேசினேன். கலந்துரையாடினேன். அவைகள் சிலவற்றை நிறைவேற்றித் தருவதற்கான அறிவிப்பை இந்த மேடையிலேயே அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ தென்காசி மாவட்டத்தின் முக்கிய இணைப்பு சாலையாக விளங்கக்கூடிய புளியங்குடி சங்கரன்கோயில் நெடுஞ்சாலை மேம்படுத்தப்படும்.

❖ புதியதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்திற்கு புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்.

❖ துரைசாமிபுரம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பனையூர் கூடலூர் - துரைசிங்கபுரம் சாலை மேம்படுத்தப்படும்.

❖ தென்காசி குற்றாலம் இடையே இருக்கக்கூடிய இலாத்தூர் பெரிய ஏரி ஒரு முக்கிய மீன்பிடி மற்றும் சுற்றுலாத்தலமாக 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

❖ சிவகிரி மற்றும் ஆலங்குளம் பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் ஆலங்குளத்தில் புதிய வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

அதேபோல, இங்கே சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டவாறு, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இராமநதி, ஜம்புநதி, திட்டப்பணிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் நிருவாக அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு முறையான அனுமதி பெறப்படாததால், திட்டப்பணிகள் துவக்கப்படாமலேயே இருந்தது. ஆனால் நமது ஆட்சி அமைந்த பிறகு இதற்கான முறையான வனத்துறை அனுமதி பெறப்பட்டு, தற்போது இத்திட்டம் ஒன்றிய வனத்துறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதி பெறப்பட்டவுடன், இப்பணிகள் விரைவில் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய நலத்திட்ட சாதனைகளின் அரசுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தென்காசி அலங்கார் நகரைச் சேர்ந்த மாணவி சண்முகவள்ளி என்பவர் 2020இல் நடைபெற்ற குடிமைப் பணித் தேர்வில் இந்திய அளவில் 108ஆவது இடத்தையும், தமிழக

அளவில் 3ஆவது இடத்தையும், பெண்கள் பிரிவில் முதலிடமும் பெற்று இந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு இந்த விழாவின் மூலமாக முதலமைச்சர் என்கிற முறையில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வினைதீர்த்த நாடார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில், 3ஆம் வகுப்பு படிக்கக்கூடிய ஆராதனா எனும் குழந்தை, சமீபத்தில், எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தில், தான் படிக்கும் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டித்தர வேண்டும் என்று கேட்டிருந்தார். பாருங்கள் ஒரு குழந்தை எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு பெருமையாக இருந்தது. எத்தகைய நம்பிக்கையை அவர் என் மீது வைத்திருந்தால் இந்தக் கடிதம் எழுதி இருப்பார் என நான் நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். குழந்தை ஆராதனாவின் கோரிக்கை ஏற்கப்பட்டது என்பதை இந்தக் கூட்டத்தில் இப்போது நான் அறிவிக்கிறேன்.

அதற்கு முதற்கட்டமாக, 35 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு வகுப்பறைகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு சிறு வயதிலேயே நம்பிக்கையோடு எனக்குக் கடிதம் எழுதிய அந்தக் குழந்தை ஆராதனா, அதே பள்ளியில் படித்து எதிர்காலத்தில் சிறப்பான நிலையை அடைய வேண்டும் என்று மீண்டும் அந்த சிறுமியை, அந்த குழந்தையை நான் வாழ்த்துகிறேன்.

இந்த மாவட்ட மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை, தென்காசி மாவட்டம் சங்கரன்கோயில் வட்டம் மேலநீலித நல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டு தனி அலுவலரை நியமித்த அரசு தான் தமிழக அரசு, தி.மு.க அரசு.

1969-ஆம் ஆண்டில் முக்குலத்தோர் கல்வி மேம்பாட்டிற்காக பி.கே. மூக்கையாத் தேவர் முயற்சியால் தென் மாவட்டத்தில் மூன்று கல்லூரிகள் தொடங்கப்பட்டது. முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா, நம்முடைய தலைவர் கலைஞர் ஆகியோர் பல்வேறு உதவிகளை இதற்காகச் செய்தனர். இதில் ஒரு கல்லூரி மேலநீலித நல்லூரில் தொடங்கப்பட்டது. அதை நிர்வகிக்க, தேவர் எஜூகேஷனல் சொசைட்டி - திருநெல்வேலி மாவட்டம் என்ற சங்கம் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவராக இருந்த திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் அது உருவாக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் அன்றைக்கு அதற்கு அனுமதி வழங்கினார். இந்த வட்டாரத்தின் கல்வி வளர்ச்சிக்காக 44.94 ஏக்கர் அரசு நிலத்தை முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

ஆனால், காலப்போக்கில், சிலரால் இதன் நோக்கம் சிதைக்கப்பட்டு தனிநபர்களுடைய ஆக்கிரமிப்புக்கு ஆளானது. இதனை மீட்பதற்கு முன்னாள் மாணவர்கள் பலரும் போராடி வந்தார்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக மதுரை பொதுக்கூட்டத்தில் நான் பேசுகிறபோது சொன்னேன், 'கழக அரசு அமைந்ததும் தேவர் கல்லூரி தனிநபர் பிடியில் இருந்து மீட்டு அதற்கு ஒரு விடிவுகாலத்தை ஏற்படுத்துவேன் என்று உறுதிமொழி அளித்தேன். 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' நிகழ்ச்சியிலும் கோரிக்கை மனுக்கள் என்னிடத்தில் தரப்பட்டன.

ஆட்சி அமைந்ததும், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டப்படி, அரசாணை எண் 146இன்கீழ் கல்லூரியை நிர்வகிக்க தனி அலுவலரை நியமித்திருக்கிறோம். என்ன நோக்கத்துக்காக மூக்கையாத்தேவர் அவர்களும், செல்லப்பாண்டியன் அவர்களும் இதனை உருவாக்கினார்களோ, அதனடிப்படையில் கல்லூரியை

வளர்த்து, இந்தப் பகுதி மக்கள் பயனடையக்ககூடிய வகையில் அதை நடத்திக் காட்டுவோம் என்று அந்த உறுதியை இந்த மேடையில் நான் கூறுகிறேன்.

இப்படி ஒவ்வொருவருடைய தேவைகளையும் கேட்டுக் கேட்டு ஒவ்வொரு பகுதியின் பிரச்சினையையும் அறிந்து, அறிந்து நிறைவேற்றித் தரும் அரசாக நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் எந்த சாதனையையும் செய்யவில்லை - எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சில மாதங்கள் வரைக்கும் என்ன சொன்னார் என்றால், விடுபட்ட சில வாக்குறுதிகளை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு "இதை நிறைவேற்றவில்லை, அதை நிறைவேற்றவில்லை" என்று சொல்லிவிட்டு இருந்தார், சொல்லிக்கொண்டு இருந்தார் என்று சொல்லக்கூடாது, புலம்பிக் கொண்டிருந்தார். அதையும் நாம் நிறைவேற்றியதும் - என்ன சொல்லுவது என்று தெரியாமல் எதையுமே நிறைவேற்றவில்லை அப்படி என்று ஒரே வரியில் சொல்லி இருக்கிறார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டதாக நினைக்குமாம். அதுபோல எதிர்க்கட்சித் தலைவர் நினைத்துக்கொண்டு இருக்கிறார். இவர் வேண்டுமென்றால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் 19 மாதத்துக்கு முன்பே விழித்துவிட்டார்கள். இருண்ட காலத்தை முடித்து வைத்து, உதயசூரியனின் காலத்தை உருவாக்கிவிட்டார்கள். எனவே, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் எரிச்சல் வார்த்தைகளுக்கெல்லாம் நான் விரிவாக பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் சொன்ன வாக்குறுதிகள் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கே நேரம்

கிடைக்கவில்லை. இதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்போம். ஏதோ அரசியலில் தாங்களும் இருக்கிறோம் என்று காட்டுவதற்காக நம்மைப் பற்றி விமர்சிக்கிறார்கள். ஆனால் எங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம். உணர்வுப் பூர்வமாக உழைக்கிறோம். தமிழ்நாட்டை இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக ஆக்குவது ஒன்றுதான் என்னுடைய குறிக்கோள்.

கடந்த ஆண்டு இந்தியா டுடே-யில் ஓராண்டு நிறைவேற்றப்பட்ட பிறகு இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களை வரிசைப்படுத்திய நேரத்தில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் முதலிடம் என்று அவர்கள் கணக்கெடுத்து அறிவித்தார்கள். அப்போது நிருபர்கள் கேட்டபோது நான் சொன்னேன், எனக்கு இது பெருமையல்ல, என்னைப் பொறுத்தவரையில், நான் முதல்வனாகப் பொறுப்பேற்று முதலிடத்திற்கு வந்திருப்பதைவிட நான் முதல்வனாகப் பொறுப்பேற்று இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்திற்கு வரவேண்டும் இதுதான் என்னுடைய இலட்சியம் என்று நான் சொன்னேன். அதுதான் என்னுடைய குறிக்கோள். அதைதான் நாங்கள் எதிர்நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியா?

சிறுதொழில் மேம்பாடா?

கல்வியா?

சுகாதாரமா?

உள்கட்டமைப்புப் பணிகளா?

மகளிர் மேம்பாடா?

ஒடுக்கப்பட்டவர்களுடைய மக்களின் மேம்பாடா?

இளைஞர் நலனா?

விளையாட்டா?

அனைத்திலும் தமிழகம் முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி வருவது மட்டுமல்ல - அந்தத் திட்டங்களால் தமிழகம் உயர்ந்து வருவதை கண்ணுக்கு முன்னால் நான் பார்க்கிறேன். நாள்தோறும் எங்களுக்கு கிடைக்கும் செய்திகள் இதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒன்றிய அரசாங்கத்தின் சார்பில் சில நேரங்களில் வெளியாகக்கூடிய புள்ளிவிவரங்களைப் பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சி கண்ணுக்குத் தெரியும். சில தன்னார்வ அமைப்புகள் வெளியிடும் அளவீடுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சி தெரியும். ஆங்கில ஊடகங்கள் வெளியிடும் கட்டுரைகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை பெருமைப்பட எழுதுகிறார்கள்.

இவை அனைத்தும் தமிழ்நாடு உயர்ந்து வருகிறது - எல்லாத் துறையிலும் உயர்ந்து வருகிறது - எல்லாப் பிரிவினரையும் உயர்த்தி வருகிறது என்பதற்கான திட்டவட்டமான சான்றுகளாக அமைந்திருக்கிறது! இவை அனைத்துக்கும் மேலாக, பயனடைந்த மக்களுடைய மனங்களில் உருவாகி வரும் மகிழ்ச்சியை நான் பார்க்கிறேன். தென்காசியிலிருந்து இந்த இடத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும்? மிஞ்சி, மிஞ்சிப் போனால் ஒரு 15 நிமிடத்திற்கு வந்து சேர்ந்துவிடலாம். ஆனால் இங்கு வருவதற்கு நாங்கள் ஒன்றரை மணி நேரம் ஆகியிருக்கிறது. என்ன காரணம்? வருகிற வழியெல்லாம் சாலையின் இருபுறங்களிலும், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், இருமருங்கிலும் நின்றுகொண்டு என்னை வரவேற்றது மட்டுமல்ல, வாழ்த்தியது மட்டுமல்ல, இந்த ஆட்சி தான் தொடரவேண்டும், இந்த ஆட்சிதான் தொடரவேண்டும் என்று அவர்கள் என்னை ஊக்கப்படுத்திய அந்தக் காட்சியை நான் பார்த்தேன். இதுதான் நல்லாட்சியினுடைய அடையாளம்!

திட்டமிடுவது - திட்டமிட்டதை செயல்படுத்திக் காட்டுவது! அதை நிறைவேற்றுவதுதான் என்னுடைய நாள்தோறப் பணியாக இருக்கிறது! திட்டத்தை அறிவித்தோம் - நிதியை ஒதுக்கினோம் - அத்தோடு கடமை முடிந்துவிட்டது என்று இல்லாமல், ஒவ்வொரு நாளும் நான் அதைக் கண்காணிக்கிறேன். உரிய காலத்தில் அனைத்துத் திட்டங்களையும் முடிப்பது தான் என்னுடைய இலக்கு என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப்பயணத்தை நடத்தி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்று பல பணிகளை முடித்துக் கொண்டு வருகிறேன். திறப்பு விழா நிகழ்ச்சி, அடிக்கல் நாட்டு விழா, இதையெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்தில் முடித்துக் கொண்டு வருகிறேன்.

அடுத்தகட்டமாக, மாவட்டவாரியாக, இந்தத் திட்டப்பணிகள் குறித்து குறிப்பிட்ட மாவட்டத்திற்கு நான் வந்து ஆய்வு நடத்தத் திட்டமிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அறிவிக்கப்பட்ட பணிகள் நடைபெறுவதை நானே பார்த்து, அந்தப் பணிகளை முடுக்கிவிட இருக்கிறேன். அமைச்சர்களை உடன் வைத்துக்கொண்டு - அதிகாரிகள் - அலுவலர்களை நேரில் அழைத்துப் பேச இருக்கிறேன். நாங்கள் என்ன நோக்கத்திற்காக இந்தத் திட்டங்களைத் தீட்டித் தருகிறோமோ அதே நோக்கம் கடைநிலை அலுவலர்கள் வரை இருந்தால்தான் அந்தத் திட்டத்தின் நோக்கம் முழுமை அடையும்.

மக்களிடம் செல்! மக்களோடு வாழ்!

மக்களிடம் இருந்து கற்றுக் கொள்!

என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

அப்படி மக்களுக்கான அரசாக நம்முடைய அரசு செயல்படும். இங்கே அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலியிலிருந்து இந்த மாவட்டம் பிரிந்திருந்தாலும், இந்த தென்காசிக்குத்

தேவையான அனைத்துத் திட்டங்களையும், நான் நிறைவேற்றித் தருவேன் அதில் யாருக்கும் எள்ளளவு சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. எடுத்துச்சொன்ன உறுதிமொழிகள், கேட்டிருக்கக்கூடிய கோரிக்கைகள், அதில் எடுத்துச்சொன்ன பல்வேறு பிரச்சினைகள் இவையெல்லாம் ஏற்கனவே வராமலில்லை. வந்திருக்கிறது. இருந்தாலும், நினைவு படுத்தியிருக்கிறார்கள், சட்டமன்றத்தில் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்குரிய நடவடிக்கை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும், அதை நிறைவேற்றித் தருவோம், தென்காசி மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கு நிச்சயமாக இந்த அரசு துணை நிற்கும், நான் அதற்கு துணை நிற்பேன் என்ற அந்த உறுதியை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்!

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 08.12.2022

மண்ணையும் காப்போம்
மக்களையும் காப்போம்

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

திரு. பொன்முடி அவர்களே,

திரு. சாமிநாதன் அவர்களே,

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களே,

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்களே,

இந்திய திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவரும், பொருளாதார நிபுணருமான திரு. மான்டேக் சிங் அலுவாலியா அவர்களே,

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட செயல் இயக்குநர் திரு. எரிக் சோல்ஹிம் அவர்களே,

மாநில திட்டக்குழுவின் துணைத்தலைவர் திரு. ஜெயரஞ்சன் அவர்களே,

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., அவர்களே,

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு. சையத் முஜம்மில் அப்பாஸ் அவர்களே,

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. தீபக் பில்கி அவர்களே,

காலநிலை மாற்றத் துறை வல்லுநர்களே,

பூவுலக நண்பர்கள் சுந்தர்ராஜன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்களே, அரசு உயர் அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுக்காக மட்டுமல்ல; இந்தியாவுக்காக மட்டுமல்ல உலகத்தின் நன்மைக்காக இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கைக்கு எல்லை இல்லை. இயற்கைக்கு வரையறை இல்லை. இயற்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. இயற்கையைக் காக்க வேண்டிய கடமையும்

அனைவருக்கும் உரியது என்கின்ற அடிப்படையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இந்தியாவுக்கான பிரச்சினை மட்டுமல்ல! இது உலகளாவிய பிரச்சினை! அரசாங்கம் மட்டுமே தீர்த்துவிடக் கூடிய பிரச்சினை அல்ல! அதனால்தான், நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. எரிக் சோல்ஹிம்; இந்தியத் திட்டக் குழுவின் முன்னாள் துணைத்தலைவர் திரு. மாண்டேக் சிங் அலுவாலியா அவர்கள், அரசு சாரா உறுப்பினர்களும் இணைந்து இது ஒரு மாநாடாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு ஐ.நா. அமைப்பாக இருந்தாலும் - உலகின் பல நாடுகளாக இருந்தாலும் ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றிதான் அனைவரது கவலையும்! அதுதான் காலநிலை மாற்றம்! மானுடத்தின் மிக முக்கியப் பிரச்சினையாக காலநிலை மாற்றம் என்பது இருக்கிறது. இதனைத் தமிழ்நாடு அரசும் மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதுகிறது என்பதை ஆட்சிக்கு வந்தது முதல் நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அதனால்தான், இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாக காலநிலை மாற்ற இயக்கத்தை துவக்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

இதனை ஒரு வரலாற்றுக் கடமையாக மட்டுமல்ல; எனது வாழ்க்கைக் கடமையாகவும் நான் பார்க்கிறேன். "நிலம் - தீ - நீர் - வளி - விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்று தொல்காப்பியம் தொடங்கி, "நீரின்றி அமையாது உலகம்" என்ற வள்ளுவம் வரை, சூழலைப் போற்ற வேண்டியதன் தேவையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியது தமிழ்ச் சமூகம். அதனால்தான், அந்தப் பாதையில் நமது அரசு இன்று செயல்பட்டு வருகிறது.

உங்களை நீங்கள் எப்படி அடையாளப்படுத்திக் கொள்வீர்கள் என்று தந்தை பெரியாரிடம் கேட்டபோது, "நான் இயற்கை மனிதன்" என்று சொன்னார். "செயற்கையான அடையாளங்கள் எதுவும் எனக்குக் கிடையாது" என்றார். "மானுடப்பற்று மட்டுமே எனக்கு

உண்டு" என்று சொன்னார். அத்தகைய இயற்கை மனிதர்களாக; மானுடப்பற்று மட்டுமே கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும். வாழ்ந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை நமக்கு இயற்கை உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

அதிகமான வெயில், அதிகமான மழை, காலம் தவறிப் பெய்யக்கூடிய மழை, மழை பெய்யாமலே போவது, அதிகப்படியான வெப்பம், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், நிலச்சரிவு, புதிய புதிய நோய்கள், உடல்நலமும் மனநலமும் பாதிக்கப்படுவது, உணவுப்பொருள் தட்டுப்பாடு, மண் வளம் குறைதல், காற்று மாசுபடுதல் இவை அனைத்தும் அதிகமாக ஏற்படுவதை இன்று கவனித்து வருகிறோம்.

பெங்களூர், சென்னை மட்டுமல்ல; உலக அளவில் பல பெருநகரங்களில் ஏற்படும் வெள்ளம்,

தெலங்கானாவில், உத்தராகண்டில் மேகவெடிப்பால் ஏற்பட்ட உயிரிழப்புகள்,

கேரளாவில் ஏற்படும் நிலச்சரிவுகள்

- என எல்லாப் பக்கமும் நாம் பேரிடர்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

வளிமண்டலத்தில் உள்ள கார்பனின் அளவு அதிகரித்ததன் காரணமாக, புவியின் வெப்பநிலை அதிகரித்து கால நிலையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. இதன் காரணமாக, மனிதர்கள் மட்டுமல்லாமல் பல்லுயிர்களும் பாதிக்கப்பட்டன. இந்த பாதிப்பின் விளைவுகளைத்தான் நேரடியாகக் கண்டு வருகிறோம். இவை நமக்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும், அனைத்து நாடுகளுக்குமான பிரச்சினை!

காலநிலை மாற்றத்தை உலகம் எதிர்கொள்ள, அதன் தாக்கத்தை மட்டுப்படுத்த, 2050ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை

எட்டவேண்டும் என்று பல்வேறு பன்னாட்டு ஆய்வுகளும் உச்சி மாநாடுகளும் அறிவுறுத்துகின்றன.

கடந்த ஆண்டு க்ளாஸ்கோவில் (Glasgow) நடைபெற்ற சர்வதேச உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் அவர்கள், "இந்தியா வரும் 2070ஆம் ஆண்டிற்குள் கார்பன் சமநிலையை எட்டிவிடும்" என்று அறிவித்திருந்தார். இது எவ்வளவு தீவிரமான பிரச்சினை என்பதைத்தான் பிரதமரின் உரையும் உணர்த்துகிறது.

கடந்த ஆண்டு கழக அரசு பொறுப்பேற்றதும் பல முன்னெடுப்புகளை அறிவித்து செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத பல்வேறு செயல்களை நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது.

துறையின் பெயரை "சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை" என்று அறிவித்தோம்.

தமிழகத்திற்கான காலநிலைத் திட்டத்தை அறிவித்தோம்.

நிதிநிலை அறிக்கையில் அதற்கென 500 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம்.

தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் மூலம் தமிழகத்தின் காடுகளின் பரப்பளவை 21 விழுக்காட்டில் இருந்து 33 விழுக்காடாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை சில மாதங்களுக்கு முன்னர் நான் துவக்கி வைத்தேன்.

இதுவரை சுமார் 2.8 கோடி மரக் கன்றுகள் பதியன் போடப்பட்டு, அவற்றை நடும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கார்பனை உள்வாங்கவும் பயன்படும்.

பொதுவாகவே வெப்பமண்டல நாடுகளில் உள்ள காலநிலையை, பருவங்களைக் கணிப்பது கடினம். இதற்காகவே அண்ணா பல்கலைக்கழகத்தில் "காலநிலை ஸ்டூடியோ" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு என தனியான மாதிரிகளை உருவாக்கவும், அதற்கான ரேடார்களை அமைக்கவும் 10 கோடி ரூபாயை ஒதுக்கி, திட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம்.

ஒரு மாநிலத்தை கார்பன் சமநிலையை எட்டிய மாநிலமாக அறிவிக்க வேண்டுமெனில், அம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் கார்பன் சமநிலையை அடையவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள 10 கிராமங்களை மீள்தன்மையுடைய கிராமங்களாக மாற்றுவதற்கு திட்டம் இன்று துவக்கப்படுகிறது.

காலநிலை மாற்றம் குறித்து பள்ளி - கல்லூரி மாணவர்கள், தொழில்முனைவோர் என சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் கொண்டுசேர்க்க "காலநிலை அறிவு இயக்கத்தை" (Climate literacy) தமிழகத்தில் செயல்படுத்தப்போகிறோம். அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளிவரும்.

கடல் அரிப்பைத் தடுக்கவும், கடற்கரையின் பல்லுயிரியத்தை பேணவும் பனை மரங்களை நடும் திட்டம் செயல்படுத்தப்படும்.

பல்லுயிரியத்தைப் பாதுகாப்பதை இந்த அரசினுடைய முக்கியமான கடமையாகக் கருதுகிறோம். கடந்த பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் ராம்சார் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு சதுப்புநிலம்தான் இருந்தது. அதை நாங்கள் 13ஆக உயர்த்தியுள்ளோம்.

அருகிவரும் உயிரினங்களான கடல்பசு, தேவாங்கு உள்ளிட்ட உயிரினங்களை பாதுகாக்க காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்த அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்க இந்தியாவிலேயே முதல்முறையாக "Tamil Nadu Green Climate Company" உருவாக்கப்பட்டு இவற்றை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

மக்கள் கடைகளுக்கு செல்லும்போது வீட்டிலிருந்தே பைகளை எடுத்துச் செல்லவேண்டும், பிளாஸ்டிக் பைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கான குறியீடாக "மீண்டும் மஞ்சப்பை" இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, "காலநிலை மாற்ற நிருவாகக் குழு" எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு விஷயங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த அரசு சாராத பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் இன்னும் சில முக்கியமான அறிவிப்புகளை இன்று வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. "பசுமைத் திட்டங்களுக்கான" அனுமதியை இனிமேல் ஒற்றைச் சாளர முறையில் வழங்கும் வகையில், தொழில்துறையில் உள்ள Guidance TNஆல் திட்டங்கள் வகுக்கப்படும். இந்த முடிவு 2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்தும் முயற்சியில் பெரும் பங்கு வகிக்கும்.

2. புதுப்பிக்கக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்தி உற்பத்தியாகும் மின்சாரத்தை அதிகரிக்கவும் அவற்றை எடுத்துச்செல்லவும் தனியான பசுமை வழித்தடம் (Green Corridor) உருவாக்கப்படும்.

3. காற்றாலைகளைப் புதுப்பிப்பதற்கான புதிய கொள்கை (Re-Powering Policy) எரிசக்தித் துறையால் வெளியிடப்படும்.

4. அனைத்துத் திட்டங்களையும், கொள்கைகளையும் காலநிலை மாற்றப் பார்வையில் பார்த்து, ஆய்வுசெய்து செயல்படுத்தவிருக்கிறோம்.

5. தமிழ்நாடு அரசு 1,000 கோடி ரூபாயில் Green Climate Fund - பசுமை நிதியம் ஒன்றை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதன் முதற்கட்டமாக, நூறு கோடி ரூபாய் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சூழல் சார்ந்த கட்டுமானங்களை உருவாக்குவதற்கு தேசிய அளவிலும் உலக அளவிலும் நிதி திரட்ட இந்த நிதியம் பயன்படுத்தப்படும்.

6. காலநிலை மாறுபாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுழற்சிப் பொருளாதாரம், வளங்குன்றா வளர்ச்சி போன்ற துறைகளில் புதிய நிறுவனங்களைத் துவங்குவோருக்கு தமிழக அரசு சிறப்புத் திட்டங்களை அறிவிக்கும்.

தமிழ்நாடு இந்தியாவிற்கு சமூகநீதியில் மட்டுமல்ல, சூழலியல் நீதியிலும் வழிகாட்டும் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ச்சி - தொழில் மேம்பாடு என்பதில் ஒரு பக்கம் அக்கறை செலுத்தினாலும் இன்னொரு பக்கம் சுற்றுச்சூழல், இயற்கை ஆகியவற்றிலும் அக்கறை செலுத்தியாக வேண்டும். இயற்கையுடன் இயைந்த வாழ்வும் வேண்டும். இயற்கையைக் கெடுக்காத வளர்ச்சியும் வேண்டும். இதுதான் எங்கள் அணுகுமுறை!

இந்தியா கார்பன் சமநிலையை அடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ள 2070ஆம் ஆண்டிற்கு முன்னராகவே தமிழ்நாடு கார்பன் சமநிலையை அடையும் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அதற்கான அனைத்து திட்டங்களையும் அரசு செயல்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றம் காப்போம்! சூழலையும் காப்போம்!

மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்!

இயற்கையைக் காப்போம்! இன்னுயிர் காப்போம்!

பல்லுயிர் காப்போம்! மானுடப் பண்பாடு காப்போம்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்க தொடக்க விழாவில் ஆற்றிய உரை - 09.12.2022

இசைக்கலை அமைப்புகளும், மன்றங்களும் தமிழிசைக்கும், தமிழ்ப்பாடல்களுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும்

மியூசிக் அகாடமியின் 96ஆவது ஆண்டு மாநாடு மற்றும் இசை விழா தொடக்க நிகழ்ச்சியின் இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வந்துள்ள அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கக்கூடிய மியூசிக் அகாடமியின் தலைவரும், தி இந்து நாளிதழின் இயக்குநருமான என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. என். முரளி அவர்களே,

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களே,

அரசினுடைய முதன்மைச் செயலாளர் திரு. சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே,

மியூசிக் அகாடமியின் துணைத்தலைவர் திரு. ஆர். சீனிவாசன் அவர்களே,

சங்கீத கலாநிதி, என்னை அண்ணன், அண்ணன் என்று அழைத்தார்கள். ஒருமுறை அல்ல இரண்டு முறை. அதற்காக நான் அவரை தம்பி என்று அழைத்துவிட முடியாது, மதிப்பிற்குரிய திருவாரூர் திரு. பக்தவத்சலம் அவர்களே,

சங்கீத கலாநிதி லால்குடி திரு. ஜி.ஜெ.ஆர். கிருஷ்ணன் அவர்களே,

லால்குடி திருமதி விஜயலட்சுமி அவர்களே,

சங்கீத கலாநிதி திரு. டி.வி. கோபாலகிருஷ்ணன் அவர்களே,

சங்கீத கலாநிதி துணைவேந்தர் டாக்டர் எஸ். சௌமியா அவர்களே,

சங்கீத கலாநிதி நெய்வேலி திரு. சந்தான கோபாலன் அவர்களே,

மியூசிக் அகாடமியின் செயலாளர்கள்

திரு. வி. ஸ்ரீகாந்த் அவர்களே,

டாக்டர் மீனாட்சி அவர்களே,

இசைக் கலைஞர்களே,

விழாவிற்கு வருகை தந்துள்ள திருமதி மல்லிகா சீனிவாசன் உள்ளிட்ட இசை ஆர்வலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மியூசிக் அகாடமி எனப்படும் இசைக் கலை மன்றத்தின் 96-ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே திரு. முரளி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1975ஆம் ஆண்டு நடந்த ஆண்டு விழாவிலும், 1996ஆம் ஆண்டு நடந்த ஆண்டு விழாவிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த வரிசையில், 96ஆம் ஆண்டு விழாவில் நான் பங்கெடுத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

1927ஆம் ஆண்டு நடந்த இசை மாநாட்டில் இந்திய இசையை வளர்த்தெடுப்பதற்காக இப்படி ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்று நினைத்து உருவாக்கி இருக்கிறார்கள். எந்த அமைப்பாக இருந்தாலும் அதனை உருவாக்குவது எளிது. ஆனால், தொடர்ந்து நடத்துவதுதான் சிரமம். 96 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்திருக்கக்கூடிய அனைவரையும் நான் வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். இன்னும் நான்கு ஆண்டுகளில் இந்த நிகழ்ச்சி என்பது நூற்றாண்டு விழாவாக நடைபெறப் போகிறது. அதிலும் நான் உறுதியாகக் கலந்து கொள்வேன் என்று நம்புகிறேன். முரளி அவர்கள் என்னை அழைப்பார்கள் என்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் இருக்கக்கூடிய இசைக்கலை மன்றங்களில் மிக முக்கியமானதாக இருக்கக் கூடியது இந்த மியூசிக் அகாடமி! இசைக்கு மாபெரும் வரலாறு உண்டு. அத்தகைய வரலாற்றில் மியூசிக் அகடாமிக்கு ஒரு தனி இடம் உண்டு. இந்த விழாவைப் பொறுத்தவரைக்கும் நான் வந்திருக்கிறேன் என்றால், முதலமைச்சர் என்ற அந்த

அடிப்படையில் நான் வருகை தந்திருப்பதாக மட்டும் நீங்கள் கருத வேண்டியதில்லை. இசை ஆர்வலன் - இசை ரசிகன் என்ற அடிப்படையில்தான் நானும் வருகை தந்திருக்கிறேன். அதற்காக, நான் இசைக் கலைஞரோ - இசை அறிஞரோ அல்ல. என்னுடைய தாத்தா முத்துவேலர் அவர்கள் ஒரு இசைவாணர். பாடல்கள் எழுதுவதில் மட்டுமல்ல, பாடல்கள் பாடுவதிலும் வல்லவராக இருந்திருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் இசை கற்க சென்றார்களே தவிர தொடர்ச்சியாக அதைக் கற்றுக் கொள்ளவில்லை. இசை ஞானம் அதிகம் கொண்டவராக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். ஆனால் எனக்கு பேச்சுக் கச்சேரி பண்ணத் தெரியும் - பாட்டுக் கச்சேரி தெரியாது. ஒரு காலத்தில் மேடைப் பேச்சுகளையும் கச்சேரி என்றுதான் சொல்வார்கள், வயதில் மூத்தவர்கள் அதை நன்கு அறிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

பாட்டுக் கச்சேரிக்கு இசைக்கலைஞர்களிடம், கச்சேரி நடத்துவதற்கு பல மாதங்களுக்கு முன்கூட்டியே தேதி வாங்கிவிடுவார்கள். அதனால்தான், முரளி அவர்களும் என்னிடம் பல மாதங்களுக்கு முன்பே சந்தித்து என்னிடத்தில் தேதியை வாங்கிவிட்டார். நான்கைந்து மாதங்களுக்கு முன்பு வாங்கிய தேதியாக இருந்தாலும், நானும் ஒப்புக்கொண்டபடி மறக்காமல் இந்த நிகழ்ச்சிக்கு குறித்த நேரத்திற்கு வந்திருக்கிறேன். நான் தினந்தோறும் இந்து நாளிதழ் நிறுவனத்தை நினைக்கிறேன், நினைத்துக் கொண்டே இருப்பேன். ஒவ்வொரு நாளும் நினைப்பேன். அதை முரளி அவர்களுக்குச் சொல்வதற்கான மேடையாகவும் இதனை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

தினமும் காலையில் உங்களது நிறுவன நாளிதழ்களை தொடர்ந்து படிக்கிறேன் என்பது மட்டுமல்ல, எனக்கு அன்பளிப்பாக தினமும் வழங்கப்படும் புத்தகங்களில் பெரும்பாலும் தரப்படுவது எது என்றால், இந்து குழுமத்தின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா பற்றிய 'மாபெரும் தமிழ்க்கனவு' என்ற புத்தகமும், தலைவர் கலைஞர் பற்றிய 'தெற்கிலிருந்து ஒரு சூரியன்' என்ற புத்தகமும்தான். அதனால்தான் இந்து நிறுவனத்தை நான் தினமும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு நன்றி தெரிவிக்கக்கூடிய மேடையாகவும் இதனை நான் பயன்படுத்திக்கொள்கிறேன். தனியாக இதற்கு ஒரு விழா நடத்த வேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஒரு வாய்ப்பு எனக்கு முரளி கொடுத்திடவில்லை.

மரியாதைக்குரிய முரளி அவர்களுக்கு இந்து நாளிதழ் இயக்குநர் என்பது ஒரு அடையாளம் என்றால் மியூசிக் அகாடமி என்பது இன்னொரு அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்தளவுக்கு இந்த அமைப்புடன் தன்னை உணர்வுப்பூர்வமாக, உளப்பூர்வமாக இணைத்தும் - பிணைத்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடியவர். ஆண்டுதோறும் மார்கழி மாதம், அதாவது டிசம்பர் மாதத்தில் இந்தியாவில் இருந்து மட்டுமல்ல - உலகம் முழுவதும் உள்ள இசைப் பறவைகளை சென்னையை நோக்கி வரவழைக்கக்கூடிய ஒரு வேடந்தாங்கலாக மியூசிக் அகாடமி இன்று செயல்பட்டு வருகிறது.

- இசை வளர்த்தல் என்பது கலை வளர்த்தல்.
- கலை வளர்த்தல் என்பது பண்பாட்டை வளர்த்தல்.

❖ பண்பாட்டை வளர்த்தல் என்பது நமது நாகரிகத்தை வளர்த்தல்.

அந்த வகையில் மக்கள் மனதையும், இந்த மாநிலத்தையும் பண்படுத்தும் கடமையை இது போன்ற இசைக் கலை மன்றங்கள் செய்து வருவது மிகப்பெரிய தொண்டு. மியூசிக் அகாடமி உள்ளிட்ட இசைக் கலை அமைப்புகளை ஏதோ பொழுதுபோக்கு அமைப்புகளாகச் சொல்ல முடியாது. அவை அனைத்தும் கலை வளர்க்கக்கூடிய பண்பாட்டு அமைப்புகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த மாபெரும் விழாவில் சங்கீத கலாநிதி விருதினைப் பெற்றிருக்கக்கூடிய

❖ இசைக்கலைஞர் நெய்வேலி ஆர்.சந்தானகோபாலன்

❖ மிருதங்க வித்வான் திருவாரூர் பக்தவத்சலம்

❖ வயலின் கலைஞர்கள் லால்குடி ஜி.ஜெ.ஆர். கிருஷ்ணன், ஜி.ஜெ.ஆர். விஜயலட்சுமி

சங்கீத கலா ஆச்சார்யா விருதினைப் பெற்றுள்ள

❖ நாதஸ்வர வித்வான் கீவளூர் என். ஜி. கணேசன்

❖ இசை அறிஞர் ரீதா ராஜன்

❖ இசை அறிஞர் ஆர். எஸ். ஜெயலட்சுமி

டி.டி.கே விருதைப் பெற்றுள்ள

❖ இசைப் பாடகர் தாமரைக்காடு கோவிந்தன் நம்பூதிரி

❖ மிருதங்க வித்வான் சோமயாஜுலு

❖ கஞ்சிரா வித்வான் ஏ.வி. ஆனந்த்

- ❖ இசை அறிஞர் விருது பெற்றுள்ள வி. பிரேமலதா

  நிருத்ய கலாநிதி விருது பெற்றுள்ள
- ❖ ரமா வைத்தியநாதன்
- ❖ முனைவர் நர்த்தகி நடராஜ் (தமிழ்நாடு மாநில திட்டக்குழு உறுப்பினர்)
- ❖ ப்ரெகா பெசல்

- ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பில், தமிழ்நாட்டின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இசையுலகின் மிகப்பெரிய விருது மியூசிக் அகாடமி விருது என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அத்தகைய உயரிய விருது பெற்றுள்ள நீங்கள் அனைவரும் தொடர்ந்து இசைத்துறைக்கு தொண்டாற்றி உங்களைப் போன்ற திறமைசாலிகளை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

- ❖ இயல்
- ❖ இசை
- ❖ நாடகம்

என்று முத்தமிழைப் பிரிப்பார்கள். இந்த முத்தமிழில் முதலில் பிறந்தது நாடகம்தான் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள். ஆதிமனிதனின் முதல் மொழி சைகையே. அதனால்தான் முதலில் பிறந்தது நாடகம். அவனது ஒலிக்குறிப்புகள் இசையை உருவாக்கியது. அதன் பிறகுதான் எழுதக் கற்றுக் கொண்டான். அந்த வகையில்

நாடகம் - இசை - இயல் என்பதே சரியான வரிசை என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். இத்தகைய இசைத்தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கும் முன்பிருந்தே நம்முடைய தமிழ் மரபில் உள்ளது.

எழுத்து ஒலிகளின் பிறப்பையே காற்றில் இருந்து எழும் இசையாகக் கருதும் அளவுக்கு தமிழர் இசை அறிவு இருந்தது. அந்த வகையில் தமிழர்களின் இசை மரபு என்பது பழமையானது! செழுமையானது! சிலப்பதிகாரம் என்ற தமிழ்க் காப்பியமே இசைக்காப்பியம்தான்.

- ❖ சங்க காலம்
- ❖ காப்பிய காலம்
- ❖ பக்திக்காலம் முதல் இசையானது நமது தமிழ் மண்ணில் புதுப்புது பொலிவோடு சிறந்து விளங்கியது.
- ❖ தேவாரமும்
- ❖ திருவாசகமும்
- ❖ நாலாயிர திவ்வியப் பிரபந்தமும்
- ❖ பெரியபுராணமும்
- ❖ பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும்

படித்தால், தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை முழுமையாக அறியலாம். 'இசை என்பது காதுகளுக்குப் போர்த்தி விடுகின்ற கவுரவப் பொன்னாடை' என்று கவிஞர் மு. மேத்தா அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய கவுரவப் பொன்னாடை போர்த்தும் அரங்கம்தான் இந்த மியூசிக் அகாடமி.

பொதுவாக முதலமைச்சரிடம்தான் கோரிக்கை வைப்பார்கள். ஆனால் நான் இங்கே உங்களுக்கு, இசைக் கலைஞர்களுக்கு கோரிக்கை வைப்பது காலத்தின் தேவை என்று நான் கருதுகிறேன். இன்றைய நாள் இந்து தமிழ் திசை நாளிதழில் பேட்டி அளித்திருக்கிறார் நம்முடைய மியூசிக் அகாடமியின் தலைவர் முரளி அவர்கள். நான் காலையில் படித்தேன். தனது கொள்கையை வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார். எங்களின் விழாக்களின் மூலமாக வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறோம் என்று முரளி அவர்கள் சொல்லி இருக்கிறார். இந்தக் கருத்துதான் இன்று நாட்டுக்குத் தேவையான கொள்கை.

இந்தக் கொள்கை ஏதோ அரசியல் கட்சிகள் மட்டும் அல்ல, அரசியல் கட்சிகள் மட்டும் வலியுறுத்துவதாக நீங்கள் சுருக்கி அதை நினைத்துவிடக் கூடாது. இதுபோன்ற கலை அமைப்புகளின் கொள்கையாக - ஒவ்வொரு தனிமனிதரின் கொள்கையாக மாற வேண்டும்; எதிரொலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மியூசிக் அகாடமி போன்ற "இசைக்கலை அமைப்புகளும், மன்றங்களும் தமிழிசைக்கு, தமிழ்ப்பாடல்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்." தமிழ் இலக்கியத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன. அந்தப் பாடல்களும் இதுபோன்ற இசை மன்றங்களில் தவறாது ஒலிக்க வேண்டும்.

பக்தி இசையாக இருந்தாலும், திரையிசையாக இருந்தாலும் மெல்லிசையாக இருந்தாலும், பாப் இசையாக இருந்தாலும், ராக் இசையாக இருந்தாலும் - தமிழிசையாக இருக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள் என்று

இங்கே கேட்டுக்கொள்கிறேன். மொழி இருந்தால்தான் கலை இருக்கும். இசை வளர்த்தல் என்பது கலை வளர்த்தல் மட்டுமல்ல தமிழ் வளர்த்தலும்தான் என்பதை மனதில் அனைத்துக் கலைஞர்களும், அனைத்து கலை அமைப்புகளும் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்த சிறப்பான இனிய நிகழ்ச்சியில் நான் ஆட்சிப் பொறுப்பேற்று எந்தவித பிரச்சினையில்லாமல், எந்தவித பரபரப்பும் இல்லாமல், ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், எந்த டென்ஷனும் இல்லாமல், ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், அது இந்த நிகழ்ச்சியாகத்தான் அமைந்திருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துச்சொல்லி இந்த நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கி தந்திருக்கக்கூடிய மியூசிக் அகாடமியினுடைய நிருவாகிகளுக்கு குறிப்பாக நம்முடைய திரு. முரளி அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள்
சென்னை, மியூசிக் அகாடமியின் 96ஆவது ஆண்டு
மாநாடு மற்றும் இசை விழா தொடக்க நிகழ்ச்சியில்
ஆற்றிய உரை - 15.12.2022

அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படை இலக்கை மையமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது

நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையினுடைய அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் கழகத்தினுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. லியோனி அவர்களே,

பள்ளிக் கல்வித்துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே,

பள்ளிக் கல்வித் துறையினுடைய ஆணையர் திரு. கே. நந்தக்குமார், இ.ஆ.ப., அவர்களே,

துவக்கத்தில் வரவேற்புரை நல்கியிருக்கக்கூடிய டி.வி.எஸ். குழும நிறுவனங்களுடைய தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்களே,

சர்வதேச சதுரங்க கூட்டமைப்பினுடைய துணைத் தலைவர் கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே,

வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த அமைப்பினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய நண்பர்களே,

மதிப்பிற்குரிய புரவலர்களே,

தூதரக அதிகாரிகளே,

அரசு உயர் அலுவலர்களே,

மாணவச் செல்வங்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் கல்வித் துறை அமைச்சராக இருந்து எண்ணற்ற பல சாதனைகளை அந்தத் துறையில் நிகழ்த்தியிருக்கக்கூடியவர்தான் இனமானப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். அவருடைய நூற்றாண்டை நாம் இன்றைக்கு அரசின் சார்பிலே மட்டுமல்ல, தமிழருடைய

உள்ளங்களிலும், இல்லங்களிலும் அந்த விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு அரசின் சார்பில் பல நிகழ்ச்சிகளை நாம் நடத்தியிருக்கிறோம்,நடத்திக் கொண்டிருக்கிறோம்.இன்று காலை அவருடைய நூற்றாண்டு நிறைவையொட்டி, நுங்கம்பாக்கத்தில் இருக்கக்கூடிய பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு பேராசிரியருடைய பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறோம். பேராசிரியருடைய பெயரால் ஏற்கனவே 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டத்தையும் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று அவருடைய பிறந்த நாளில், அரசுப் பள்ளிகளை தனியார் பங்களிப்போடு மேம்படுத்தும் மற்றுமொரு முன்னோடித் திட்டம் இங்கு தொடங்கப்படுகிறது.

உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத காலம் எது என்று யாரைக் கேட்டாலும், “அது என்னுடைய பள்ளிக் காலம்தான்” என்று பலரும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்த அந்தக் காலத்தைத்தான் யாராலும் மறக்க முடியாது. அதேபோல் உங்களுக்கு நெருக்கமான நண்பர் யார் என்று கேட்டால், பெரும்பாலும் பள்ளிக்காலத் தோழர்களைத்தான் நாம் சொல்வதுண்டு. நேற்றுப் பார்த்தவரைக் கூட மறந்துவிடுவோம். ஆனால் நாம் குழந்தைகளாக இருந்தபோது, கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் பெயரை நிச்சயமாக நாம் மறக்க மாட்டோம். அவர்கள் முகங்கள்

நமக்கு அடிக்கடி வந்து நிழலாடும். அந்தளவுக்கு ஒவ்வொருவருடைய வாழ்விலும் வசந்தகாலம் என்பது பள்ளிக் காலம்தான்.

நாம் இந்தளவிற்கு உயர்வதற்கு, இந்த உயரத்தை அடைவதற்கு உதவியாக இருந்தது அந்தப் பள்ளிக் கூடம் தான். அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டாமா? என்ற உன்னதமான நோக்கத்தோடு "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்" நம்ம ஊர் பள்ளி என்ற பெயரில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையுமே அரசாங்கம் செய்து விட முடியாது. மக்களும் கைகோர்க்க வேண்டும். பயன்பெற்றவர்கள் தங்களது நன்றியின் அடையாளத்தைத் தெரிவிக்கலாம். அதற்கான வாசற்படிதான் இந்த நம்ம ஊர் பள்ளி திட்டம்!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, அனைத்துத் துறைகளிலுமே மிகப்பெரிய வளர்ச்சியை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மதிப்பிற்குரிய திரு.வேணு சீனிவாசன் அவர்கள், இந்தியா டுடே-இல் இந்த வாரம் வெளி வந்திருக்கக்கூடிய ஒரு கருத்துக் கணிப்பை சுட்டிக்காட்டி, அதிலே தமிழகம் முன்னோடி மாநிலமாக இந்தியாவில் வந்திருப்பதை எடுத்துச் சொல்லி எனக்கு வாழ்த்து சொன்னார், பெருமைதான் எனக்கு.

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், நாம், தி.மு.க. ஆட்சிக்கு வந்து முதல் ஆண்டு இதே இந்தியா டுடே ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டது. அப்படி வெளியிட்டபோது, நம்பர் ஒன் முதலமைச்சர் இந்தியாவிலேயே தமிழ்நாட்டினுடைய

முதலமைச்சர்தான் என்று ஒரு கருத்துக் கணிப்பை முதல் ஆண்டு வெளியிட்டார்கள். அப்போது பத்திரிகை நிருபர்களெல்லாம் இதை எப்படி பார்க்கிறீர்கள் என்று என்னிடத்தில் வந்து கேட்டார்கள், உள்ளபடியே பெருமைப்படுகிறேன், ஆனால் இதைவிட எனக்கு என்ன பெருமை வந்து சேர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்றால், நம்பர் ஒன் முதலமைச்சர் என்பதைவிட நம்பர் ஒன் தமிழ்நாடு என்று வர வேண்டும் என்று நான் முதல் ஆண்டே தெரிவித்தேன். அது, இந்த இரண்டாம் ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதிலே எனக்கு உள்ளபடியே பெருமை, அதற்காகத்தான் நம்முடைய திரு. வேணு சீனிவாசன் அவர்கள் எனக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் நீங்களும் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறையின் பணி மிக முக்கியமானதாக இருக்கிறது. தரமான கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இன்றைக்கு இரண்டாவது இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. முதலிடத்திற்கு முந்துவதற்கான அனைத்துப் பணிகளையும் பள்ளிக் கல்வித் துறை இன்றைக்கு சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது.

❖ “அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படை இலக்கை மையமாகக் கொண்டு நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது.” இல்லம் தேடிக் கல்வித் திட்டம் முழு வெற்றியை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

❖ செயலி மூலமாக பள்ளி செல்லாத பிள்ளைகளை பள்ளிக் கூடங்களுக்குள் மீண்டும் அழைத்துக் கொண்டு வரக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறோம்.

❖ எண்ணும் எழுத்தும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ மாதிரி பள்ளிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ 9 முதல் 12 வரையிலான மாணவர்களுக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின்படி பயிற்சி அளிக்க இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சையும், தேவையான பொருள்களும் கல்வியோடு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

❖ 'நம் பள்ளி - நம் பெருமை' என்ற திட்டத்தை நான் இங்கே தொடங்கி வைத்திருக்கிறேன்.

❖ பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கல்வியாளர்கள் போன்றோரைக் கொண்டதாக பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் பள்ளிப் பிள்ளைகள் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் மனநிறைவோடு கற்கக்கூடிய சூழலை திராவிட மாடல் ஆட்சி உருவாக்கித் தந்து கொண்டு இருக்கிறது.

கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. அந்த அறிவுச்சொத்தை உருவாக்கித் தந்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, நம்ம ஊர் பள்ளித் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

அரசுப் பள்ளிகள் என்பவை அரசின் சொத்துகள் மட்டுமல்ல, அது மக்களுடைய சொத்துக்களுமாகும்!

இதனை மனதில் வைத்துத்தான் பள்ளி மேலாண்மைக் குழுக்களை அமைத்தோம். 37 ஆயிரத்து 558 பள்ளி மேலாண்மை குழுக்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அவை மூலம், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், ஊராட்சிகள் மற்றும் சமூகத்தின் நலம்விரும்பிகள் அனைவரும் ஒரு கட்டமைப்பாக, நிறுவனமாக ஒன்றிணைந்தனர். தங்கள் பள்ளிக்கு எது தேவையோ அதனை அவர்களே உருவாக்கித் தர முன்வந்துள்ளார்கள்.

இந்த எண்ணங்களை அரசு மட்டுமே தனியாகச் செய்திட முடியாது. உங்கள் அனைவருடைய உதவியும் ஆதரவும் இதற்கு நிச்சயம் தேவை. இப்போதும் எப்போதும் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்க ஒன்றிணைய விரும்பக்கூடிய உங்கள் எல்லோருடனும் கைகோர்க்க நம்முடைய அரசு விரும்புகிறது. உள்ளூர் மக்களுடன் முன்னாள் மாணவர்களுடன், தொழிற்துறையுடன், உலகமெங்கும் வாழும் தமிழர்களுடன் கைகோர்ப்பதற்காகவும் 'நம்ம ஊர் பள்ளி' அடித்தளம் அமைத்திருக்கிறது. நீங்கள் செலுத்தக்கூடிய ஒரு ரூபாய் நன்கொடையும் கூட கூடுதல் வெளிப்படைத்தன்மையுடனும், கடமையுணர்வுடனும், நம்

பள்ளிகள், நம் ஆசிரியர்கள், நம் குழந்தைகளின் வளர்ச்சிக்கென அது செலவிடப்படும்.

இது அரசுக்கும் உங்களுக்குமான நீடித்த உறவாக இருக்கும் என்று நான் உறுதியோடு கூறுகிறேன். உங்களுடைய சி.எஸ்.ஆர். நிதி பயனுள்ள முறையில் செலவிடப்படுவதை உறுதி செய்யுங்கள். எங்கள் தரப்பிலிருந்து உங்கள் பங்களிப்பை தமிழ்நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக பொறுப்புடன் பயன்படுத்துவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

நம்ம ஊர் பள்ளி தொடங்கி வைக்கும் இந்த நேரத்தில், உங்கள் இளமைக் காலத்தில் நீங்கள் பயின்ற பள்ளிக்கும், உங்கள் ஊருக்குமான உறவை, நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள Virtual pavilion வழியாகப் புதுப்பிக்குமாறு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை இந்த விழாவின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டிலும் உங்கள் சொந்த ஊரிலும் உங்கள் வேர்கள் வலுப்படவேண்டும். உங்களை வளர்த்த உங்கள் மண்ணுக்கு நீங்கள் செய்த, அதை நீங்கள் திருப்பிச் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு நம்ம ஸ்கூல் வாயிலாக, நம்ம பள்ளி வாயிலாக நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. நம்முடைய குழந்தைகள் வளர்ந்து உங்கள் நிறுவனங்களையும், பெருநிறுவனங்களையும், தமிழ்நாட்டின் கிராமங்களையும், நகரங்களையும் முன்னேற்றுவார்கள்; அவர்கள் நம் வளத்தையும், நம்பிக்கையையும் திட்டங்களையும் வளர்த்தெடுப்பார்கள்.

தமிழ்நாட்டில் அதிகம் கொண்டாடப்படும் இருவர் நம்ம ஊர் பள்ளி நடைபோட முன்வந்துள்ளதற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் தொழிற்துறையில் மிகச் சிறப்பான நிலையில், முன்னிலையில் இருக்கக்கூடிய திரு. வேணு சீனிவாசன் அவர்கள், இந்த நம்ம ஸ்கூல் பவுண்டேஷனின் தலைவராக இருப்பதும், பவுண்டேஷனின் தூதுவராக கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் இருப்பதும் நமக்கெல்லாம் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

அறிவுப்பூர்வமானவிளையாட்டானசெஸ்விளையாட்டு வீரராக தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பல்வேறு பெருமைகளை தேடித் தந்த திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களைவிட சிறந்த தூதுவர் வேறு யாரும் நிச்சயமாக இருக்க முடியாது என்று நாம் நம்புகிறோம்.

திரு. வேணு சீனிவாசன் அவர்களின் அறிவார்ந்த வழிகாட்டுதலிலும், திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் போன்ற ஒரு தூதுவரின் துணையோடும் நம் அரசுப்பள்ளிகளை மேலும் வலுப்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டுள்ள நம்ம ஸ்கூல், நம்ம பள்ளி பவுண்டேஷனுக்கு நிதியுதவி செய்து, பிறருக்கு எடுத்துக்காட்டாக, ஆதரவளிக்க ஒவ்வொருவரும் முன்வருவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நம்புவது மட்டுமல்ல, அதற்கு தொடக்கமாக நானே முதல் நபராக எனது சொந்த நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயை இந்தத் திட்டத்திற்காக நான் அளிக்கிறேன்.

நம்முடைய குழந்தைகளுடைய கல்விக்காக, பள்ளிகளின் வளர்ச்சிக்காகத்தான் இந்தத் திட்டம். ஆகவே என்னுடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், திரைக்கலைஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பரந்த உள்ளத்தோடு தன்னுடைய பங்களிப்பினை வழங்குமாறு இந்த நிகழ்ச்சியின் மூலமாக அன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்கள் ஒவ்வொரு ரூபாயும் அரசுப் பள்ளிகளுக்கே செலவிடப்படும் என உறுதி கூறுகிறேன். நம் பிள்ளைகளின் கல்விக்கென உங்களிடம் நிதியுதவி வேண்டி நிற்கும் இந்தக் கோரிக்கையை ஏற்று நம் பள்ளிக்கூடங்களை மேம்படுத்துவதற்காக வாரி, வாரி வழங்கிட வேண்டும். அரசுப் பள்ளிகளின் தரம் உயர்த்துவோம், நாம் காண விரும்பிய கனவுப் பள்ளியை நாம் உருவாக்குவோம்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள்
சென்னையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில்
“நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்” திட்டத்தை தொடங்கி
வைத்து ஆற்றிய உரை - 19.12.2022

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆதல் வேண்டும். அந்த வரிசையில் இசையிலும் தமிழிசை செழிக்க வேண்டும்

தமிழ் இசைச் சங்க விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களே,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. பி.கே. சேகர் பாபு அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்களே,

தமிழ் இசைச் சங்கத்தின் மதிப்பியல் செயலர் திரு. ஏ.சி. முத்தையா அவர்களே,

திருமதி வேதகி முத்தையா அவர்களே,

தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களே,

அறங்காவலர் திருமதி வள்ளி அருண் அவர்களே,

தமிழ் இசைச் சங்கத்தின் அறங்காவலர்களே,

விருது பெற்றிருக்கக்கூடிய பண் இசைப்பேரறிஞர் திரு. பா. சற்குருநாதன் ஓதுவார் அவர்களே,

இசைப்பேரறிஞர் துணை வேந்தர் திருமதி எஸ். சௌமியா அவர்களே,

மதிப்பிற்குரிய பத்மஸ்ரீ சீர்காழி சிவசிதம்பரம் உள்ளிட்ட அன்புக்குரிய பெரியோர்களே,

இசை ஆர்வலர்களே,

ரசிக பெருமக்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையை சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே,

நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் இசைச் சங்கத்தின் எண்பதாம் ஆண்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விழாவில் நானும் பங்கெடுத்து, விருதுகளை வழங்கி, அவர்களை வாழ்த்தக்கூடிய, ஒருசில நிமிடம் உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்று உங்கள் முன்னால் நிற்கிறேன். வாய்ப்பை பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தமிழிசை இன்று இந்தளவுக்குக் கொடி கட்டிப் பறக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்த தமிழிசைச் சங்கம்தான்.

அத்தகைய வரலாற்றுப் புகழ் பெற்ற, இந்த இராஜா அண்ணாமலை மன்றத்தில் நான் நின்று கொண்டு இருக்கிறேன், உங்களிடத்திலே உரையாடிக் கொண்டு இருக்கிறேன். இந்த அரங்கம் இங்கே கம்பீரமாக நிற்கிறது என்றால், இது வெறும் கட்டடம் அல்ல, கலைச் சின்னமாக நின்று கொண்டு இருக்கிறது! இசைச்சின்னமாக நின்று கொண்டு இருக்கிறது! தமிழ் அடையாளமாக நின்று கொண்டு இருக்கிறது! இந்தக் கட்டடம்தான், தமிழிசையை, கோட்டை கட்டிக் காத்த அரங்கம்! அப்படிப்பட்ட அரங்கத்தில், நாம் இன்றைக்கு நாமெல்லாம் மகிழ்ச்சியோடு கூடி இருக்கிறோம்.

பல நூற்றாண்டு காலமாக, நம்முடைய தமிழ் நிலப்பரப்பு, பல்வேறு பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கு ஆளானது. அந்நியர் ஆக்கிரமிப்பால், தமிழ்நாடு பாதிக்கப்பட்டது. அந்நிய இனத்தவர் படையெடுப்பால், நமது இனம் அதனுடைய உரிமையை இழந்தது. அந்நிய மொழிக்காரர்களின் ஊடுருவல் காரணத்தால், தமிழ் புறக்கணிக்கப்பட்டது. ஆதிக்க வர்க்கத்தினரால், தமிழர் புறக்கணிக்கப்பட்டனர். இப்படி பல்வேறு தாக்குதலால் தமிழ்நாடும் - தமிழினமும் - தமிழ் மொழியும் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்தச் சூழலில் தமிழினத்தின் உரிமையைக் காக்க, திராவிட இயக்கம் எழுந்தது.

தமிழ் மொழியைக் காக்க, மறைமலையடிகள் தலைமையில், தனித்தமிழ் இயக்கம் எழுந்தது.

தமிழ்க் கலையைக் காக்க, இந்தத் தமிழ் இசைச் சங்கம் எழுந்தது.

தனித்தமிழ் இயக்கமாக இருந்தாலும், தமிழிசை இயக்கமாக இருந்தாலும், அனைத்தையும் திராவிட இயக்கம் முழுமையாக ஆதரித்துப் போற்றியது.

தமிழ்நாட்டில், தமிழ் மேடைகளில், தமிழ்ப் பாட்டைப் பாடுவது, கேவலம் என்று நினைத்த ஒரு காலம் இருந்தது. தமிழில் பாடினால், மேடை தீட்டாகிவிடும் என்று நினைத்தார்கள். தமிழை நீசபாஷை என்று பழித்தார்கள். தமிழ்நாட்டில், தமிழ் மேடைகளில், தமிழில் பாட வேண்டும் என கோரிக்கை வைக்க வேண்டி இருந்தது.

தமிழில் பாடச் சொல்லி, இசை மேடைகளில் திராவிட இயக்கத்தினர் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். இதனால் வேறு வழியில்லாமல், ஒரு பாட்டு பாடுவார்கள். அதற்கு 'துக்கடா' பாட்டு என்று பெயர். தமிழையே துக்கடா ஆக்கி வைத்திருந்தார்கள்.

"தமிழ் நீசபாஷையாக இருந்தால், தமிழன் கொடுக்கும் காசு நீசக்காசு ஆகாதா?" என்று கேட்டார் தந்தை பெரியார் அவர்கள்.

1936ஆம் ஆண்டு, 'பண்டைத் தமிழிசை' குறித்து யாழ்நூலை இயற்றிய விபுலானந்தர் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையை, தந்தை பெரியார் தன்னுடைய 'விடுதலை' நாளிதழில் வெளியிட்டு பெருமைப்படுத்தினார். இதிலிருந்து இசை இயக்கம் என்பது அரசியல் முழக்கமாகவே மாறியது.

- ❖ மகாகவி பாரதியார்
- ❖ தமிழ்த்தாத்தா உ.வே.சா.
- ❖ புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

- மூதறிஞர் ராஜாஜி
- கல்கி கிருஷ்ணமூர்த்தி
- ரசிகமணி டி.கே.சி
- ஆர்.கே. சண்முகனார்
- பேரறிஞர் அண்ணா

ஆகியோர் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.

இதில் மகத்தான பங்களிப்பைச் செய்தவர்தான், இந்த மன்றத்தின் வாசலில் கம்பீரமாக நிற்கிறாரே அண்ணாமலை அரசர் அவர்கள். தமிழிசைக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார். அரசர் என்றால், தமிழிசையைக் காத்த அரசர் அவர். தமிழிசையை அந்த தமிழிசை மேடையைக் காத்த அரசர் அவர். பிறமொழி படையெடுப்பைத் தடுத்த அரசர் அவர்.

அரசர் அண்ணாமலை அவர்கள் தமிழ் இசைச் சங்கத்தைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, 1940ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவின் போது 16 ஆயிரம் ரூபாய் வழங்கினார்கள்.

1943ஆம் ஆண்டு தமிழிசைச் சங்கமாக அது உருவாக்கப்பட்டது. தமிழிசைச் சங்கத்திற்கு 1952ஆம் ஆண்டு இந்த ராஜா அண்ணாமலை மன்றம் உருவானது. அதாவது நான் பிறப்பதற்கு முதலாண்டு, இன்றைக்கு நான் எண்பதாவது ஆண்டு விழாவில் வந்து பங்கெடுத்திருக்கிறேன்.

இந்தத் தமிழிசை இயக்கத்தில், ராஜா அண்ணாமலை அவர்களின் குடும்பத்தின் பங்களிப்பு யாராலும் மறக்க முடியாது, மறைக்கவும் முடியாது!

❖ ராஜா சர் அண்ணாமலையாரைப் போலவே, அவருடைய புதல்வர்களான ராஜா சர் முத்தையா அவர்களும், எம். ஏ. சிதம்பரம் அவர்களும் இசைக்குத் தொண்டு ஆற்றினார்கள்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி சிறையில் இருந்தபோது தாளமுத்து மரணம் அடைந்தார். அவரது உடலை இடுகாட்டுக்குத் தனது தோளிலே தூக்கி வந்தவர்களில் ஒருவர்தான் ராஜா சர் முத்தையா அவர்கள். இத்தகைய தமிழ்மொழிக் குடும்பம் தான் இது.

அதன்பிறகு இவர்களது வாரிசுகள், குடும்ப வாரிசுகளாக மட்டுமல்லாமல், இசை வாரிசுகளாகவும் செயல்பட்டார்கள். இம்மன்றத்தின் மதிப்புறு செயலாளராக இருக்கும் மரியாதைக்குரிய ஏ. சி. முத்தையா அவர்களும், தனது இசை வளர்க்கும் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்கள். மரியாதைக்குரிய எம். ஏ. எம். ராமசாமி அவர்கள், தனது வாழ்நாள் முழுவதும், இசை நிகழ்ச்சிகளை தொடர்ந்து ஊக்குவித்து வந்தார்கள். இந்தக் குடும்பம் இந்தத் தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக வழங்கியவை மூன்று சொத்துகள்!

❖ ஒன்று - கல்வி வளர்ச்சிக்காக உருவாக்கியது, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்!

❖ இரண்டு - தொழில், நிதி நிருவாகத்துக்காக உருவாக்கியது, இந்தியன் வங்கி!

❖ மூன்று - இசைக்காகத் தமிழிசை மன்றங்கள்!

இவை அனைத்தும் தகுதிநிறைந்த வாரிசுகளால், மிகச்சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது! இதனை இங்கே நினைவுறுத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

தமிழிசைச் சங்கத்தின் 55ஆவது ஆண்டு விழாவில், அதாவது 1998ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 58ஆவது ஆண்டு விழாவில் 2000ஆம் ஆண்டில் நான் கலந்து கொண்டிருக்கிறேன் சென்னை மாநகரத்தினுடைய மேயராக. அப்போதும் இசைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் வாய்ப்பைப் பெற்றேன். இன்று முதல்வராக வந்துள்ளேன்.

இது தமிழ் இசை மன்றம் என்பதால், தமிழிசையை நான் அதிகம் வலியுறுத்தத் தேவையில்லை. தொய்வில்லாமல் தொடருங்கள் என்பதுதான் எல்லோருடைய விருப்பம். அதைத்தான் நான் நினைவுப்படுத்துகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு மியூசிக் அகாடமி ஹாலில் சொன்னதை இங்கே மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆதல் வேண்டும். அந்த வரிசையில் இசையிலும் தமிழிசை செழிக்க வேண்டும்." இது குறுகிய எண்ணம் கிடையாது. மொழி தான் ஒரு இனத்தினுடைய இரத்த ஓட்டம். மொழி அழிந்தால், இனமும் அழிந்து போகும். எனவேதான் தமிழின் வளர்ச்சியும், தமிழனின் வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை! அதனால் பிறமொழி ஆதிக்கத்தை எதிர்ப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

பிறமொழி மீதான வெறுப்பு அல்ல அது!

ஒருவர் விரும்பினால் எத்தனை மொழி வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். ஆனால் திணித்தால் எதையும் ஏற்கமாட்டோம் என்பதே நம்முடைய மொழிக் கொள்கை!

அந்த வகையில் இதுபோன்ற தமிழிசை மன்றங்களின் பணி மிக மிக மிக மகத்தானதாக அமைந்திருக்கிறது.

ஒரு மன்றம் அல்ல, இது போல பல மன்றங்கள் தோன்ற வேண்டும். இசை மன்றங்கள், கலை மன்றங்கள், தமிழ் மன்றங்கள் உருவாக வேண்டும். அதற்கு மரியாதைக்குரிய நம்முடைய ஏ. சி. முத்தையா அவர்கள் தலைமையிலான தமிழிசை மன்றம் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டு இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கெடுப்பதில் நான் மீண்டும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். மியூசிக் அகாடமி ஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் நிறைவாக பேசுகிறபோது சொன்னேன், முதலமைச்சராக பொறுப்பேற்று எவ்வளவு பணிகள் செய்து கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியும். அதை நான் நினைவுபடுத்த அவசியமில்லை. கொரோனாவை சந்தித்தோம், புயலை சந்தித்தோம், மழையை சந்தித்தோம், வெள்ளத்தை சந்தித்தோம், இப்படி பல பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆக ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் ஒரே டென்ஷனாக இருக்கக்கூடிய நேரத்தில் ஒரு மன அமைதி, ஒரு மன நிம்மதி இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் பெறுகிறேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில்
நடைபெற்ற தமிழ் இசைச் சங்கத்தின் 80ஆம் ஆண்டு
விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை - 21.12.2022

திராவிட இயக்கத்தின் எழுச்சியை அறிவதற்கு கலைஞரை பற்றி படித்தால் போதும்

கலைஞர் மு. கருணாநிதி வரலாறு மற்றும் திராவிடமும் சமூக மாற்றமும் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களே,

மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

வாழ்த்துரை வழங்கி அமர்ந்துள்ள இந்து குழுமத்தின் தலைவர் என்னுடைய மதிப்பிற்குரிய திரு. என். ராம் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய நாடாளுமன்ற குழுவின் துணைத் தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர், என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் திரு. என்.ஆர். இளங்கோ அவர்களே,

திராவிடமும் சமூக மாற்றமும்" என்ற நூலின் ஆசிரியரும், மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவருமான பேரன்பிற்குரிய பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்களே,

"கலைஞர் மு. கருணாநிதி வரலாறு" என்ற நூலின் ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்களே,

வ.உ.சி. நூலக நிறுவனர் கவிஞர் இளையபாரதி அவர்களே,

மாநில திட்டக்குழு முழு நேர உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்களே,

முன்னாள் ஆளுநர், ஆளுநருக்கெல்லாம் எடுத்துக் காட்டக்கூடிய வகையில் விளங்கிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்களே,

நம்முடைய திராவிட இயக்கத்தின் எழுத்தாளர் அண்ணன் திருநாவுக்கரசு அவர்களே,

நிறைவாக நன்றியுரை ஆற்றவுள்ள திரு. சந்தியா நடராஜன் அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய ஆன்றோர் பெருமக்களே, சான்றோர்களே,

புத்தக வாசகர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே,

தமிழ்நாட்டுக்கும் - தமிழினத்துக்கும் தேவையான மாபெரும் அறிவுக் கருவூலமான இரண்டு புத்தகங்களை இன்று நான் வெளியிட்டிருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் நானும் உங்களோடு பங்கேற்று புத்தகங்களை வெளியிட்டு அதே நேரத்தில் வாழ்த்தக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவரான – நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. ஏ. எஸ். பன்னீர்செல்வன் அவர்கள் எழுதி, உலகப் புகழ்பெற்ற பதிப்பகமான பென்குயின் வெளியிட்டிருக்கக்கூடிய புத்தகம்தான் 'Karunanidhi - A Life'!

இந்தியாவின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்களில் ஒருவரான, நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முனைவர் திரு. ஜெயரஞ்சன் அவர்கள் எழுதி, கயல்-கவின் பதிப்பகம் வெளியிட்ட புத்தகம்தான் 'A Dravidian Journey'!

இந்த இரண்டு புத்தகங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இன்று இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. இவை இரண்டையும் புத்தகங்கள் என்றல்ல; 'அறிவுக் கருவூலங்கள்' என்றுதான் நாம் சொல்ல வேண்டும்! இவை தமிழினத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய, திராவிட இயக்கத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய கொடைகள் மட்டுமல்ல, 'போர்வாட்கள்' என்றுதான் நாம் சொல்ல வேண்டும்!

ஏனென்றால், இதனை எழுதியிருக்கும் திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்களாக இருந்தாலும் சரி, திரு.ஜெயரஞ்சன் அவர்களாக இருந்தாலும், அவர்களெல்லாம் சாதாரணமானவர்கள் அல்ல; தமிழினத்திற்கும் அறிவியக்கமான திராவிட இயக்கத்திற்கும் கிடைத்துள்ள புதையல்கள் என்று சொன்னால்கூட அது மிகையாகாது.

யார் அறிவாளி என்பதற்கு இந்திய அறிவுலக மேதையான புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், “எவர் ஒருவரின் அறிவு, அவர் வாழும் சமுதாயத்துக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அவர்தான் உண்மையான அறிவாளி!” என்று சொல்லி இருக்கிறார்.

அந்த வகையில் பார்த்தால், தங்களது அறிவையும், ஆற்றலையும், சிந்தனைத் திறனையும் இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவர்கள்தான் நம்முடைய பன்னீர்செல்வன் அவர்களும், திரு. ஜெயரஞ்சன் அவர்களும்!

திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்கள் தலைவர் கலைஞருக்குப் பிடித்த மிக நெருக்கமான பத்திரிகையாளர். சில பத்திரிகையாளர்கள் முதலமைச்சராக இருக்கும்போது மட்டும் நெருக்கமாக இருப்பார்கள், நெருங்கி வருவார்கள். பன்னீர்செல்வன் அவர்கள் அப்படிப்பட்டவர் அல்ல. தலைவர் கலைஞர் அவர்களுக்கு எப்போதெல்லாம் நெருக்கடி ஏற்படுகிறதோ, அவர் மீது விமர்சன அம்பு எப்போதெல்லாம் பாய்கிறதோ, அதற்குப் பதில் சொல்வதற்கு முன்வரும் ஒரு பேனா போராளிதான் நம்முடைய திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்கள்.

நடுநிலையான பத்திரிகையாளர்கள் என்ற போர்வையில் திராவிட இயக்கத்தைக் கொச்சைப்படுத்தி எழுதுவதை மட்டுமே தங்களது பணி என்றும், அதனால் சிலரிடம் கிடைக்கும் அங்கீகாரம்தான் தங்களுக்கான வாழ்நாள் பாராட்டென்றும் நினைப்பவர்கள் இந்தக் காலத்தில் உண்டு,

எந்த காலத்திலும் உண்டு. அப்படிப்பட்ட காலத்தில், நேர்மறையாகப் பார்த்து எழுதி, நடுநிலையாளர்கள் மனதில் திராவிட இயக்கம் குறித்த சரியான பார்வையை விதைக்க பன்னீர்செல்வன் அவர்களின் ஆங்கில எழுத்துகள் பயன்பட்டிருக்கின்றன, தொடர்ந்து பயன்பட இருக்கின்றன.

நமது பன்னீர்செல்வன் அவர்கள் தி இந்து, அவுட்லுக் உள்ளிட்ட முன்னணி ஆங்கில இதழ்களில் பணியாற்றியவர். தி இந்து ஆங்கில நாளிதழில் "ரீடர்ஸ் எடிட்டராக" ஒன்பது ஆண்டுகள் இருந்தவர். பனோஸ் தெற்காசியா அமைப்பின் நிருவாக இயக்குநராகவும், உலகளாவிய வழிநடத்தல் குழு உறுப்பினராகவும் இருந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ராய்ட்டர்ஸ் பெல்லோஷிப்புக்குத் தேர்வானவர். 200-க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி இருக்கக்கூடியவர். தற்போது சென்னை ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ஆய்வுப் பிரிவுத் தலைவராக இருக்கக்கூடியவர். இப்படி எங்கே, எத்தனை பொறுப்புகளில் இருந்தாலும் தன்னைத் திராவிட இயக்கத்தவன் என்று பெருமையோடு பெருமைப்படுத்திக் கொள்வதிலே அவருக்கு ஈடு அவர்தான்.

நம்முடைய பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை, அறிமுகம் தேவையில்லை.செய்தித் தொலைக்காட்சிகள் வாயிலாகவும், சமூக வலைதளங்கள் வாயிலாகவும் அந்த அளவுக்கு அவர் வெகுமக்களிடையே பிரபலமாகி விட்டவர். பொய்யையும், புனைசுருட்டையும், அவதூறுகளையும் சொல்லி திராவிட

இயக்கத்தைக் கொச்சைப்படுத்தி வந்தவர்களுக்கு, தமிழிலும் ஆங்கிலத்திலும் மடார் மடார் என்று தலையில் கொட்டிப் பதில் சொன்னவர் அவர், உண்மைகளை உரக்க சொன்னவர் ஜெயரஞ்சன் அவர்கள்தான்.

பொருளாதாரம் என்றாலே, சில ஆங்கிலச் சொற்களை வைத்துக் கொண்டு சிலர் மிரட்டினார்கள். ஆனால், அவர்களது சொற்களையே உள்வாங்கி, அவர்கள் மீதே திருப்பி எறியக்கூடிய வித்தைக்காரர் நம்முடைய ஜெயரஞ்சன் அவர்கள். இதுபோன்ற விவாதங்கள் வரும்போது, நானே பலமுறை அவரை தொலைபேசியில் அழைத்து பாராட்டியிருக்கிறேன், நன்றி சொல்லி இருக்கிறேன்.

சோஷியல் மீடியா வளர்ந்து வந்த இந்த நேரத்தில் திமுக மீதான பொய்யான தாக்குதலை தடுத்த மாபெரும் கேடயம்தான் நம்முடைய ஜெயரஞ்சன் அவர்கள். இந்த அளவு சிந்தனைகளும் அறிவு கூர்மையும் கொண்டவர் நம்மோடு இருக்க வேண்டும் என்று நினைத்துதான், ஆட்சிப் பொறுப்பேற்றதும் மாநில திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக அவரை அரசின் சார்பிலே நாம் நியமித்தோம்.

இன்று அரசு கொள்கை வகுப்பதில், ஆலோசனைகளை வழங்குபவர்களில் ஒருவராக அவர் இருக்கிறார்.

தமிழினத்தின் மேன்மையை எந்தவகையில் எல்லாம் செயல்படுத்த முடியும் என்று வழிகாட்டுபவராக - அப்படி நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கக்கூடியவராக நம்முடைய ஜெயரஞ்சன் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த இருவர் தங்களது அறிவுப்பங்களிப்பை நமக்கு வழங்கி இருக்கிறார்கள்.

ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலை கலைஞர் மு.கருணாநிதி வரலாறு என்ற தலைப்பில் சந்தியா நடராசன் அவர்கள் சிறப்பாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். தலைவர் கலைஞருக்குப் பிடித்த கவிஞர்களில் ஒருவராக இருக்கக்கூடிய இளையபாரதியின் வ.உ.சி. நூலகம் இதனை அழகாக வெளியிட்டுள்ளது.

தலைவர் கலைஞரைப் பற்றி எத்தனையோ நூல்கள் வந்திருக்கின்றன. அவற்றில் முதன்மையான நூல்களில் இந்த நூலும் நிச்சயமாக இடம்பிடித்திருக்கிறது. ஏனென்றால் இது விமர்சனப் பார்வையுடன் அமைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, பொதுப்படையான அரசியல் வரலாற்று ஆய்வாளர்களும் படிக்கத்தக்க வகையில் செம்மையாக எழுதப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, நம்முடைய இந்து ராம் அவர்கள் சொன்னதுபோல, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த நிலைப்பாடுகள் பற்றி விரிவாக தனது நேரடி அனுபவங்களின் மூலமாக நம்முடைய பன்னீர்செல்வன் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது' என்று பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகத்தைக் காட்டி, "எனக்கும்

இங்கேதான் உறங்க வேண்டும்” எனக் கலைஞர் அவர்கள் மிக உணர்ச்சிவயமாகச் சொல்லும் பகுதி இந்த நூலில் வருகிறது. அதைப் படிக்கும்போது தலைவர் கலைஞரின் மறைவிற்குப் பிறகு, அவர் விரும்பிய இடத்தைப் பெற்றுத் தர நடத்திய போராட்டம் இன்றைக்கும் என்னுடைய கண்முன் வருகிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் யார் என்பதை இந்த நூலின் ஆசிரியர் அடையாளப்படுத்துகிறார். நவீன தமிழகத்தை உருவகப்படுத்தினால் அதுதான் கலைஞர் என்று சொல்கிறார். இதைவிட யாராலும் சரியாக சொல்ல முடியாது.

“திராவிட இயக்கத்தின் எழுச்சியை ஒருவர் அறிய வேண்டுமா? கலைஞரைப் பற்றிப் படித்தால் மட்டுமே போதும்.” தலைவர் கலைஞர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான தனிமனிதர்களோடு தனது தனிப்பட்ட உறவைப் பேணி வளர்த்து வந்திருக்கிறார், ஒவ்வொருவருக்கும் கலைஞரைப் பற்றிச் சொல்ல ஒரு கதை இருக்கிறது என்கிறார்.

நிலப்பிரபுத்துவக் காலக்கட்டத்தில் திருக்குவளை என்ற சிறு கிராமத்தில் பிறந்த ஒரு சிறுவன் - நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கும் சிற்பியாக எப்படி மாறினான் என்பதை முழுமையாகச் சொல்லும் முதன்மை நூல்தான் இந்த நூல். இடையிடையே கலைஞருக்கும் ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்களுக்கும் உரையாடல்கள் பல வருகின்றன. இது மிக அருமையாக இருக்கிறது. கலைஞரைப் பற்றிய பிற நூல்களில் இருந்து இந்த நூல் வேறுபடுவதற்கும், மேம்பட்டதாக இருப்பதற்கும் இது ஒரு முக்கியக் காரணம்.

"ஒவ்வொருவருக்கும் 3 வாழ்க்கை உண்டு. ஒன்று பொது வாழ்க்கை, இரண்டாவது தனி வாழ்க்கை, மூன்றாவது ரகசிய வாழ்க்கை..." என்று கொலம்பியா எழுத்தாளர் மார்க்வேல் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய மார்ட்டின் கூறியதை பன்னீர்செல்வன் தலைவர் கலைஞரிடத்திலே சொல்லியிருக்கிறார்.

அப்போது கலைஞர் அவர்கள், 'பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு நான்காவதாக ஒரு வாழ்க்கை இருக்கிறது. அதுதான் அவர் வாழ விரும்பிய வாழ்க்கை' என சொல்லியிருக்கிறார். எவ்வளவு ஆழமான, அழகான கருத்து.

ஒருவர் எழுதும் தன் வரலாறு நூலில் அந்த நான்காவது வாழ்க்கை பற்றிப் புலப்படும்" என்று கலைஞர் கூறுகிறார். அதற்கு, 'உங்கள் நூலில் நீங்கள் வாழ விரும்பிய வாழ்க்கையை விவரிக்கும் பகுதி எது?' என்று பன்னீர்செல்வன் கேட்கிறார். அப்போது கலைஞர் சொல்கிறார், 'அதை நீயே கண்டுபிடித்துக்கொள்' என்கிறார் கலைஞர்.

தலைவர் கலைஞர் அவர்கள் வாழ விரும்பிய வாழ்க்கை என்ன என்று நான் சிந்தித்தேன்... தான் இல்லாத பிறகும் தான் நினைக்கப்பட வேண்டும் என்பதுதான் கலைஞர் அவர்கள் விரும்பிய வாழ்க்கையாக இருக்கக்கூடியது. அதற்கான உழைப்பைத்தான் அவர் தன் வாழ்நாள் முழுவதும் அளித்தார்.

இதை வைத்துப் பார்க்கும்போது கலைஞர் அவர்களது வாழ்க்கை நிகழ்காலத்தில் நிறைவாகவே இருக்கிறது.

இந்நூலை எழுதியமைக்காக திரு.ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் என்னுடைய பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞரது வாழ்க்கை மூலமாக தமிழ்நாட்டைப் பார்க்கும் வகையில் பன்னீர்செல்வன் அவர்களின் நூல் அமைந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சியின் வழியாக திராவிட இயக்கத்தைப் பார்க்கக்கூடிய நூலாக ஜெயரஞ்சன் அவர்களுடைய நூலும் அமைந்திருக்கிறது.

தான் இதுவரை எழுதிய சில கட்டுரைகளை மொழிபெயர்த்து 'திராவிடமும், சமூக மாற்றமும்' என்ற தலைப்பில் ஜெயரஞ்சன் அவர்கள் புத்தகமாக கொண்டு வந்துள்ளார். இதனைக் கயல்-கவின் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

திராவிடமும் சமூகமாற்றமும் என்பது இந்த புத்தகத்தின் தலைப்பு. திராவிடம் என்றாலே சமூக மாற்றம்தான். சமூக மாற்றம் என்றாலே அது திராவிடத்தால் விளைந்ததுதான்.

அவரது ஆய்வுக் கட்டுரைகள் அனைத்துமே கிராமத்தை, கிராமப்புற மக்களைப் பற்றியதாகவே அமைந்துள்ளது. பல கிராமங்களில் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தி, இவை திராவிட இயக்கம் கொண்டு வந்த பல்வேறு சமூகநலத் திட்டங்களால் ஏற்பட்ட மாற்றம் என்பதை மிகச் சரியாக அவர் சொல்லி இருக்கிறார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கியும், அதிகப்படியான பொதுவிநியோகக் கடைகளைத் திறந்தும் - தலைவர் கலைஞர் உருவாக்கிக் கொடுத்த திட்டங்கள் சமூகமாற்றத்துக்கு வழிவகுத்ததை ஆதாரங்களுடன் ஜெயரஞ்சன் அவர்கள் இதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். அதேநேரத்தில் நாம் இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது என்பதையும் ஜெயரஞ்சன் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

"சமூகச் சீர்திருத்தத்தை முன்வைத்துப் போராடிய தந்தை பெரியார் வழிவந்த அரசியல் கட்சிகள் பல்லாண்டுகளாக தமிழகத்தை ஆண்டாலும் தீண்டாமை நீடிக்கவே செய்தது" என்று தனது நூலில் 77ஆவது பக்கத்தில் அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அந்த ஆயிரம் ஆண்டு சமூக அழுக்கை ஒழிக்கத்தான் நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். மாற்றம் என்பது ஒரே நாளில் நிகழக்கூடியதல்ல. அதனை நாமும் அறியாதவர்கள் அல்ல. மாற்றத்தை நோக்கித்தான் நாம் உழைக்கிறோம்.

அதனால்தான், சாதியின் பேரால் தொடக்கூடாது - கண்ணில் படக்கூடாது – தெருவில், கோயிலில் நுழையக் கூடாது என்பதெல்லாம் உடைத்து நொறுக்கப்பட்டு விட்டன.

கல்வியும் படிப்பும், வேலையும் பதவியும் - ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கையில் அதிகாரம் செலுத்தும் லகானைக்

கொடுத்துவிட்டது. இதுதான் திராவிட இயக்கம் ஏற்படுத்தியுள்ள மாற்றம்!

கல்வி, வேலைகள், அரசாங்கம், அதிகாரம், நிருவாகம், அறிவு என பலவும் ஜனநாயகமயமானது. இந்த முன்னோக்கிய பாய்ச்சலில்தான் சமூகம் ஜனநாயகமயமாக வேண்டும்.

நமது திராவிட மாடல் கொள்கையில் அதனைத்தான் சொல்லி இருக்கிறோம். கல்வியில், தொழிலில், உள்கட்டமைப்பில், சிந்தனையில் மட்டுமல்ல, சமூகத்திலும் சேர்த்து வளர்வதுதான் உண்மையான வளர்ச்சி என்று சொல்லி இருக்கிறோம்.

''கலைஞர் பாணி சமூகநீதிக்கும் - மதச்சார்பற்ற அரசியலுக்கும் இனி ஆற்றல் அற்றுப் போகும்'' என்று 1991ஆம் ஆண்டு துக்ளக் ஆசிரியர் சோ. இராமசாமி சொன்னதாக பன்னீர்செல்வன் எழுதி இருக்கிறார்.

கலைஞர் பாணி சமூகநீதிக்கும் - மதச்சார்பின்மைக்கும் - சுயமரியாதைக்கும் - மாநில சுயாட்சிக்கும் - மொழி இன உரிமைக்கும் ஆற்றல் என்றும் அற்றுப் போகாது என்பதன் அடையாளம்தான் இன்றைய திராவிட மாடல் ஆட்சி!

ஆற்றல் அற்றுப் போய்விடவில்லை என்பதன் அடையாளம்தான் இத்தகைய புத்தகங்கள். சுயமரியாதை - சமதர்ம அரசியலை எந்நாளும் உயர்த்திப் பிடிப்போம்.

இத்தகைய சிந்தனைகளை விதைக்கவும் உருவாக்கவும் ஏ. எஸ். பன்னீர்செல்வன் போல, ஜெயரஞ்சன் போல

ஏராளமான சிந்தனையாளர்கள் தேவை. இதுபோன்ற புத்தகங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அதிகம் தேவை.

ஜெயரஞ்சன் அவர்கள் ஏற்புரையாற்றும்போது குறிப்பிட்டுச் சொன்னார், 'நீங்கள் கட்டளையிடுங்கள் என்று' கட்டளையிட வரவில்லை, உங்களோடு சேர்ந்து பணியாற்ற வந்திருக்கிறோம்.

அதே நேரத்தில் என்னுடைய அன்பான வேண்டுகோளாக, தமிழ் புத்தகங்களை ஆங்கிலத்திலும் - ஆங்கிலப் புத்தகங்களை தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். அதுதான் உங்களுக்கு இருக்கக்கூடிய பெரும் கடமை. எனவே, இந்த நூல் வெளியீட்டு விழா என்பது உங்களது அறிவுப் பணியினுடைய தொடக்கக் காலம்தான். உங்களது அறிவுப் பணியை நீங்கள் இருவரும் மேலும் இதே வீரியத்தோடு மேலும் தொடர வேண்டும் என்று உரிமையோடு கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்
நடைபெற்ற கலைஞர் மு. கருணாநிதி வரலாறு மற்றும்
திராவிடமும் சமூக மாற்றமும் நூல் வெளியீட்டு
விழாவில் ஆற்றிய உரை - 24.12.2022

ரூ.50 கோடியில்
2,500 கிராமப்புறக் கோயில்களில் திருப்பணிகள்

2,500 திருக்கோயில்களுக்கு ரூ.50 கோடி நிதி வழங்கக்கூடிய விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களே,

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. அ. வெற்றியழகன் அவர்களே,

திரு. ஜோசப் சாமுவேல் அவர்களே,

திரு. தாயகம் கவி அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய சுற்றுலா, பண்பாடு மற்றும்

அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., அவர்களே,

இந்து சமய அறநிலையங்கள் துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே,

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு சேர்த்து கொண்டிருக்கக்கூடிய தவத்திரு கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களே,

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களே,

தவத்திரு மருதாச்சல அடிகளார் அவர்களே,

தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் அவர்களே,

அழகிய மணவாள சம்பத்குமார இராமானுஜ ஜீயர் அவர்களே,

அரசு உயர் அதிகாரிகளே,

மாநகராட்சி மன்ற உறுப்பினர்களே,

ஆன்மிக பெருமக்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

2022ஆம் ஆண்டு மட்டும் அதாவது கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 640-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்திருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன், கடந்த

ஆண்டு மட்டும் நான் 640-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறேன். இந்த 640-இல் 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். 95-க்கும் மேற்பட்டவை கழக நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள். மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 8 ஆயிரத்து 550 கிலோ மீட்டருக்கு மேல் நான் சுற்றி வந்திருக்கிறேன்.

மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டிருக்கக்கூடிய உதவிகள் மூலம் ஒரு கோடியே 3 லட்சத்து 74 ஆயிரத்து 355 பேர் பயனடைந்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் இவர்கள்.

இந்த புள்ளிவிவரத்தை கடந்த வாரம் நான் திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் விளக்கமாக சொல்லி இருக்கிறேன். எந்தத் துறை சார்பில் நிகழ்ச்சிகளில் நான் அதிகம் கலந்து கொண்டிருக்கக்கூடிய விபரம், அதில் முக்கியமாக சொல்ல வேண்டுமென்றால், உள்துறை சார்ந்த அதாவது என் பொறுப்பில் இருக்கக்கூடிய உள்துறை, காவல்துறை. அந்த உள்துறை சார்ந்த நிகழ்ச்சிகள்தான் அதிகம், 32 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். மற்ற துறைகளில் அதிகமாக நான் கலந்து கொண்டது தொழில் துறை. அந்தத் தொழில் துறையில் 30 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கடுத்து இருக்கிறது எது என்று கேட்டீர்கள் என்றால், இந்து சமய அறநிலையத் துறைதான்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 25 நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வெற்றிக்குக் காரணமான நம்முடைய செயல்பாபு என்று போற்றப்படக்கூடிய சேகர் பாபுவை நான் பாராட்டுகிறேன். அவர் நினைக்கலாம், என்ன, மூன்றாவது இடத்தில் தானே இருக்கிறோம், முதலிடத்திற்கு வரவேண்டுமே என்பதற்காக நாளையில் இருந்து வாராவாரம் தேதி கேட்டுவிடக் கூடாது, அதற்கு இப்போதே அவர் திட்டம் போட்டிருப்பார், அதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். அனைத்து துறையும் வளர்வதுதான், வளர வேண்டும் என்று எண்ணுவது தான் திராவிட மாடல் ஆட்சி என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு திராவிடம் என்ற சொல்லைப் பிடிக்காதவர்கள், என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எங்களை மதத்தின் விரோதிகளாகச் சித்தரிக்கிற முயற்சிகளில் நிறைய ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் மிகுந்த பணிவோடு இந்த விழாவின் மூலமாக தெரிவிக்க விரும்புவது, நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரிகளே தவிர, மதத்திற்கு எதிரிகள் அல்ல. இதை அறியவேண்டியவர்கள் அறிந்து கொண்டால் போதும், இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை இந்த நிகழ்ச்சியை நேரடியாக வந்து பார்க்க முடியாது அவர்களால், ஏனென்றால் அவர்கள் மிகப்பெரிய இடத்தில் இருக்கிறார்கள்.ஆனால்,நிச்சயம் தொலைக்காட்சி மூலமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள், நாளைக்கு காலையில் பத்திரிகையிலும் பார்ப்பார்கள். ஆக, இதை அவர்கள் உணர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

2,500 கிராமப்புறக் கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதி கோயில்களின் திருப்பணிக்குத் தலா 2 இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கக்கூடிய விழா இது. 50 கோடி ரூபாய் நிதி வழங்கக்கூடிய நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக, எழுச்சியோடு நம்முடைய ஆதீனங்களெல்லாம் பாராட்டக்கூடிய வகையில் இந்த நிகழச்சி நடந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் இருக்கக்கூடிய மிக முக்கியமான ஆன்மிகப் பெரியவர்கள், அருள் நெறியாளர்கள் முன்னிலையில் இந்த கோயில்களுக்கான நிதியை அரசின் சார்பில் நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

நம்முடைய கழக ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இந்த விழா. இந்தத் திருக்கோயில் பணிகளைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், நாங்களாக எதையும் செய்யவில்லை. இதற்கான வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படிதான் இதையெல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழைய நிலையில் இருக்கக்கூடிய அந்தக் கோயில்களை புதுப்பிக்க, அப்படி புதுப்பிக்கும் நேரத்தில், பழமை மாறாமல் அதை சீர்செய்ய குடமுழுக்கு விழாவை நடத்த இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதே போல் கோயிலுக்கு வரும்

பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஒப்புதல் பெற்ற பிறகுதான் இந்த செயல்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3,986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களைப் பழமை மாறாமல் சீர்செய்வதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

திருக்கோயில்களுக்கு சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நம்முடைய இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, அமைச்சர் சேகர் பாபு அவர்கள் ஏராளமான அறிவிப்புகளைச் செய்தார். சட்டமன்றத்தில் அறிவிக்க நேரம் இல்லாமல் - முக்கியமானதை மட்டும்தான் அறிவித்தார். மற்றவைகளை, பேசியதாக பதிவு செய்ததாக அவர் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்.

இந்த நிகழ்ச்சிக்கு தயாராகும்போது, அப்படி அறிவிக்கப்பட்டதில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் சேகர்பாபுவிடம் நான் கேட்டேன். அவர் சொன்னார்,

2021-2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 112 அறிவிப்புகளில் 91 அறிவிப்புகளின் மூலம் 3,769 திருக்கோயில்களில் திருப்பணிகளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2022-2023ஆம் ஆண்டிற்கான 165 அறிவிப்புகளில் 135 அறிவிப்புகளின் மூலம் 2,578 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது – என்றும் பெருமையோடு எடுத்துச் சொன்னார். இதற்காக நான் அவரை உங்கள் அனைவரின் சார்பில், அரசின் சார்பில் மனதார பாராட்டுகிறேன். அவரை மட்டுமல்ல, அவருக்கு துணைநின்ற துறையின் செயலாளர், ஆணையர், அதிகாரிகள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

2022–2023ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் இடம் பெறாத அறிவிப்புதான் இப்போது செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இது அறிவிக்கப்படவில்லை. ஆக, சொன்னதை மட்டுமல்ல,' சொல்லாததையும் செய்யக்கூடிய ஆட்சி தான் இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த

நிதியாண்டில் மட்டும் 5,078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதைத்தான் நம்முடைய அரசு விரும்புகிறது, இதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம்.

திருவாரூரில் பல்லாண்டு காலமாக ஓடாமல் இருந்த தேரை ஓட வைத்த பெருமை யாருக்கு என்று கேட்டீர்களானால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் தான். தேர் வரும் பாதையைச் சுற்றிலும் சாலைகள் அமைக்கப்பட்டன.தேர் ஓடுவது சில நாட்கள்தான், ஆனால் மக்கள் 365 நாளும் தொடர்ந்து அந்த சாலையைப் பயன்படுத்துகிறார்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை மேடையில் வைத்துக் கொண்டே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

கோயில்கள் நமது கலைச் சின்னங்களாக, பண்பாட்டுச் சின்னங்களாக இருக்கின்றன. நமது சிற்பத் திறமைக்கான சாட்சியங்களாக இருக்கின்றன. நமது கலைத் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, கண்ணும் கருத்துமாக அதைக் காப்பது நம்முடைய அரசினுடைய கடமை என்று எண்ணி இன்றைக்கு நாம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய கோயில்கள் சமத்துவம் உலவும் இடங்களாக அமைய வேண்டும் என்பதிலே நமது முழு கவனம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. நன்றாக கவனியுங்கள், எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. அதற்குத்தான் “அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்” என்ற சட்டத்தை நாம் கொண்டு வந்தோம்.

அன்னைத் தமிழ் மொழி ஆலயங்களில், நம்முடைய தமிழ் மொழி ஒலிக்க வேண்டும் என்ற உத்தரவையும் போட்டு இருக்கிறோம்.

சமூக சமத்துவம் கொண்டவைகளாக நமது ஆலயங்கள் திகழ வேண்டும்.

மனிதர்களில் மட்டுமல்ல கோயில்களிலும் நகரக் கோயில் - கிராமக் கோயில் என்றும் - பணக்காரக் கோயில் - ஏழை கோயில் என்றும் வேறுபடுத்திச் சொல்லப்படுகிறது.

கிராமப்புறக் கோயிலாக இருந்தாலும் - ஏழ்மையான கோயிலாக இருந்தாலும் - ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கும் கோயிலாக இருந்தாலும் - அனைத்தையும் ஒன்று போலக் கருதி, உதவி செய்யக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு.

மதம் - சாதி வேற்றுமை மட்டுமல்ல - கோயில் - சாமி வேற்றுமையும் இந்த அரசுக்கு இல்லை. அனைத்து இறைத் தலங்களையும் கண்ணும் கருத்துமாக நாம் இன்றைக்கு கவனித்து வருகிறோம். அதனால்தான் இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய சமயச் சான்றோர்கள் மட்டுமல்ல, இன்னும் பலரும் இந்த அரசை ஆதரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே, உங்களுடைய பாராட்டுகளும் எங்களுக்குத் தேவை. நீங்கள் தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். இன்றைக்கு நம்மை ஏளனம் செய்து கொண்டிருக்கக்கூடிய, விமர்சனம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் இந்த நிகழ்ச்சியே, இந்த மேடையே சாட்சி, சான்று. எனவே, நாங்கள் "எந்நாளும் உழைப்போம்," எப்போதும் தொடர்ந்து

உழைப்போம், "எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை வருகிற வரையில்" இந்த திராவிட மாடல் ஆட்சி உழைக்கும்! உழைக்கும்! என்ற அந்த உறுதியை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, வாழ்த்துகளைத் தெரிவித்து நன்றிகூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
இந்து சமய அறநிலையங்கள் துறை சார்பில்
2,500 திருக்கோயில்களுக்கு ரூ.50 கோடி நிதி வழங்கும்
விழாவில் ஆற்றிய உரை - 05.01.2023

“கூடி கலையும் கூட்டம் அல்ல
கூடிப் படைக்கும் கூட்டம்”

சென்னை இலக்கியத் திருவிழாவில் பங்கேற்று இந்த நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களே,

துணை மேயர் திரு. மகேஷ் குமார் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களே,

திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு. ஜெயரஞ்சன் அவர்களே,

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்களே,

பொது நூலக இயக்குநர் திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., அவர்களே,

பிரபல எழுத்தாளர்கள்

திரு. பால் சக்காரியா அவர்களே,

திரு. பவா செல்லத்துரை அவர்களே,

பொது நூலகத்தினுடைய இயக்கக இணை இயக்குநர் திருமதி அமுதவள்ளி அவர்களே,

வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய இலக்கிய ஆர்வலர்களே, எழுத்தாளர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

என் அன்பிற்கினிய மாணவ, மாணவியர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலில், கேரளத்தினுடைய மிக முக்கிய படைப்பாளியாக இருக்கக்கூடிய திரு. பால் சக்காரியா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கலையை, கலைக்காக மட்டுமல்ல, கலையை மக்களுக்காக இணைத்து பயன்படுத்தும் அவர், நமது அரசினுடைய முன்னெடுப்பிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வாழ்த்துகளை நாங்கள் ஊக்கமாக எடுத்துக் கொண்டு நிச்சயமாக, உறுதியாக பணியாற்றுவோம். அதேபோல் எழுத்தாளர், படைப்பாளிகள் இங்கே கூடியிருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

- என்று புரட்சிக்கவிஞரால் போற்றப்பட்ட நம் தாய்மொழியான தமிழுக்காக நாம் இங்கே கூடி இருக்கிறோம்!

அதுவும் தமிழ்நாட்டினுடைய தலைமகனாக விளங்கிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் பெயரில் அமைந்துள்ள இந்த நூற்றாண்டு கட்டடத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவது என்பது மிகமிக பொருத்தமான ஒன்றாக அமைந்திருக்கிறது. இதைவிட வேறு ஒரு பொருத்தமான இடம் நிச்சயமாக அமைய முடியாது.

தமிழின் தலைசிறந்த படைப்பாளிகள், எழுத்தாளர்கள், இயக்குநர்கள், நாடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் பங்குபெறக் கூடிய வகையில் இலக்கியத் திருவிழாவை தொடங்கி வைப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

மாநிலத்தின் முதலமைச்சர் என்ற பெருமையால் மட்டுமல்ல, தமிழைத் தாய்மொழியாகக்

கொண்டிருக்கக்கூடிய தமிழன் என்ற அந்த உரிமையால் இந்த விழாவில் பங்கெடுப்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

தி.மு.க.-வின் ஆட்சிக்காலம் என்பது எப்போதும் தமிழாட்சி காலம் தான். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தின் ஆட்சி என்பது தமிழ் இலக்கிய இயக்கத்தின் ஆட்சியாக நடந்து வருகிறது.

- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்ட தமிழருடைய நிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது!
- நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை தமிழுக்கு பெற்றுத் தந்தது நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நாடு மறந்துவிட முடியாது.
- 'மெட்ராஸ்' என்ற பெயரை 'சென்னை' என்று மாற்றியது!
- ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற சொல்லுக்கு பதிலாக திரு, திருமதி என்ற சொல்லை சட்டபூர்வமாக ஆக்கியது!
- தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், கடல் நகரில் 133 அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது!
- திரும்பிய பக்கம் எல்லாம் திருக்குறளைத் தீட்டியது!
- தமிழ் வாழ்க என எழுத வைத்தது!
- சிலம்பின் பெருமையை எடுத்துக் காட்டக்கூடிய வகையிலே பூம்புகார் கோட்டம் அமைத்தது!

- தமிழில் வழிபடக்கூடிய உரிமையை பெற்றுத் தந்தது!
- ஆட்சிமொழியாய் தமிழை முழுமையாக்கியது!
- தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து 1,000க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டது!
- தமிழை கணினி மொழி ஆக்கியது!
- தமிழ் பயிற்று மொழிக்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. இன்று பள்ளிக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை தமிழில் படிக்கலாம்!
- உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது!
- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியது!
- திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கியது!
- தமிழ்நெட் இணைய மாநாட்டை 1999இல் நடத்தியது!
- அனைத்து விழாக்களிலும் 'நீராரும் கடலுடுத்த..' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பாட வேண்டும் என்று உத்தரவிட்டது!
- சென்னை கடற்கரையில் அவ்வையார், கண்ணகி, கம்பர், வீரமாமுனிவர், ஜி.யு.போப், வ.உ.சி., பாரதியார், பாரதிதாசன் சிலைகளை அமைத்தது!
- தொல்காப்பியப் பூங்கா அமைத்ததும் தி.மு.க. ஆட்சிக்காலத்திலே தான்!
- பொங்கல் திருநாளுக்கு மறுநாளை திருவள்ளுவர் நாளாக அரசு விடுமுறையுடன் அறிவித்தது தி.மு.க.!

இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். அதனால் தான் தி.மு.க. ஆட்சியை தமிழாட்சி என்று நாமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த வரிசையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பல்வேறு முன்னெடுப்புகளை முத்தமிழ் வளர்ச்சிக்காக நம்முடைய ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

- ❖ தமிழறிஞர் நூல்கள் நாட்டுடைமை
- ❖ எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்
- ❖ குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு
- ❖ திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்
- ❖ இதழியலாளர்களுக்கு கலைஞர் எழுதுகோல் விருது
- ❖ அமெரிக்காவில் உள்ள ஊஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி
- ❖ ஜெர்மனியில் உள்ள கோலாம் பல்கலைக்கழக தமிழ்த் துறை தொடர்ந்து இயங்க ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் நிதி உதவி
- ❖ டெல்லி ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியவியல் தனித் துறையாக தொடங்க 5 கோடி ரூபாய் நிதி உதவி
- ❖ நூலகங்களுக்கு சிற்றிதழ்கள்
- ❖ இலக்கியமாமணி விருதுகள்

- உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம்
- திசை தோறும் திராவிடம்
- குறள் பரிசு
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்
- தீராக்காதல் திருக்குறள்

- என ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல இலக்கியத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணமான நம்முடைய தமிழகத்தின் அமைச்சர் பெருமக்களை நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், அவர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

தனது துறையின் மூலமாக தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறைக்கு நம்முடைய அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் ஆற்றி வரும் அரும்பணி என்பது நிகழ்காலத்தில் மட்டுமல்ல - எதிர்காலத்திலும் நினைத்து நினைத்து மெச்சத்தக்க பணியாக அமைந்திருக்கிறது என்பதை மனதார நான் பாராட்டுகிறேன்.

அதேபோல் பொது நூலகத் துறையும் மேம்பாடு அடைந்து வருகிறது. தமிழ்நாடு பாடநூல் கழகம் சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது.

- ❖ பள்ளிக் கல்வித் துறை -
- ❖ பொது நூலக இயக்ககம் -
- ❖ தமிழ்நாடு பாடநூல் கழகம் ஆகிய மூன்றும் இணைந்து இலக்கிய விழாவை நடத்தி வருகின்றன.

நெல்லையில் பொருநை விழா, தஞ்சையில் காவிரி விழா, கோவையில் சிறுவாணி விழா, மதுரையில் வைகை விழா என நடத்தப்பட்டு "தலைநகரில் தலைசிறந்த விழாவாக" இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தலைசிறந்த படைப்பாளிகள் இங்கு உரையாற்ற இருக்கிறீர்கள். இந்த ஐந்து விழாக்களையும் சேர்த்தால் தமிழ்நாட்டுத் தமிழ் மாநாடு போல இதனைச் சொல்லலாம்.

இத்தகைய விழாவில் 100 நூல்களை நான் உங்களின் அன்போடு, ஆதரவோடு இங்கே வெளியிட்டு இருக்கிறேன். ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்காக ஒரு விழா என்று இல்லாமல் - 100 புத்தகங்களை வெளியிடும் ஒரு விழாவாக இந்த விழா மிகமிக பிரம்மாண்டமான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின்

- ❖ பள்ளிக் கல்வித் துறையாக இருந்தாலும்,
- ❖ தமிழ்வளர்ச்சித் துறையாக இருந்தாலும்,
- ❖ செய்தித் துறையாக இருந்தாலும்,
- ❖ தமிழ் இணையக் கல்விக் கழகமாக இருந்தாலும்

- அனைத்துமே மிகப்பெரிய பதிப்பகங்களுடன் போட்டி போடக் கூடிய வகையில் அறிவுக் கருவூலங்களை

வெளியிட்டு இருக்கின்றன. அதிலும் கடந்த ஓராண்டு காலத்தில் ஏராளமான புதிய புதிய புத்தகங்களை நான் பார்க்கிறேன்.

- இந்து தமிழ் திசை சார்பில் வெளியிடப்பட்ட மாபெரும் தமிழ்க் கனவு என்ற பேரறிஞர் அண்ணா குறித்த நூலை மரியாதைக்குரிய மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க - இங்கே வெளியிடப்பட்டுள்ளது.
- ராபர்ட் ஹார்ட்கிரேவ் என்ற அமெரிக்க ஆய்வாளர் திராவிட இயக்கம் குறித்து ஆங்கிலத்தில் 1965-ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார். தி.மு.க. முதன்முதலாக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எழுதப்பட்ட புத்தகம் அது. அந்த நூலை அனுமதி பெற்று நாம் வெளியிட்டு இருக்கிறோம்.
- இனமானப் பேராசிரியரைச் சிறப்பிக்கும் வகையிலான தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டு இருக்கிறது.
- பத்துப்பாட்டு நூல்கள் வெளியாகி இருக்கின்றன.
- கலைக்களஞ்சியமானது ஆவணப் பதிப்பாக வெளியாகி இருக்கிறது.
- மருத்துவ நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் தமிழின் பெருமையை, தமிழின் செழுமையை, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை, சமூக வரலாற்றை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்நாட்டை இன்றைய இளைய தலைமுறைக்கு கற்பிக்கும் புத்தகங்களாக

அமைந்துள்ளன. இதனைத் திட்டமிட்டு செயல்படுத்தி, உருவாக்கி, அச்சிட்டு, விற்பனை செய்யும் ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

49 ஆண்டுகளுக்கு முன்பு 1974ஆம் ஆண்டு சனவரி 16ஆம் நாள் அன்று தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் 176 கல்லூரி பாட நூல்களை வெளியிட்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசினார்கள்.

“தமிழைப் படிப்பது என்பது வேறு,” “தமிழில் படிப்பது என்பது வேறு.” இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழைப் படிப்பது என்பது சங்ககால இலக்கியங்களை, காவியங்களை, கவிதைகளை நம் பழங்கால பனுவல்களை படிப்பது, தமிழைப் படிப்பது தேவை.

தமிழில் படிப்பது என்பது வரலாறு படிப்பது, நிலநூல் படிப்பது, பொருளியல் படிப்பது, பல்துறைகளைப் படிப்பது, “தமிழைப் படிப்பது தேவை.” அதைவிட “தமிழில் படிப்பது மிக மிகத் தேவை.” தமிழ்நாட்டில் எல்லா வகையான எதிர்கால வளர்ச்சிக்கும் அது தேவை என்று தமிழ்மொழியில் அறிவுச் செல்வம் பெருக வேண்டியதைப் பற்றி உரையாற்றி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடந்த மிகப் பெரிய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி எது என்று கேட்டால் இந்த நிகழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் ஒன்றை அந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள்.

"மொழி மானத்தைப் பெற்றாக வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

இன்றைய தேவை என்பது இதுதான்.

"மொழி என்பது ஒரு இனத்தின் உயிர்."

"இலக்கியம் என்பது ஒரு இனத்தின் இதயம்" என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மொழியைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுத்த இனம்தான் நம்முடைய தமிழ் இனம். திராவிட இயக்கம் அரசியல் இயக்கமாக இருந்தாலும் மொழி காப்பு இயக்கமாகவே தொடக்கம் முதல் இயங்கி வருகிறது.

இந்தியாவின் எந்த மாநிலத்திலும், எந்த அரசியல் கட்சியும், இலக்கிய இயக்கமாக இருந்ததில்லை. தி.மு.க. தான் அப்படி வளர்ந்தது. தன்னை வார்ப்பித்துக் கொண்டது.

தீனா மூனா கானா

திருக்குறள் முன்னேற்றக் கழகம் என்று திரைப்பாடலில் பாடினார் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள்.

அரசியல் தலைவர் தான் நம்முடைய கலைஞர் அவர்கள். ஆனால் குறளோவியமும், சங்கத்தமிழும் அவர் பெயரை தமிழ் உள்ளவரை சொல்லிக் கொண்டே இருக்கும்.

எத்தனையோ திட்டங்களைத் தீட்டினாலும், சென்னையில் வள்ளுவர் கோட்டமும், குமரியில் 133 அடியில் அமைந்திருக்கக்கூடிய திருவள்ளுவர் சிலையும்,

காலத்தால் அழியாத கம்பீரமான சின்னங்களாக இன்றைக்கு இருக்கின்றன.

இதை நான் சொல்வதற்குக் காரணம் - மொழியைப் பற்றால் மட்டும் வளர்த்துவிட முடியாது. அறிவால், உணர்வால் வளர்த்தாக வேண்டும். அதற்காகத்தான் இத்தகைய இலக்கிய விழாக்களை நாம் நடத்துகிறோம்.

இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழ் உணர்வை ஊட்டியாக வேண்டும். தமிழ் இலக்கிய உணர்வை ஊட்டியாக வேண்டும். இலக்கியம் தான் ஒரு மனிதனை பண்படுத்தும்.

- மதவாதத்தாலும், சாதியவாதத்தாலும், மனிதர்களுக்குள் பிளவு ஏற்படும்போது- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருவள்ளுவரின் ஒரு வரி மனிதனை ஒன்றாக்கும்.
- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வரி, மனித சமுதாயத்துக்குள் இருக்கும் அத்தனை வேறுபாடுகளையும் துடைத்தெறியும்.
- வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வரி கல்நெஞ்சத்தையும் கரைக்கும்!
- தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தம் மெய்வருத்தக் கூலி தரும் - என்பதை விட தன்னம்பிக்கை வரி உலகத்தில் உண்டா?

இன்றைய நவீன தமிழ் இலக்கியத்தின் ஆளுமைகள் அனைவர் குறித்தும் நான் சொல்லத் தேவையில்லை. நீங்களே அறிவீர்கள்.

உலகின் புகழ்பெற்ற புத்தகங்கள் அனைத்தும் இங்கே மொழிபெயர்க்கப்பட்டு விடுகிறது. நம்முடைய தமிழ்ப்படைப்புகள், உலகின் பல மொழிகளுக்கு மொழிபெயர்த்து வெளியிடப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் உலகப் புத்தகச் சந்தையை இங்கேயே கண்காட்சியாக நாம் நடத்தப் போகிறோம். உன்னதமான தமிழ்ப்படைப்புகள் அனைத்தும் உலகத்தின் பல மொழிகளுக்கு போக இருக்கின்றன.

இந்த நேரத்தில் இத்தகைய படைப்புகள் தமிழர்களால் அதிகம் படிக்கப்பட வேண்டும். அதற்கு இளமைக்காலத்தில் இருந்தே மாணவ சமுதாயத்துக்கு தமிழ் மீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் தீராத ஆர்வத்தை உருவாக்க வேண்டும்.

படைப்பரங்கம், பண்பாட்டரங்கம், பயிலரங்கம், குழந்தைகள் இலக்கிய அரங்கம், நிகழ்த்துக் கலைகள் என மிக விரிவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இது போன்ற திருவிழாக்கள் இலக்கிய ஆர்வத்தை உருவாக்க உறுதுணையாக அமையும்.

மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்குப் போவதற்கு முன்னால் மருத்துவரிடம் அனுமதி பெற்று புத்தகம் படித்துக் கொண்டு இருந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தூக்கு மேடைக்குச் செல்லும் போதும் படித்துக் கொண்டு இருந்தார் மாவீரன் பகத்சிங்.

“வரலாற்றை படித்தவர்களால் தான்” “வரலாற்றைப் படைக்க முடியும்.” இலக்கியம் படித்தால் தான் நாம் வாழும் சமுதாயத்தை உணர முடியும்.

இலக்கியம் என்பது பொழுதுபோக்கு அல்ல, அதுதான் நமது நோக்கும் போக்குமாக மாற வேண்டும். இலக்கியம் என்பது பேரியக்கமாக மாற வேண்டும்.

புத்தகக் கண்காட்சிகள் மாவட்டந்தோறும் பரவி நடப்பதைப் போல இலக்கிய திருவிழாக்களும் மாவட்டந்தோறும் பரவி நடைபெற வேண்டும். இது "கூடி கலையும் கூட்டம் அல்ல."

"கூடிப் படைக்கும் கூட்டம்" என்பதை நிரூபிக்கும் வகையில் இலக்கிய விழா சிறப்பிக்க எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்,
"சென்னை இலக்கியத் திருவிழா 2023"-ஐ தொடங்கி
வைத்து, ஆற்றிய உரை - 06.01.2023

தங்கள் எழுத்தை மொழிகாப்பதற்கான மக்கள் எழுத்தாகப் பயன்படுத்த வேண்டும்

46ஆவது சென்னை புத்தகக் காட்சி தொடக்க விழா மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் பொற்கிழி விருது வழங்கும் விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. மனோ தங்கராஜ் அவர்களே,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் திரு. டி. கே. எஸ். இளங்கோவன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் என்னுடைய அன்பிற்கினிய திண்டுக்கல் லியோனி அவர்களே,

துணை மேயர் மகேஷ்குமார் அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கக்கூடிய பபாசி அமைப்பின் தலைவர் திரு. எஸ். வயிரவன் அவர்களே,

செயலாளர் திரு. முருகன் அவர்களே,

பொருளாளர் திரு. குமரன் அவர்களே,

பபாசி அமைப்பினுடைய நிருவாக குழு உறுப்பினர்களே,

விருது பெற்றிருக்கக்கூடிய விருதாளர்களே,

பதிப்பாளர்களே,

எழுத்தாளர் பெருமக்களே,

இலக்கிய ஆர்வலர்களே,

நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே,

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் பேரூரையோ, சிறப்புரையோ ஆற்ற வரவில்லை, சுருக்க உரை ஆற்ற வந்திருக்கிறேன்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெறக்கூடிய 46ஆவது புத்தகக் காட்சியை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'தாய்க்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய தலைமகன்' நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை

அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் அமைந்துள்ள நூற்றாண்டு நினைவு நூலகத்தில், அந்த நூலகத்தில் அமைந்திருக்கக்கூடிய அரங்கத்தில் இலக்கியத் திருவிழாவை இன்று காலையில் நான் தொடங்கி வைத்தேன். அதைத் தொடர்ந்து மாலையில் இந்த புத்தகக் காட்சியைத் தொடங்கி வைக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஆக, இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே நம்மைப் பொறுத்தவரையில் திருவிழாக்கள். அதுவும் அறிவுத் திருவிழாக்களாக அமைந்திருக்கிறது, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் தமிழ்த் திருவிழாக்களாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகமிக பொருத்தமாக இருக்க முடியும்.

தமிழ்நாட்டில் இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சி தமிழாட்சி என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதற்குச் சான்றுகளாகத்தான் இந்த காலை நிகழ்ச்சியும், மாலை நிகழ்ச்சியும் அமைந்திருக்கிறது.

ஒருகாலத்தில் சென்னையில் மட்டுமே புத்தகக் கண்காட்சி நடந்து வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு சில மாவட்டங்களில் நடக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. புத்தக வாசிப்பில் ஆர்வம் இருக்கக்கூடிய ஆட்சித் தலைவர்கள், அந்த ஆட்சியர்கள் அவரவர் மாவட்டத்திலே அதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். அந்த புத்தகக் கண்காட்சியை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் இந்த புத்தகக் காட்சிகள் நடத்துவதற்கு நம்முடைய அரசு ஆணையிட்டது. அதற்காக 5 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடும் செய்திருக்கிறோம். அதன் விளைவாக, தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் புத்தகக்

கண்காட்சிகள் நடக்கத் தொடங்கி இருக்கின்றன. பத்து நாட்கள், இரண்டு வாரங்கள் என நடக்கும் இந்த புத்தகச் சந்தைகள் மூலமாகப் புத்தக விற்பனை மட்டுமல்ல - சிறப்பான சொற்பொழிவாளர்களைக் கொண்ட இலக்கிய நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இதன் மூலமாக மாவட்டந்தோறும் இலக்கிய எழுச்சி - அறிவு மலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

வழக்கமாக, சென்னைப் புத்தகக் காட்சிக்காக அரசின் சார்பில் 75 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று நோய் வந்த காரணத்தால், பதிப்பாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சூழலை மனதில் கொண்டு பபாசி அமைப்பினர் கூடுதல் நிதியை அரசிடம் கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை ஏற்று 50 லட்சம் ரூபாயை அன்றைக்கு அரசின் சார்பில் நாம் வழங்கினோம். இந்தத் தொகை சங்க உறுப்பினர்களாக இருக்கும் 277 பேருக்கு தலா 14 ஆயிரம் ரூபாயும் - உறுப்பினர் அல்லாத 113 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன். பதிப்பகங்களுக்கு உதவிகள் செய்வதும், எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்குவதும் நாட்டில் அறிவொளி பரவ வேண்டும் என்பதற்காகத்தான்.

"வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் அமைய வேண்டும்" என்று ஆசைப்பட்டவர் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய நோக்கத்தை உருவாக்கவே, மாவட்டம்தோறும் புத்தகக் கண்காட்சிகளையும், இலக்கிய விழாக்களையும் நடத்துவதற்கு அனைத்து விதமான உதவிகளையும் நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

தமிழின் மீதும் புத்தகங்களின் மீதும், எழுத்தின் மீதும், எழுத்தாளர்கள் மீதும் மாறாக் காதல் கொண்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இதுபோன்ற கண்காட்சியின் தொடக்க விழாவுக்காக கடந்த 2008-ஆம் ஆண்டு அன்றைக்கு நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள், சிறப்பித்தார்கள். ஒரு கோடி ரூபாயை வழங்கி, எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் பொற்கிழி விருது வழங்கி உற்சாகப்படுத்தச் சொன்னார்கள்.

‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களின் பெயரால் அமைந்திட்ட அந்த விருதினைப் பெற்றிருக்கக்கூடிய

- மொழியியல் அறிஞர் பா. ரா. சுப்பிரமணியன்
- கவிஞர் தேவதேவன்
- மொழிபெயர்ப்பாளர் சி. மோகன்
- நாடகக் கலைஞர் பிரளயன்
- நாவலாசிரியர் தேவிபாரதி
- சிறுகதையாசிரியர் சந்திரா தங்கராஜ்

ஆகியோரை நான் மனதார பாராட்டுகிறேன், அவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் மட்டுமல்ல, தமிழரையும் - தமிழ்ப் படைப்பாளிகளையும் உயிரென நேசித்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய மகனாகவும் நான் அவர்களை வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்த ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டாக அமைந்திருக்கக்கூடிய நிலையில், 2008-ஆம்

ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரக்கூடிய இந்த விருதைப் பெற்றவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு வரை 100 பேர் என்ற எண்ணிக்கையைத் தொட்டிருக்கிறது. எத்தனைப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணி நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

எழுத்தாளர்களையும், அதேபோல எழுத்தையும் பாராட்டுவதை தன்னுடைய இயல்பாக, ஒரு வாழ்க்கையின் ஓர் அங்கமாக வைத்திருந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அரசியலில் எவ்வளவோ முரண்பாடுகள் இருந்தாலும் அவர்கள் சிறந்த எழுத்தாளர்களாக இருந்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு தயக்கமோ, சுணக்கமோ காட்டமாட்டார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சிறந்த எழுத்தைப் போலவே சிறந்த எழுத்தைப் பாராட்டுவதும் முக்கியமானது என்று அந்த நோக்கத்தோடுதான் ஒரு கோடி ரூபாய் நிதியை தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வழங்கினார்கள். அந்த நிதி, அவருக்குப் பின்னாலும் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தப் பயன்பட்டு வருகிறது.

- 2007ஆம் ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைத்த அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னையில் மிகப் பிரம்மாண்டமான நூலகம் அமையப் போகிறது என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அதுதான் சென்னையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்!

- அதேபோல் மதுரையில் கலைஞர் அவர்கள் பெயரால் 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்க இன்றைய அரசு திட்டமிட்டு- அது பிரம்மாண்டமாக எழுந்து வருகிறது. விரைவில் அது திறக்கப்படவிருக்கிறது என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.
- தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை
- எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்
- குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு
- திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்
- இதழியலாளருக்கு கலைஞர் எழுதுகோல் விருது
- உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்
- நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள்
- இலக்கியமாமணி விருதுகள்
- உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம்
- திசைதோறும் திராவிடம்
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

- என ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது. பதிப்பகங்களோடு போட்டி போடக்கூடிய அளவுக்கு தமிழ்நாடு அரசும் ஏராளமான நூல்களை வெளியிட்டு வருகிறது

என்பதை நான் இந்த நிகழ்ச்சியில் கம்பீரமாக நின்று சொல்ல விரும்புகிறேன்.

- ❖ திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 25 நூல்களும் -
- ❖ முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ் 46 நூல்களும் -
- ❖ இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ் 59 நூல்களும் -
- ❖ சங்க இலக்கிய வரிசையில் பத்துப்பாட்டு நூல்களும் -
- ❖ முன்பு வெளியான கலைக்களஞ்சியத்தின் ஆவணப்பதிப்பும் -
- ❖ நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகளாக 2 நூல்களும் -
- ❖ வ.உ.சி.யின் நூல் திரட்டுகளாக இரண்டு நூல்களும் -
- ❖ நாட்டுடைமை ஆக்கப்பட்டவர் வரிசையில் 17 நூல்களும்

என 173 நூல்களை கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் அரசின் சார்பில் வெளியிட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் போட்டி போடக்கூடிய அளவுக்கு அரசும் புத்தக வெளியீடுகளில் இறங்கி இருக்கிறது என்று நான் பெருமையோடு சொன்னேன்.

கால்டுவெல்லின் 'திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலை மொழி அறிஞர் பா. ரா. சுப்பிரமணியம் அவர்கள் மொழிபெயர்த்துக்

கொடுத்துள்ளார். அவருக்கு இன்று தலைவர் கலைஞர் அவர்கள் பெயரில் அமைந்திருக்கக்கூடிய விருது வழங்கப்பட்டிருப்பதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காலையில் மட்டும் 100 நூல்களை நான் வெளியிட்டு இருக்கிறேன். தமிழ்நாட்டில் நடந்த மிகப்பெரிய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியாக அதுதான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நிரந்தரமாக புத்தகப் பூங்கா அமைக்க சென்னையில் இடம் வழங்கப்படும் என்று முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். ‘அதனை நினைவூட்டி நானும் கடந்த ஆண்டு அந்த வாக்குறுதியை நினைவுபடுத்தி இருக்கிறேன். இடம் தேர்வு செய்யப்பட்டதும், அது தொடர்பான முறையான அறிவிப்பை வெளியிடுவேன் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எழுத்துக்கும், எழுத்தாளர்களுக்குமாக எத்தனையோ சிறப்பான செயல்களை தமிழ்நாடு அரசு செய்து வருவதை எழுத்தாளர்கள், அறிஞர்கள், இலக்கிய இதழ்கள், சிறுபத்திரிகைகள், பொதுவெளியில் பாராட்டுகிறார்களா என்று எனக்குத் தெரியாது. யாரும் பாராட்டுவார்கள் என்பதற்காகவும் இத்தகைய செயல்களை நாங்கள் செய்யவில்லை.

கடந்த ஓராண்டுகாலத்தில் தமிழுக்கும், எழுத்துக்கும், எழுத்தாளர்களுக்கும் அத்தகைய அளவில்லாத ஆக்கப்பணிகளைத் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்பதை யாராலும் மறந்துவிடவும், மறுக்கவும் முடியாது.

எழுத்தும், இலக்கியமும் மொழியை வளர்க்கின்றன. வளர்ப்பது மட்டுமல்ல, காக்கின்றன.

இதுபோன்ற புத்தகச் சந்தைகளும் இலக்கிய விழாக்களும் எழுத்தையும், இலக்கியத்தையும் இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழ் உணர்வை ஊட்டுவதற்காகப் பயன்பட வேண்டும்.

மொழி சிதைந்தால் இனம் சிதையும். இனம் சிதைந்தால் நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பண்பாடு சிதைந்தால் நம்முடைய அடையாளமே போய்விடும். அடையாளம் போய்விட்டால், தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியை நாம் இழந்து விடுவோம். தமிழர் என்ற தகுதியை இழந்தால் வாழ்ந்தும் பயனில்லை. எனவே மொழியைக் காப்பதற்கான கடமை என்பது எங்களைப் போன்ற அரசியல் இயக்கங்களைப் போலவே எழுத்தாளர்களுக்கும் இருந்தாக வேண்டும். தங்களது எழுத்தை மொழிகாப்பதற்கான மக்கள் எழுத்தாகப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் அவர்களை எல்லாம் அன்போடு கேட்டு வாய்ப்பினை தந்த அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
நடைபெற்ற 46ஆவது சென்னை புத்தகக் காட்சி-2023
தொடங்கி வைத்து, ஆற்றிய உரை - 06.01.2023

கோவை மற்றும் பல்லடம் சாலையை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு "அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம்" அவர்கள் பெயர் சூட்டப்படும்

அருட்செல்வர் டாக்டர் பத்மபூஷன் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கிற, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்களே,

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களே,

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களே,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்களே,

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்களே,

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்களே,

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான என்னுடைய அன்பிற்கினிய சகோதரர் திரு. ஈ. ஆர். ஈஸ்வரன் அவர்களே,

மலேசிய நாட்டினுடைய மாண்புமிகு துணை அமைச்சர் திருமதி சரஸ்வதி அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சின்ராஜ் அவர்களே,

அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாதிபதி அவர்களே,

வாழ்த்துரை வழங்குவதற்காக அமர்ந்திருக்கக்கூடிய,

பேரூர் ஆதினம் அவர்களே,

பழனி ஆதினம் அவர்களே,

தென்சேரி ஆதினம் அவர்களே,

பெருமைக்குரிய ஆன்மிகப் பெருமக்களே,

கொங்குநாடு அறக்கட்டளையின் தலைவர் திரு. கே. ஆர். அப்பாவு அவர்களே,

பாரதிய வித்யா பவன் தலைவர் டாக்டர் பி. கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களே,

சக்தி குழுமத்தின் தலைவர் டாக்டர் எம். மாணிக்கம் அவர்களே,

மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் திரு. த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களே,

கொங்குநாடு அறக்கட்டளையின் செயலாளர் திரு. சி. அரவிந்தன் அவர்களே,

துணைத் தலைவர்கள் :

திரு. எஸ். அருணாசலம் அவர்களே,

திரு. டி. கே. சுப்பிரமணியன் அவர்களே,

பொருளாளர் திரு. வி. கே. செல்வக்குமார் அவர்களே,

விழாவினுடைய ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி திரு. கே. நித்தியானந்தன் அவர்களே,

அறக்கட்டளையின் அறங்காவலர்களே, புரவலர்களே,

விழாவிற்கு வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் முழுமையாக இருந்து உங்களோடு நான் பங்கேற்க வேண்டும் என்ற உணர்வோடுதான் நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்தேன். அந்த உணர்வோடுதான் இந்த நிகழ்ச்சிக்கு ஒப்புதலும் தந்தேன். ஆனால் நாளைய தினம் சட்டமன்றம் கூடுகிறது, கவர்னர் உரையோடு தொடங்குகிற சட்டமன்றம். எனவே, அதற்கான பணிகளில், நான் ஈடுபட வேண்டிய அவசியத்தின் காரணமாக, தொடர்ந்து

முழுமையாக இருந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகி முன்கூட்டியே பேசிவிட்டு, அதுவும் விரைவாக பேசிவிட்டு, விரைவாக செல்லவேண்டும் என்ற அந்த உணர்வோடு வந்திருக்கிறேன். அதற்கு நீங்கள் எல்லாம் அனுமதி தரவேண்டும் என்று உங்களை அன்போடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொங்குநாடு அறக்கட்டளையின் சார்பில் அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் எனக்குப் பெருமையாக இருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பை எண்ணி, எண்ணி நான் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

பெரியார் என்றால் தந்தை பெரியாரையும் -

பேரறிஞர் என்றால் அண்ணாவையும் -

பெருந்தலைவர் என்றால் காமராசர் அவர்களையும் -

முத்தமிழறிஞர் என்றால் தலைவர் கலைஞரையும் குறிப்பதைப் போல அருட்செல்வர் என்றால், அது பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களைத்தான் குறிக்கும் என்கிற அளவுக்கு, அவர் சிறப்புக்குரியவராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

2014ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளன்று நடந்த வள்ளலார் விழாவில் பேசிக்கொண்டு இருந்தபோது, திடீரென்று உடல் நலிவுற்று, மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியில் அவர் மரணம் அடைந்தார். இதனைக் கேள்விப்பட்ட நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளானார். அப்போது கலைஞர்

அவர்களுக்கு உடல்நலமில்லாமல் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். உடனடியாக என்னை அழைத்து, காவேரி மருத்துவமனைக்குச் சென்று அஞ்சலி செலுத்த வேண்டுமென்று எனக்கு கட்டளையிட்டார். நானும் உடனடியாக சென்று அஞ்சலி செலுத்தினேன். பின்னர் தலைவரை சந்தித்து, இந்த தகவலை விளக்கமாக நான் சொன்னேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் தனக்கும், அருட்செல்வர் அவர்களுக்கும் இருந்த நட்பைப் பற்றி மிக விளக்கமாக பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

கலைஞர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோதுதான் கிண்டியில் உள்ள ஏ.ஆர்.சி.கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அதுதான் சக்தி சுகர்ஸ், ஏ.பி.டி. அலுவலகமாக இருக்கிறது.

1969-ஆம் ஆண்டு கோவை மாவட்டம் ஆப்பக்கூடலில் சக்தி சர்க்கரை ஆலை நிருவாகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட சாலை ஒன்றைத் திறப்பதற்காக முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் தேதி வாங்கி இருக்கிறார்கள். அதை பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள்தான் அந்தத் தேதியை பெற்றிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர், கலைஞரை அழைக்கலாமா? என்று அந்தக் காலத்தில் விவாதமே நடந்திருக்கிறது. ஏனென்றால் காங்கிரசை வீழ்த்திவிட்டுத்தான் அப்போது தி.மு.க 1967-இல் ஆட்சிக்கு வந்தது. இப்படி அவதூறு கிளப்பியவர்கள் மீது அருட்செல்வர் அவர்கள் வழக்கும் போட்டிருக்கிறார். எப்படி கலைஞரை அழைக்கலாம்? என்று அந்தக் காலத்தில் விசாரணையே

நடந்திருக்கிறது. அதில் தன்னுடைய தரப்பு வாதங்களை எல்லாம் முறையாகக் கேட்கவில்லை என்கிற வருத்தத்தோடு அரசியலை விட்டே அருட்செல்வர் அவர்கள் விலகி இருக்கிறார்கள்.

இவை அனைத்தும் தெரிந்துதான், விழா அமைப்பினர் இந்த நூற்றாண்டுக்கு என்னை இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக அழைத்தார்களா? என்று எனக்குத் தெரியவில்லை. அந்த ஆப்பக்கூடல் விழாவில் ஒரு பெரிய விபத்து ஒன்றும் ஏற்பட்டுள்ளது.

பிரம்மாண்டமான விழா நடந்து கொண்டிருந்தபோது, புயல் அடித்திருக்கிறது. மழை கொட்டியிருக்கிறது. அதன் காரணமாக, பந்தலே சரிந்துவிட்டது. மின்சாரமும் துண்டிக்கப்பட்டு விட்டது. மேடையில் முதலமைச்சர் கலைஞர் மற்றும் சில அமைச்சர்கள், இன்னும் சில நான்கைந்து பேர்கள் இருக்கிறார்கள். தலைவர் கலைஞரை, அன்றைக்கு ஈரோடு சின்னசாமி அப்படியே தூக்கிக் கொண்டு மேடையை விட்டு இறக்க முயற்சிக்கிறார். ஒரே இருட்டாக இருந்த காரணத்தால் அங்கிருந்து ஒரு காரை கொண்டு வரச்சொல்லி, அந்த காரை ஸ்டார்ட் செய்து, அதிலிருந்த லைட் அடிக்க சொல்லி, அந்த வெளிச்சத்தில்தான் அனைவரும் மேடையிலிருந்து கீழே இறங்கியிருக்கிறார்கள். எல்லோரும் கீழே வந்தபிறகு அருட்செல்வரை மட்டும் காணவில்லையாம். மேடையில் இருந்த மேசைக்கடியில் அவர் மாட்டிக் கொண்டாராம். பின்னர் தலைவரிடம் வந்து, 'இப்படி ஆகிவிட்டதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னாராம்.

அந்தளவுக்கு மனிதப்பண்பில் சிறந்தவர் என்று தலைவர் கலைஞர் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்.

கொங்கு வேளாளர் மக்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டபோது, அதனை ஏற்றுக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கான அரசாணையை வெளியிட்டார்கள். அப்போது தலைவர் கலைஞருக்கு ஒரு மாபெரும் பாராட்டு விழாவை நடத்துவதில் முன்னின்றவர் அருட்செல்வர் அவர்கள். அதனால்தான் 'எல்லாக் காலங்களிலும் என் மீது மாறாத அன்பைப் பொழிந்தவர்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டார்கள்.

அவரிடம் ஆன்மீக அருள் மட்டுமல்ல - செல்வமும் இருந்தது. அத்தகைய செல்வத்தை, அறநெறிக்கும், அறத் தொண்டுக்கும், தமிழ்த் தொண்டுக்கும் பயன்படுத்தினார் நம்முடைய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள். அதனால்தான் அருட்செல்வர் என்பது அவரது பட்டப் பெயராக மட்டும் இல்லாமல் - பண்புப் பெயராக அமைந்திருந்தது.

100 ஆண்டுகள் கழித்தும் அவரை நினைக்கிறோம், வாழ்த்துகிறோம், போற்றுகிறோம் என்றால், அவர் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய பணிகளுக்காக நமது நன்றியின் அடையாளமாகவே இதனை நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

நமக்கு நூற்றாண்டு விழாவை இவ்வளவு பிரம்மாண்டமாக நடத்துவார்கள், எல்லோரும் பாராட்டிப் போற்றுவார்கள்

என்பதற்காக அருட்செல்வர் அவர்கள் அப்படிச் செயல்பட்டவர் அல்ல. அவரது இயல்பே அப்படித்தான் அமைந்துள்ளது.

- ❖ திருக்குறளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழிபெயர்த்து வெளியிட்டவர் மட்டுமல்ல - வடமாநிலங்களுக்குக் கொண்டு சென்று இலவசமாக பள்ளி, கல்வி நிலையங்களில் வழங்கியவர் அருட்செல்வர் அவர்கள்!
- ❖ திருமந்திரம், பெரியபுராணம், திருவருட்பா ஆகிய நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு லட்சக்கணக்கான பணத்தை வழங்கியவர் அருட்செல்வர் அவர்கள்.
- ❖ உரைவேந்தர் என்று போற்றப்பட்ட ஔவை துரைசாமி போன்ற பெரும் தமிழறிஞர்களைத் தனது சொந்த செலவில் தங்க வைத்து - இலக்கியங்களுக்கான உரைகளை எழுதி - அதனை அச்சிடுவதற்கு பணமும் கொடுத்து - அப்படி அச்சிட்ட புத்தகங்களை - மொத்தமாக தானே வாங்கி - இலவசமாகக் கொடுத்தவர் நம்முடைய அருட்செல்வர் அவர்கள்.

எனவே அவரை அருட்செல்வர் - என்பதோடு சேர்த்து தமிழ்ச்செல்வர் என்றுகூட அழைக்கலாம்.

இப்படி எத்தனை பேர் தமிழகத்தில் இருந்திருக்க முடியும்? விரல் விட்டு எண்ணக் கூடிய செல்வந்தர்கள்தான் இத்தகைய தமிழ்த் தொண்டை ஆற்றி இருக்கிறார்கள்.

அருட்செல்வரைப் போல பலரும் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவரது தந்தை நாச்சிமுத்து அவர்கள் மாட்டு வண்டிகளில் தொழில் தொடங்கினார். இவர் கார்கள், லாரிகள், பேருந்துகள் என தொழிலை வளர்த்தார். ஒரு தொழில் அல்ல, பல்வேறு தொழில்களை ஒரே நேரத்தில் செய்தார்.

- 46க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு இருக்கிறார்.

- வேளாண்மை மாத இதழை தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தி இருக்கிறார்.

- ஓம் சக்தி இதழை நடத்தினார்.

- தமிழ் எழுத்துகளை ஒலிவடிவில் உச்சரிப்பதற்கான தொழில்நுட்பம் உருவாக்குவதில் கவனம் செலுத்தி இருக்கிறார்.

❖ இந்திய நதிகளை ஒருங்கிணைக்கும் ஒரு திட்டம் வரைந்து அதை வேளாண் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு போய்க்காட்டி "இந்த ஆராய்ச்சியை ஏற்றுக் கொண்டு Ph.D. பட்டம் தருவீர்களா?" என்று கேட்டவர் அவர். அந்தளவுக்கு அறிவாற்றல் கொண்டவர். இத்தகைய பன்முக ஆற்றலைக் கொண்டவர் அருட்செல்வர் அவர்கள்.

தமிழ்நாட்டின் தொழில் துறையாக இருந்தாலும் -

ஆன்மீகத் துறையாக இருந்தாலும் -

அரசியல் துறையாக இருந்தாலும் -

இலக்கியத் துறையாக இருந்தாலும் -

கல்வித் துறையாக இருந்தாலும் -

சமூக சேவையாக இருந்தாலும் -

பதிப்புத் துறையாக இருந்தாலும் - "அனைத்திலும் முத்திரை பதித்த பல்துறை ஆற்றலாளர்தான் நம்முடைய அருட்செல்வர்" அவர்கள். 1952 முதல் 1967 வரை மிகத் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார். தொடர்ந்து மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக காங்கிரஸ் கட்சியில் பொறுப்பு வகித்தார்.

அப்படியே அரசியல் பணிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு - தொழில் - ஆன்மீகம் - இலக்கியம் என்று தனது பாதையை அவர் மாற்றிக் கொண்டார். தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கினாலும் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசியல் தொண்டை - தேர்தலில் பங்கெடுக்காமலேயே அருட்செல்வர் அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். அத்தகைய பணிக்கு மகாத்மா காந்தியடிகள் - அருட்பிரகாச வள்ளலார் ஆகிய இருவரையும் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு, அவர் கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

காந்தியடிகளும் - அருட்பிரகாச வள்ளலாரும் அவரது இரண்டு கண்களாக இருந்திருக்கிறார்கள். காந்தியடிகள் - வள்ளலார் விழாக்களை ஆண்டுதோறும் சென்னையில் தவறாமல் நடத்தி வந்தார். "நான் காந்தியினுடைய சீடன்" என்று சொல்லிக் கொள்வதில் அவர் பெருமை அடைந்தார். காந்தியாரின் பிறந்தநாளில் அவரது சீடரான மகாலிங்கம் அவர்களும் மறைந்தார்.

காந்தியத்தின் எளிமையை அதிகம் வலியுறுத்தி வந்தார். மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து சொல்லி வந்தார். "இராமலிங்க வள்ளலாரைப் போன்ற மனிதத் தன்மையுடனும், காந்தியைப் போலக் கொள்கைப் பிடிப்புடனும் வாழ வேண்டும்" என்பதை இன்றைய தலைமுறைக்குத் தொடர்ந்து அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

வள்ளலார் போற்றிய மனிதத் தன்மையும் - காந்தியின் மதநல்லிணக்கமும்தான் இன்றைய காலக்கட்டத்திற்கு மிக மிகத் தேவைப்படுகிறது. அவரது ஆன்மீகம் என்பது மதநல்லிணக்க ஆன்மீகமாக - அவரது சமய நெறி என்பது சமரச சுத்த சன்மார்க்க நெறியாக எப்போதும் இருந்தது. இத்தகைய நெறிகளே இன்று தேவையாக இருக்கின்றன.

இங்கு ஒரு கோரிக்கையை என்னிடத்தில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதை நான் படித்துப் பார்த்தேன். எனவே அதை மகிழ்ச்சியோடு உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். நம்முடைய பொள்ளாச்சி மண் தந்த மாமனிதராக, அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களுடைய நூற்றாண்டு விழாவுக்கு சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில் பொள்ளாச்சி உள்ள கோவை சாலை மற்றும் பல்லடம் சாலையை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு "அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்" அவர்களுடைய பெயர் சூட்டப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு இந்த விழாவில், இந்த மேடையில் நான் அறிவிக்கிறேன்.

சமத்துவம் -

சகோதரத்துவம் -

மதநல்லிணக்கம் - ஆகியவற்றை உள்ளடக்கிய சமூகநீதிச் சமுதாயத்தை உருவாக்குவதே அருட்செல்வருக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும் என்பதைச் சொல்லி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற
டாக்டர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை - 08.01.2023

பல்வேறு ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் உலகளாவிய தமிழ் முதலீட்டாளர்கள் பெருமளவில் பங்கு பெற வேண்டும்

உலகத்தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான இணையதளம் தொடக்க விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே,

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர் அன்பிற்கினிய சகோதரர் திரு. என். ஆர். இளங்கோ அவர்களே,

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சிவராஜா ராமநாதன் அவர்களே,

வட அமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவைத்தலைவர் திரு. பாலா சாமிநாதன் அவர்களே,

வட அமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவையின் தொழில்முனைவோர் அமைப்பின் தலைவர் திரு. கணபதி முருகேஷ் அவர்களே,

புத்தொழில் நிறுவனங்களின் தலைவர்களே,

தொழில் முனைவோர்களே,

பேரன்பிற்குரிய அயலக தமிழ் உடன்பிறப்புகளே,

பல்துறை சார்ந்த வல்லுநர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஃபெட்னா மாநாட்டில் கலந்து கொள்வதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டின் மீது பற்றும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் நல்லாட்சியின்மீது நம்பிக்கையும் கொண்டு இந்த "உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள்" மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் அனைவரையும் நான் அன்போடு, இன்முகத்தோடு, மகிழ்ச்சியோடு, பூரிப்போடு, புளங்காகித உணர்வோடு உங்கள் அத்தனை பேரையும் வருக! வருக! வருக! என வரவேற்கிறேன்.

வடஅமெரிக்க தமிழ் சங்கங்களின் பேரவைத் (FeTNA) தலைவர் முனைவர் பாலா சுவாமிநாதன் அவர்கள், செயலர் திரு. கிங்ஸ்லி சாமுவேல் அவர்கள், முன்னாள் தலைவர் திரு. கால்டுவெல் வேள்நம்பி அவர்கள், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. ஜான் பிரிட்டோ அவர்கள், திரு. கணபதி முருகேசு அவர்கள், திருமதி ஜானகி உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருக்கும் புத்தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனர்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நல்ல நிகழ்ச்சியை ஃபெட்னா அமைப்புடன் இணைந்து தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் இயங்கக்கூடிய டான்சிம் நிறுவனம் நடத்துவது என்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது!

நம் மாநிலத்தில் புத்தொழில் நிறுவனங்களுக்கான நல்லதொரு சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பல்வேறு ஆக்கப்பூர்வமான புதிய செயல்திட்டங்களை நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து செயல்படுத்தி வருகிறது.

புத்தொழில் சார்ந்த செயல்பாட்டுக்கான "லீடர்" (leader) அங்கீகாரத்தினை ஒன்றிய அரசின் ஸ்டார்ட் அப் இந்தியா (Startup India) அமைப்பு நமது தமிழ்நாட்டுக்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில்களுக்கான முதலீடுகள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் கடந்த ஆண்டு கிடைத்துள்ளன. இது 2021ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 70 விழுக்காடு அதிகமாகும்.

இந்தியாவில் புத்தொழில் முதலீடுகளை அதிகம் ஈர்க்கும் பெங்களூரு, மும்பை, டெல்லி போன்ற நகரங்களில் இந்த விழுக்காடு கடந்த ஆண்டு எதிர்மறையாக இருந்தது. அத்தகைய மந்தமான பொருளாதாரச் சூழலிலும் தமிழ்நாட்டின் மீது முதலீட்டாளர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதை இது காட்டுகிறது.

புத்தொழில் சார்ந்த முன்னெடுப்புகளில் மட்டுமல்ல,

“ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக” இருப்பதை, அண்மையில் ‘இந்தியா டுடே’ என்ற ஏட்டின் ஆய்வறிக்கை கூறியதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள். தொழில்கள் தொடங்கி நடத்துவதற்கான இலகுவான சூழலை அமைத்து இருப்பதிலும் (ease of doing business) பதிமூன்றாம் இடத்தில் இருந்து மூன்றாம் இடத்திற்கு தமிழ்நாட்டை நாம் மேம்படுத்தி இருக்கிறோம்.

புதுயுகத் தொழில்களை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும் பல்வேறு முன்னோடி செயல் திட்டங்களை நமது அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான கொள்கை
- வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழிற்கொள்கை ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளது.
- பசுமை தொழில்நுட்பம்,
- ஊரக வாழ்வாதார மேம்பாடு மற்றும் பெண்களை முதன்மை பங்குதாரர்களாகக் கொண்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைத் தொகுப்புக்கான அரசாணை ஒன்றும் அண்மையில் வெளியிடப்பட்டது. இதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அனைத்துத் துறை வளர்ச்சியை இலக்காகக் கொண்டது நமது அரசு. அதில் தொழில்துறை மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. அனைத்து விதமான தொழில்களும் வளர வேண்டும். அனைத்து மாவட்டங்களுக்கும் அது பரவ

வேண்டும். புத்தாக்கத் தொழில்கள் அனைத்தும் சிறக்க வேண்டும். இதற்காக, புத்தொழில் மற்றும் புத்தாக்கத் துறையிலும் மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சி ஏற்பட ஏதுவாக வட்டாரப் புத்தொழில் மையங்கள் மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

பட்டியலினத்தவர், பழங்குடியினர் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் நடத்தும் புத்தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடு செய்யும் பொருட்டு 30 கோடி ரூபாய் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. தொடக்கநிலை புத்தொழில் நிறுவனங்களுக்காக வழங்கப்படும் மானியங்களில் பெண்களுக்கும், இரண்டாம் மூன்றாம் கட்ட நகரங்களில் இருந்து செயல்படும் நிறுவனங்களுக்கும் உரிய முக்கியத்துவம் தரப்படுகிறது. வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்பங்களை உருவாக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்யும் நோக்கத்துடன் 100 கோடி ரூபாய் நிதி ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் முறையாக காலநிலை மாற்றம் காரணமாக உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தரும் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்யும் பொருட்டு, ஆயிரம் கோடி ரூபாய் பசுமை நிதியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் சார்பில் நடத்தப்பட்டு வரும் இதுபோன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் உலகளாவிய தமிழ் முதலீட்டாளர்களும் பெருமளவில் பங்கு பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு – குறிப்பாக எல்லா தலைமுறையினரின் புத்தொழில் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளில் உங்கள் அனைவரையும் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் இன்று நம் அரசின் நிறுவனமான டான்சிம் மூலமாக குளோபல் தமிழ் ஏஞ்செல்ஸ் (Global Tamil Angels) தளம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது உள்ளபடியே எனக்குப் பெருமையாக இருக்கிறது. இதன் மூலம் உலகெங்கும் வாழும் முதலீடு செய்யும் சக்தி படைத்த தமிழர்கள் நம் மாநிலத்தில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு மட்டுமல்லாது அவர்களுக்கு வழிகாட்டியாகவும் செயல்பட முடியும். இதற்கான ஒருங்கிணைப்பு சேவைகள் அனைத்தும் டான்சிம் நிறுவனத்தால் வழங்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

இன்று தொடங்கப்படும் இந்த முன்னெடுப்பின் முதற்கட்டமாக "அமெரிக்கத் தமிழ் நிதியம்" என்ற அமெரிக்க வாழ் தமிழர்களால் தொடங்கப்பட்ட அமைப்பு மூலமாக 16 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டின் தொடக்கநிலை புத்தொழில் நிறுவனங்களுக்கான முதலீடு அறிவிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி பெரும் மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது. இந்த முன்னெடுப்பில் ஈடுபட்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட அமெரிக்க வாழ் தமிழர்கள் பெருமளவில், இந்த நல்ல நோக்கத்துக்காக இங்கே நேரில் வந்து இந்த நல்ல முயற்சியை தொடங்கி வைத்திருப்பது நாட்டிலேயே ஒரு முன்மாதிரித்

திட்டம் என்று நான் நினைக்கிறேன். இந்த நிகழ்வு பற்றிய செய்தி பல்வேறு நாடுகளில் வாழும் சக்தி வாய்ந்த தமிழர்களிடத்திலும் பரவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாட்டின் புதுயுக தொழில் முனைவுகளில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் பங்குபெற வேண்டுமாய் இன்று நல்லதொரு விதை விதைக்கப்பட்டு உள்ளது. அது இந்தியாவில் மட்டுமல்லாது, உலக அளவில் தமிழ்நாடு முன்னணி இடத்தைப் பெற உதவும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் உங்கள் அனைவரையும் நான் வாழ்த்தி, அதே நேரத்தில் புத்தாண்டு வாழ்த்துகளையும், வரும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளையும் உங்களுக்கு தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகத் தமிழ் முதலீட்டாளர்களையும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள “Global Tamil Angels” இணையதளத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 09.01.2023

இது தமிழருடைய ஆட்சி
தமிழருக்காக நடைபெறக்கூடிய ஆட்சி

அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, வாழ்த்துகளை, நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நான் சுற்றி சுழன்று வந்தாலும், என்னுடைய சொந்த தொகுதியாக இருக்கக்கூடிய இந்த கொளத்தூர் தொகுதிக்கு வருகின்றபோது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் என்பதை நான் பலமுறை உங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அதற்காக கொளத்தூர் தொகுதி மட்டும் தான் எனக்கு முக்கியம் என்று கருதாமல், தமிழகத்தில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளும், முதலமைச்சர் என்கிற முறையில் எனக்கு முக்கியம் என்பதை நான் மறந்திடமாட்டேன்.

அதற்காகத்தான் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, அந்த திட்டத்தின் அடிப்படையில் 234 தொகுதிகளுக்கும், அந்த திட்டத்தை விரிவுபடுத்தி, அந்தத்

தொகுதியில் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினைகளை தீர்த்துவைத்திட வேண்டும், அதை செயல்படுத்த வேண்டும் என்று ஒரு முடிவு செய்து, இப்போது அல்ல, ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல, ஆட்சிக்கு வருவதற்கு முன்னாடியே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சட்டமன்ற தொகுதிகளுக்கெல்லாம் என்னுடைய சுற்றுப்பயணத்தை நடத்தி, அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக கேட்டு, அப்படி நடக்கக்கூடிய அந்த நிகழ்ச்சிகளில் ஒரு பெட்டியை வைத்து, அந்த பெட்டியில் மனுக்களை நீங்கள் போடுங்கள், அதை போட்டதற்கான அடையாளத்திற்கு அந்த நிகழ்ச்சியில் ரெஜிஸ்டர் வைத்து, உங்களுடைய பெயர்களையும், முகவரிகளையும் அதில் பதிவு செய்து, அந்த அடிப்படையில் அவர்களுக்கெல்லாம் நம்பர் கொடுத்து, அதற்குப் பிறகு அந்த தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள் மேடையில் வைத்திருக்கக்கூடிய அந்த பெட்டியில் வந்து மனுக்களை எல்லாம் போட்டார்கள். அந்த மனுக்கள் எல்லாம் அறிவாலயத்தில் ஒட்டுமொத்தமாக சேர்த்து வைத்திருந்தோம். ஆட்சிக்கு வந்தவுடனே, நூறு நாட்களில், அந்த பெட்டியை திறந்து, மனுக்களில் உள்ள குறைகளை களைந்திடும் முயற்சியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவோம், அதை முடித்துக் கொடுப்போம் என்று உறுதிமொழி கொடுத்து, அந்த அடிப்படையில் ஆட்சிக்கு வந்தோம். பெட்டியும் திறக்கப்பட்டது.

நூறு நாட்களில், எது, எது எல்லாம் முடியுமோ, எவையெல்லாம் முடிவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதோ, அதையெல்லாம் நாங்கள் முடித்து தந்திருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதே மாதிரிதான் இந்த கொளத்தூர் தொகுதியை பொறுத்தவரைக்கும் பல பிரச்சினைகளை, ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகவே செய்து முடித்திருக்கிறோம், சட்டமன்ற உறுப்பினராக இருந்து என்னென்ன பணிகளை செய்யமுடியுமோ அந்த காரியங்களை செய்து முடித்திருக்கிறோம்.

ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு என்னென்ன பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம், செய்யப் போகிறோம் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும்.

கொளத்தூர் தொகுதியை பொறுத்தவரைக்கும் நான் பெருமைப்படுகிறேன், வரும்போதெல்லாம் மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னேன் அல்லவா, அதற்கு காரணம் நீங்கள் என் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை தான். வந்தவுடனே, மிகப்பெரிய திட்டங்களை இந்தத் தொகுதியில் நாம் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். எவ்வளவோ செய்திருக்கிறோம், அதில் முக்கியமான இரண்டு பெரிய திட்டங்கள் என்னவென்று கேட்டீர்கள் என்றால், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களை கட்டி அதை திறந்து வைத்து 111 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பில் மொத்தம் 840 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இன்னொரு திட்டத்தை சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய மாவட்ட செயலாளர் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள், அவரது துறையிலே பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு, அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் நாள் நான் தொடங்கி வைத்தேன். அந்த அறிவியல் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் B.Com, BBA, BCA, B.Sc Computer Science ஆகிய நான்கு பாடப்பிரிவுகளுடன் அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னால், 03.12.2021 அன்று சைவ சித்தாந்தம் சான்றிதழ் படிப்பிற்கான புதிய வகுப்பு 100 மாணவர்களுடன் துவக்கி வைக்கப்பட்டது. இதுபோல பல திட்டங்கள் கொளத்தூர் தொகுதியில் தொடங்கப்பட்டிருக்கிறது.

ஆட்சிக்கு வருவதற்கு முன், அதாவது நான் முதலமைச்சர் ஆவதற்கு முன்பே அனிதா அச்சீவர்ஸ் அகாடமி, நம்முடைய சட்டமன்ற அலுவலகத்திற்கு பக்கத்தில் ஒரு சிறிய அளவில்தான் தொடக்க காலத்தில் தொடங்கப்பட்டது. இன்றைக்கு பார்த்தீர்களென்றால், இதுவரை Tally படிப்பில் பெண்கள் 9 batch படித்து முடித்து விட்டார்கள், ஆண்கள் 5 batch படித்து முடித்து விட்டார்கள். தையல் பயிற்சி படிப்பில் பெண்கள் 5 batch முடிந்திருக்கிறது.

இதுவரை மொத்தம் 2,591 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இப்படி பயனடைந்திருக்கக்கூடிய சகோதரிகள்தான் இங்கே எழுச்சியோடு உட்கார்ந்து கொண்டிருக்கின்ற காட்சியை நான் பார்க்கிறேன். இதுமட்டுமல்லாமல் 360 பேர் Tailoring கற்று வருகிறார்கள். மொத்தம் பயிற்சியில் உள்ளவர்கள் 510 பேர். மிகச்சிறிய அளவில் தொடங்கப்பட்ட அந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமி இன்றைக்கு பரந்து விரிந்து நாமெல்லாம் பார்த்து பெருமைப்படக்கூடிய வகையில், மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படக்கூடிய வகையில் வளர்ந்து வந்திருப்பதைப் பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். அதில் பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கக்கூடியவர்கள், அதன் மூலமாக பயனடைந்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இன்றைக்கு நம்முடைய பொங்கல் விழாவை இங்கு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

பொங்கல் விழா என்பது தை திங்களை, அதை தமிழர்களுடைய பெருமையாகவும், தமிழர்களுக்கு என இருக்கக்கூடிய ஒரு விழாவாகவும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

❖ கடந்த 6ஆம் தேதி சென்னையில் இலக்கியத் திருவிழாவைத் தொடங்கி வைத்தேன்.

- அதே நாள் மாலையில் சென்னையில் புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்தேன்.
- பன்னாட்டு புத்தகக் காட்சியும் நடக்க இருக்கிறது.
- சமத்துவப் பொங்கல் விழாவும் நடத்தப் போகிறோம்.
- பள்ளி மாணவர்களுக்கான கலைத் திருவிழாவை வருகிற 12ஆம் தேதி தொடங்கப் போகிறோம்.
- நம்ம ஊரு திருவிழா என்ற பெயரில் சங்கமும் இணைந்து சென்னை சங்கமத்தை 13ஆம் தேதி நாம் தொடங்க இருக்கிறோம்.
- ஏறு தழுவுதல் எனப்படும் ஜல்லிக்கட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது.
- மாபெரும் தமிழ்க் கனவு சொற்பொழிவுகள் தொடங்க இருக்கிறது.
- வெளிநாட்டில் இருக்கக்கூடிய தமிழர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அயலகத் தமிழர் திருநாள் 11ஆம் நாள் கொண்டாடப்பட இருக்கிறது.
- கீழடியில் அருங்காட்சியகம், தொல்பொருள் ஆராய்ச்சி, இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த கீழடி அருங்காட்சியகத்தை விரைவில் திறந்து வைக்க இருக்கிறோம்.
- திருவள்ளுவர் திருநாள் அன்று தமிழ்ப் பெருமக்கள் பெயரில் விருதுகள் எல்லாம் வழங்கப்பட இருக்கிறது.

-இப்படி தை மாதம் முழுக்க அரசின் சார்பிலும், பல்வேறு அமைப்புகளின் சார்பிலும், நம்முடைய கட்சியின் சார்பிலும் விழாக்கள் இந்த மாதம் முழுவதும் கொண்டாடப்பட இருக்கிறது.

அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை இது வெறும் கழக ஆட்சி என்று சொல்வது மட்டுமல்ல, இது தமிழருடைய ஆட்சி, தமிழருக்காக நடைபெறக்கூடிய ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய பழம்பெருமையை மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், இப்படிப்பட்ட விழாக்களை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றைக்கும் நீங்கள் எனக்கு பக்கபலமாக இருக்கக்கூடியவர்கள். அதேபோல் நானும் என்றைக்கும் உங்களுக்கு பக்கபலமாக இருந்து, தொடர்ந்து என்னுடைய கடமையை நிறைவேற்ற நீங்கள் எப்போதெல்லாம் உத்தரவிடுகின்றீர்களோ, அந்த உத்தரவை ஏற்று நிறைவேற்ற நான் காத்திருக்கிறேன்! காத்திருக்கிறேன்! என்ற அந்த செய்தியை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்களுக்கு என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே மீண்டும் ஒருமுறை என்னுடைய மகிழ்ச்சியை இந்த நேரத்தில் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள்
கொளத்தூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 10.01.2023

உங்களது அறிவு - கலை அறிவாக, கல்வி அறிவாக, பகுத்தறிவாக வளர வேண்டும்

பள்ளிக்கல்வித் துறையின் கலை திருவிழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

திரு. பி. கே. சேகர்பாபு அவர்களே,

திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே,

திரு. செந்தில்பாலாஜி அவர்களே,

திரு. சக்கரபாணி அவர்களே,

திரு. செஞ்சி மஸ்தான் அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களே,

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களே,

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களே,

பள்ளிக் கல்வி ஆணையர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்களே,

இல்லம் தேடிக் கல்வி சிறப்புப் பணி அலுவலர் திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., அவர்களே,

மற்றும் இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய அரசு உயர் அலுவலர்களே, ஆசிரியர் பெருமக்களே,

என்னுடைய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசினுடைய பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்டிருக்கக்கூடிய மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூடிய ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் முதலில் என்னுடைய அன்பான வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி என்பது சாதாரண வெற்றி அல்ல. பல்லாயிரக்கணக்கானவர்களுடன் நீங்கள் போட்டி போட்டு வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.

இந்த வெற்றிக்கு உங்களுடைய துணிச்சலும், தன்னம்பிக்கையும், அறிவாற்றலும் அடிப்படை காரணம். இதை வாழ்நாள் முழுமைக்கும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் பையனே
நாடுகாக்கும் தலைவனாய்
நாளை விளங்கப் போகிறாய்” என்று எழுதினார் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

அந்த வகையில் நாளைய தமிழ்நாட்டைக் காக்கும் இலட்சியவாதிகளாக நீங்கள் இருக்கப் போகிறீர்கள். ஆக, அதற்காக நீங்கள் அடைந்திருக்கக்கூடிய இந்த வெற்றியை முதற்கட்ட வெற்றியாக இதனை நீங்கள் கருதிட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் இந்த கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம், பாடப்புத்தகம், வகுப்பறை ஆகியவற்றைத் தாண்டி இத்துறையானது பல்வேறு வகைகளிலும் மாணவர்களின்

அறிவுத்திறனையும், கலைத்திறனையும் ஊக்கப்படுத்தி வருகிறது.

13 ஆயிரத்து 210 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 6 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலக்கூடிய 28 லட்சத்து 53 ஆயிரத்து 882 மாணவர்களை, 206 வகையிலான போட்டிகளில் பங்கேற்கச் செய்து, மாபெரும் விழாவாக, இதை உருவாக்கி இருக்கக்கூடிய இந்தத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அதேபோல் அவருக்கு துணை நின்றிருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய உயர் அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அவர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாடம், பாடப்புத்தகம், வகுப்பறை ஆகியவற்றைத் தாண்டி, கற்பித்தல் வழிமுறைகளை பள்ளிக் கல்வித்துறை பயன்படுத்தி வருகிறது. நமது மரபார்ந்த கலைகளை மாணவர்கள் நெஞ்சில் விதைப்பதை நான் பாராட்டுகிறேன்.

பள்ளிக் கல்வியில் கலை மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைப்பதால் மாணவர்களின் சிந்தனைத் திறன் அதிகரிக்கும், விரிவடையும். பிற பாடங்களை கற்பதால் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும். இதனால் தன்னம்பிக்கை பெறுவார்கள்.

6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவ, மாணவியருக்கு கலைப் பயிற்சி அளிக்கவும் கல்வியில் கலைகளை கொணரும் வகையில், கால அட்டவணை உருவாக்கி கலை அரங்கமாக செயல்படுத்தி வருகிறது.

கலையில் ஆர்வமுள்ள ஒரு ஆசிரியரால் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அளவில் கருத்தாளர்களின் பங்கெடுப்புடன் அனைத்துக் கலை வடிவங்களுக்கும் கலைத்திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், இந்தத் திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. அந்த வகையில்தான் கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் நீங்கள் பங்கெடுத்து பரிசுகளைப் பெற்றுள்ளீர்கள்.

கலையரசன், கலையரசி பட்டமும் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. முதல் 20 இடங்களைப் பெறக்கூடிய மாணவர்களை வெளிநாட்டிற்கு கல்விச்சுற்றுலா அழைத்துச்செல்கிறோம். வாழ்வின் கடினமான நேரங்களில் நாம் கற்ற கலைகளை மனதிற்கு மாமருந்து என்பதனை உணர்ந்து, மாணவர்களின் கல்வித்திறன்களை, கற்பனைத் திறனை ஊக்கப்படுத்தும் வகையில் கலைத் திருவிழாவினை உருவாக்கியிருக்கும் பள்ளிக் கல்வித்துறைக்கு என்னுடைய பாராட்டுகளை நான் மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கலை ஆர்வத்தை ஊக்குவிப்பது, கற்பனைத் திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைவடிவங்கள் மற்றும் பண்பாடு பற்றிய பெருமிதத்தையும் மாணவர்களிடையே சேர்க்கும் வகையில் பள்ளிக் கல்வித்துறை செயல்பட்டு வருகிறது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் பள்ளிக் கல்வித் துறையானது எத்தனையோ மகத்தான முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறது.

- ❖ முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 36 ஆயிரத்து 895 கோடி ரூபாய் நிதியை பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கியுள்ளதுடன் அரசுப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.
- ❖ இல்லம் தேடிக் கல்வி
- ❖ எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்'
- ❖ பள்ளி மேலாண்மைக் குழுக்கள்
- ❖ எண்ணும் எழுத்தும்

ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களிடையே புது எழுச்சியை உருவாக்கியுள்ளது.

- ❖ மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களது கல்வி, விடுதிக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.
- ❖ அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கக்கூடிய புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பல்லாயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.
- ❖ சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆயத்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, உரிய மருத்துவ சிகிச்சை, உபகரணங்கள் வழங்கி தக்க வகுப்புகளில்

சேர்க்கப்பட்டு, தொடர்ந்து முழுமையான கல்வி பெற ஆலோசனை வழங்கப்படுகிறது.

❖ அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளிலும், உயர் தொழில் கல்வி ஆய்வகங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

❖ அரசு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ மாணவர்களுக்குக் கல்வி தொடர்பான தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் வழங்கக்கூடிய நோக்கத்தோடு 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கட்டணமில்லா தொலைபேசிச் சேவை 14417 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

❖ அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 11, 12-ஆம் வகுப்புகளில் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கான மாதிரிப் பள்ளித் திட்டம் நடைபெற்று வருகிறது.

❖ அரசுப் பள்ளி மாணவர்களிடையே பல்கோண திறன்களை வளர்க்கக்கூடிய நோக்கில், பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடுதல் சிறப்புமிக்க புதுமை முயற்சி சென்ற ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களிடையே அறிவியல் மற்றும் கணித கருத்துக்கள் குறித்து சிந்திக்கும்

ஆர்வத்தை உருவாக்க, 13 ஆயிரத்து 210 அரசுப் பள்ளிகளில் 'வானவில் மன்றம்' தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்படி ஏராளமான திட்டங்களை நமது அரசு செயல்படுத்தி வருகிறது.

ஒரு போட்டியில் கலந்து கொண்டோம் - வெற்றி பெற்றோம் - பரிசு பெற்றோம் என்று இல்லாமல் தொடர்ச்சியாக நீங்கள் போட்டிகளில் பங்கெடுங்கள்.

படிப்பு முடிந்ததும் வேலைக்கு போய்விட்டோம், திருமணம் நடந்துவிட்டது, கை நிறைய சம்பாதிக்கிறோம் என்பதில் மட்டும் நிறைவடைந்து விடாமல் கலைத் தொண்டையும் இத்துடன் சேர்த்து அனைவரும் தொடர வேண்டும்.

உங்களது அறிவு கலை அறிவாக, கல்வி அறிவாக, பகுத்தறிவாக வளர வேண்டும், வளர வேண்டும் என்று உங்கள் அத்தனை பேரையும் நான் மனதார மீண்டும் ஒரு முறை வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள்
சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில்,
பள்ளிக்கல்வித் துறையின் கலை திருவிழாவில் கலந்து
கொண்டு ஆற்றிய உரை - 12.01.2023

தமிழை வளர்ப்போம்
தமிழரையும் வளர்ப்போம்

"எங்கு பிறந்தாலும் தமிழன் தமிழனே!" என்று முழங்கியவர் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். எங்கு இருந்தாலும் தமிழர் தமிழரே என்ற உலகு தழுவிய நோக்கத்துடன் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் நலன் காத்திட செயலாற்றிக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசில், நேற்று தொடங்கி, இரண்டாம் நாளாக இன்றும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களே,

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள்

முனைவர் பொன்முடி அவர்களே,

திரு. சேகர்பாபு அவர்களே,

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

திரு. கலாநிதி வீராசாமி அவர்களே,

திரு. கிரிராஜன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களே,

மாண்புமிகு மலேசிய நாட்டு அமைச்சர் திரு. சிவகுமார் வரதராஜ் அவர்களே,

மாண்புமிகு இலங்கை நாட்டு அமைச்சர் திரு. அரவிந்த்குமார் அவர்களே,

மாண்புமிகு நியூ கயானா நாட்டு ஆளுநர் திரு. சசீந்திரன் அவர்களே,

கயானா நாட்டு முன்னாள் பிரதமர் டாக்டர் மோசஸ் வீராசாமி நாகமுத்து அவர்களே,

மொரிஷியஸ் நாட்டு முன்னாள் அமைச்சர் டாக்டர் பரமசிவம் அவர்களே,

இலங்கை நாட்டு முன்னாள் முதலமைச்சர் திரு. செந்தில் அவர்களே,

மலேசிய நாட்டு முன்னாள் அமைச்சர் திரு. சரவணன் அவர்களே,

இலங்கை நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சுமன் அவர்களே, திரு. மனோ அவர்களே,

ரிவர்டன் ஆஸ்திரேலியா உறுப்பினர் திரு. ஜெகதீஷ் அவர்களே,

சிங்கப்பூர் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தினகரன் அவர்களே,

துபாய் டெக்டான் குழுமத்தின் தலைவர் திரு. லட்சுமணன் அவர்களே,

அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களே,

தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., அவர்களே,

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., அவர்களே,

அயலகத் தமிழர் நலன் சார்ந்த அமைப்புகளின் நிருவாகிகளே,

அரசு உயர் அதிகாரிகளே, அலுவலர் பெருமக்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழர்களாக கூடியிருக்கிறோம். தமிழ் உணர்வோடு கூடியிருக்கிறோம். தமிழன் என்ற அந்த எண்ணத்தோடு குழுமியிருக்கிறோம்.

தமிழைப்பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், "உளங்கவர் ஓவியமே, உற்சாக காவியமே, ஓடை நறுமலரே, ஒளிரும் புதுநிலவே, அன்பே, அமுதே, அழகே, உயிரே, இன்பமே, இனியத் தென்றலே, பனியே, கனியே, பழரச சுவையே, மரகத மணியே, மாணிக்கச் சுடரே, மன்பதை விளக்கே" என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழை, தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட தமிழுக்கு பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

இன்றல்ல, நேற்றல்ல, ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே உலகில் உள்ள பிற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருந்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தப் பெருமையின் தொடர்ச்சியாகத்தான், தமிழ் நிலப்பரப்பின் அடையாளமாக அயலகத்தில் வாழும் தமிழர்களான நீங்கள் அனைவரும் இங்கே வந்திருக்கிறீர்கள்.

வரலாற்றுப் பெருமைமிக்க ஏதென்ஸ், ரோம் நகரங்களுக்கு இணையாக பூம்புகார், கொற்கை, தொண்டி போன்ற நகரங்களைக் கொண்டது நம்முடைய பழந்தமிழ்நாடு. பெருங்கடல் கடந்து, உலகளாவிய மனித

குலத்துடன் நட்புறவு பாராட்டி மானுட சமுத்திரத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள்.

கடற்படை கொண்டிருந்த சோழ மன்னர்கள் மேற்கொண்ட பயணங்கள் வெறும் போர்க்களங்களாக மட்டுமல்ல, பண்பாட்டு உறவுகளாகவும் மலர்ந்திருக்கின்றன. அதற்கான தடயங்களை தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் காண முடியும்.

பூம்புகார் எனும் காவிரிப்பட்டினத்தில் துறைமுகம் சோழர் காலத்தில் பல்வேறு நாடுகளுடன் ஏற்றுமதி - இறக்குமதி வணிகத்தில் ஈடுபட்டிருந்ததை சங்க இலக்கியமான பட்டினப்பாலை படம் பிடித்துக் காட்டுகிறது.

கால வளர்ச்சியில் தமிழர்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக பிற நாடுகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டன. மலேசியா, ஃபிஜி, இலங்கை, தென்னாப்பிரிக்கா, மடகாஸ்கர் தீவுகள் எனப் பல நாடுகளுக்கும் தொழிலாளர்களாக செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. எந்த நாட்டிற்குச் சென்றாலும், அங்கே காடு திருத்தி, கழனி செழிக்கச் செய்து, உழைப்பால் தன்னை மட்டுமின்றி, தனக்கு வாழ்வளித்த நாட்டையும் உயர்த்திக் காட்டியவர்கள்தான் நீங்கள். தலைமுறைகள் பல கடந்த தமிழர்கள். அவர்களின் வழித்தோன்றல்கள் நீங்கள்.

உலக நாடுகளில் குடியேறிய நம் தமிழர்களின் உழைப்பும் தியாகமும் தாய்மொழியாம் தமிழுக்கும் தாய்த் தமிழ்நாட்டிற்கும் புகழ் சேர்க்கும் வகையில், அந்தந்த நாடுகளில் அரசியல், தொழில், பொருளாதாரம் எனப் பல நிலைகளில் தவிர்க்க முடியாத சக்தியாகத் தமிழர்கள்

விளங்கி வருகின்றனர். எந்த நாட்டுக்குச் சென்றாலும், சொந்த நாட்டையும் தாய்மொழியையும் தமிழர்கள் தங்கள் நெஞ்சக் கூட்டில் அடைகாத்து வைத்திருப்பது வழக்கம். விதை நெல்லாகத் தமிழை எடுத்துச் சென்று, தாங்கள் வாழும் நாடுகளிலும் தமிழ் விளையும் நிலங்களை உருவாக்கியவர்கள் தமிழர்கள். பல தலைமுறைகள் கடந்த அயலகத் தமிழர்களின் ஆற்றலும், ஆராய்ச்சித் திறனும், உழைப்பின் மேன்மையும், உயர்ந்த பொறுப்புகளும் இன்று தனிப்பெரும் வரலாறாக உருவாகியுள்ளன.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் என்பார்கள். அதுபோல அயலகத்தில் குடியேறி வரும் தமிழர்கள், அங்கே பணிபுரியும் இடத்திலும் சிரமத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகக்கூடிய சில நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் வருகிறது. அதுமட்டுமின்றி மருத்துவ ரீதியாகவும் இன்னலுக்கு ஆட்படுகின்ற நிலைமையும் உள்ளது.

எனவேதான், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவரான நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, 2010-ஆம் ஆண்டில், அயலகத் தமிழர்களின் நலன் காத்திட, ஒரு துறையை உருவாக்கிட முனைந்தார்கள்.

உலகின் எத்திசையிலும் வாழும் தமிழர்களின் உள்ளத்துடிப்பு எப்படிப்பட்டது என்பதை அறிந்த தலைவர் கலைஞர் அவர்கள், அவரது திரைக்காவியமான பராசக்தியில், "பிறக்க ஒரு நாடு.. பிழைக்க ஒரு நாடு.." என்று தாய்நிலத்தை விட்டு வேறு நாட்டில் வாழும் தமிழர்களின் நிலையை வசனமாக வடித்திருப்பார்.

கடல் கடந்த தமிழர்களின் வேதனை உணர்வை வெளிப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞரின் பேனா, அதனைத் துடைப்பதற்கான திட்டத்தையும் வரைந்து காட்டியது. வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக, மறுவாழ்வுத் துறையில் ஒரு பிரிவு இணைக்கப்பட்டு அயலகத் தமிழர்கள் நலன் காக்கும் பணி தொடங்கப்பட்டது.

2011-இல் இதனைத் தனித் துறையாக உருவாக்கிட, தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளிக்கப்பட்டது. அதனை உடனடியாக நிறைவேற்றிட வாய்ப்பு அமையவில்லை. காரணம், எப்படி உங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடைவெளி உள்ளதோ, அதுபோல தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு மீண்டும் அமைவதற்கு ஒரு பத்தாண்டு கால இடைவெளி ஏற்பட்டுவிட்டது.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த திராவிட மாடல் அரசு, தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, அயலகத் தமிழர்களின் நலனுக்கென தனியே ஓர் அமைச்சகத்தை உருவாக்கி அமைச்சரையும் நியமித்துள்ளது. அதுமட்டுமின்றி அயலக மண்ணில் வசிக்கும் நம் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கவும், அவர்களுக்குத் தேவை ஏற்படக்கூடிய நிலைகளில் உதவி புரிந்து வரும் தமிழ்ச் சங்கங்களின் பணிகளை அங்கீகரிக்கவும், அடுத்த தலைமுறைக்கு தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலும், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் “அயலகத் தமிழர் நாள்” கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது வெறும்

அறிவிப்பல்ல என்பதைத்தான் இங்கே திரண்டிருக்கின்ற நீங்களும் உங்களோடு கலந்து நானும் சேர்ந்து இங்கே நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு செப்டம்பர் 24 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்திட முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டோடு தமிழ் பரப்புரை கழகத்தைத் தொடங்கி வைத்தேன். இதன் மூலம் அயலகத் தமிழர்கள், தமிழை எளிமையாக கற்பதற்கான தமிழ்ப் பாட நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் கற்றல், கற்பித்தலுக்கான துணைக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இணைய வழியில் தமிழைக் கற்பித்தலும் தொடங்கப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழர்களின் நலன் பேணவும் அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தவும், புலம்பெயர் தமிழர் நலவாரியம் உருவாக்கப்பட்டு திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் அதன் தலைவராகவும், வெளிமாநிலங்களில் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கக்கூடிய தமிழர்கள் அரசுசாரா உறுப்பினர்களாகவும், அரசு உயர் அலுவலர்களை உள்ளடக்கியதாகவும் இந்த வாரியம் செயல்பட உள்ளது.

ஆம்.. சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் வழியிலான அரசு இது.

அயலகத்தில் வாழும் தமிழர் நலன் காக்கும் வகையில் தொடங்கப்பட்ட இத்துறையில், கடந்த ஓராண்டில் மட்டும்,

வெளிநாடுகளில் இறந்துபோன 288 தமிழர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருதல்,

அங்கே இறந்தவர்களின் ஊதிய நிலுவை மற்றும் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தருதல்,

மருத்துவ இயலாமையால் பாதிக்கப்பட்டவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தல்,

-இதுபோன்ற வேலைகளை அங்குள்ள இந்தியத் தூதரகம் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

அயலகத் தமிழர்களின் நலனுக்கென அமைக்கப்பட்டுள்ள அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்து, அயல்நாட்டிற்கு செல்லும் தமிழர்களுக்கு அடையாள அட்டை, காப்பீடு, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை என பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

ஏற்கனவே நம் அரசு, வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு நலனுக்கென பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது. குறிப்பாக, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், வெளிநாடுகளிலிருந்து 80 ஆயிரம் தமிழர்கள் பாதுகாப்பாகத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் பணி வாய்ப்பை இழந்த காரணத்தால், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் மூலமாக மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரஷ்யா - உக்ரைன் இடையே போர் மூண்ட போது, இந்திய ஒன்றிய அரசின் ஒத்துழைப்புடனும்,

உக்ரைனின் அண்டை நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தன்னார்வலர்கள் உதவியுடனும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சியால், உக்ரைனில் மருத்துவம் பயின்று வந்த 1,890 மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இவர்களில் 1,524 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் செலவில் சொந்த ஊருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, தமிழ்நாடு அரசின் சார்பிலே உடனடியாக அவர்களுக்குத் தேவையான 174 கோடி ரூபாய் மதிப்பிலான உணவுப் பொருட்கள், பால்பவுடர் மற்றும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்து, மனிதநேய அடிப்படையில் அங்குள்ள மக்களின் இன்னலைப் போக்கிட உதவிக்கரம் நீட்டியது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும்போதெல்லாம், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கான பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை கவனத்தில்கொண்டு, தாயுள்ளத்தோடு திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக, அயலகத் தமிழர் நாளான இன்று சில அறிவிப்புகளை மகிழ்ச்சியோடு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு காலகட்டங்களில், புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வாழ்ந்து வரும் தமிழர்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும்.

இரண்டாவதாக, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள் தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும்.

மூன்றாவதாக, அயல்நாடுகளில், வெளிமாநிலங்களில் பணிக்குச் சென்று அங்கு எதிர்பாராதவிதமாக இறந்துவிடும் தமிழர்களின் குடும்பத்திற்கு மாத ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

நான்காவதாக, அயல்நாடுகளுக்கு செல்வோர் குறித்த தரவுத் தளம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

-என்ற அறிவிப்புகளை வெளியிடுவதோடு, வெளிநாடுகளுக்குச் செல்லும் நம் தமிழ்ச் சொந்தங்களின் நலன் காத்திட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, கண்ணை இமை காப்பதைப்போல, உலகெங்கும் வாழும் நம் தமிழ் இனத்தை இந்த அரசு தொடர்ந்து காத்திடும் என்று மீண்டும் உறுதியளிக்கிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கக்கூடிய நான், உங்களில் ஒருவனாக, உங்களுடைய ஒரு சகோதரனாக, உங்களில் பலருக்கு அண்ணனாக, சிலருக்கு தம்பியாக, ஏன், அனைவருக்கும் உடன்பிறப்பாக நான் இருக்கிறேன். உங்களுக்கு உறுதுணையாக இந்த அரசு இருக்கும். உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களால் ஆன ஒத்துழைப்பினை நீங்கள் வழங்குங்கள், இணைந்து நாம் பயணிப்போம்.

நம்மைக் கடலும் கண்டங்களும் பிரித்திருந்தாலும், தமிழ் இணைக்கும்.

உலகெங்கும் வாழும் தமிழர் வாழ்வு செழிக்கும். தமிழ்நாடு தழைக்கும்.

தமிழால் இணைவோம்!

தமிழை வளர்ப்போம்!

தமிழரையும் வளர்ப்போம்!

அனைவருக்கும் தமிழர் திருநாளாம் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
“அயலகத் தமிழர் தினம் 2023” விழாவில் கலந்து
கொண்டு ஆற்றிய உரை - 12.01.2023

500 நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்கேற்கும் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”

"சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா” நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்வளர்ச்சி, தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களே,

சென்னை சங்கமம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து அதில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய என்னுடைய அருமை தங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களே,

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு. வாகை சந்திரசேகர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

வரவேற்புரையாற்றியிருக்கக்கூடிய சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே,

கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. எஸ்.ஆர். காந்தி உள்ளிட்ட அரசு அலுவலர்களே,

சிறந்த வகையில் இசையமைத்து நம்மை மகிழ்வித்திருக்கக்கூடிய திரு. சந்தோஷ் நாராயணன் அவர்களே,

இந்த மேடையில் சிறப்பாக தங்கள் கலைகளை வெளிப்படுத்தியிருக்கக்கூடிய, நம்மை மகிழ்வித்த கலைக்குழுவைச் சார்ந்த கலைஞர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் தமிழக திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுடைய கலையும், கலைஞர்களும் தலைநகர் சென்னையிலே சங்கமிக்கக்கூடிய வகையில் இந்த “சென்னை சங்கமம்” நிகழ்ச்சியை தொடங்கி வைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு திருவிழாவில் எப்படி எல்லோரும் மகிழ்ச்சியாகவும், குதூகல மனநிலையோடு இருப்பார்களோ அப்படித்தான் நம்முடைய நம்ம ஊரு திருவிழாவிலும் நாம் எல்லோரும் கலந்துகொண்டு இன்றைக்கு மகிழ்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறோம்.

தொடர்ந்து சட்டமன்றம், அரசு நிகழ்ச்சிகள், ஆய்வுகள், பல்வேறுநிகழ்ச்சிகள் என்று தொடர்ந்து பணிகள் இருந்தாலும், இந்த கலை நிகழ்ச்சியை பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு நான் இங்கு வந்து பார்த்து இருக்கிறேன். வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் எப்படி பொழுதுபோனது என்று எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் அப்படித்தான் இருந்திருக்கும்.

“தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவற்கொரு குணமுண்டு!” நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் எழுதிய வரி இது. இது வெறும் ஆரவாரம் காட்டும் வரி மட்டும் அல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆவணப்படுத்தப்பட்ட நம்முடைய பண்பாட்டு, இலக்கியப் பெட்டகங்களை முன்னிறுத்தும் ஒரு பெருமித முழக்கம் இது!

நெஞ்சை அள்ளக்கூடிய சிலப்பதிகாரம் ‘முத்தமிழ்க் காப்பியம்’ என்று போற்றப்படும் அளவுக்கு இயல், இசை,

நாடகம் என பழந்தமிழ்நாட்டின் கலை மேன்மையைத் திட்டவட்டமாய் தீட்டிக் காட்டியிருக்கிறது.

நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வரிசைப்படுத்திச் சொல்வார்கள். இதில் நாடகம்தான் முதலில் தோன்றியது. இசை பின்னரும், அதன் பின்னர்தான் இயலும் தோன்றியது என்று. திராவிட இயக்கம்தான் கலைகள் என்பது வசதி படைத்த வர்க்கத்தின் பொழுதுபோக்கு அம்சம் என்று இருந்த நிலையை அடியோடு மாற்றி, அவற்றை அடித்தட்டு மக்களிடத்தில் எடுத்துச் சென்ற இயக்கம் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கம்தான் ஒரு சமுதாயத்தின் ஒரு தரப்பினருக்கான சாமரவீச்சாய் அல்ல... சாதிகளின் பெயரால், சமயங்களின் பெயரால் சமத்துவத்துக்கு சமாதி கட்ட நினைத்த போக்குக்கு எதிரான சம்மட்டியாய்... மூடப்பழக்கங்களுக்கு எதிரான முரசொலியாய் கலைகளை மாற்றியது.

திராவிட இயக்கம்தான் கலை வடிவங்கள் மூலமாக சாமானிய மக்கள் வாழ்க்கையில் அனுபவித்த வலியைப் பேசியது.

திராவிட இயக்கம்தான் சாமானிய மக்களின் மொழியில் பேசியது.

திராவிட இயக்கம் கலைகளை வளர்த்தது, கலைகளால் வளர்ந்தது.

நாடகம், திரைப்படங்கள், கிராமியக் கலைகள் அனைத்தையும் பயன்படுத்தி, மக்களிடையே பரப்புரை செய்தோம். கலைகளின் வளர்ச்சிக்கும், கலைஞர்கள் வாழ்வில் மலர்ச்சிக்கும் கண்ணும் கருத்துமாய் கணக்கற்ற

திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. இது கலைஞர் வழி நடக்கக்கூடிய அரசு. அதனால்தான், இது கலைஞர்களுக்கான அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதனால்தான் 2022-2023ஆம் ஆண்டு நிதிநிலைக் கூட்டத்தொடரில் கலை, பண்பாட்டுத்துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு 48 கோடி ரூபாய்க்கும் மேலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. கலைஞர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கலைகளைப் போதிக்கும் கல்விக்கூடங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கற்பித்தலின் தரத்தை உயர்த்த உதவும் நவீன கருவிகளை வழங்கிடவும் தாராளமாக நிதி ஒதுக்கீடு நம்முடைய அரசு செய்திருக்கிறது.

கலைகள் வளர வேண்டும் என்றால் கலைஞர்கள் வறுமையின்றி வாழ வேண்டும். அதற்கு அவர்களுக்குக் கலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக வாய்ப்புகள் இல்லாமல் வாடிக் கிடந்த கலைஞர்களுக்கு வான் மழையாய் ஏராளமான வாய்ப்புகளும், நலத்திட்ட உதவிகளும் அரசால் வழங்கப்படுகின்றன.

- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் கூடும் இடங்களில் ‘கலைச் சங்கமம்’ என்ற பெயரில் 160 கலை நிகழ்ச்சிகள் நடத்த 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

- 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் வழங்குவதற்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி வழங்க 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- கலைமாமணி விருது பெற்ற வறிய நிலையில் வாழும் ஒவ்வொரு மூத்த, சிறந்த கலைஞருக்கும் பொற்கிழியாக வழங்கப்படும் விருதுத் தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- திறமை மிக்க கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கப்படும் 'மாவட்ட கலைமன்ற விருதுகள்' எண்ணிக்கை 5-லிருந்து 15-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பாக சென்னை மற்றும் 10 மாவட்டங்களில் 'பொங்கல் கலை விழாக்கள்' நடத்த 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மூலம் அதிகமான கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம், மன்றத்திற்கான நல்கைத் தொகை 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவதைப் போல 'நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் தமிழ்நாட்டின் தலைநகரமாக இருக்கக்கூடிய சென்னையிலும், கலை பண்பாட்டு மண்டலங்களின் தலைமை இடங்களாக இருக்கக்கூடிய

காஞ்சிபுரம், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கலைவிழாக்கள் நடத்த 9 கோடியே 84 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் மிகப்பெரிய கலைக் கொண்டாட்டமாக நடக்கும் இந்தக் கலைவிழாக்கள், சென்னை மாநகரில் 18 இடங்களில் நிகழ்த்தப்பட இருக்கிறது.

இந்த நிகழ்ச்சிகளில் நாட்டுப்புறக் கலைஞர்கள், செவ்வியல் கலைஞர்கள், பிறமாநில கலைஞர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர். நாற்பதுக்கும் அதிகமான கலை வடிவங்களை உங்கள் கண்முன்னே நிகழ்த்தி உங்களையெல்லாம் மகிழ்விக்க இருக்கிறார்கள்.

இந்த விழாவில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் ஒவ்வொரு கலைஞருக்கும் இதுவரை வழங்கப்பட்ட ஒருநாள் மதிப்பூதியத்தை 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்க இருக்கிறோம்.

'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழாவில்' கண்ணுக்கு விருந்தான கலைவிழாவோடு, சென்னை மக்களின் நாவுக்கு விருந்தளிக்கும் உணவுத் திருவிழாவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களின் தனிச்சிறப்பான உணவு வகைகள் உங்களுக்காகப் பரிமாறப்படும். விழாவுக்கு வரும் மக்கள் அனைவரும் பங்கேற்று மகிழ வழுக்குமரம், உறியடி போன்ற பல்வேறு கேளிக்கை விளையாட்டுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் ஆர்வலர்களுக்குச் செந்தமிழ் விருந்து படைக்க கவியரங்கம், கருத்தரங்கம்

ஆகிய நிகழ்ச்சிகளோடு ஒரு இலக்கியத் திருவிழாவும் நடக்கவிருக்கிறது.

பொதுவாகவே மக்கள் தனித்தனித் தீவுகளாக தங்களை இப்போது மாற்றிக் கொள்கிறார்கள். இந்த மனநிலை மாற வேண்டும்.

உண்மையான பொழுதுபோக்கு என்பது நம்முடைய கலைகள்தான். அந்தக் கலைகள் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், நம் மனதைப் பண்படுத்துவதாகவும் அது அமைந்திருக்கிறது.

தமிழர்களாக நாம் ஒன்று சேருவதற்கு நம்முடைய கலைகள்தான் இணைப்புப் பாலங்களாக அமையும். எனவே,

கலை வளர்ப்போம்!

நம் நிலையை வளர்ப்போம்!

என்று இந்த நேரத்தில் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, மீண்டும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய இனிய தமிழ்த் திருநாளாக இருக்கக்கூடிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற
"சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா"-வை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 13.01.2023

உலக இலக்கியங்களை தமிழுக்கு கொண்டு வருவோம் - தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளுக்கு கொண்டு சேர்ப்போம்

சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நிறைவு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே,

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திரு. திண்டுக்கல் லியோனி அவர்களே,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களே,

ஜப்பான் நாட்டினுடைய துணைத் தூதர் திரு. டாகா மசாயூகி அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்களே,

பொது நூலகத் துறை இயக்குநர் திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. செல்வராஜ், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்களே,

புத்தக பதிப்பாளர் திரு. ஆழி செந்தில்நாதன் அவர்களே,

திரு. மனுஷ்யபுத்ரன் அவர்களே,

நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய பல்வேறு நாடுகளைச் சார்ந்திருக்கக்கூடிய தூதரக அதிகாரிகளே,

பதிப்பாளர்களே, எழுத்தாளர் பெருமக்களே, இலக்கிய ஆர்வலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் உலகளாவிய கவனத்தை ஈர்த்தது தமிழ்நாடு. அடுத்ததாக, செஸ் ஒலிம்பியாட் போட்டி மூலமாக உலகளாவிய புகழைப் பெற்றது நம்முடைய தமிழ்நாடு. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏ.டி.பி டென்னிஸ் தொடரை நடத்திக் காட்டியது தமிழ்நாடு. இதோ இப்போது அறிவுலகத்திலும் - அதாவது புத்தகப் பதிப்பிலும் உலகளவில் தனது சிறகை விரித்திருக்கிறது நம்முடைய தமிழ்நாடு. இதை நினைக்கும்போது உள்ளபடியே பெருமையாகவும், பூரிப்பாகவும் இருக்கிறது.

கடந்த 6ஆம் தேதி இதே மைதானத்திற்கு வந்து புத்தகக் கண்காட்சியை நான் திறந்து வைத்தேன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட விற்பனைக் கடைகள் இங்கு இடம்பெற்று, ஒரு வார காலமாகப் புத்தக விற்பனையைச் செய்து வருகின்றன. இது 46ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி. இந்த 46 ஆண்டுகளில் இல்லாத ஒன்று இந்த ஆண்டு தொடங்கி இருக்கிறது. அதுதான் பன்னாட்டு புத்தகக் காட்சி.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்

சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்!

என்ற கவிதை வரிகளை மகாகவி பாரதியார் எழுதி 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. மகாகவியின் கனவை நிறைவேற்றும் வகையில் இந்தப் பன்னாட்டு புத்தகக் காட்சியானது நடைபெற்று வருகிறது.

பதிப்புத்துறை பெரிதும் வளராத காலத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும், எங்கெல்ஸ், லெனின், அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட பல அறிஞர்களுடைய நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார் அவர்கள். உலக அறிவையும், விரிவையும் தமிழர்களுக்குத் தமிழிலே அளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அத்தகைய முன்னோடிகளின் கனவை நிறைவேற்றும் காட்சிதான் இந்தப் பன்னாட்டு புத்தகக் காட்சி.

தமிழ்நாட்டில் தமிழாட்சி நடக்கும்போது, இது போன்ற பன்னாட்டுப் புத்தகக் காட்சிகள் நடத்துவது ஒன்றும் வியப்பல்ல. இலக்கியச் செழுமைமிக்க நமது தமிழ்ப் படைப்புகளை உலகமெல்லாம் கொண்டு சேர்க்கவும், உலகெங்கிலும் உள்ள சிறந்த அறிஞர்களின் அறிவு செறிந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வரவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

அண்மையில் நடந்த சென்னை இலக்கிய விழாவில் 108 புத்தகங்களை அந்த நிகழ்வில் நான் வெளியிட்டேன்.

- திசைதோறும் திராவிடம் திட்டத்தின் கீழ் 25 நூல்களும் -
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் 46 நூல்களும் -
- இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் 59 நூல்களும் -
- சங்க இலக்கிய வரிசையில் பத்துப்பாட்டு நூல்களும் -
- முன்பு வெளியான கலைக்களஞ்சியத்தின் ஆவணப்பதிப்பும் -
- நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகளாக 2 நூல்களும் -
- வ.உ.சி.யின் நூல் திரட்டுகளாக இரண்டு நூல்களும் -
- நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல் வரிசையில் 17 நூல்களும்

என 173 நூல்களை கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் அரசின் சார்பில் நாம் வெளியிட்டுள்ளோம். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் மருத்துவப் பாடநூல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தந்தை பெரியார் ஓர் உலகத் தலைவர். அவரது சிந்தனைகள் உலகம் முழுவதும் பொருந்தக் கூடியவை. உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அத்தகைய பெரியாரின் சிந்தனைகளை உலக மொழிகளையும், இந்திய மொழிகளையும் உள்ளடக்கி 21 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட இருக்கிறோம். அதற்கான அடிப்படைப் பணிகள் தொடங்கி இருக்கின்றன.

தமிழ் நூல்களை ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளியிட்டுள்ளோம். பல்வேறு மொழிகளிலும் உள்ள நூல்களை தமிழில் கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பணிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வேகமாக நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டக்கூடிய வகையில் இந்த பன்னாட்டு புத்தகக் காட்சியை சென்னையில் தொடங்கி இருக்கிறோம்.

உலகளாவிய அளவில் ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, சீனா ஆகிய நாடுகளில் நடைபெறும் இது போன்ற புத்தகக் காட்சியானது, இப்போது சென்னையில் தொடங்கி இருக்கிறது. இதனை ஆண்டுதோறும் நடத்தி, மிகப்பெரிய அளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதைப் பள்ளிக் கல்வித் துறைக்கு என்னுடைய வேண்டுகோளாக எடுத்துவைக்க நான் விரும்புகிறேன்.

எப்போது தரமான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறதோ அப்போது நம்முடைய மொழியும் வளம் பெறும். சொற்களும் வலிமை பெறும்.

புதிய இலக்கியங்கள் மட்டுமல்ல, புதிய சிந்தனைகளும் புதிய சொற்களும் கிடைக்கும். காலம்தோறும் புதிய புதிய சொற்கள் உருவானால்தான் மொழியின் காலமும் நீடிக்கும்.

தமிழின் மிகச் சிறந்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான க. நா. சுப்பிரமணியம் அவர்கள், 'ஆங்கிலத்தின் இலக்கிய வளமே மொழிபெயர்ப்பாளர்களால் தான் ஏற்பட்டது' என்று சொல்லி இருக்கிறார். அந்த

வகையில் தமிழுக்கும் பிறமொழிகளில் இருந்து நூல்கள் வர வேண்டும். தமிழ் நூல்களும் பிறமொழிக்கு செல்ல வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னால் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள், 'இந்து தமிழ் திசை' நாளிதழில் இந்திய இலக்கியம் குறித்து எழுதி இருந்தார்.

இந்திய இலக்கியங்களோடு போட்டி போடும் படைப்புகள் தமிழில் ஏராளமாக வெளியே வந்து கொண்டிருந்தாலும், அது இந்திய அளவில் கவனம் பெறாமல் போனதற்கு என்ன காரணம் என்பது குறித்து அவர் விளக்கி இருந்தார். உண்மையான காரணம் - நமது தமிழ் இலக்கியங்கள் இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் தரமான முறையில் மொழிபெயர்க்கப்படாமல் இருப்பதுதான். நம்முடைய தமிழ் இலக்கியங்கள் உலகளாவிய இலக்கியங்களாக மாற வேண்டுமானால், உலக மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட வேண்டும். படைப்பிலக்கியத்துக்கு இணையான மதிப்பு மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கும் இருக்கிறது. அதற்கு இது போன்ற பன்னாட்டு புத்தக் காட்சிகள் மிகமிகப் பயன்படும். உலகளாவிய அறிவுப் பரிமாற்றமே சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியின் நோக்கமாக அமைந்திருக்கிறது. இக்கண்காட்சியில் பங்கேற்கும் வெளிநாட்டு பதிப்பாளர்கள் மற்றும் தமிழக பதிப்பாளர்கள் தமிழ் இலக்கியத்தை மையமாகக் கொண்டு காப்புரிமைகளைப் பரிமாறிக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் உலகளாவிய பதிப்புத்துறையினருடன் ஒரு சிறந்த தொடர்பை ஏற்படுத்த இயலும்.

இந்த பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சுவீடன், தென்

கொரியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, வங்கதேசம், அஜர்பைஜான், இஸ்ரேல், உகாண்டா, அர்மேனியா, அர்ஜென்டினா, கனடா, துருக்கி, கென்யா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் வருகை தந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ற முறையில் அவர்கள் அத்தனை பேரையும் வருக! வருக! வருக! என வரவேற்கிறேன். இங்கு வந்துள்ள பன்னாட்டு பதிப்பாளர்கள் தமிழ்ப் பதிப்பாளர்களுடன் நம்பகமான வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இங்குள்ள பதிப்புரிமை பரிமாற்று மையத்தில் (Rights table) பங்கேற்கும் நாடுகள், பிற புத்தக வெளியீட்டாளர்கள், இலக்கிய முகவர்கள், புத்தக வெளியீட்டு அமைப்புகள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோருடன் பதிப்புரிமையினை விற்கவும் வாங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் எழுத்தாளர்களுடன் சந்திப்பு, தமிழ் மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பு, உலக புத்தகச் சந்தையில் பதிப்புத்துறையின் எதிர்காலம், மொழிபெயர்ப்புத் தொழில்நுட்பம் போன்ற பல தலைப்புகளில் அறிஞர்களின் உரை நிகழ்த்தப்பட்டிருந்தது. இது அறிவுலகச் செயல்பாட்டுக்கு மிக மிக முக்கியம்.

தமிழ் மொழியை உலகெங்கும் எடுத்துச் செல்லும் வகையில் தமிழ் மொழியின் சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்ய தமிழ்நாடு அரசால் மொழிபெயர்ப்பு மானியமாக 3 கோடி ரூபாய் Translation grant வழங்கப்படும் என்பதையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் அறிவிக்க விரும்புகிறேன்.

முதன்முறையாக நடந்து முடிந்த இந்த பன்னாட்டு புத்தகக் காட்சி மூலம் தமிழ் மொழியிலிருந்து பிற இந்திய மற்றும் உலக மொழிகளுக்கும், பிற மொழிகளில் இருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கும் வகையில் பல்வேறு பதிப்பகங்களுக்கு இடையே 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது என்பதையும் பெருமிதத்துடன் அறிவிக்க நான் விரும்புகிறேன்.

உலகளாவிய அறிவு பரிமாற்றத்திற்கான தளமாக சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். எழுத்தாளர்களுக்கு - பதிப்பாளர்களுக்கு - மொழிபெயர்ப்பாளர்களுக்கு இது மிகப்பெரிய வாய்ப்பு. இதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த 16ஆம் தேதி தொடங்கி, மூன்று நாட்கள் இந்தச் சந்தை நடந்துள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இன்னும் பல நாட்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாக தமிழ்நாடு அரசு செய்யும். இந்த ஆண்டு நடைபெறும் இந்த காட்சிக்காக 6 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்தது.

பள்ளிக்கல்வித்துறையின் பொது நூலக இயக்ககமும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகமும், தென்னிந்திய பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சங்கமும் (BAPASI) இணைந்து நடத்தும் இந்த சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி, தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் உலக அரங்கில் உயர்ந்த நிலையில் நிலைநிறுத்தும் என்ற நம்பிக்கையோடுதான் அரசு இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்தது. அறிவுச் சக்தியை உருவாக்குவது என்பதை ஆக்கபூர்வமான முதலீடாகவே நாங்கள் நினைக்கிறோம்.

இதனை அறிவுலகத் தொண்டாகக் கருதி நாங்கள் செய்து வருகிறோம். இதனை தமிழ்நாடு அரசு தனது கடமையாகக் கருதுகிறது. யாரும் கோரிக்கை வைத்து இதை நாங்கள் செய்யவில்லை.

இப்படிச் செய்வதுதான் எங்களது வாடிக்கை! தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் இதனை நன்கு அறிவார்கள். இந்த அறிவுலகப் பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். இது தொடர்பான ஆலோசனைகள் இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளவும், திறந்த மனதுடன் தமிழ்நாடு அரசு தயாராகவும் இருக்கிறது.

இலக்கியம் படிப்போம்!

இலக்கியம் படைப்போம்!

உலக இலக்கியங்களை தமிழுக்குக் கொண்டு வருவோம்!

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளுக்கு கொண்டு சேர்ப்போம்!

உலக அறிவுலகத்தை நாம் அறிவோம்!

உலக அறிவுலகத்துக்குத் தமிழை அறிமுகம் செய்வோம்! என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
நடைபெற்ற சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி
நிறைவு விழாவில் ஆற்றிய உரை - 18.01.2023

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்கும் ஆட்சி

43ஆவது வழுவூரார் நாட்டியம் மற்றும் இசை விழாவில் பங்கெடுத்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் திரு. ஜி.எம். அக்பர் அலி அவர்களே,

மயிலைத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. த.வேலு அவர்களே,

மதிப்பிற்குரிய டாக்டர் நல்லி குப்புசாமி அவர்களே,

இந்து குழுமத்தின் இயக்குநர் திரு. ரவி அவர்களே,

பாரதிய வித்யா பவன் இயக்குநர் திரு.கே.என். ராமசாமி அவர்களே,

முன்னாள் நீதியரசர் வாசுகி அவர்களே,

திரு. கிளவ்லேண்ட் வி.வி. சுந்தரம் அவர்களே,

இந்த ஆண்டு விருது பெற்றிருக்கக்கூடிய கலைமாமணி ஏ. கன்னியாகுமரி அவர்களே,

ஸ்ரீ வழுவூரார் பரதநாட்டிய அகாடமியின் செயலாளர் திரு. வழுவூர் சாமராஜன் குமாரன் அவர்களே,

அகாடமியின் நிருவாகிகளே,

இசை மற்றும் நடனக் கலைஞர்களே,

விழாவிற்கு வருகை தந்திருக்கக்கூடிய இசை ஆர்வலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

என்னை அறிமுகப்படுத்தி உங்களிடத்திலே வெளிப்படுத்தியிருக்கக்கூடிய சகோதரர் சொல்லுகிறபோது, இந்த விழாவிற்கு நான் வந்த காரணத்தால் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்று எடுத்துச் சொன்னார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் தெரிவிக்க விரும்புவது, இந்த விழாவிற்கு வந்திருக்கிற காரணத்தால் நான் மிகப்பெரிய அளவிலே பெருமைப்படுகிறேன் என்பதுதான் எனக்கு பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன், அந்த உணர்வோடுதான் இந்த நிகழ்ச்சிக்கும் நான் வந்திருக்கிறேன்.

43ஆவது வழுவூரார் நாட்டிய மற்றும் இசை விழாவில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டிய உலகமாக இருந்தாலும், இசை உலகமாக இருந்தாலும் அதில் வழுவூரார் குடும்பத்திற்கு மகத்தான ஒரு இடம் உண்டு. குடும்பம் குடும்பமாக - தலைமுறை தலைமுறையாக என்று சொல்வதைப் போல – இதைச் சொல்லுகிறபோது, அரசியலில் இருந்தால் வாரிசு என்று சொல்லி விடுவார்கள். அதை விமர்சனமும் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அதையெல்லாம் தாண்டி, அதையெல்லாம் மீறி இன்றைக்கு இசைக்கும் நாட்டியத்திற்கும் தொண்டாற்றிய ஒரு குடும்பமாக வழுவூராருடைய குடும்பம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாமன்னன் இராசராசசோழனின் மகள் குந்தவைக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்த பாரம்பரியம் வழுவூராரின் பாரம்பரியம்! தொண்டாற்றிய என்பதையும் விட - தொண்டாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய குடும்பம் தான் வழுவூராரின் குடும்பம்!

மூத்த மகன், 'நாட்டிய கலா சாம்ராட்' என்று போற்றப்பட்ட, சாம்ராஜ் அவர்கள். அதேபோல், இளைய மகன், இசை மற்றும் திரையுலகக் கலைஞரான மாணிக்கவிநாயகம் அவர்கள். குறிப்பாக, சாம்ராஜ் அவர்களின் வெண்கலக் குரலை, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அதிகம் விரும்பினார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய சங்கத்தமிழை இசைக் கோவையாக ஆக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டவர் நம்முடைய சாம்ராஜ் அவர்கள்.

எந்தத் துறையாக இருந்தாலும், அதில் தனித்திறமைசாலிகள் அதிகமாக இருப்பார்கள். எத்தனையோ விருதுகளைப் பெற்றிருப்பார்கள்.

சாதனைகளைத் தனிப்பட்ட முறையிலும் செய்திருப்பார்கள். ஆனால், அந்தத் துறைக்கு தன்னைப் போலவே திறமைசாலிகளை உருவாக்கி இருப்பார்களா என்றால், அதிலே விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர்தான் அத்தகைய ஆற்றலைப் பெற்றிருப்பார்கள். அப்படி விரல் விட்டு எண்ணக்கூடிய மனிதர்களில் முக்கியமானவர்; இன்னும் சொன்னால் தலைசிறந்தவர், வழுவூர் பி. இராமையா அவர்கள் ஆவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தான் மட்டுமல்ல, தன்னைப் போலவே ஏராளமானவர்கள் வளரவேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு அதற்காக அவர் செயல்பட்டவர்.

- நாட்டியப் பேரொளி பத்மினி அவர்கள்
- பத்மா சுப்பிரமணியம் அவர்கள்
- வைஜெயந்தி மாலா அவர்கள்
- சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்கள் -

என அவர் உருவாக்கிய கலைஞர்களும் மாபெரும் கலைஞர்களாக நாட்டிலே வலம் வந்தவர்கள். இப்படி கலைஞர்களை உருவாக்கக் கூடிய பரந்த உள்ளமானது அனைவருக்கும் வந்தாக வேண்டும். இதில் வழுவூரார் குடும்பத்துக்கு தனிப்பட்ட முறையில் நானும் நன்றி சொல்லக்கூடிய நிலையில்தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். ஏனென்றால் இங்கே குறிப்பிட்டதைப் போல என்னுடைய மகள் செந்தாமரை - நாட்டிய கலா சாம்ராட் கலைமாமணி வழுவூர் சாம்ராஜ் அவர்களிடம் நாட்டியம் கற்றவர் என்பதை இங்கே சொன்னார்கள், அதிலே எனக்கு உள்ளபடியே பெருமை.

ஏழுவயதில் இருந்தே செந்தாமரை நாட்டியம் கற்று வந்தார். தன்னுடைய ஒன்பதாவது வயதில் சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலியில் நடனம் ஆடியிருக்கிறார். 14.08.1996-ஆம் நாள் மியூசிக் அகாடமி ஹாலில் செந்தாமரையினுடைய நாட்டிய அரங்கேற்றமும் நடைபெற்றிருக்கிறது. மறைந்த தலைவர் அய்யா மூப்பனார் அவர்கள் தலைமையில், இசைஞானி இளையராஜா அவர்களுடைய முன்னிலையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு வரவேற்புரை ஆற்றக்கூடிய அந்த விழா நடந்ததை நான் இன்றைக்கும் எண்ணிப் பார்க்கிறேன். அன்றைய நாள் சிறப்பாக செந்தாமரை அவர்கள் நாட்டியம் ஆடினார் என்று சொன்னால், அவரை மிகச் சிறப்பாக பயிற்றுவித்தவர் தான் ஆசிரியர் சாம்ராஜ் அவர்கள் என்பதுதான் உண்மை. தான் என்ன எதிர்பார்க்கிறாரோ, அதனை மாணவர்களிடம் கொண்டு வந்துவிடக் கூடிய ஆற்றலைப் பெற்றவராக அவர் விளங்கினார்.

பழைய பாடல்களை வைத்தே நாட்டியங்களை நடத்திக் கொண்டிருந்த காலத்தில், தமிழ் இலக்கியப் பாடல்களைப் புகுத்தி, அதற்கென நாட்டிய அசைவுகளை உருவாக்கி தமிழ்த் தொண்டாற்றியவர் வழுவூரார் அவர்கள்.

நாட்டிய மேடைகளைத் தாண்டி திரைத்துறையிலும் முத்திரை பதித்தார். மீரா திரைப்படத்தில் இடம்பெற்ற நடனக் காட்சிகள் அவர் அமைத்ததுதான்.

இவர் வாங்காத விருதுகள் இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு விருதுகளைப் பெற்றார்.

- இசைப் பேரறிஞர் விருது
- சங்கீத நாடக அகாடமி விருது
- பத்மஸ்ரீ
- கலைமாமணி

என அனைத்து விருதுகளையும் பெற்றவர்.

நாட்டியக் கலையை வளர்க்க வேண்டும். இதனை அரசோ, இதுபோன்ற அமைப்புகளோ மட்டுமல்ல, தனிமனிதர்களும் செய்தாக வேண்டும்.

வழுவூரார் அவர்கள், "கலையின் தரம் குறையாமல் இருக்க வேண்டுமென்றால், கலைஞர்களும், ரசிகர்களும் இக்கலையின் பெருமையையும், கலையின் நுணுக்கங்களையும் ஓரளவிற்கு அறிந்திருக்க வேண்டிய அவசியம். கலைஞர்களாக உள்ளவர்கள் புத்தகங்களைப் படிப்பதனாலும், கலை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனாலும் மாத்திரம் கலைஞர்களாகிவிட முடியாது. அநேக வருடங்கள் நல்ல குருகுலவாசம் செய்து அதைக் கற்றுக் கொள்ள முடியும்" என்று சொல்லி இருக்கிறார். அந்த அடிப்படையில் கலை ஆர்வம் உள்ளவர்கள், கலைத் திறமை உள்ளவர்கள் நல்ல ஆசிரியர்களிடம் இக்கலைகளைக் கற்றுக் கொண்டு கலைகளை காலமெல்லாம் வளர்க்க துணை புரிய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்கும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கலைகள் என்பவை தமிழ்ப் பண்பாட்டைக் காலம் காலமாக வளர்த்தெடுக்கும்

பணியைச் செய்து வருகின்றன. தமிழும் - தமிழ்நாடும் பல்லாயிரம் ஆண்டு காலம் நின்று நிலைக்க இத்தகைய கலை இலக்கியங்கள்தான் அடிப்படையான காரணம்.

எத்தனையோ படையெடுப்புகளை தமிழ்நாடு சந்தித்துள்ளது. அத்தனை படையெடுப்புகளையும் தாங்கி நின்று செழிக்க நமது கலை, இலக்கியங்கள்தான் காரணம்.

இந்திய விடுதலைக்காக வழுவூரார் அவர்கள் நாட்டியக் கலையை அன்றே பயன்படுத்தியதைப் போல இன்று இருப்பவர்களும் தமிழைக் காக்கவும், தமிழ்நாட்டைக் காக்கவும் தங்கள் கலையை பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய புதிய கலைஞர்கள் உருவாகுவதைப் போல புதிய புதிய பாடல்களும் இந்த மேடைகளில் ஒலிக்க வேண்டும்.

நவீனக்கலையில்நவீனக்கருத்துகள்-அறிவுப்பூர்வமான கருத்துகள், பகுத்தறிவுக் கருத்துகள் - சமூக மேன்மைக்கும் மக்களை நல்வழிப்படுத்தும் கருத்துகள் இடம் பெற வேண்டும். நவீன வடிவங்களை மட்டுமல்ல, நவீன எண்ணங்களையும் இந்தக் கலையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

இங்கு கலைமாமணி கன்னியாகுமரி அவர்கள் இந்த ஆண்டு விருது பெற்றிருக்கிறார்கள். அவரையும் வாழ்த்துகிறேன். அவரே சொன்னார், நான் ஆந்திராவில் இருந்தாலும் ஏறக்குறைய 50 ஆண்டு காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டிற்கு வந்து சேவை செய்து கலையைக் கற்று இப்படி ஒரு விருதை பெற்றிருக்கிறேன் என்று சொன்னால்,

இதற்குக் காரணம் தமிழ்நாடு தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டினுடைய முக்கியத்துவம் இப்போது எல்லோருக்கும் தெரியும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, அனைவருக்கும் நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னையில் நடைபெற்ற 43ஆவது வழுவூரார்
நாட்டியம் மற்றும் இசை விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 19.01.2023

கல்வியும், மருத்துவமும் சேவைத் துறையாக செயல்பட வேண்டும்

காது, மூக்கு, தொண்டை, தலை மற்றும் கழுத்து மருத்துவ அறிவியல் மாநாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக்கூடிய இந்த மாநாட்டினுடைய நாயகர் என்னுடைய மதிப்பிற்குரிய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்களே,

சிறப்புரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய கவிப்பேரரசு அண்ணன் வைரமுத்து அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

மருத்துவர் எழிலன் அவர்களே,

திரு. த. வேலு அவர்களே,

தலைவர், பேராசிரியர் மருத்துவர் சி. திருமலைவேலு அவர்களே,

செயலாளர், பேராசிரியர் மருத்துவர் எம். என். சங்கர் அவர்களே,

பொருளாளர், பேராசிரியர் மருத்துவர் ச. ரகுநந்தன் அவர்களே,

கூட்டமைப்பினுடைய நிருவாகிகளே,

பங்கேற்றிருக்கக்கூடிய மருத்துவ பெருமக்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காது - மூக்கு - தொண்டை - தலை - கழுத்து மருத்துவ அறிவியல் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்களுக்கும் அவருக்குத் துணைநின்று இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய அன்பர்கள் அனைவருக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு துபாயில் நடைபெற்ற உலக E.N.T பேரவைக் கூட்டத்தில், உலகெங்கிலும் இருந்து பத்து தலைசிறந்த மருத்துவர்களுக்கு உயரிய தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பத்துப் பேரிலும் ஆசிய கண்டத்தில் இருந்து அந்தப் பெருமைமிகு பன்னாட்டு விருதுக்குத் தேர்வான ஒரே மருத்துவர்

யாரென்று கேட்டால், நமது மோகன் காமேஸ்வரன் அவர்கள்தான். உரையைத் தொடங்குவதற்கு முன்னால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற முறையில், தமிழ்நாடு மக்கள் சார்பிலே, தமிழன் என்கிற அந்த உணர்வோடு அவருக்கு என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநாடு முழுக்க முழுக்க தமிழில் நடைபெற இருக்கிறது என்பது, முதல் மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. தமிழ் என்று சொல்லுகிறபோது, எங்களையெல்லாம் ஆளாக்கிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார், தமிழைப் பற்றி பெருமையோடு சொல்லுகிறபோது அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே!
ஓடை நறுமலரே! ஒளியுமிழ் புதுநிலவே!
அன்பே! அமுதே! அழகே! உயிரே!
இன்பமே! இனிய தென்றலே!
பனியே! கனியே! பழரசச் சுவையே!
மரகத மணியே! மாணிக்கச் சுடரே!

-என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் கிடையாது.

அப்படிப்பட்ட அந்த அழகுத் தமிழ்மொழியில் இந்த மாநாடு நடைபெறுவது உள்ளபடியே பாராட்டுக்குரியது. பொதுவாக இதுபோன்ற மாநாடுகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் நடக்கும். அதுவும் கோட்-சூட் அணிந்துகொண்டு தான் வருவார்கள். ஆனால், இந்த மாநாட்டில் அதிலும் குறிப்பாக இந்த மாநாட்டை நடத்தக்கூடிய மோகன் காமேஸ்வரன் அவர்கள் எப்படி

இருக்கிறார் என்று பார்க்கிறீர்கள், வேட்டி, சட்டையோடு வந்திருக்கிறார்.

நான் இந்த அரங்கத்தை உற்றுப் பார்க்கிறேன். பாதிப் பேருக்கு மேல் வேட்டி - சட்டையோடுதான் வந்திருக்கிறீர்கள். முழுமையாகத் தமிழில் நடக்க இருக்கக்கூடிய மாநாடு என்று நம்முடைய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்கள் அறிவித்து இதைச் சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பார்த்தீர்களானால், இதுபோன்ற மாநாடுகள் எல்லாம் ஒரு பெரிய ஸ்டார் ஹோட்டலில், பெரிய அரங்குகளில்தான் நடக்கும். ஆனால் இந்த மாநாட்டைப் பொறுத்தவரைக்கும், முதல்முறையாக முத்தமிழ்ப் பேரவையில் நடக்கிறது. அதுவும் இந்த முத்தமிழ்ப் பேரவையை யார் தொடங்கி வைத்தார்கள் என்றால், தலைவர் கலைஞர்தான்.

மருத்துவத்தில் மட்டுமல்ல, தமிழ் மீதும் நம்முடைய மோகன் காமேஸ்வரன் அவர்களுக்கு இருக்கக்கூடிய அளவில்லாத பற்றின் அடையாளமாகத்தான், இந்த நிகழ்ச்சி முத்தமிழ்ப் பேரவையில் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் மோகன் காமேஸ்வரன் அவர்கள் உள்ளிட்ட மருத்துவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த நிகழ்ச்சியைச் சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

இதே முத்தமிழ்ப் பேரவையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது; கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்ச்சிகள், கட்சி நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது. ஆனால், இன்றுதான் முதன்முதலில் தமிழ் மருத்துவ விழா இந்த முத்தமிழ்ப் பேரவையில் நடைபெறுவது என்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்று. கலைஞர் இன்றைக்கு இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார், பெருமைப்பட்டிருப்பார் என்பதைத்தான் எண்ணிப் பார்க்கிறேன்.

டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்களைப் பற்றி நம்முடைய கவிப்பேரரசு அவர்கள் பேசுகிறபோது, அவருக்கு மருத்துவம் பார்ப்பதைப் பற்றியெல்லாம் சொன்னார். எனக்கும் அவர் மருத்துவர்தான். எனக்கு மட்டுமல்ல - தலைவர் கலைஞர் அவர்களுக்கும் அவர்தான் மருத்துவர் – தலைவர் குடும்பத்திற்கும் அவர்தான் மருத்துவர்.

இந்த நேரத்தில் அவருடைய தந்தை டாக்டர் காமேஸ்வரன் அவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவரிடத்திலும் நான் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைக்காகப் பலமுறை சென்றிருக்கிறேன். அதிலும் குறிப்பாக, இந்தியாவில் நெருக்கடி நிலை ஏற்பட்டு 1976-ஆம் ஆண்டு நம்முடைய ஆட்சி தமிழ்நாட்டில் கலைக்கப்பட்டு, மிசா சட்டம் வந்து அந்த மிசா சட்டத்தின்கீழ் கைதாகி சிறையில் இருக்கக்கூடிய நிலை எனக்கு ஏற்பட்டது, ஒரு வருடம் இருந்தேன். நான் அந்தப் பிரச்சினைக்கு அதிகம் போக விரும்பவில்லை. அப்படி சிறையில் இருந்தபோது எனக்கு E.N.T. பிரச்சினை வந்தது, சைனஸ் பிரச்சினை வந்தது. அப்போது சிகிச்சைக்காக சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்கு என்னை காவலர் பாதுகாப்போடு அழைத்துக் கொண்டு செல்வார்கள். அவர் இருக்கக்கூடிய கட்டடத்திற்குகாவலர்பாதுகாப்போடுகொண்டுசெல்வார்கள். நான் சிறையிலிருந்து பொது மருத்துவமனைக்கு வரக்கூடிய செய்தி என்னுடைய தாய்க்கு தெரிந்து என்னுடைய தாய், தங்கை, தம்பி என்னுடைய வீட்டிலிருந்து பலபேர் புறப்பட்டு என்னைப் பார்க்க வருவார்கள். மருத்துவமனைக்கு வரும்போது பார்க்கலாம் என்ற ஆர்வத்தோடு வருவார்கள். வரும்போது கையில் சிறிது சூப்-ஐயும் எனக்குக் கொடுப்பதற்காக என்னுடைய தாயார் எடுத்துக் கொண்டு வருவார்கள். சில நேரங்களில் சில காவலர்கள் தாராளமாக விட்டுவிடுவார்கள், ஆனால், சில காவலர்கள்

விடமாட்டார்கள், மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள், அது அவர்களது கடமை. அப்படிப்பட்ட நேரங்களில், டாக்டர் காமேஸ்வரன் அவர்களைப் பார்ப்பதற்கு நான் அந்த அறைக்குச் செல்கிறபோது காவலர்களும் உள்ளே வருவார்கள். நோயாளியை நான் தனியாகப் பார்க்க வேண்டும், நீங்கள் வெளியில் இருங்கள் என்று காவலர்களை வெளியில் நிற்க வைத்துவிடுவார். அதற்கப்புறம் இவருடைய தனி அறை பின்புறம் இருக்கும், அங்கு என்னுடைய அம்மா இருப்பார்கள், அவர்களை அழைத்து சூப்-ஐக் கொடுங்கள் என்பார், அதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன்.

அப்படிப்பட்டவருடைய புதல்வராக நம்முடைய மோகன் காமேஸ்வரன் அவர்கள், தந்தை வழிநின்று தந்தை போலவே, தந்தையைவிட இன்னும் சிறப்பாக அந்தப் பணியில் அவர் ஈடுபட்டிருக்கிறார், மருத்துவத் துறையில் இன்றைக்குப் புகழ் பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்கிறபோது, உள்ளபடியே நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் உடல் நலிவுற்றிருந்த நேரத்தில், பல மருத்துவர்கள் தலைவருக்குப் பக்கத்தில் இருந்து கண்காணித்துக் கொண்டு இருந்தார்கள். அதில் முக்கியமான ஒருவர் யார் என்று கேட்டீர்களானால், நம்முடைய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்களும் ஒருவராக இருந்தார். எதுவாக இருந்தாலும், நாங்கள் அவரிடத்தில்தான் கேட்போம். அவர்தான் தலைவருடைய உடல்நிலையைப் பற்றி அவ்வப்போது எங்களுக்குச் சொல்லிக்கொண்டே இருப்பார். அந்த நட்பு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்தபோது அக்கார்டு ஹோட்டலில் புகழ் அஞ்சலிக் கூட்டம் நடத்தினோம். தலைவருக்கு யார் யாரெல்லாம் மருத்துவம் பார்த்தார்களோ, அத்தனை மருத்துவர்களையும் அழைத்து புகழஞ்சலிக் கூட்டம்

நடத்தினோம். அந்தக் கூட்டத்தில் நம்முடைய மோகன் காமேஸ்வரன் அவர்கள் பேசிய பேச்சு இன்றைக்கும் யாராலும் மறக்க முடியாது. இப்போதும் பேஸ்புக்கில், ட்விட்டரில், வாட்ஸ்ஆப்-ல் பார்த்தீர்களானால், அந்தப் பேச்சைக் கேட்க முடியும். எல்லோரையும் உருக வைக்கக்கூடிய வகையில் அவருடைய பேச்சு இருந்தது. அந்தளவுக்கு அவரது பேச்சு தாக்கத்தை ஏற்படுத்தியது; மிக உருக்கமான உரையாக அது அமைந்தது.

அவர் பேசும்போது சொன்னார், தனக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இருந்தது, 'டாக்டர் - நோயாளி உறவு' மட்டுமல்ல, 'தந்தை - மகன் உறவு' போல இருந்தது என்று அவர் பெருமையாக சொன்னார். இன்றைக்கு அவர் அந்த உறவைச் சொன்ன காரணத்தால், அவர் எனக்கு சகோதரர், அவரைப் பார்த்தால் வயது கூட இருப்பது போன்று தெரியும். ஆனால், அவரைவிட நான் வயதில் மூத்தவன். அவர் என்னை அண்ணன் என்றுதான் அழைப்பார். அந்தளவுக்கு உணர்வுப்பூர்வமாக தலைவர் கலைஞரோடு பழகியதால்தான், சமத்துவபுரத்தில் மாற்றுத்திறனாளிகளும் இடம் பெறுவதற்கான ஆலோசனையை நமது மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்களால் சொல்ல முடிந்தது.

அதேபோல்,காதுகேளாத-வாய்பேசாதகுழந்தைகளுக்குத் தேவையான குழந்தைகளுக்கான 'காக்லீயர் அறுவைச் சிகிச்சையை' இலவசமாக அளிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தவும் நம்முடைய மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்கள்தான் காரணமாக அமைந்தார்கள். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞரிடத்தில் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லி நடைமுறைப்படுத்த வைத்தவர் நம்முடைய டாக்டர் மோகன் அவர்கள். இதனால் பயன்பெற்ற ஐம்பது குழந்தைகளை, முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடத்தில்

கோபாலபுரத்திற்கு அழைத்து வந்து, முதலமைச்சரிடத்தில் அதை அறிமுகப்படுத்தினார். அன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

சில நாட்களுக்கு முன்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒரு விவாத நிகழ்ச்சி. அந்த விவாத நிகழ்ச்சியில், வடமாநிலப் பெண் ஒருவர் பேசிய பேச்சு, வைரலானது. தமிழ்நாட்டிற்கு வந்து வாழும் வடமாநிலப் பெண் அவர். தமிழ்நாடு எந்த வகையில் எல்லாம் எங்களுக்குப் பயனளித்திருக்கிறது என்பதைப் பற்றி அந்தப் பெண் சொல்லும்போது, இந்த காக்லீயர் அறுவைச் சிகிச்சையைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறார்.

அந்தப் பெண் சொல்கிறார்...

"எனது மகனுக்கு ஒரு வயது வரை காது கேளாமல் வாய் பேச முடியாமல் இருந்தது. டாக்டரிடம் சென்று காட்டினேன். பரிசோதனை செய்த டாக்டர், உங்களிடம் ரேஷன் கார்டு இருக்கிறதா என்று கேட்டார். தமிழ்நாட்டில் ரேஷன் கார்டு இருந்தால், உங்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக அறுவைச் சிகிச்சை செய்து தரப்படும் என்று அந்த டாக்டர் சொன்னார். ரேஷன் கார்டு வாங்கினேன். அதைக் காட்டி எனது மகனுக்கு இலவசமாகவே ஆபரேஷன் செய்து முடித்தேன். இன்று என் மகன் பேசுகிறான்" என்று அந்தப் பெண் சொன்ன வீடியோ வைரல் ஆனது.

இதற்குக் காரணம் யார் என்று கேட்டீர்களென்றால், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். அதனைத் தூண்டியவர் யார் என்று கேட்டீர்களென்றால், இங்கு இருக்கக்கூடிய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்கள்.

இதனை ஜெனீவா மாநாட்டில் சொல்லி, 2,000 குழந்தைகளுக்குக் காது கேட்கிறது, பேசுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் தலைவர் கலைஞர் என்று சொல்லி அவர் படத்தை போட்டுக் காண்பித்தவர்தான் நம்முடைய மோகன் காமேஸ்வரன் அவர்கள்.

இன்று இந்தத் திட்டம் மேலும் வளர்ந்து, 4 ஆயிரத்து 681 குழந்தைகளுக்கு இந்த அறுவை சிகிச்சை, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இலவசமாக செய்யப்பட்டிருக்கிறது.

கலைஞர் பெறாத எத்தனையோ பிள்ளைகளில் மோகனும் ஒருவர் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். எனவே என்னுடைய சகோதரர் டாக்டர் மோகன் நடத்தும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுவாக மருத்துவ மாநாடுகளில் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்களின் பொன்மொழிகளை அச்சிட்டு இருப்பார்கள். ஆனால், நம்முடைய மோகன் காமேஸ்வரன் அவர்கள், உலகப் பொதுமறையாக இருக்கக் கூடிய திருக்குறளை வெளியிட்டு இருக்கிறார்.

- ❖ செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்
- ❖ நுணங்கிய கேள்வியர்
- ❖ எனைத்தானும் நல்லவை கேட்க
- ❖ கேட்பினும் கேளாத் தகையவே
- ❖ செவிக்குணவில்லாத போது

- போன்ற அருமையான திருக்குறள்களை அழைப்பிதழில் அவர் பயன்படுத்தி இருக்கிறார், இந்த அழைப்பிதழில் அவர் வெளியிட்டிருக்கிறார்.

திருவள்ளுவரையே காது - மூக்கு - தொண்டை மருத்துவரைப் போல ஆக்கிவிட்டார் நம்முடைய மோகன் அவர்கள். அடிப்படையான குறைபாடாக இருக்கும் குறைபாடுதான் செவித்திறன் குறைந்து இருப்பதும், வாய் பேசாமல் இருப்பதும்.

பெரும்பாலான நோய்கள் பிறப்புக்குப் பிறகு வருபவைதான். ஆனால், செவித்திறன் குறைந்திருத்தல் போன்றவை சிலருக்கு பிறக்கும்போதே ஏற்படுகிறது. குழந்தைகளுக்குக் காது கேளாமை அதிகளவில் அதிகரித்து வருகிறது. இது ஜெனிட்டிக் - அதாவது மரபு வழிப் பிரச்சினையாகவும் சொல்லப்படுகிறது. சுற்றுச்சூழல் மாசு அடைதலும் இதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. அதிலும் எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு நம்முடைய கவிப்பேரரசு சொன்னதைப்போல, தொண்டை மிக மிக மிக முக்கியம். தொண்டை போய்விட்டால் தொண்டே போய்விடும். லேசாகத் தொண்டை கரகர என்று வந்துவிட்டால், உடனே டாக்டர் மோகனுக்குத்தான் நான் போன் செய்வேன், உடனே கிளினிக்குக்கு நான் சென்றுவிடுவேன்.

காது, மூக்கு, தொண்டை, கழுத்து இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பிரச்சினைகள். அதைப்பற்றியெல்லாம் விளக்கமாக நம்முடைய கவிப் பேரரசு சொல்லியிருக்கிறார்.

இது அனைவருக்குமான பிரச்சினை என்கிற காரணத்தினால், தாய்மொழியில் இந்த மாநாடு நடத்தப்படுவது மிகமிக மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

நிர்வாகத்தில் தமிழ்
ஆட்சியில் தமிழ்
பள்ளிகளில் தமிழ்

கல்லூரிகளில் தமிழ்
நீதிமன்றத்தில் தமிழ்
கோயில்களில் தமிழ்
இசையில் தமிழ்

- என 'எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்'. பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் தமிழுக்கு முக்கியத்துவம் தரக்கூடிய அரசாக, முக்கியத்துவம் தருவதை வலியுறுத்தும் அரசாக நமது அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அண்மையில் கூட மருத்துவ நூல்களை தமிழில் மொழிபெயர்த்து அரசின் சார்பில் நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். தொழில் படிப்புகள் அனைத்தும் தாய்மொழியில் படிக்க வழிவகை செய்ய அனைத்து நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியையும் தொடங்கி இருக்கிறோம்.

மருத்துவம் என்பது எளிமையானதாக - புதுமையானதாக - அதே நேரத்தில் அதிக செலவு இல்லாததாகவும் அமைய வேண்டும். அது குறித்து இந்த மாநாடு அதிகம் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவம் நவீனமாக ஆகி வருகிறது. ஆனால் அதிகத் தொகை செலவழிக்க வேண்டியதாகவும் இருக்கிறது. நவீன மருத்துவ வசதிகள் எல்லார்க்கும் கிடைக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் வழங்குகிறோம். மருத்துவக் காப்பீடு திட்டங்களின் மூலமாக வழங்குகிறோம். மக்களைத் தேடி மருத்துவம் - நம்மைக் காக்கும் 48 திட்டங்களின் மூலமாக தருகிறோம். என்றாலும் அதிகப்படியான மக்கள் தொகை கொண்டிருக்கக்கூடிய இந்த நாட்டில், அனைத்து தேவைகளையும் சேவைகளையும் அரசு மருத்துவமனைகள் மட்டும் வழங்கினால் அது போதாது. இதில் தனியார் பங்களிப்பும் மிக மிக முக்கியமாக இருக்கிறது. அப்படி தனியார் மருத்துவமனைகள் பங்களிப்பு செய்யும்போது கட்டணம்

என்பது ஏழைகளுக்கு உதவுவதாக அமைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியும் மருத்துவமும் சேவைத் துறைகள். சேவைத் துறையாகவே செயல்பட வேண்டும். உலகில் திறமையான மருத்துவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். சென்னைக்கே மெடிக்கல் சிட்டி, மெடிக்கல் கேப்பிட்டல் என்றுதான் பெயர். எத்தகைய நோயையும் குணப்படுத்தக்கூடிய வசதி எல்லாமே இங்கு உண்டு. அந்த வகையில் மருத்துவத் துறையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டு இருக்கிறது.

இதில் மோகன் காமேஸ்வரனைப் போன்றவர்களை - தங்களைப் போன்ற திறமைசாலி மருத்துவ நிபுணர்களை உருவாக்க வேண்டும். மருத்துவம் என்பது, 'படிப்பு - அனுபவம் - ஆராய்ச்சி - சேவை - தொலைநோக்கு' ஆகிய அனைத்தும் கலந்த படிப்பு!

அத்தகைய அனைத்து ஆற்றலும் பொருந்தியவர் நம்முடைய டாக்டர் மோகன் காமேஸ்வரன் அவர்கள். அவர் ஏராளமான திறமைசாலி மருத்துவர்களைத் தமிழ்நாட்டுக்கு உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டு, இந்த மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெற வேண்டும் என மனதார வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
காது, மூக்கு, தொண்டை, தலை மற்றும் கழுத்து
மருத்துவத் தமிழ் அறிவியல் மாநாட்டில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை - 29.01.2023

மக்களோடு மக்களாக நின்று கடமையாற்றியவர்கள் நீங்கள்

மழை, வெள்ளக் காலங்களில் சிறப்பாக பணியாற்றியிருக்கக்கூடிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டக்கூடிய வகையில் நடைபெறக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களே,

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே,

பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களே,

துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார் அவர்களே,

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களே,

சென்னை மாநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய நிலைக்குழுத் தலைவர்களே,

மண்டலக் குழுத் தலைவர்களே,

பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களே,

காவல்துறை அலுவலர்களே,

தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட சென்னை மாநகரத்தினுடைய பாதுகாவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மழை வெள்ளக் காலங்களில் தடுப்புப் பணிகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய ஊழியர்களுக்குப் பாராட்டு விழா என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த மகத்தான விழாவில் நானும் பங்கேற்பதில் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். மிகமிக மகிழ்ச்சியான நிலையில் இந்த விழாவில் நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

எனக்கு எத்தனையோ பாராட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அந்த விழாக்களையெல்லாம்விட, உங்களைப் பாராட்டக்கூடிய

இந்த விழாவைத்தான் நான் பெருமையாகக் கருதுகிறேன்.

அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், நம்முடைய அரசு பொறுப்பேற்று 20 மாதங்கள் ஆகியிருக்கிறது. இதில் மிகமிக முக்கியமான இரண்டு சாதனைகளை நாம் படைத்திருக்கிறோம். அந்த இரண்டு சாதனைகளைப் படைத்த காரணத்தால், மக்களிடத்திலே நமக்கு மிகப் பெரிய பாராட்டு கிடைத்திருக்கிறது.

ஒன்று – கொரோனா என்ற கொடிய நோயை எதிர்த்து அதை வென்றோம். அது ஒரு பாராட்டு.

இரண்டாவது - மழை, வெள்ளத்தில் இருந்து மக்களைக் காத்தோம், அது இரண்டாவது பாராட்டு.

கொரோனாவை கட்டுப்படுத்தியதற்குப் பிறகு உடனடியாக ஒரு மிகப்பெரிய மழையை நாம் சந்தித்தோம்.

ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் அதிலும் குறிப்பாக பத்தாண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எதுவும் செய்யாமல் இருந்துவிட்ட காரணத்தால், அந்த முதல்முறை மழை எந்த அளவிற்குப் பெய்தது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த மழையை, அந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதில் நமக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால், அந்த நெருக்கடிகளை நாம் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு வரக்கூடிய காலக்கட்டங்களில் எப்படி நாம் செயல்பட வேண்டும் என்று திட்டமிட்டோம்.

அடுத்த மழை வருவதற்கு முன்னால் அல்லது ஒரு வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னால், என்ன மழை பெய்தாலும் அந்த மழையின் காரணமாக தண்ணீர் எங்கும் தேங்கவில்லை என்ற ஒரு சூழலை உருவாக்குவதற்காக நாம் உறுதி எடுத்துக் கொண்டோம். உறுதி எடுத்துக்கொண்டது

மட்டுமல்ல, அந்த உறுதியை எந்த அளவிற்கு நிறைவேற்றிக் காட்டினோம் என்பது நாட்டிற்கும் தெரியும், உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன், மிகப் பெரிய இரண்டு சாதனைகளை நாம் செய்து முடித்திருக்கிறோம்.

சமூக வலைத்தளங்களில் - இது கடந்த முறை இங்கு தண்ணீர் தேங்கி இருந்தது என்று அந்தப் படத்தையும் போட்டு, இந்த முறை அந்தப் பகுதியில் தேங்கவில்லை என்ற அந்தப் படத்தையும் போட்டு மக்களிடத்தில் எடுத்துக் காட்டினார்கள். பொதுமக்களும் அதை வாட்ஸ்ஆப்-ல் பகிர்ந்த அந்த செய்திகளையெல்லாம் நாம் தொடர்ந்து பார்த்தோம். நான் அந்த செய்திகளையெல்லாம் பார்த்தபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் இருந்தது. அந்த அளவிற்கு மக்கள் நம்மை மனதாரப் பாராட்டினார்கள். அதேபோல், ஊடகங்களும் பாராட்டின. நேரில் பார்க்கக்கூடிய பொதுமக்களும் நம்மை சந்திக்கிற நேரத்தில் தங்களுடைய பாராட்டுகளையெல்லாம் வெளிப்படையாக தெரிவித்தார்கள். இப்படிப்பட்டப் பாராட்டு மழையில் நனைவதற்குக் காரணம் யார் என்று கேட்டீர்களென்றால், நீங்கள்தான். அதனால்தான், உங்களைப் பாராட்ட நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

- பெருநகர சென்னை மாநகராட்சி
- சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
- நீர்வளத்துறை
- நெடுஞ்சாலைத்துறை
- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

❖ காவல்துறை

ஆகிய துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் அத்தனைபேரும் பாராட்டுக்குரியவர்களாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து பணியாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களையும் நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அடிக்கடி அவரைப் பற்றிச் சொல்கிறபோது, நேருவுக்கு நிகர் நேருதான் என்று நான் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. கட்சி நிகழ்ச்சிகளில், பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் நான் பேசியதுண்டு. அவர் எப்போதுமே நான்கு கால் பாய்ச்சல்தான் பாய்வார். அந்த அளவிற்கு வேலைகளை சுறுசுறுப்பாக முடுக்கி விடுவார். அவரிடத்தில் ஒரு குணாதிசயம் உண்டு, அன்பும் இருக்கும், கோபமும் இருக்கும். இரண்டு அஸ்திரங்களையும் அவர் ஏவி அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதில் ஒரு சிறப்புக்குரியவராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அதேபோல் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அமைச்சர்களான மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு திரு. சேகர் பாபு அவர்களும் இரவு பகல் பார்க்காமல் அவர்கள் எந்த அளவிற்கு பணியாற்றினார்கள் என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

அதேபோல் சென்னை மாநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்று இன்றைக்கு சிறப்பாக பணியாற்றிக்

கொண்டிருக்கக்கூடிய நம்முடைய சகோதரி மேயர் பிரியா அவர்களும், துணை மேயர் மகேஷ்குமார் அவர்களும் 24 மணிநேரமும் இந்த மாநகருக்குள் சுற்றிச்சுழன்று பணிகளையெல்லாம் எந்த அளவிற்கு முடுக்கிவிட்டார்கள் என்பதை நேரடியாக நாமும் பார்த்தோம்.

அதேபோல் சென்னை மாநகராட்சி ஆணையராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.ககன் தீப் சிங் பேடி அவர்கள் ஆற்றிய பணி என்பது மிகமிக மகத்தான ஒன்று. அனைத்துத் துறைகளையும் மிக சாமர்த்தியமாக ஒருங்கிணைத்து செயலாற்றி அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார் நம்முடைய ஆணையர் அவர்கள்.

அதேபோலவே, ஐந்து விரலும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் அது ஒரு கையின் பலத்தை நாம் தெரிந்துகொள்ள முடியும். அப்படித்தான், தண்ணீர் நின்றால் - ஒரு மணி நேரத்தில் மோட்டார் வைத்து அதை அகற்றியது மாநகராட்சி!

நீர் நிலைகளைத் தூர் வாரி வைத்திருந்தது நம்முடைய நீர்வளத்துறை!

சாலைகளை உடனடியாக சரி செய்து கொடுத்தது நெடுஞ்சாலைத் துறை!

சீரான மின்சாரத்தை வழங்கியது மின்சாரத் துறை!

பொதுமக்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொண்டது நம்முடைய காவல்துறை!

இதைத்தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி என்று நாம் சொல்கிறோம். எல்லார்க்கும் எல்லாம் சொல்கிறோம் அல்லவா அதுதான் திராவிட மாடல் ஆட்சி. எல்லோரும்

சேர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்ட காரணத்தால்தான் இந்த வெற்றியை நம்மால் பெற முடிந்திருக்கிறது.

மழை வெள்ளக் காலத்தில் மக்களிடத்தில் நல்ல பெயர் எடுப்பது மிகமிக சிரமம். அதில் எனக்கு நிறைய அனுபவம் உண்டு. காரணம், நானும் இந்த மாநகராட்சியின் மேயராக இருந்தவன், ஒரு முறையல்ல, இரண்டு முறை, கிட்டத்தட்ட ஏழாண்டுகாலம் இருந்தவன். சென்னையில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வார்டும் எனக்குத் தெரியும், ஏன் ஒவ்வொரு தெருவும் எனக்குத் தெரியும்.

மழை நின்ற பிறகு மட்டுமல்ல, மழை பெய்துகொண்டு இருக்கும்போதே ரெயின்கோட் போட்டுக் கொண்டு, நம்முடைய கமிஷனரை, நம்முடைய அலுவலரை அழைத்துக்கொண்டு, அந்தப் பணிகளையெல்லாம் நேரடியாக பார்த்தவன் நான். இப்போதும் அப்படித்தான். எனக்கு முன்னால் அதிகாரிகளும் - அலுவலர்களும் - தூய்மைப் பணியாளர்களும் இருப்பார்கள். நான் மட்டுமல்ல, அவர்களும் மழையில் நனைந்தபடியே பணியாற்றியவர்கள் தான்.

இதுதான் மக்கள் பணி. சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், இதுதான் கலைஞருடைய பணி, கலைஞருடைய பாணி. ஒரு சம்பவம் நடந்தவுடனே, அந்த இடத்திற்குப் போய்விட வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்க்க வேண்டும், அவர்களுக்கு நாம் ஆறுதல் சொல்ல வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது என்றால், அதற்குக் காரணம் தலைவர் கலைஞர் ஊட்டிய அந்த உணர்வுதான். அப்படி மக்களோடு மக்களாக நின்று கடமையாற்றிய உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அரசாங்கத்தில் வேலை பார்க்கிறோம் - சம்பளம் வருகிறது என்று இல்லாமல், மக்களுக்காக பணியாற்றுகிறோம் என்கிற அந்த சேவை மனப்பான்மை உள்ளத்தோடு இருக்கக்கூடிய நிலையில் நீங்கள் பணியாற்றிய காரணத்தில்தான் இந்தப் பாராட்டும், இந்தப் பெருமையும், இந்தப் புகழும் இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு, இந்த மாநகராட்சிக்கு, நமக்கெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, தூய்மைப் பணியாளர்களின் பணி என்பது மிகமிக மகத்தான ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

துப்புரவுப் பணியாளர்கள் என்ற அந்த சொல்லையே மாற்றியது தலைவர் கலைஞர் அவர்கள்தான். தூய்மைப் பணியாளர் என்று மாற்றியது தலைவர் கலைஞர் அவர்கள்தான். அந்தப் பணியின் கடினமான தன்மையை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நீங்கள் சிறப்பாக பணியாற்றியிருக்கிறீர்கள். அதனால்தான் இந்த முகமலர்ச்சியோடு நம்முடைய அரசாங்கத்தை மக்கள் பார்க்கிறார்கள்.

2021ஆம் ஆண்டு நமது அரசு பொறுப்பேற்றதும் பருவமழையின் போது மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், வெள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளையும் பல முறை முதலமைச்சர் என்ற முறையில் நேரடியாக பார்வையிட்டு, ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, அந்த இடங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினேன்.

அதேபோல, அமைச்சர் அவர்களும் எந்த அளவிற்கு பணியாற்றினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இதையெல்லாம் பார்த்த காரணத்தினால், இனி வரக்கூடிய காலக்கட்டங்களில் மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து சென்னை மாநகருக்கு நிரந்தரத் தீர்வினை உருவாக்க வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்தோம். அப்படி முடிவெடுத்த காரணத்தினால்தான் ஒரு ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை நாம் நியமித்து, ஒரு மேலாண்மைக்குழுவாக அதை உருவாக்கி, அந்தக் குழு சென்னையில் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை எல்லாம் பார்வையிட்டு, வெள்ளம் பாதித்த இடங்களையெல்லாம் ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களிடத்திலும் ஆய்வு செய்து, அதற்கு பிறகு அவர்கள் அறிக்கையை கிட்டத்தட்ட மூன்று கட்டங்களாக நம்முடைய அரசிடம் வழங்கினார்கள்.

ஆக, இந்தக் குழுவின் ஆலோசனைப்படி, நம்முடைய மாநகரில் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைக்க பல்வேறு திட்டங்களை நாம் உருவாக்கினோம், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்தோம். பருவமழை துவங்குவதற்கு முன்பே இந்தப் பணிகளை முடிக்க உத்தரவு வழங்கினோம். அதன்படி,

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 254 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 57 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

வெள்ள நிவாரண நிதியின் கீழ், 291 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 107.57 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

உட்கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் நிதியின் கீழ், 26 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

மூலதன நிதியின் கீழ், 7 கோடியே 41 லட்சம் மதிப்பீட்டில், 1 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மாநகரின் பிரதான பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்றது.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியோடு கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் 3 ஆயிரத்து 220 கோடி ரூபாய் மதிப்பில், 769 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

ஜெர்மன் பன்னாட்டு வங்கி நிதி உதவியின் கீழ் கோவளம் வடிநிலம் பகுதிகளில் ஆயிரத்து 714 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 360 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

உலக வங்கி நிதி உதவியோடு விடுபட்ட இடங்களில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 44.88 கிலோ மீட்டர் நீளத்திற்கும், புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றது.

2021ஆம் ஆண்டு பருவமழையின்போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு, உடனடியாக நாம் எல்லா வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் குறுகிய காலத்தில் செய்து முடித்தோம். அதன் பயனை 2022ஆம் ஆண்டு பருவமழையின்போது கண்கூடாகப் பார்த்தோம். இனிவரும் ஆண்டுகளில், மழைநீர் தேக்கம் இல்லாத பருவமழைக் காலங்களை சென்னை வாழ் மக்கள் நிச்சயமாக பார்க்க இருக்கிறார்கள். இந்த அரசு மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் மகிழ்ச்சியே நமது இலக்கு.

அந்த இலக்கை நோக்கியே நாம் செயல்பட்டு வருகிறோம்.

நான் பலமுறை சொன்னதுண்டு. நம்பர் ஒன் முதலமைச்சர் -

நம்பர் ஒன் தமிழ்நாடு

- ஆகிய உயர்வும் பாராட்டும் என்பது ஒரு பக்கம் என்று சொன்னால், அந்த பாராட்டு தனிப்பட்ட ஸ்டாலினுக்கு கிடைத்த பாராட்டாக நான் கருதவில்லை. ஒரு நாளும் அப்படி நினைக்க மாட்டேன். உங்களுடைய ஒவ்வொருவருடைய உழைப்பால்தான் அந்த பாராட்டும், அந்த பெருமையும் நமக்கு கிடைத்திருக்கிறது. அதை ஊருக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தப் பாராட்டு விழாவை இன்றைக்கு நாம் வெளிப்படையாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இப்படி பாராட்டும் உள்ளம் அனைவருக்கும் வந்தாக வேண்டும். பாராட்டுவதை வெளிப்படையாகப் பாராட்ட வேண்டும். வெளிப்படையாக பாராட்டினால்தான், அறிவுறுத்தவும், கேள்வி கேட்கவும் நாம் உரிமை பெற்றிட முடியும். அந்த வகையில்,

- பெருநகர சென்னை மாநகராட்சி
- சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
- நீர்வளத்துறை
- நெடுஞ்சாலைத்துறை

❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

❖ காவல்துறை

ஆகிய துறைகளின் அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகிய அனைவரையும் நான் இந்த நேரத்தில் மனதார பாராட்டுகிறேன்.

திரு. நேரு அவர்கள் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார் என்றால் பிரம்மாண்டமாக இருக்கும். ஏன் இதை சொல்கிறேன் என்று சொன்னால், அறுசுவை உணவு எப்போதும் இருக்கும் அவருடைய நிகழ்ச்சியை பொறுத்தவரைக்கும். அந்த வகையில் அனைவரும் உணவு உண்டு, நிறைவோடு செல்லுமாறு சென்னை மாநகராட்சி நிருவாகத்தின் சார்பில் உரிமையோடு நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடன் சேர்ந்து, உங்களில் ஒருவனாக நானும் உங்களோடு இந்த பந்தியில் அமர்ந்து உணவருந்தி செல்ல இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மீண்டும் அத்தனை பேருக்கும், என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில்
நடைபெற்ற மழை வெள்ளக் காலங்களில் சிறப்பாக
பணியாற்றிய அலுவலர்கள் மற்றும்
பணியாளர்களுக்கான பாராட்டு விழாவில் ஆற்றிய
உரை - 31.01.2023

“கல்வியை, மருத்துவத்தை இரண்டு கண்களாக பாவித்து நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்”

விழாப் பேருரை ஆற்ற வரவில்லை. நான் உங்களுக்கெல்லாம் நன்றியுரை ஆற்ற வந்திருக்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியாக அமைந்திருக்கக்கூடிய பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே,

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களே,

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே,

வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே,

திரு. கதிர் ஆனந்த் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. கார்த்திகேயன் அவர்களே,

திரு. நந்தகுமார் அவர்களே,

திருமதி அமுலு விஜயன் அவர்களே,

காணொலிக் காட்சியின் மூலமாக பங்கேற்றிருக்கக்கூடிய

அமைச்சர் பெருமக்களே,

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே,

அரசு அதிகாரிகளே,

மாவட்டத்தின் ஆட்சித் தலைவர்களே,

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்களே,

பள்ளிக் கல்வித் துறை ஆணையர் திரு. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே,

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

அரசு அலுவலர்களே,

ஆசிரியப் பெருமக்களே,

என்னுடைய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்தப் பள்ளியினுடைய நிகழ்ச்சிக்கு வருகை தந்து பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் பள்ளி வளாகத்திற்குள் நுழைகிறபோது, நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டுச் சொன்னார்கள், அதைப் பெருமையோடு சொன்னார்கள், நான் படித்த பள்ளி இந்தப் பள்ளி. அந்தப் பள்ளிக்குள்ளே நுழைகிறோம் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். எனவே, அவரை ஆளாக்கியிருக்கக்கூடிய, அவரைப் போன்ற பல்வேறு மாணவச் செல்வங்களை எல்லாம் உருவாக்கி இருக்கக்கூடிய, இன்னும் உருவாக்க இருக்கக்கூடிய இந்தப் பள்ளியில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மீண்டும் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திட்டத்தை பொறுத்தவரைக்கும் நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் விளக்கமாக உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2,400 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாழடைந்து இருக்கக்கூடிய பள்ளிக் கட்டடங்களை பழுதாகிப்

போயிருக்கக்கூடிய வகுப்பறைகளை சீர்செய்திட வேண்டும், புதுப்பிக்க வேண்டும் என்கிற ஒரு நல்ல எண்ணத்தோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை 2,400 கோடி ரூபாய். அதில் குறிப்பாக, இன்றைக்கு மட்டும் இந்தத் திட்டத்தின் மூலமாக, நீங்கள் காணொலிக் காட்சியில் பார்த்திருப்பீர்கள், பல்வேறு மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிகளில் ஆங்காங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஆட்சித்தலைவர்கள் எல்லாம் அதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு மட்டும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைகள் கட்டக்கூடிய அந்த பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவை இங்கு உங்கள் முன்னாலே நாம் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

அதிலே குறிப்பாக, இந்த வேலூர் மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் 7 ஊராட்சி ஒன்றியங்களில் 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 15 கோடியே 96 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 114 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்காக இந்த விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நிலையில், இவ்விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நான் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கின்ற நேரத்தில் தவறாமல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும் “கல்வியை, மருத்துவத்தை இரண்டு கண்களாக நாங்கள் பாவித்து அதற்காக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்” என்று பலமுறை நான் எடுத்துச் சொன்னதுண்டு. அந்த வகையில் தான், இன்றைக்கு இந்தத் திட்டம் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்கு பின்னால், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு சென்ற நேரத்தில், அந்தந்த மாவட்டங்களில் அந்தந்த பகுதிகளில் திடீர் திடீரென்று ஆய்வுக்கு நான் செல்வதுண்டு. இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரிலே அந்த ஆய்வுக்கு செல்லுகிற போது, அப்படிப்பட்ட ஆய்வுக்கு செல்கிறபோது பல பள்ளிகளுக்கு சென்றபோது, அந்த பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்கள், மாணவியர்கள் எல்லாம் என்னிடத்திலே சொல்வதுண்டு, நாங்கள் காலையில் கூட உணவு அருந்தாமல் பள்ளிக்கு வந்து விடுகிறோம் என்று உருக்கத்தோடு சொன்னார்கள். அதைக் கேட்டுவிட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். அதற்குப் பின்னால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து, அதற்குப் பிறகு ஆய்வு நடத்தி அதைத் தொடர்ந்துதான், எப்படி மதிய உணவுத் திட்டத்தை நாம் அரசின் சார்பில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல் காலை உணவு திட்டம் ஒன்றை கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்து, அந்த திட்டத்தையும் அறிமுகப்படுத்தி, கடந்த செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு ஒரு பகுதியிலே, ஒரு சில மாவட்டங்களில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விரைவில் முழுமையாக அதுவும் நிறைவேற்றப்பட இருக்கிறது.

அதேபோலத்தான் பல பள்ளிக் கட்டடங்கள் இடிந்த நிலையில், வகுப்பறைகள் இல்லாத வகையில் மரத்தடி நிழல்களில் உட்கார வைத்து அதில் வகுப்புகள் நடத்தக்கூடிய அந்த காட்சிகளையும் நாங்கள் கண்கூடாக பார்த்தோம். இதையெல்லாம் உடனடியாக சீர் செய்ய வேண்டும், அந்த மாணவர்கள் வசதியாக நல்லவித அடிப்படை வசதிகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் படிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய சிந்தனைகள் அந்தக் கல்வியை போய் சேர முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தித்து, அதற்குப் பிறகு பேராசிரியர் அன்பழகன் பெயரிலே இந்த பள்ளி மேம்பாட்டுத்

திட்டத்தினை அறிவித்திருக்கிறோம். அதற்காக 2,400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனவே இதன் மூலமாக பல பள்ளிகள் பாழடைந்திருக்கக்கூடிய, சீரழிந்து இருக்கக்கூடிய அந்த பள்ளிகளெல்லாம் இன்றைக்கு மேம்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். இதை நல்ல வகையில், அந்தந்த பகுதியிலே இருக்கக்கூடிய அந்தந்த பள்ளி மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கும், கல்வி துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், இங்கு இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள் வேலூர் மாவட்டம்,
காட்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்
நடைபெற்ற விழாவில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி
மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் 784 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைக்
கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை - 01.02.2023

அரசியல் மாச்சரியங்களுக்கு இடம் கொடுக்காமல் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்

தலைமைச் செயலாளர் அவர்களே,

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே,

பொதுத் துறை செயலாளர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவர்களாக பல்வேறு மாவட்டங்களில் புதிதாக பொறுப்பேற்க இருக்கக்கூடிய அன்புக்குரிய சகோதரர்களே, சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

புதிதாக மாவட்டங்களில் பொறுப்பேற்கவுள்ள ஆட்சித்தலைவர்கள் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதை தலைமைச் செயலாளர் அவர்கள் சுருக்கமாக எடுத்துக் கூறினார்.

ஆட்சிப் பொறுப்பேற்று இந்த குறுகிய காலத்திற்குள்ளாக நம்முடைய அரசு சிறப்பான பெயரை பெற்றிருக்கிறது, இதற்கு எந்தவித மறுப்பும் யாரும் சொல்ல முடியாது. அந்த பெயரைப் பெறுவதற்கு காரணமாக இருந்தவர்கள், ஏதோ தனிப்பட்ட முதலமைச்சரோ, தனிப்பட்ட தலைமைச்

செயலாளரோ, தனிப்பட்ட அரசு அதிகாரிகளோ மட்டும் அல்ல, உங்களைப் போன்ற அதிகாரிகளும், அரசு அலுவலர்களும்தான் அதற்கு முழுமையான காரணமாக இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறோம். அவைகள் எல்லாம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற வகையில் கண்காணித்து, அதை நிறைவேற்றித் தருவதற்கான முழு பணியிலும் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது புதிதாக, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வு பணியை மேற்கொண்டு, அந்தப் பணி மிக சிறப்பான வகையில், நான் திருப்தி அடையக்கூடிய வகையில், நாங்கள் மட்டுமல்ல அந்த செய்தியை கேள்விப்பட்ட அனைவருமே பாராட்டக்கூடிய அளவிற்கு அந்தப் பணிகள் நடந்திருக்கிறது. இது தொடரப் போகிறது. அப்படிப்பட்ட பயணத்தை மேற்கொள்கிறபோது, புதிதாக பொறுப்பேற்றிருக்கக்கூடிய நீங்கள் மாவட்டத்தில் பொறுப்பேற்றவுடன், என்னென்ன பணி நடைபெறாமல் இருக்கிறது? என்னென்ன பணி எந்த நிலையில் இருக்கிறது? எந்த எந்த பணிகள் இன்னும் தொடங்க இயலாத நிலையில் இருக்கிறது? அதற்கு என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன? நீதிமன்றங்களில் என்னென்ன வழக்கு இருக்கிறது? என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள்

கலந்தாய்வு நடத்தி அதையெல்லாம் விரைவாக, அந்தப் பணிகளை நிறைவேற்றக்கூடிய காரியத்தில் ஈடுபட வேண்டும். மிக விரைவில் நீங்கள் பொறுப்பேற்க கூடிய மாவட்டத்திற்கு நாங்கள் ஆய்விற்கு வருகிறபோது அது உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அது உங்களால் சரிசெய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நீங்கள் சொல்லக்கூடிய அளவிற்கு, உங்களுடைய கடமையை நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

இன்றைக்கு ஆட்சித் தலைவர்களாக பொறுப்பேற்க உள்ள நீங்கள், நம்முடைய தலைமைச் செயலாளர் சொன்னதுபோல மகாத்மா காந்தி அவர்கள் "களத்திற்கு செல்" என்று சொன்னதுபோல, அண்ணா அவர்கள் "மக்களிடத்தில் செல்" என்று அடிக்கடி சொல்வார்கள், அதைப்போல நீங்கள் மக்கள் நலப் பணிகளை செயல்படுத்தி மக்களை கவரக்கூடிய வகையில், ஆங்காங்கு பணியாற்றக்கூடிய அதிகாரிகளை அவர்களுக்கு உரிய பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டு, அதற்கான பணிகளில் ஈடுபட வேண்டும்.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய வகையில் உங்கள் மாவட்டங்களில் அதை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்தவித "அரசியல் மாச்சரியங்களுக்கு நீங்கள் இடம் கொடுக்காமல், அரசியல் பார்க்காமல், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்" என்ற அந்த உணர்வோடு மட்டுமே உங்களது பணி அமைய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ உங்களிடத்திலே பணிகளை விட்டுவிட்டு நாங்கள் அமைதியாக இருந்துவிடுவோம் என்று நீங்கள் எண்ண வேண்டாம். உங்களிடத்தில் உள்ள பணிகளில், என்னென்ன பணிகளை முடித்திருக்கிறீர்கள் என்பதைத் தொடர்ந்து தலைமைச் செயலாளரும் ஆய்வு செய்யப்போகிறார், அதேபோல முதலமைச்சராக இருக்கக்கூடிய நானும் ஆய்வு செய்யப்போகிறேன். விரைவில், மார்ச் மாதம் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்போகிறோம். அப்படி தாக்கல் செய்யப்படுகிற நேரத்தில், என்னென்ன புதிய திட்டங்களை நாம் அறிவிக்க இருக்கிறோம். ஏற்கனவே அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் அந்த நிதிநிலை அறிக்கையில் பேசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். அதையும் மனதில் வைத்துக்கொண்டு அதற்கும் நீங்கள் தகுந்த பதிலை நம்முடைய அரசுக்கு தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, புதிதாக பொறுப்பேற்கவுள்ள நீங்கள், சிறப்பான முறையில் கடமையாற்றி இந்த அரசுக்கு ஒரு நற்பெயரை தேடித்தாருங்கள் என்று அன்போடு கேட்டு, உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்
தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள
மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நடைபெற்ற
கூட்டத்தில் ஆற்றிய உரை - 04.02.2023

புதுமைப்பெண் திட்டத்தால் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை ஓராண்டில் 27 சதவீதம் அதிமாகி உள்ளது

புதுமைப் பெண் திட்டத்தினுடைய இரண்டாம் கட்ட திட்டத் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்களே,

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. சா. மு. நாசர் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. ஏ. கிருஷ்ணசாமி அவர்களே,

திரு. துரை சந்திரசேகர் அவர்களே,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., அவர்களே,

சமூக நலத் துறை இயக்குநர் திருமதி த. ரத்னா, இ.ஆ.ப., அவர்களே,

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

அரசு அதிகாரிகளே, அலுவலகப் பெருமக்களே,

எனது பேரன்புக்குரிய புதுமைப் பெண்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னால், மூன்று மகிழ்ச்சியான செய்திகளை, என் மனதில் ஆழமாக பதிந்திருக்கக்கூடிய செய்திகளை அதிலே குறிப்பிட்டு ஒரு மூன்று செய்திகளை உங்களிடத்தில் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

முதலாவது, நேற்றைய தினம் கோட்டையில் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய, என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடிய காவல் துறையின் சார்பில் புதிய பணி ஆணைகள் வழங்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில், அப்பொழுது எனக்கு அருகில் இருந்த டி.ஜி.பி.-யிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்டேன், இன்றைக்கு பணி ஆணைகள் வழங்குகிறோம், அது எவ்வளவு பேருக்கு வழங்கப்படுகிறது என்று கேட்டேன். 17 காவல் துணை

கண்காணிப்பாளர்களுக்கு அந்த பணி ஆணை வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். அதோடு நிறுத்தாமல், இன்னும் ஒரு முக்கியமான செய்தியைச் சொன்னார். வழங்கப்பட்டிருக்கக்கூடிய அந்த 17 பேரில், 13 பேர் பெண்கள் என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அந்த 13 பெண்கள் என்னிடத்தில் அந்த ஆணையைப் பெறுவதற்காக வந்தபோது, மிடுக்கோடு வந்து என்னிடத்தில் அந்த ஆணையைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள். அது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

அடுத்து, அதேபோல் இன்று காலையில் இந்த நிகழ்ச்சிக்காக நான் காரில் வந்துகொண்டிருந்தபோது, என்னோடு காரில் அமர்ந்திருந்த மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார். இந்த "புதுமை பெண் திட்டத்தால் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை கடந்த ஆண்டை விட 27 சதவீதம் அதிகமாகி இருக்கிறது" என்று பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார். ஆகவே, இது இரண்டாவது மகிழ்ச்சி.

மூன்றாவதாக மகிழ்ச்சி, மாண்புமிகு அமைச்சர் திரு.நாசர் அவர்கள் சொன்னது. மாண்புமிகு அமைச்சர் திரு. நாசர் அவர்கள் காரில் வருகிறபோது ஒரு செய்தியைச் சொன்னார். இந்தக் கல்லூரிக்கு ஏற்கனவே நான் 33 ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது வந்திருப்பதாகவும், இந்தக் கல்லூரியினுடைய ஆண்டு விழாவில் பங்கேற்றதை அவர் நினைவுப்படுத்தி எடுத்துச் சொன்னார்.

அப்படிப்பட்ட மூன்று நிகழ்ச்சிகளை மகிழ்ச்சியோடு என் உள்ளத்திலே சுமந்துகொண்டு தான் இப்போது இந்த

“புதுமைப்பெண் திட்டத்தின்” இரண்டாம் கட்ட திட்டத்தினைத் தொடங்கி வைக்க நான் மகிழ்ச்சியோடு வந்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தப் பட்டாபிராம், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி-க்கு நான் வந்திருப்பதை உள்ளபடியே பெருமையாகவே கருதிக் கொண்டு இருக்கிறேன்.

‘எல்லா மதங்களும் உண்மை என்ற சமரச ஞானத்தை ஊட்டத் தவறாதவர்’ - என்றும், ‘கண்ணன் கலாசாலை போன்று எல்லாப் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் தேசம் மறுபடி மேன்மை அடையும்’- என்றும் மகாகவி பாரதியாரே கலவல கண்ணன் அவர்களைப் பற்றிப் போற்றியிருக்கிறார்.

வணிகத்தின் பெரும்பகுதியை சமூக சேவைக்குப் பயன்படுத்தியதால், எல்லோரும் அவரை ‘தரும மூர்த்தி’ என்று சொன்னார்கள்.

கல்வியை பலருக்கும் எட்டாக்கனியாக அந்தக் காலத்தில் சிலர் மாற்றி வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட காலத்திலேயே, அனைவருக்கும் எழுத்தறிவு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, பல்வேறு இடங்களில் பள்ளிகளை நிறுவினார் அவர். சிந்தாதிரிப்பேட்டை, சவுகார்பேட்டை, பாரிமுனை, இந்த பட்டாபிராம் என்று பல இடங்களிலும் அவர் பள்ளிகளை நிறுவினார்.

1969ஆம் ஆண்டு அரசு நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட கல்லூரி இது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு

முதன்முதலாக ஆட்சிக்கு வந்த காலத்தில், அரசு நிதி உதவியோடு தொடங்கப்பட்ட கல்லூரி இது.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பேனாவால் போட்ட ஒரே ஒரு கையெழுத்துதான், இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் லட்சக்கணக்கான மாணவ - மாணவிகளை உருவாக்கி இருக்கிறது என்று நினைக்கும்போது அளவில்லா பெருமையை நாம் அடைந்து கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த பெண் கல்விக்கு 150 ஆண்டுகளுக்கு முன்பே முக்கியத்துவம் தந்த தருமமூர்த்தி கண்ணன் அவர்களது பெயரால் அமைந்த இந்தக் கல்லூரியில், புதுமைப் பெண் என்கிற திட்டத்தை சிறப்பாக நடத்துகிற இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, மிகமிக பொருத்தமாக இது அமைந்திருக்கிறது.

ஒரு நாடு செழித்து தன்னிறைவுடன் திகழ வேண்டுமென்று சொன்னால், நாட்டில் உள்ள மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருப்பது மிகவும் அவசியம். முக்கியமாக, கல்வி என்பது பெண்களுக்கு மிகமிக முக்கியம்!

கல்வியைத்தான் அழியாச் செல்வம் என்று சொன்னார் வான்புகழ் கொண்ட வள்ளுவர் பெருந்தகை அவர்கள்.

'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்' என்று சொன்னார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

அத்தகைய கல்விச் செல்வத்தை அனைவரும் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. மத ரீதியாக – வர்க்க ரீதியாக – சாதி ரீதியாக – இன ரீதியாக – பால் ரீதியாக, வேறுபாடுகளும் தீண்டாமைகளும் கற்பிக்கப்பட்டிருந்த இந்த நிலத்தில்,

அனைவரும் சமம் - அனைவருக்கும் சமவாய்ப்பு தரப்பட வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான், திராவிட இயக்கம்.

திராவிட இயக்கத்தின் வரலாறு என்பது, ஏதோ தனித்த இயக்கத்தினுடைய வரலாறோ, தனிப்பட்ட மனிதர்களுடைய வரலாறோ கிடையாது. இரண்டாயிரம் ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு இனம், சுயமரியாதை உணர்வோடு எப்படி போராடி மேலே வந்து இன்றைக்கு உயர்ந்து இருக்கக்கூடிய ஒரு போராட்ட வரலாறு! அதுதான் தமிழ்நாட்டினுடைய வரலாறு! அதுதான் நம்முடைய வரலாறு!

அதனால்தான், அடக்குமுறை எந்த வடிவில் வந்தாலும் நாம் எதிர்க்கிறோம்! சமத்துவம் பேசுகிறோம்! இந்த விழிப்புணர்வு நமக்கு அதிகமாக தேவை. அதிகமாக தேவை என்கிற காரணத்தால்தான், இந்தக் கல்வியை நாம் கற்றாக வேண்டும். அப்படித்தான் போராடி இந்த உரிமையைப் பெற்றிருக்கிறோம். அதற்குக் காரணம் கல்விதான்!

கல்வியை அனைவருக்கும் பொதுவானதாக ஆக்கும் கடமையை நீதிக்கட்சி காலத்தில் இருந்து செய்து கொண்டு வருகிறோம். அனைவருக்கும் சமமான கல்வி கிடைப்பதற்காகத்தான் சமூகநீதிக் கருத்தியல் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் கல்வி எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்றுதான், நம்முடைய திராவிட இயக்கத்தில் பல்வேறு திட்டங்கள் இதற்காக உருவாக்கப்பட்டது. அதிலும், பெண் சமூகத்தைக் கூடுதலாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக ஏராளமான திட்டங்களை மகளிருக்காக உருவாக்கப்பட்டது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால்,

❖ 1921ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

❖ 1989-இல் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, இந்தியாவிலேயே முதன்முதலாக கலைஞருடைய ஆட்சிக்காலத்தில் தான் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்ட அந்த புரட்சி நடந்தது.

❖ அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம்.

❖ இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளை பார்க்கிறோம், இன்றைக்கு 50 சதவீதம் பெண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இதற்கு மூல காரணமே கலைஞருடைய ஆட்சிக்காலம் தான், முதன்முதலாக பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதுதான் இன்றைக்கு படிப்படியாக வளர்ந்து 50 சதவீதமாக உருவாகியிருக்கிறது. மகளிர் உரிமைக்காக நாம் எவ்வளவோ செய்திருக்கிறோம், எவ்வளவோ போராடியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது. அவரவர்கள் தங்களுடைய வாழ்க்கையை சுயமாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான், மகளிர் சுய உதவிக் குழு என்கிற ஒரு அற்புதமான திட்டம். அது கலைஞருடைய ஆட்சிக்காலத்தில் தான் தொடங்கப்பட்டது. 1989-1990-இல் நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தருமபுரியில் முதன்முதலாக அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கில் அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை

ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று நானே உருவாக்கினேன்.

அதேபோலத் தான் இப்போது கூட, நாம் ஆட்சிக்கு வந்த உடனே மகளிருக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தோம். முதல் கையெழுத்து எந்த கையெழுத்து தெரியுமா? மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்த திட்டத்திற்குத்தான் முதல் கையெழுத்து போட்டேன். அந்தத் திட்டத்தினை கணக்கெடுத்துப் பார்த்தால், இதுவரை 180 கோடி பயணங்களை பெண்கள் கட்டணமில்லாமல் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த வரிசையில் தொடங்கப்பட்ட மகத்தான, ஒரு அற்புதமான திட்டம்தான், திராவிட இயக்கத்தின் பெண் சிங்கமாக இருக்கக்கூடிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களது பெயரால் தொடங்கப்பட்டிருக்கக்கூடிய இந்த புதுமைப் பெண் என்கிற ஒரு திட்டம்!

ஏன் இந்த புதுமைப் பெண் திட்டத்திற்கு இராமாமிர்தம் அம்மையார் அவர்களது பெயரை வைத்திருக்கிறோம் என்று கேட்டீர்களானால், அந்த அம்மையார் அவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். படிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடியவர். அந்தக் காலத்தில் மூடநம்பிக்கையெல்லாம் எப்படி இருந்தது என்று உங்களுடைய முன்னோர்கள் சொல்லியிருப்பார்கள், நீங்களும் தெரிந்திருப்பீர்கள். அந்த மூடநம்பிக்கை காரணமாக பெண்கள் முடக்கப்பட்டு வைத்திருந்தார்கள். அப்படி முடக்கப்பட்ட பெண்களுக்கு உரிமைக் கதவைத் திறந்தவர்தான் அந்த இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். 100 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, தந்தை பெரியார் அவர்களுடன் இணைந்து மகத்தான புரட்சியை நடத்தியவர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். 1938ஆம் ஆண்டு தமிழ்

காக்கும் போராட்டத்துக்காக திருச்சியிலிருந்து சென்னை வரை நடைப்பயணம், பேரணி நடந்தது. அந்தப் பேரணியில் பங்கேற்ற பெண்மணிதான் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். அதனால்தான், திராவிட இயக்கத்தின் தீரர்களுக்கு விருதுகளை வழங்கியபோது, முதல் விருதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் முடிவெடுத்து யாருக்கு வழங்கினார்கள் என்று கேட்டீர்களானால், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்குத்தான் அந்த முதல் விருதை வழங்கி பெருமைப்படுத்தினார்கள். அத்தகைய பெருமைமிகு அம்மையார் பெயரால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு செய்தியைக்கூட உங்களுக்கு சொல்ல வேண்டும். இராமாமிர்தம் அவர்கள் பிறந்தபோது அவரது குடும்பம் மிகவும் வறுமையில் இருந்தார்கள். அந்த அம்மையாரை வளர்ப்பதற்கு அவரைப் பெற்றெடுத்திருக்கக்கூடிய தாய் மிகுந்த சிரமப்பட்டார்கள். அப்படிப்பட்ட சிரமம் அடைந்த காரணத்தினால் என்ன செய்தார்கள் என்றால், தனது பிள்ளையை அந்தக் காலத்தில் பத்து ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். பத்து ரூபாய்க்கு விற்கப்பட்டவர்தான் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். அப்படி பத்து ரூபாய்க்கு விற்கப்பட்ட இராமாமிர்தம் அவர்கள் பெயரால்தான் இந்த பல்லாயிரக்கணக்கான பெண் பிள்ளைகள் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய ஒரு அற்புதமான திட்டத்தை நாம் இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கிறோம்.

இந்தத் திட்டம் கடந்த ஆண்டே தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தை முதன்முதலில் தொடங்கி வைத்தது யார் என்பது உங்களுக்குத் தெரியும். டெல்லியில் இருக்கக்கூடிய முதலமைச்சர் திரு. கெஜ்ரிவால் அவர்கள்தான் அந்தத்

திட்டத்தை தொடங்கி வைத்தார். கடந்த ஜனவரி மாதம் 26-ஆம் தேதியன்று தலைநகர் டெல்லியில் குடியரசு நாள் அணிவகுப்பு நடந்தது. அந்த அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில் அலங்கார ஊர்தி ஒன்று வந்தது. அந்த அலங்கார ஊர்தியில் என்ன சிறப்பு என்று கேட்டால், தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த மகளிர்கள் ஏழு பேர். அந்த ஏழு பேர்களின் சிலைகளை அதில் வடிவமைத்து அந்த பேரணியில் அணி வகுத்து வந்தது. அந்த ஏழு பேரில் ஒருவர் யாரென்று கேட்டால், இராமாமிர்தம் அவர்களின் சிலையும் அதில் இடம் பெற்றிருந்தது. எனவே, அவருடைய பெயரால்தான் இந்தத் திட்டம் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு சிரமங்களுக்கு இடையில், பள்ளிக்கல்வி பயின்றுள்ள அரசுப்பள்ளி மாணவிகள், College போகாமல் drop-out ஆகக்கூடாது என்பதற்காக இந்தத் திட்டம். இந்த மூவலூர் அம்மையார் பெயரால் உயர்கல்வி உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டத்தின் மூலமாக 6ஆம் வகுப்பில் படிக்கக் கூடியவர்கள், அவர்கள் தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை படித்து, முடித்து, மேற்படிப்பிற்கு, கல்லூரிக்கு செல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தினால், கல்லூரிக்கு செல்லமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகதான் மாதா மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்துகிற இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகைகளை பெற்று வந்தாலும் இந்தத் திட்டத்தில் கூடுதலாக இந்த உதவியை நீங்கள் பெறுகிறீர்கள்.

முதற்கட்டமாக, இந்தத் திட்டம் வட சென்னையில் பாரதி மகளிர் கல்லூரியில் தொடங்கப்பட்டது. அப்படி அந்தத் திட்டம்

தொடங்கப்பட்டபோது, இன்றைக்கு வரைக்கும் பார்த்தீர்கள் என்றால், இதுவரைக்கும் 1 லட்சத்து 16 ஆயிரம் மாணவிகள் பயனடைந்திருக்கிறார்கள். இதற்காக கடந்த ஐந்து மாதங்களில், 69 கோடியே 44 லட்சம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தின் பொருளாதாரச் சூழலால் படிப்பைப் பாதியில் நிறுத்த வேண்டிய நிலையில் இருந்த 12 ஆயிரம் மாணவிகள் இத்தொகை கிடைத்த காரணத்தினால், இன்றைக்கு அந்தப் படிப்பைத் தொடர்கிறார்கள் என்பதுதான் இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றி!

இப்போது, இது இரண்டாம் கட்டமாக இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை தொடங்கி வைப்பதற்காக, இந்த பட்டாபிராம் இந்து கல்லூரிக்கு நான் வந்திருக்கிறேன். பள்ளியுடன் படிப்பை நிறுத்திவிடும் பெண்ணுக்கு, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கிடைக்கின்ற காரணத்தினால், அவர்கள் கல்லூரிக்குள் நுழைகிறார்கள். இதன் மூலமாக தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி அதிகமாகும். படித்தவருடைய எண்ணிக்கை அதிகமாகும். அறிவுத்திறனும் கூடும். திறமைசாலிகள் அதிகமாக உருவாகுவார்கள். பாலின சமத்துவம் ஏற்படும். குழந்தைத் திருமணங்கள் குறையும். பெண்கள் அதிகாரம் பெறுவார்கள். சொந்தக் காலில் பெண்கள் நிற்பார்கள் - இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

அதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளிப்படிப்பை முடித்து, உயர்கல்வியை தொடர முடியாமல் கைவிட்ட 10 ஆயிரத்து 146 மாணவிகள் இந்தத் திட்டத்தின் வாயிலாக தங்களது உயர்கல்வியை பயிலத் தொடங்கியிருக்கிறார்கள். இதுவே

இந்தத் திட்டத்தின் வரவேற்பிற்கும், வெற்றிக்கும் சான்றாக அமைந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்திருக்கக்கூடிய மொத்த மாணவிகள் 1 லட்சத்து 56 ஆயிரத்து 16 பேர்களில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 48 ஆயிரத்து 660 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 50 ஆயிரத்து 550 பேர், பட்டியலின வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 44 ஆயிரத்து 880 பேர், பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 1,900 பேர் இதனால் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும் பல உதவிகளைச் செய்து கொடுக்க நாம் திட்டமிட்டு கொண்டிருக்கிறோம். ஆகவே, உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நன்றாகப் படியுங்கள் - படியுங்கள் - படியுங்கள் என்பது மட்டும்தான். உயர்கல்வியை படியுங்கள். ஏதாவது ஒரு பாடத்தில் ஆராய்ச்சி செய்யுங்கள். தகுதியான வேலைகளில் சேருங்கள். பெண்ணுக்கு திருமண வாழ்க்கை என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் - பொருளாதார சுதந்திரமும் முக்கியம். தகுதியுள்ள வேலைவாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிக்கும் காலத்தில் திறமையோடு செயல்படக்கூடிய எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். திருமணத்திற்குப் பிறகு பெண்கள் வீட்டுக்குள்ளே இருந்து விடுகிறார்கள்.

கல்விஅறிவும்,கலைத்திறனும்,தனித்திறமைகளும்தான் யாராலும் அழிக்க முடியாத சொத்துகள்! அதனைப் பயன்படுத்தி வாழ்நாள் முழுக்க நீங்கள் அனைவரும் உங்களுக்கென ஒரு தனித்த ஓர் அடையாளத்துடன் திகழ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

படிக்கும் காலத்தில் கவனச் சிதறல்கள் வேண்டாம். கல்லூரிக் காலத்தை படிப்புக்கும், உயர்வுக்கும் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை இந்த நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய சகோதரனாக, உங்களுடைய உடன்பிறப்புகளில் ஒருவனாக, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், உங்கள் தந்தையாக இருந்து நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். உங்களை வளர்த்தெடுக்கவே இந்தத் திட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதை இந்த அரசே உங்களின் தோழனாக கருதி, இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை செய்வோம், என்னென்ன உறுதிமொழிகளை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தோம். அவைகள் எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகிறது என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். ஒன்றிரண்டு திட்டங்கள் இன்னும் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எவ்வளவுதான் நிதி நெருக்கடி நிலை இருந்தாலும், அதையெல்லாம் சமாளித்து, அதையெல்லாம் ஓரளவிற்கு சரிசெய்து, முடிந்த வரைக்கும், நாம் அறிவித்த திட்டங்களை இதுவரைக்கும் பெருமையோடு சொல்கிறேன், 85 சதவீதத்திற்கு மேல் உறுதிமொழிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இன்னும் ஒரு 10, 15 சதவீதம் மிச்சம் இருக்கிறது அதை நான் மறுக்கவில்லை. அதையும் நான் உறுதியோடு சொல்கிறேன். நிச்சயமாக, உறுதியாக அதையும் வரக்கூடிய காலக்கட்டத்தில் முழுமையாக நிறைவேற்றக்கூடிய ஆட்சி தான் இந்த திராவிட மாடல்

ஆட்சி. அறிவித்த திட்டங்கள் மட்டுமல்ல, அறிவிக்காத திட்டங்களும் இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது. அதுதான் இந்த புதுமைப் பெண் திட்டம்.

தேர்தல் அறிக்கையில் புதுமைப் பெண் திட்டம் அறிவிக்கவில்லை. அதை இன்றைக்கு நிறைவேற்றுகிறோம். இப்படி பல்வேறு திட்டங்களை, சொன்னது மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யக்கூடிய ஓர் ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, அப்படிப்பட்ட ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு உங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள இந்தக் கல்வியை நீங்கள் நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, இந்தத் திட்டத்தின் மூலமாக பயனடையக்கூடிய நம்முடைய மாணவியர்களை நான் உங்கள் அனைவரின் சார்பில், வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், இந்து கல்லூரியில்
நடைபெற்ற புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம்
கட்டத்தை தொடங்கி வைத்து
ஆற்றிய உரை - 08.02.2023

எல்லார்க்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் ஆட்சியினுடைய அடிப்படை நோக்கம்

பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் மாமன்றத்தின் நான்காவது தேசிய மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அருமை சகோதரர் திரு. பி. மூர்த்தி அவர்களே,

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் என்னுடைய மதிப்பிற்குரிய திரு. ச. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே,

மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி அவர்களே,

கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான என்னுடைய இனிய நண்பர் திரு. எஸ். இனிகோ இருதயராஜ் அவர்களே,

இயேசு அழைக்கிறார் ஊழியங்கள் டாக்டர் பால் தினகரன் அவர்களே,

பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் மாமன்ற தலைவர் பேராயர் டாக்டர் டேவிட் பிரகாசம் அவர்களே,

உப தலைவர் பேராயர் டாக்டர் கே.பி. எடிசன் அவர்களே,

பொதுச் செயலாளர் பாஸ்டர் வினில் சதீஷ் அவர்களே,

பொருளாளர் டாக்டர் ஆனந்த் அவர்களே,

போதகர் திரு. ஜோசப் பாலசந்திரன் அவர்களே,

போதகர் திரு. டட்லி தங்கையா அவர்களே,

போதகர் திரு. தயாநிதி அவர்களே,

ஜெபத்தோட்டம் ஊழியங்கள் அருட்தந்தை பெர்க்மான்ஸ் அவர்களே,

பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் நிருவாகிகளே,

மாநாட்டில் கலந்து கொண்டிருக்கக்கூடிய கிறித்துவப் பெருமக்களே,

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் நான்காவது மாநாட்டில் மதுரைக்கு வந்து நேரில் கலந்து கொள்ள விரும்பினேன். ஆனாலும், பல்வேறு அரசு பணிகள் இருந்த காரணத்தால் நேரில் கலந்துகொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. இருந்தாலும், காணொலியிலாவது நீங்கள் கலந்து பேசியாக வேண்டும் என்று கிறித்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர் – என்னுடைய இனிய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அதனடிப்படையில்,

காணொலி மூலமாக கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!

மதுரைக்கே வந்தாலும் - சென்னையில் இருந்தபடியே பேசினாலும், என்றும் உங்களோடு இருப்பவன் - உங்களில் ஒருவன் நான் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எனக்கும் உங்களுக்கும் இடையே தூரம் அதிகமாக இருந்தாலும், அன்பு நம்மை இணைக்கிறது. நம்பிக்கை நம்மை இணைக்கிறது.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் தனது இயேசு காவியத்தில் எழுதிய வரிகளை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்....

"அடுத்தவர் இடத்தில் அன்பு காட்டியும்
ஆடல் பாடல் அணுகாது இருந்தும்
இழந்தோர் இடத்தே இரக்கம் மிகுந்தும்
ஈகை உதவி இதயம் மலர்ந்தும்
உறவோர் இடத்து உள்ளன்பு வைத்தும்
ஊரார் புகழப் பணிவுடன் நடந்தும்
என்றும் தந்தை எதைச் சொன்னாலும்
ஏற்று முடித்தும் இயல்புற வாழ்ந்தும்
ஐயம் தவிர்க்க ஆசானை அணுகியும்
ஒத்த வயதே உடையோர் இடத்து
ஓதும் பொருளில் உயர்ந்தே நின்றும்
கன்னித் தாயின் காலடி வணங்கியும்
காலம் அறிந்து கணக்குற வாழ்ந்தும்
கிட்டா தாயின் வெட்டென மறந்தும்
கீழோர் மேலோர் பேதம் இன்றியும்
குணத்தில் தேவகுமாரன் என்று உலகம்
கூப்பி வணங்கக் குறைகள் இலாமலும்

கெட்ட பழக்கம் எட்டா நிலையில்
கேடுகள் எதையும் நாடா தளவில்
கைத்தலத்து உள்ளே காலத்தை அடக்கியும்
கொஞ்சி வளர்ந்து குழந்தையில் இருந்து
கோமகன் வயதில் ஆறிரண்டடைந்தார்!

- என்று இயேசு பெருமான் குணத்தைப் பற்றி எழுதினார்.

அ, ஆ, இ, ஈ... வரிசையிலும், க, கா, கி, கீ ... வரிசையிலும் அமைந்த சிறப்பான பாடல் இது. கவிதைச் சிறப்புக்காக இதனை நான் சொல்லவில்லை! எத்தகைய பண்புகளை மக்கள் பெற வேண்டும் என்பதும் இந்தப் பாடலில் அடங்கி இருக்கிறது.

கிறித்துவ நெறி அதிகம் வலியுறுத்துவது அன்பைத்தான்!

'அன்பு செலுத்து! அன்பைப் பெறு!' என்பதே வெவ்வேறு சொற்களில் சொல்லப்படுகின்றன.

'உன்மீது நீ அன்பு கூறுவது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக' என்றுதான் இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து இந்த மனித குலத்துக்குக் கற்றுத்தந்த மதிப்பீடுகளை வரிசைப்படுத்தினால் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, இரக்கம், நீதி, தியாகம், பகிர்தல் ஆகியவற்றைத்தான் சொல்ல முடியும்.

'மனிதர்கள் அனைவரும் சமம்' என்பது தான் சமத்துவம்.

'யாரையும் வேற்றுமையாகப் பார்க்காதே' என்பது தான் சகோதரத்துவம்.

'அனைவருடனும் சேர்ந்து வாழ்' என்பதுதான் ஒற்றுமை.

'ஏழைகள் மீது கருணை காட்டு' என்பதுதான் இரக்கம்.

'அநீதிக்கு எதிராக குரல் கொடு' என்பதுதான் நீதி.

'மற்றவர்களுக்காக வாதாடு' என்பதுதான் தியாகம்.

'உன்னிடம் இருப்பதை இல்லாதவருக்கு கொடு' என்பதுதான் பகிர்தல்.

இதைத்தான் கிறிஸ்தவம் சொல்கிறது. இத்தகைய குணங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் இருந்தால், அதுதான் சமத்துவ நாடாக அமையும்!

இந்திய நாட்டினுடைய 74-ஆவது குடியரசு நாளை முன்னிட்டு உரையாற்றிய மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பற்றித்தான் அதிகமாகப் பேசி இருக்கிறார்.

"பலதரப்பு மக்களைக் கொண்டிருந்தபோதிலும் ஒரு நாடாக இருப்பது என்பது வரலாறு காணாதது. இந்த வேற்றுமையில் ஒற்றுமை என்ற மையக்கருதான் அரசியலமைப்புச் சட்டத்தின் இதயமாக இருந்து காலத்தின் சோதனைகளைத் தாக்குப் பிடித்திருக்கிறது.

அந்த வகையில், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் தொலைநோக்குப் பார்வைதான் நமது குடியரசைத் தொடர்ந்து வழிநடத்தி வருகிறது. ஏழ்மை, கல்வியறிவில்லாத நாடு என்ற நிலையிலிருந்து மாறி, உலக அரங்கிலேயே தன்னம்பிக்கையோடு நடைபோடும் ஒரு தேசமாக இந்தியா மாறியிருக்கிறது.

சட்டமேதை புரட்சியாளர் அம்பேத்கரும், அவருக்குப் பிறகு வந்தவர்களும் நமக்கான தார்மீகக் கட்டமைப்பையும் – பாதையையும் உருவாக்கித் தந்துள்ள நிலையில், அதில்

தொடர்ந்து பயணிக்கும் பொறுப்பு நமக்கு உள்ளது" – என்று தனது உரையில் குறிப்பிட்டுள்ளார் குடியரசுத் தலைவர் அவர்கள்.

இத்தகைய பன்முகத்தன்மைதான் இந்திய நாட்டை மட்டுமல்ல, நாட்டு மக்களின் பண்பாட்டையும் காக்கும். மொழிகள் - மதங்கள் – இனங்கள் வேறு வேறாக இருந்தாலும் இணைப்பது மனிதம்.

அத்தகைய மனிதக் கூறுகளை பின்பற்றுபவர்களாக மானுடம் திகழ வேண்டும். நாமும் வளர வேண்டும், நம்மைச் சுற்றி இருப்பவர்களும் வளர வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் காலம் காலமாக நாம் பின்பற்றி வரக்கூடிய தமிழர் பண்பாடு! அனைவரையும் இணைக்கும் ஆற்றல் மொழிக்கு உண்டு!

அந்த வகையில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைத்தான் நமது அரசு தனது நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

"எல்லார்க்கும் எல்லாம்' என்பதே திராவிட மாடல் ஆட்சியினுடைய அடிப்படை நோக்கம்!"

கடந்த ஓராண்டு காலத்தில்

- கல்வி
- சுகாதாரம்
- தொழில் வளர்ச்சி
- வேளாண்மை
- மகளிர் மேம்பாடு

- குழந்தைகள் நலன்
- விளிம்பு நிலை மக்களின் நலன்
- சிறுபான்மையினர் நலன்
- பட்டியலின, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உரிமைகள்
- விளையாட்டு
- சுற்றுலா
- தொழிலாளர்கள் நலன்
- நகர்ப்புற வளர்ச்சி
- கிராமப்புற மேம்பாடு
- உள்கட்டமைப்பு வசதிகள்

என அனைத்திலும் கவனம் செலுத்தி தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கும் பணிகளைச் செய்து வருகிறோம் என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

குறிப்பாக, கிறித்துவ சமுதாய மக்களுக்கு ஏராளமான நன்மைகளை கழக அரசு செய்து கொடுத்துள்ளது.

- தேவாலயங்களைச் சீரமைக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உபதேசியார் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.
- கிறிஸ்தவ மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தருவதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறுபான்மையினர் பள்ளிகளுக்கான அனுமதிக்காக மைனாரிட்டி ஸ்டேட்டஸ் சர்டிபிகேட்

இணையத்தின் மூலம் பெறுவதை எளிமையாக ஆக்கி இருக்கிறோம்.

- சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்பட இருக்கிறது.
- சிறுபான்மையினர் அதிகம் வசிக்கக்கூடிய மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் அலுவலகம் அமைக்கப்பட இருக்கிறது.
- கரூர், மதுரை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கிறிஸ்தவ உதவி சங்கம் கூடுதலாக துவங்கிட நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஜெருசலேமுக்கு புனித பயணம் செல்வதற்கு அருட்சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிக கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் கிறித்துவ சமூக மக்களுக்கு கடந்த இருபது மாத காலத்தில் செய்து தரப்பட்டுள்ள நலத் திட்டங்கள்!

கழக அரசைப் பொறுத்தரையில் நீங்கள் கோரிக்கை வைத்துத்தான் நாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை இல்லை. நாங்களாகவே பல்வேறு திட்டங்களை, நீங்கள் கோரிக்கை வைக்காமலேயே நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம்.

‘சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்’ என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசு.

எனது, நமது திராவிட மாடல் தலைமையிலான அரசு ‘சொல்வதையும் செய்வோம், சொல்லாமலும் செய்வோம்’ என்று இயங்கக்கூடிய அரசு!

இங்கே பேராயர் எடிசன் அவர்களால் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னால் நம்முடைய இனிகோ இருதயராஜ் அவர்களும் என்னிடத்தில் தேதி பெறுகிற நேரத்திலேயே அதுபற்றியெல்லாம் விளக்கமாக சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி நிச்சயம் ஆலோசனை செய்து, நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்றித் தருவோம் என நான் உறுதி அளிக்கிறேன்.

அரசையும், என்னையும் பாராட்டி நீங்கள் பேசிய சொற்கள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கின்றன. ‘என் கடன் பணி செய்து கிடப்பதே, அதுவும் மக்கள் பணி செய்து கிடப்பதே’ என்ற நோக்கத்துடன் நான் செயல்பட்டு வருகிறேன்.

நமது அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களால், தமிழ்நாட்டு மக்கள் பயனடைந்து, அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறபோதெல்லாம், எனக்கு மனநிறைவு ஏற்படுகிறது.

இன்று காலையிலே கூட, திருவள்ளூர் மாவட்டத்தில் நான் புதுமைப்பெண் திட்டத்தின் இரண்டாம் கட்ட பயனாளிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தேன். அந்த நிகழ்ச்சியை முடித்ததற்குப் பிறகு, சில மாதங்களுக்கு முன்னால் ஊடகங்களில்

வந்த செய்தியில், ஆவடி அருகே முகச்சிதைவால் பாதிக்கப்பட்டிருந்த சிறுமி டானியாவுக்கு அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்திருந்தேன். நலமடைந்த அந்தச் சிறுமி டானியாவை நான் மீண்டும் சந்திக்க, அந்தக் குழந்தையின் இல்லத்திற்கே சென்றேன். அப்போது அந்தக் குழந்தையின் முகத்தில் பார்த்த மகிழ்ச்சியைத்தான், தமிழ்நாடு மக்கள் அனைவரது முகத்திலும் காண நாங்கள் உழைத்து வருகிறோம்.

எந்த நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்தார்களோ அதைவிட அதிக நம்பிக்கையை இந்த இருபது மாத காலத்தில் பெற்றிருக்கிறோம். இந்த நம்பிக்கைக்குப் பின்னால் இருப்பது உழைப்பு. அந்த உழைப்புக்குப் பின்னால் இருப்பது உண்மை. மக்களுக்காக உண்மையாக உழைக்கும் எங்களுக்கு இந்தப் பாராட்டுகள் அதிகம் உழைக்கத் தூண்டுகோலாக அமையும்.

இது எனது அரசு அல்ல, நமது அரசு. உத்தரவிடுங்கள். நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** அவர்கள்முகாம்
அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி
வாயிலாக மதுரையில் நடைபெற்ற பெந்தெகொஸ்தே
திருச்சபைகளின் மாமன்றத்தின் 4ஆவது தேசிய மாநாட்டில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை - 08.02.2023

எந்த அறிவிப்பாக இருந்தாலும் அதனை ஆய்வு செய்து கொண்டே இருந்தால் அது வெற்றி பெற்றுவிடும்

அன்புள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே, தலைமைச் செயலாளர்அவர்களே, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்களே, அரசு முதன்மைச் செயலாளர்களே, துறையினுடைய செயலாளர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இருபது மாத காலத்தில் எத்தனையோ நல்ல பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை வடிவமைப்பதில் தொடங்கி, இதனைச் செயல்படுத்துவது வரை- தினந்தோறும் கண்காணித்து அவற்றை ஆர்வத்தோடு செயல்படுத்தி வரக்கூடிய அனைத்து உயரதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு என்பது முதலமைச்சர் மட்டுமல்ல, அமைச்சர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் இணைந்ததே. இம்மூன்று பகுதிகளும் ஒன்றாக இணைந்து ஒருமுகப்பட்டுச் செயல்படுவதே நல்லாட்சியாக அமைந்திட முடியும். அத்தகைய நல்லாட்சியை நாம் நடத்தி வருகிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கு இந்தக் காலகட்டமானது மனநிறைவை அளித்துள்ளது என்பதை வெளிப்படையாகவே உங்களிடம் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதனை மேலும் வலுப்படுத்த வேண்டும். அதை நோக்கமாகக் கொண்டே இந்தக் கூட்டத்தை இன்றைக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பத்தாண்டு காலம் பெருமளவில் ஒரு தொய்வு இருந்தது. அதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தத் தொய்வை நீக்குவது மட்டுமல்ல, உயர்வை உருவாக்குவதுமான இரண்டு இலக்குகள் நமக்கு இருந்தது. அந்த இலக்கில் முன்னோக்கியே நாம் சென்று கொண்டு இருக்கிறோம். கடந்த இருபது மாத காலத்தில் அறிவிக்கப்பட்ட புதிய புதிய திட்டங்களை மொத்தமாகப் பார்த்தாலே நீங்கள் தெளிவாக அறியலாம்.

இவை அனைத்தையும் அறிவித்தது சாதனை அல்ல, அந்த அறிவிப்புகள் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிப்பதில் தான் இதன் மொத்த வெற்றியும் அடங்கி இருக்கிறது.

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து என்ற ஒரே ஒரு திட்டத்தின் மூலமாக தினந்தோறும் இலட்சக்கணக்கான மகளிரது பாராட்டுகளை இந்த அரசு பெற்று வருகிறது. தினந்தோறும் காலைச் சிற்றுண்டி வழங்குவதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நம்மை வாழ்த்திக் கொண்டு இருக்கின்றன. மக்களைத் தேடி மருத்துவம்

திட்டத்தில் கோடிக்கு மேல் பயன் அடைந்திருக்கிறார்கள். இலவச மின் இணைப்பு பெற்ற விவசாயிகள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

மாதம்தோறும் 1,000 ரூபாய் பெறக்கூடிய மாணவிகள் பாராட்டி வருகிறார்கள். இவை அனைத்தும் இப்போது நம் கண்ணுக்கு முன்னால் தெரியக்கூடிய மகிழ்ச்சிகள். இதேபோல் அனைத்துத் திட்டங்களாலும் பயன்பெறுபவர்கள் மகிழ்ச்சி அடைந்தால், எட்டுக் கோடி மக்களும் பாராட்டும் அரசாக இந்த அரசு உயர்ந்துவிடும், இது உங்கள் கையில்தான் இருக்கிறது.

அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன? அதில் சுணக்கமோ, முடக்கமோ இருக்கிறது என்றால் எதனால்? அந்தத் திட்டத்தை முழுமையாக முடிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் துறையினுடைய செயலாளர்கள் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு திட்டத்துக்கு எங்காவது ஒரு இடத்தில் சிறு தடங்கல் இருக்கலாம். அந்தத் தடங்கல் உங்களுக்குத் தான் தெரியும். நிதித் துறையிலோ அல்லது பிற துறைகளில் இருந்தோ ஏதாவது ஒரு உத்தரவு வர வேண்டியதாக இருக்கலாம். அதிகாரிகள் மட்டத்திலே கூட்டத்தைக் கூட்டி, கூட்டுக் கூட்டமாக அதை நடத்தி உடனடியாகப் அதனைச் செயல்படுத்த வைக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. உங்கள் துறைக்கான அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் பரிசீலனை செய்து, அவை எந்தளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் ஆய்வு செய்திட வேண்டும்.

மதுரையில் தலைவர் கலைஞர் பெயரால் நூலகம் அமையும் என்று அறிவித்தோம். மளமளவென எழுந்து

வருகிறது; திறக்கப்படக்கூடிய நிலைக்கு வந்து விட்டது. சென்னையில் மிகப்பெரிய மருத்துவமனை கிண்டியில் அமையும் என்று சொன்னோம், அதுவும் வேக வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது.

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும், அறிவிப்பையும் உங்கள் கண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை ஆய்வு செய்யுங்கள். இருபது மாதம் கடந்துவிட்டது.

திட்டங்களைச் செயல்படுத்துதல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் தடைகள் ஏற்படலாம். எனவே, முன்கூட்டியே 2023ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் திட்டங்களும் செயல்பாட்டுக்கு வந்துவிட்டன என்ற நிலையை எட்டியாக வேண்டும். அதற்கான பணிகளை இன்றே நீங்கள் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த அறிவிப்பாக இருந்தாலும் அதனை ஆய்வு செய்து கொண்டே இருந்தால் அது வெற்றி பெற்றுவிடும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எனவே, சேர்ந்து செயல்படுவோம் என்று தெரிவித்து, இந்த அளவில் எனது முன்னுரையை நான் நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. *மு.க.ஸ்டாலின்* அவர்கள் தமிழ்நாட்டில் முத்திரை
பதிக்கும் திட்டங்கள் (Iconic Projects) தொடர்பாக
தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையின்
10ஆவது தள கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு
தலைமையேற்று ஆற்றிய உரை - 09.02.2023

முதலமைச்சரின் உரைகள்

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கக்கூடிய நான் உங்களில் ஒருவனாக, உங்களுடைய ஒரு சகோதரனாக, உங்களில் பலருக்கு அண்ணனாக, சிலருக்கு தம்பியாக, ஏன், அனைவருக்கும் உடன்பிறப்பாக நான் இருக்கிறேன். உங்களுக்கு துணையாக இந்த அரசு இருக்கும்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வெளியீடு:
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத்துறை